தொழில் நிதி

(INDUSTRIAL FINANCE)

இரா.வரதராசன்

பதிப்புத் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை – 625 021.

தொழில் நிதி

(INDUSTRIAL FINANCE)

LIBRARY
MADURAI-625 021.
MADURAI KAMARAJ UNIVERSITY

இரா.வரதராசன்
பேராசிரியர்
வணிகவியல் துறை
தொலை நிலைக் கல்வி இயக்ககம்
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்
மதுரை – 625 021.

பதிப்புத் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை – 625 021.

பதிப்புரிமை :

பதிப்புத் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை – 625 021.

© Rights Reserved
Publications Division
Madurai Kamaraj University
Madurai - 625 021.

பதிப்பு எண் : 170

விலை : ரூ. 70/-

பதிப்பு விவரங்கள் :

1.	ஆசிரியர்	: முனைவர். இரா.வரதராசன் பேராசிரியர் வணிகவியல் துறை, தொலை நிலைக்கல்வி இயக்ககம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை – 625 021.
2.	நூல் தலைப்பு	: தொழில் நிதி
3.	பதிப்பித்தோர்	: பதிப்புத் துறை மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை – 625 021.
4.	ஆண்டு	: 2001
5.	நூல் கிடைக்குமிடம்	: பதிப்புத் துறை மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை – 625 021.
6.	பக்கங்கள்	:
7.	பொது பதிப்பாசிரியர்	: முனைவர். இரா.காசிராசன் பதிப்புத் துறை மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை – 625 021.
8.	அச்சிட்டோர்	: விஜய் ஆட்செட், மதுரை – 625 016.

MADURAI KAMARAJ UNIVERSITY LIBRARY
MADURAI-625 021.

முகவுரை

நிதியியல் சேவைகள் தொழிற்சாலைகளில் பெரும் பங்கு வகிக்கின்றன. புதிய நிறுவனங்களும், ஆவணங்களும் இன்று நிதித் துறையில் சவலாக எடுத்துக் கொள்ளப்பட்டு செயல்பட்டு வருகின்றன என்பது எல்லோரும் அறிந்ததே. இந்திய வங்கித் துறையிலும் நிதி நிறுவனங்களிலும் தற்பொழுது மிகக் கடுமையான போட்டிகள் நிலவி வருகின்றன. வங்கித் துறையும், தொழில் நிதி நிறுவனங்களும் சந்தையியல் கோட்பாட்டினை மையமாகக் கொண்டு பல வளர்ச்சி திட்டங்களை கடன் வழங்கும் முறையில் புகுத்தி வருகின்றன. இந்திய நாட்டின் திட்டமிடலில் புதிய பொருளாதார கொள்கைகள் வகுத்திட்ட இந்நிலையில் புதிய பொருளாதார கொள்கைகள் வகுத்திட்ட இந்நிலையில் தொழிலகங்களுக்கு முன்னுரிமை வழங்கி பொருளாதார மேம்பாட்டிற்கு வித்திட்டு வருகின்றது. நிதி நிறுவனங்கள் அந்நிய நாட்டு தொடர்புடன் செயலாக்கத்தை மாற்றியமைத்து இன்ற செயல்பட்டு வருகின்றது என்பது உண்மை.

இப்புத்தகத்தில் நிதி அமைப்பு, நிதியியல் பணிகள், மூலதன அமைப்பு, மூலதனம் ஏற்படுத்தல், மூலதன அங்காடி, புதிய பொருளாதாரக் கொள்கை, தொழில் உரிமக் கொள்கை, தொழில்வள வங்கிகள், தேசிய, மாநில அளவிலான தொழில் முதலீட்டு கழகங்கள், தேசிய தொழில் வளர்ச்சிக்கான திட்டங்கள் மற்றும் கூட்டுறவு தொழில் வங்கிகள் பற்றிய பல்வேறு நிலைகள் சொல்லப்பட்டுள்ளது. இப்புத்தகத்தை தமிழில் கொண்டு வர ஒரு புதிய முயற்சி மேற்கொண்டு செயல்பட பல நிலைகளில் உதவி புரிந்த பல்கலைக்கழக ஆட்சி மன்றத்திற்கும், தமிழ்நாடு பாட நூல் கழகம், பல்கலைக்கழக பதிப்புத் துறை அதிகாரி அவர்களுக்கும் புத்தகத்தை ஆய்வு செய்த பேராசிரியர் முனைவர் S.வடிவேலு அவர்களுக்கும் மற்றும் உதவிய அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆசிரியர்.

T. P. M. LIBRARY
MADURAI-625 021.
MADURAI KAMARAJ UNIVERSITY

பொருளடக்கம்

பாடம் - 1 : நிதி அமைப்பு

முன்னுரை – பெருந்தொழில் நிதி – நிதித்தேவைகள் – நீண்டகால மூலதனத்திற்கான ஆதாரங்கள் – பங்குகள் – கடன் பத்திரங்கள் – பொது வைப்புகள் – இலாபத்தை மறுபடியும் ஈடுபடுத்தல் – நிதிநிறுவனங்களிடமிருந்து கடன் பெறுதல் – குறுகிய கால மூலதன ஆதாரங்கள் – நாட்டு வங்கியர் – வணிக வங்கிகள் – வியாபாரக் கடன் – வாடிக்கையாளர் முன் பணம்.

பாடம் - 2 : நிதியியல் பணிகள்

முன்னுரை – நிதியியல் பொதுவான பணிகள் – நிறுவனத்தின் குறிக்கோள்கள் – நிதிமேலாண்மையின் குறிக்கோள்கள் – ரொக்கநிலை – லாப ஈட்டுத்திறன் – அணுகுமுறை – நிதி நிர்வாகத்தின் பணிகள் – லாப ஈட்டுத்திறன் பற்றிய பணிகள் – நிர்வாகப் பணிகள் – சொத்து நிர்வாகம் – நிதிகளை நிர்வகித்தல் – நிதியியல் நிர்வாகத்தின் செயல் பரப்பு.

பாடம் - 3 : கம்பெனி ஆவணங்கள் - மூலதன அமைப்பு

நிலைத்த முதலும் நடைமுறை முதலும் – நடைமுறை மூலதன வகைகள் – நிதி ஆதாரங்கள் – நீண்ட கால மூலதனத்திற்கான ஆதாரங்கள் – முன்னுரிமைப் பங்குகளினால் கிட்டும் நன்மைகள் – குறைபாடுகள் – சாதாரணப் பங்குகளால் கிட்டும் நன்மைகள் – குறைபாடுகள் – நிறுவினோர் பங்குகள்.

பாடம் - 4 : கடன் பத்திரங்கள்

முன்னுரை – வகைகள் – நன்மைகள் – பொது வைப்பு – நன்மைகள் – குறைபாடுகள் – இலாபத்தை மறுபடியும் ஈடுபடுத்தல்.

பாடம் - 5 : மூலதனம் ஏற்படுத்தல்

முன்னுரை – மூலதன ஏற்படுத்தல் கோட்பாடுகள் – அடக்க விலை கோட்பாடு – ஆதாய கோட்பாடு – மிகை மூலதனம் – மிகை மூலதன நிலைமைக்கான காரணங்கள் – தீமைகள் – குறை மூலதனம் – காரணங்கள் – தீமைகள் – நீர்த்த முதல் – மூலதனக்கூறுக்களுக்கிடையேயான விகிதம்.

பாடம் - 6 : மூலதன அங்காடி

முன்னுரை - மூலதன அங்காடி - இயல்புகள் - இந்திய மூலதன அங்காடியின் கட்டமைப்பு - புதிய வெளியீடுகள் அங்காடி - உரிமை பங்கொப்பம்.

பாடம் - 7 : பங்கு மாற்று நிலையம்

முன்னுரை – பங்கு மாற்று நிலையத்தின் செயல்பாடுகள் – சேவைகள் – சமுதாயத்திற்கு ஆற்றும் சேவைகள் – முதலீட்டாளர்களுக்கு ஆற்றும் சேவைகள் – நிறுவனங்களுக்கு ஆற்றும் சேவைகள் – இந்தியாவில் பங்கு மாற்று நிலையம் – பங்கு மாற்று நிலைய இயக்குநரகம் – பிணையங்களை பட்டியிலிடல் – பட்டியிலிடல் விளக்கம் – நடைமுறை – நன்மைகள் – குறைபாடுகள் – இந்திய பிணையமாற்று வாரியம் – வாரியத்தின் பணிகள் – ஒழுங்குபடுத்துதல் – நடவடிக்கைகள் – மூலதனச் சந்தையும் சிறப்பு நிதி நிறுவனங்களும் – சமீப கால மூலதனச் சந்தை – அளவுகாப்புடைய பத்திரங்கள் – தொழிஞ்சாலை பிண்ணல்கள் சந்தை – பங்குசந்தை பூரிப்பு – வணிகத்துவ வங்கிகள் – பரஸ்பர நிதிகள் – குத்தகை மற்றும் வாடகைக் கொள்முதல் நிறுவனங்கள் – வீட்டுவசதிநிதி – துணிகர முதலீட்டு நிறுவனங்கள் – உரிமைப்பேராள் – கடன் வரிசைப் படுத்துதல்.

பாடம் - 8 : தேசிய பங்கு சந்தை

முன்னுரை - முதலீட்டாளருக்கு முக்கியத்துவம் - வர்த்தகத்தின் பங்குகள் மற்றும் பணம் பெறுதல் - தவறான பட்டுவாடா - பட்டியலிடல் - பட்டுவாடா இல்லாத காலம் - டிவிடெண்டின் முடிவு - பிரச்சினைகள் வருவதை தடுக்க புரோக்களுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளல்.

பாடம் - 9 : புதிய பொருளாதாரக் கொள்கை

முன்னுரை - தெரிநிலைத் திட்டமிடல் - அரசுத்துறை முதலீட்டு கொள்கை - நடைமுறைக் கொள்கை - ஏழ்மை ஒழிப்பு திட்டம் - தேசிய புதுப்பிக்கும் நிதி - முடிவுரை.

பாடம் - 10 : புதிய தொழில் உரிமக் கொள்கை

முன்னுரை – தொழில் வளர்ச்சி – தொழில் துறையில் பாதிப்பு – சிறு மற்றும் குடிசைத் தொழில்கள் – பொது மற்றும் தனியார் துறைகள் – கூட்டுத்துறை – பன்னாட்டு வியாபார அமைப்புகள் – அயல் நாட்டு தொழில் கூட்டமைப்புகள் – அண்மைக்கால போக்கு.

பாடம் - 11 : தொழில் வள வங்கிகள்

முதலாக்கலும் தொழில் நிதியும் – பொறுப்புரிமை – அலகு முதலீட்டு நிறுவனம் – முதல் – மேலான்மை – முதலீட்டுத் திட்டம் – வருமான பகிர்வு – வரிச்சலுகைகள் – திட்டங்கள் – முதலீடு – மதிப்பீடு.

பாடம் - 12 : ஆயுள் காப்பீட்டுக் கழகம்

முன்னுரை – முதல் – நிதியுதவிகள் தன்மை– திட்டம் – தொழில்களுக்கு நிதியுதவி – தொழில் வாரியான நிதியுதவி – மாநிலவாரியான நிதியுதவி – மதிப்பீடு.

இந்திய தொழில் நிதி நிறுவனம் – நிதியுதவி – கடன் அளவு – நிதிமூலம் – செயல்முறை – மதிப்பீடு – ஆலோசனைகள் – மாநில தொழில் நிதியுதவிக் கழகங்கள் – நிதி மூலம் – மேலான்மை – பணிகள் – செயல்முறை – பிரச்சனைகள் – மேம்பாட்டுக்கான ஆலோசனைகள்.

பாடம் - 13 : மாநில தொழில் மேம்பாடு மற்றும் முதலீட்டுக் கழகங்கள்

நிறுவன அமைப்பு – முதல் அமைப்பு – பணிகள் – நிதிமூலதனம் – நடவடிக்கைகள் – ஐதராபாத் மாநாடு – பணிகளும் சவால்களும் – இந்திய தொழில் கடன் மற்றும் முதலீட்டுகூட்டு – குறிக்கோள்கள் – நிதிமூலதனம் – நடவடிக்கைகள் – மேலான்மை – பணிகள் – இந்திய தொழில் சீரமைப்புக் கூட்டு – குறிக்கோள்கள் – முதல் – மேலாண்மை – நிதியுதவி வகைகள் – செயல்முறை – சிறுதொழில் வளர்ச்சி கழகங்கள் – தேசிய சிறுதொழில் கழகம் – மாநில சிறுதொழில் வளர்ச்சிக் கழகங்கள் – நடவடிக்கைகள்.

பாடம் - 14 : தேசிய தொழில் வளர்ச்சிக் கழகம்

நோக்கம் – பணிகள் – நிர்வாகம் – தேசிய சிறு தொழில் கழகம் – வேளாண்மை மறுநிதி வளர்ச்சிக் கழகம் – வேளாண்மை மறுநிதி வளர்ச்சிக் கழகம் – வட்டார கிராமிய வங்கிகள் – பண்ணாட்டு புனரமைப்பு வளர்ச்சி வங்கி – ஆசிய வளர்ச்சி வங்கி.

பாடம் - 15 : இந்தியாவில் பொருளாதார வளர்ச்சிக்கான திட்டங்கள்

முதல் ஐந்தாண்டு திட்டம், இரண்டாவது, மூன்றாவது, நான்காவது, ஐந்தாவது, ஆறாவது, ஏழாவது, எட்டாவது ஐந்தாண்டு திட்டங்கள்.

பாடம் - 16 : கூட்டுறவு வங்கிகளும் தொழில் வங்கிகளும்

தொழிற் கூட்டுறவு வங்கிகள் – முக்கிய திருப்பங்கள் – ஆய்வறிக்கை – விவசாயிகள் வளர்ச்சி முகமை.

பாடம் - 17 : தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்

முக்கிய குறிக்கோள்கள் – நிர்வாகம் – மூலதனம் – செயல்பாடுகள்.

பாடம் - 18 : கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு

முகவுரை – சுயதொழில் கடனுதவித் திட்டங்கள் – கடனுதவி அளிக்கப்படும் கிராமத் தொழில்கள்.

கலைச் சொற்கள்

Shares	–	பங்குகள்
Equity Shares	–	சதாரணப் பங்குகள்
Preference Shares	–	முன்னுரிமைப் பங்குகள்
Deferred Shares	–	தோற்றுவிப்பாளர் பங்குகள்
Debentures	–	கடன் பத்திரங்கள்
Public Deposits	–	பொது வைப்புகள்
Reserves	–	காப்புகள்
Liquidity	–	நீர்மைத் தன்மை / ரொக்கமாக்கும் தன்மை
Profitability	–	லாபம் ஈட்டும் திறன்
Fore casting	–	முன் மதிப்பீடு செய்தல்
Diversification	–	நட்டச்சப்பரவல்
Cash Flow	–	ரொக்க நடமாட்டம்
Return	–	மீள் வரவு
Securities	–	பிணையம்
Risk	–	இடர்பு / நட்டச்சம்
Bonus Shares	–	பங்காதாயம்
Funds Flow	–	நிதி ஓட்டம்
Obligatory	–	எடுக்கப்பட வேண்டிய கட்டுபாடுகள்
Cost of Capital	–	முதலின் அடக்கவிலை
Current Assets	–	நடைமுறைச் சொத்துக்கள்
Current Liabilities	–	நடைமுறை பொறுப்புகள்
Working Capital	–	நடைமுறை முதல்

Revolving Capital – சுழல் முதல்

Permanent Working Capital – நிரந்தர நடைமுறை மூலதனம்

Fluctuating Working Capital – மாறுபடும் நடைமுறை மூலதனம்

Cumulative Shares – குவிவு பங்குகள்

Redeemable Preference Shares – மீட்பு முன்னுரிமைப் பங்குகள்

Promoters – தோற்றுவிப்பாளர்கள்

Secured Debentures – பிணைக்கடன் பத்திரங்கள்

Legal Debentures – சட்டமுறைக்கடன் பத்திரங்கள்

Convertible Debentures – மாற்றக்கூடிய கடன் பத்திரங்கள்

Cost Theory – அடக்கவிலைக் கோட்பாடு

Earnings Theory – ஆதாயக் கோட்பாடு

Under Capitalisation – குறை மூலதனம்

Watered Capital – நீர்த்த மூலதனம்

Capital Market – மூலதன அங்காடி

Mufual Find – பரஸ்பர நிதி

Issue Houses – வெளியீடு அங்காடிகள்

Underwriters – ஒப்புறுதியாளர்கள்

Marchant Banking – வியாபார வங்கிகள்

Prospectus – தகவல் அறிக்கை

Right Issue – உரிமை வெளியீடு

Stock Exchange – பங்குமாற்று நிலையம்

Canalisation – முறைப்படுத்துதல்

Speculation – ஊகம்

Listing – பட்டியலிடல்

Dividend – லாப ஈவு

SEBI(Securities Exchange Board of India) – இந்திய பிணைங்கள் மாற்று வாரியம்

Insider Trading – உட்புற வியாபாரம்

Stock Brokers – பங்கு மாற்றுதாரர்கள் / தரகர்கள்

Capital Adequacy – போதிய மூலதனம்

Controller of Capital Issue – மூலதன வெளியீட்டு கட்டுபாட்டாளர்

Buoyant – மகிழ்ச்சிமிக்க சந்தை

Boom – பூரிப்பு

Scam – ஊழல்

Venture Capital – துணிகர முதலீடு

Technocrat Entrepreneurs – தொழில் நுணுக்க தொழில் முனைவோர்கள்

Factoring – உரிமைப் பேராள்

Credit Rating – கடன் வரிசைப்படுத்துதல்

CRISIL – இந்திய கடன் வரிசை தகவல் சேவை வரையறை

National Stock Exchange – தேசியபங்கு மாற்று அங்காடி

Confirmation Slip – அத்தாட்சி ரசீது

Bad Deliveries – தவறான பட்டுவாடா

Setlement – தீர்வு

Book Closure – நிறுவன புத்தக முடிப்பு

Indicative Planning – தெரிநிலைத் திட்டமிடல்

Stabilisation Policy – நிலைக்கச் செய்யும் கொள்கை

Reform Policy – சீரமைப்புக் கொள்கை

Industrial Licensing	–	தொழில் உரிமம்
Convertibility	–	மாற்றம்
Subsidies	–	ஊக்க உதவிகள் / மானியம்
National Renewal Fund	–	தேசிய புதுப்பிக்கும் நிதி
Inputs	–	உள்ளீடுகள்
Comparative Advantage	–	ஒப்பீட்டு நலன்
Industrial Sickness	–	தொழில் நலிவடைவு
IDBI	–	இந்திய தொழில் வளர்ச்சி வங்கி
MNC (Multi National Corporations)	–	பன்னாட்டு வியாபார அமைப்புகள்
Oligopoly	–	சில்லுரிமை
Monopoly	–	முற்றுரிமை
Royalty	–	ஆதாய பங்கு
FDI (Foreign Direct Invesment)	–	அந்நிய நேரடி முதல்
Capital Goods	–	மூலதனப் பொருள்
FGPB (Foreign Invesment Promotion Board)	–	வெளிநாட்டு மூலதன மேம்பாட்டு கழகம்
FIPC (Foreign Invesment Promotion Council)	–	வெளிநாட்டு மூலதன மேம்பாட்டு குழு/ அமைப்பு

பாடம் - 1

நிதி அமைப்பு

முன்னுரை

தொழில் வெற்றிகரமாக நடைபெறுவதற்கும், சீராக வளர்ச்சியடைவதற்கும் இன்றியமைாத தேவை நிதி வசதியாகும். தொழிற்சாலை இயங்குவதற்கும், தொழிலாளிகள் தொடர்ந்து தங்களது பணிகளில் ஈடுபடுவதற்கும் நிர்வாகம் திறமையுடன் செயல்படவும் தேவைப்படுவது போதிய நிதி வசதியேயாகும். தொழிலைத் தொடங்குவதற்கு முன்பு அதற்குத் தேவைப்படும் மூலதனத்தைத் திரட்டுவதே பிரதானப் பணியாகும். போதிய நிதியைத் திரட்ட முடியாவிட்டால், அனைத்துத் திட்டங்களும் ஏட்டளவிலேதான் நிற்கும், செயல்படுத்த முடியாது. தொழில் தொடங்குவதற்கு நிதி எவ்வளவு அவசியமோ அந்த அளவிற்குத் தொழில் விரிவடைவதற்கும், வளர்ச்சியடைவதற்கும் நிதி தேவைப்படுகிறது.

நாம் நிதிவசதி என்பதைத் தேவைப்படும் பொழுது தேவையான அளவில் நிதி அளிப்பதையே குறிப்பிடுகிறோம். எனவே தொழில் நிதி வசதி என்றால் தொழில் நிறுவனத்திற்குத் தேவைப்படும் அளவில் தேவைப்படும் சமயத்தில் நிதியளித்தல் என்பதாகும். தனியாள் வணிகம், கூட்டு வணிகம் ஆகிய அமைப்புக்களில் நிதிவசதியைத் தொழில் உடைமையாளர்களே அளிக்கின்றனர். எனவே, அது பெரும் பிரச்சினையாக எழுவதில்லை. ஆனால் கம்பெனி அமைப்பில் அவ்வளவு எளிதாக நிதிப்பிரச்சினைகள் தீர்க்கப்படுவதில்லை.

பெரும்பாலான தொழில்கள் கம்பெனி அமைப்பின் கீழ்தான் தொடங்கப்பெறுகின்றன. இவற்றிற்கு அதிக அளவில் நிதி தேவைப்படுகின்றது. இவைகளின் நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்வதென்பது பெரும் பிரச்சினையாகும். எனவே தொழில் நிதிவசதியில் பிரதானமாகக் கருதப்படுவது இத்தகைய கம்பெனி நிதிப் பிரச்சினைகளேயாகும். எனவே, இப்பாடத்தில் கம்பெனி நிதிச் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளைப் பற்றிக் காண்போம்.

முறையான நிதித்திட்டமானது, மூலதனத் தேவையை சரியாக மதிப்பீடு செய்வதை அடிப்படையாகக் கொண்டதாகும். மூலதனப்பற்றாக் குறையினால் தொழில் தனது முழுவசதிகளையும் பயன்படுத்த முடியாமல் போய்விடும். அதுபோல, அதிக மூலதனம் இருப்பினும் அதுகுறைந்த இலாப ஈவு அளிப்பதற்குக் காரணமாய் அமைந்து விடுகிறது. எனவே ஒரு நிறுவனம் சரியான அளவில் மூலதனத்தைக் கொண்டுள்ளதா என்பதே தொழில நிதியில் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய விசயமாகும். இதைப்பற்றி "மூலதனம் ஏற்படுத்தல்" என்றும் தலைப்பில் விரிவாகக் கூறப்படும். நிறுவனத்தின் மொத்த நிதித் தேவைகளைக் கணக்கிடுகையில் நிலையான சொத்துக்களை வாங்குவதற்கும் அன்றாட நிர்வாகத்திற்குத் தேவைப்படும் வசதிகளைப் பெறுவதற்கும் தனித்தனியே கணக்கிட்டுப் பார்க்கவேண்டும். இவற்றைப் பற்றி 'நிலைத்த முதல் மற்றும் நடைமுறை முதல்' ஆகிய தலைப்புக்களில் விவரிக்கப்படும்.

நிறுவனத்திற்குத் தேவைப்படும் நிதியை சரியாகக் கணக்கிட்டு பின்பு, அத்தொகையைத் திரட்டும் வழிமுறைகளைத் தீர்மானிக்க வேண்டும். "நிதி ஆதாரங்கள்" என்னும் தலைப்பில் இது பற்றிய விசயங்கள் விவாதிக்கப்படும். பல வழிகளில் நிதி திரட்டும் நோக்குடன் பலவித பிணையங்களைக் கம்பெனி வெளியிட வேண்டியிருக்கும். இவையனைத்தும் சேர்ந்தே கம்பெனி மூலதனத்தை உருவாக்குகின்றன. மொத்த மூலதனத்தின் பல்வேறு கூறுகளும் எந்த விகிதத்தில் இருக்க வேண்டும் என்பது பற்றி "மூலதனக் கூறுகளுக்கிடையேயான விகிதம்" என்னும் தலைப்பினில் விரிவாகக் காணலாம்.

பெருந்தொழில் நிதி

பெருந்தொழில் நிதி என்பது பற்றி கீழ்வரும் தலைப்புகளில் விரிவாக ஆராயலாம்.

1. மூலதனம் ஏற்படுத்தல்,
2. நிலைத்த முதலும் நடைமுறை முதலும்,
3. நிதி ஆதாரங்கள்,
4. மூலதனக்கூறுகளுக்கிடையேயான விகிதம்,

1. மூலதனம் ஏற்படுத்தல்

நீண்டகாலப் பிணையங்களை (உதாரணமாக : பங்குகள், கடன் பத்திரங்கள்) வெளியிடுவதன் மூலம் திரட்டிய நிதியும் மற்றும் உபரியாக இருக்கும் நிதியும் சேர்ந்த தொகையையே மொத்த மூலதனமாகக் கொள்ள வேண்டும். அதாவது உரிமையாளர்களுக்குச் சொந்தமானத் தொகையும், நீண்டகாலக் கடனாகப் பெற்றத் தொகையும் சேர்ந்ததே கம்பெனி மூலதனமாகும். எனவே கம்பெனி மூலதனத்தை மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கிறோம்.

அ) **உரிமையாளர்கள் அளிக்கும் மூலதனம் :** கம்பெனிப் பங்குகளை வாங்கி அதன்விலையைக் கொடுப்பதன் மூலம் பங்குதாரர்கள் கம்பெனிக்கு மூலதனத்தை அளிக்கின்றனர். பலவகையான பங்குகளை விற்பதன் மூலம் கம்பெனி தனது மூலதனத்தை உருவாக்குகின்றது.

ஆ) **கடனாகப் பெற்ற நிதி :** தேவைப்படும் சமயங்களில் நீண்டகாலக் கடன் பத்திரங்களை வெளியாருக்கு விற்பதன் மூலம் கம்பெனியானது போதிய அளவு நிதி திரட்ட முடியும்.

இ) **இலாப மிகுதிகள் :** வியாபார நிகர இலாபத்தில் பங்குதாரர்களுக்கு இலாப ஈவு அளித்தது போக மிகுதியாக இருக்கும் தொகையும், மூலதன வருமான மிகுதியாகச் சேர்ந்திருக்கும் தொகையும் இலாப மிகுதிகளாகக் கருதப்படும். கம்பெனியின் நீண்டகால நிதித் தேவைகளுக்காகவே இத்தொகை பயன்படுத்தப்படுகின்றது. எனவே தான் இத்தொகையும் மொத்த மூலதனத்தின் ஒரு கூறாகக் கருதுகிறோம்.

2. நடைமுறை முதல்

கம்பெனியின் அன்றாட நிதித் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு ஒதுக்கப்படும் தொகையே நடைமுறை முதல் எனப்படும். கச்சாப் பொருட்கள் வாங்குவதற்கும், உற்பத்தி செலவுகளுக்கும், சம்பளம், விளம்பரம், வாடகை போன்ற செலவுகளுக்கும் தேவைப்படும் பணமே நடைமுறை முதல் எனலாம்.

தொழில் சுமூகமாக நடைபெற வேண்டுமாயின், அன்றாடத் தேவைகளை நிறைவு செய்யப் போதிய அளவில் நடைமுறை முதல் இருத்தல் அவசியம்.

நடைமுறை மூலதனத்தைச் சரியாக வரையறுத்துக்கூற வேண்டுமாயின் பின்வருமாறும் கூறலாம். நடைமுறைப் பொறுப்புக்களிலும் மிகுந்த நடைமுறைச் சொத்துக்களின் மதிப்பே நடைமுறை முதல் ஆகும். அதாவது :

நடைமுறைச் சொத்துக்கள்–நடைமுறைப் பொறுப்புகள்=நடைமுறை முதல்

(Current Assets)–(Current Liabilities)=(Working Capital)

நடைமுறைச் சொத்துக்களுக்கு உதாரணமாக : கச்சாப் பொருட்கள், முற்றுப் பெறாப் பொருட்கள், விற்பனைக்குத் தயாராயிருக்கும் சரக்கு, கடனாளிகள், வரவுக்குரிய உண்டியல்கள், வங்கியிலும் மற்றும் கையிலுமுள்ள ரொக்கம் ஆகியவற்றைக் கூறலாம்.

3. நிதி ஆதாரங்கள்

ஒரு தொழில் நிறுவனத்தின் மொத்த மூலதனத் தேவைகளை நிர்ணயிப்பது பற்றியும் மூலதனத்தின் இரு முக்கிய கூறுகள் பற்றியும் இதுவரைப் பார்த்தோம். நிலைத்த முதல் மற்றும் நடைமுறை முதல் ஆகிய தேவைகளை மதிப்பீடு செய்தபின், அவற்றிற்கான தொகையை எவ்வாறு திரட்டுவது என்பது அடுத்து எழும் பிரச்சனையாகும்.

ஒரு கம்பெனியானது பொதுவாக இரு வழிகளில் முதல் திரட்டலாம். அதாவது உடைமையாளர்களிடமிருந்து திரட்டுதல் மற்றும் வெளியாரிடமிருந்து கடனாகப் பணம் திரட்டுதல். பங்குகளை வெளியாருக்கு விற்று அவர்களிடமிருந்து பெறும் தொகையே பங்கு மூலதனமாகிறது. இவற்றைக் கொண்டு தொழில் நடத்துவதால் நாளடைவில் கிடைக்கும் இலாபத்திலிருந்து இலாப ஈவு கொடுத்தது போக மீதமிருக்கும் இலாப மிகுதிகளும் தொழிலில் தான் ஈடுபடுத்தப்படுகின்றன. இவையனைத்தும் சேர்ந்தே உடைமையாளர் மூலதனம் எனப்படும். மாறாக வெளியாரிடமிருந்து கடன் மூலம் பெறும் தொகையே கடன் மூலதனம் எனப்படுகிறது. கடன் பெறுவதற்காக கடன் பத்திரங்களை கம்பெனி வெளியிடுகிறது.

நிலைத்தமுதல், நடைமுறை முதல் ஆகியவற்றை மேற்கூறப்பட்ட பல வகைகளிலும் திரட்டலாம். இவ்வழிமுறைகளை அடுத்து வரும் அட்டவனை மூலம் விளக்கலாம். நிலைத்த முதல் திரட்டும் வழிமுறைகளை பயன்படுத்தியே நிரந்தரமான மூலதனத்தையும் திரட்டலாம்.

நிதித்தேவைகள்

	நிலைத்த முதல் (அல்லது நீண்ட கால முதல்) ஆதாரங்கள்	நடைமுறை முதல் (அல்லது குறுகிய கால முதல்) ஆதாரங்கள்
1.	பங்குகள்	நாட்டு வங்கியர்
2.	கடன் பத்திரங்கள்	வணிக வங்கிகள்
3.	பொது வைப்புகள்	வியாபாரக் கடன்
4.	இலாப மிகுதிகளை மீண்டும் ஈடுபடுத்தல்	வாடிக்கையாளர் முன்பணம்
5.	நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் பெறுதல்	

நீண்ட கால மூலதனத்திற்கான ஆதாரங்கள்

பங்குகள் (SHARES)

நிலைத்த முதல் திரட்டுவதற்கு பங்குகளை வெளியிடுதல்தான் சிறந்தவழி. மேலும் பங்குகளால் பொறுப்பு வரையறுக்கப்பட்டக் கம்பெனியானது கட்டாயம் பங்கு மூலதனத்தைப் பெற்றிருக்க வேண்டும். மொத்த மூலதனத் தொகையானது பல சம மதிப்புடைய பிரிவுகளாகப் பகுக்கப்படுகிறது. ஒவ்வொரு பிரிவையும் 'பங்கு' என்றழைக்கிறோம். பொதுக் கம்பெனி, தனது பங்குகளை பொது மக்களுக்கு விற்று மூலதனம் திரட்டுகிறது. தனிக் கம்பெனியானது தனிப்பட்ட ஒரு சிலருக்கு விற்று மூலதனத்தைத் திரட்டுகிறது. ஏற்கனவே கம்பெனியால் வெளியிடப்பட்ட பங்குகளை வாங்கி விற்பதில் பங்கு மாற்றகங்கள் ஈடுபட்டிருக்கின்றன. பங்குகளை வாங்குபவர் அந்தக் கம்பெனியின் உரிமையாளர்களில் ஒருவராக ஆகின்றார். கம்பெனியின் உரிமைகள், பொறுப்புகள், நிருவாக அதிகாரங்கள், வியாபார இலாபங்கள் ஆகியவற்றில் பங்கு பெற அனைத்து பங்குதாரர்களும் உரிமையுடையவராவர். ஒரு கம்பெனி கலைக்கப்படும் வரை அது தனது பங்குகளை மீட்ட முடியாது. எனவே, பங்குகளைப் பின்வருமாறு வரையறுத்துக் கூறலாம். ஆண்டுதோறும் கம்பெனி சம்பாதிக்கும் இலாபத்தில் பங்கு பெறவும்,

கம்பெனி கலைக்கப்படும் பொழுது மூலதனத்தைத் திரும்பப் பெறவும் கூடிய உரிமையை அளிப்பதுவே பங்காகும்.

பங்குகளின் வகைகள்

பங்குகள் மூவகைப்படும். அவை. 1. முன்னுரிமைப் பங்குகள் (Preference Shares) 2. சாதாரணப் பங்குகள் (Equity Shares) 3. பின்னுரிமைப் பங்குகள் (Deffered Shares) அல்லது நிறுவினோர் பங்குகள். தனிக் கம்பெனியானது இவையனைத்தையும் அல்லது இவற்றில் எவையேனும் ஒன்றை வெளியிடலாம். ஆனால் கம்பெனிச் சட்டம் பிரிவு 86ன்படி பொதுக் கம்பெனியானது சாதாரணப் பங்குகளையும், முன்னுரிமைப் பங்குகளையும் மட்டும் தான் வெளியிட முடியும்.

கடன் பத்திரங்கள்

கம்பெனி தான்பெற்ற கடனுக்கு அத்தாட்சியாக தன்னுடைய முத்திரையிட்டு அளிக்கும் பத்திரமே கடன் பத்திரமாகும் (Debenture) தான் கடனாகப் பெறவிருக்கும் முழுத் தொகையை சம மதிப்புடைய உட்பிரிவுகளாகப் பிரித்து ஒவ்வொரு பிரிவுக்கும் தனித்தனிக் கடன் பத்திரமாக கம்பெனி வெளியிடும். பங்குகளைப் போன்றே கடன் பத்திரங்களும் தகவலறிக்கையின் மூலம் பொது மக்களுக்காகவே வெளியிடப்படுகின்றன. ஒவ்வொரு கடன் பத்திரமும் தனித்தனியாக ஒரு குறிப்பிட்ட விகிதத்தில் வட்டி பெறும் உரிமையுடையதாகும். கடன் பத்திரங்கள் குறிப்பிட்ட காலவரையறைக்குள் வெளியிடப்படுகின்றன. இந்தக் கால வரையறை முடியும் பொழுது இவைகளைக் கம்பெனி திரும்பப் பெற்றுக் கொண்டு பணத்தைக் கடன்காரர்களுக்குத் திருப்பியளிக்கும். பொதுவாக கம்பெனிச் சொத்துக்களை அடமானமாகக் காட்டித்தான் இக்கடன் பத்திரங்கள் வெளியிடப்படும். இது சம்பந்தப்பட்ட நிபந்தனைகள் யாவும் பத்திரங்கள் பின்புறம் அச்சிடப்பட்டிருக்கும். வெளியோர் ஒருவர் தான் கம்பெனிக்களித்திருக்கும் கடனுக்கு அத்தாட்சியாகத்தான் இப்பத்திரத்தைப் பெறுகிறார். இதனால் அவருடைய தகுதி என்னவெனில் கம்பெனியின் கடனீந்தோர் என்பதேயாகும்.

பொது வைப்புகள்

சில கம்பெனிகள் பொதுமக்களிடமிருந்து நிதி வைப்புகளை ஏற்றுக் கொள்கின்றன. 6 மாதங்கள் முதல் 7 ஆண்டுகள் வரையிலும் 9% முதல் 15%

வரையிலுமுள்ள வட்டி விகிதத்தில் பொது வைப்புக்களை (Public Deposits) ஏற்றுக் கொள்கின்றன. பங்குதாரர்களும், தொழிலாளர்களும் 1% முதல் 2% கூடுதல் வட்டியளிக்கின்றன. புகழ்பெற்ற கம்பெனிகளில் தங்கள் சேமிப்புத் தொகையை பொதுமக்கள் வைப்புக் கணக்குகளில் முதலீடு செய்கின்றனர். குறுகிய காலத்திற்கும், நடுத்தர, நீண்டகாலங்களுக்கும் பொது வைப்புக்களை ஏற்றுக்கொள்வதாலும், வங்கிகளை விட சற்று அதிக வட்டிவளிப்பதாலும் பொதுமக்களிடமிருந்து இவ்வாறு பணம் பெற முடிகிறது.

ஆரம்ப காலங்களில், பம்பாய், அகமதாபாத் மில்களிலும் வங்காளம், அஸ்ஸாம் ஆகிய நகரங்களிலிருந்த தேயிலைத் தோட்டக் கம்பெனிகளிலும் தான் இம்முறை கையாளப்பட்டு வந்தது. ஆனால், இந்நாட்களில் எல்லா தொழில்களில் ஈடுபட்டிருக்கும் கம்பெனிகளும் இம்முறையைப் பின்பற்றுகின்றன. 1978–ஆம் ஆண்டு திருத்தப்பட்ட கம்பெனிகள் (வைப்பு ஏற்பு) விதிகளின்படி, ஒரு கம்பெனியானது செலுத்தப்பட்ட மூலதனம் மற்றும் ஒதுக்கீடுகள் (Free Reserves) மொத்த தொகையில் 25% வரையறைக்கு மேல் பொதுமக்களிடமிருந்து பொது வைப்புக்களை ஏற்க முடியாது.

பொது வைப்புக்களினால் கம்பெனிக்குக் கிட்டும் நன்மைகள்

குறுகிய மற்றும் நீண்டகால நிதியைத் திரட்ட இம்முறை பின்வரும் வழிகளில் நன்மை தருவதாய் உள்ளது.

1) அதிக சட்டச் சடங்குகள் கிடையாது. மிக எளிதான இம்முறையில் நிதி திரட்டலாம்.

இலாபத்தை மறுபடியும் ஈடுபடுத்தல்

நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிதித்தேவைக்கென பூர்த்தி செய்து கொள்ளும் பொருட்டு கம்பெனி தான் சம்பாதிக்கும் இலாபத்தில் ஒரு பகுதியை தொழிலிலேயே ஈடுபடுத்தி வரலாம். அதிக விகிதத்தில் இலாப ஈவு அளிப்பதற்குப் பதிலாக, இலாபத்தை தொழில் முன்னேற்றத்திற்கும், தொழில் அபிவிருத்திக்கும் பயன்படுத்தி வருவது சிறந்த நிதிக் கொள்கைகளாகும். இம்முறையே அகசெல்வதாரர் என்கிறோம். தாமே நிதி வசதியை ஏற்படுத்திக் கொள்ளுதல் என்றும் கூறலாம்.

ஆண்டு தோறும் கிடைக்கும் இலாபத்திலிருந்த ஒரு காப்பு நிதியை ஏற்படுத்தி கம்பெனி தனதுநிதித் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளலாம். கம்பெனி அதிக இலாபம் சம்பாதிக்கும் பொழுது இந்த நிதிக்கு அதிக ஒதுக்கீடு செய்தால், தொழில் மந்த நிலையை அடையும் பொழுது அதைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

1. கம்பெனி தனக்குத் தானே நிதி வசதியை ஏற்படுத்திக் கொள்வதற்கு இந்தமுறை வகை செய்கிறது. வெளியாரிடமிருந்து கடன் பெறுவதைக் காட்டிலும் இது மிகச் சிறந்த கொள்கையாகும். நாளடைவில் இது கம்பெனிக்கு நன்மை பயக்கும்.
2. இது ஓர் எளிதான செலவில்லாத நிதி திரட்டும் முறையாகும். எவ்விதச் சட்ட சடங்குகளையும் பிற்பற்றத் தேவையில்லை. மேலும் இதற்காக யாரும் வட்டி அளிக்க வேண்டியதில்லை.
3. நிதி நிலைமையில் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துகிறது.
4. நாளடைவில் பங்குதாரர்களும் இதனால் நன்மையே அடைவர். எவ்வாறெனில், அதிக நிதி வசதியுடன் கம்பெனி அதிக இலாபம் சம்பாதிப்பதால் பங்குகளில் மதிப்பு உயரும்.

நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் பெறுதல்

தொழில் முனைவோர்கள் தங்களுக்குத் தேவையான நிலைத்த முதலினை (நீண்டகால முதல்) இதற்கென ஏற்படுத்தப்பட்டிருக்கும் நிதி நிறுவனங்களிடமிருந்து கடனாகப் பெறுகின்றனர். கீழ்கண்ட நிதி நிறுவனங்கள் தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான நிதி உதவியினைச் செய்கின்றன.

1. இந்தியத் தொழில் நிதிக் கழகம்,
2. இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி,
3. இந்தியத் தொழில் நாணய மற்றும் முதலீட்டுக் கழகம்,
4. மாநில நிதிக் கழகங்கள்,
5. தேசிய தொழில் வளர்ச்சிக்கழகம்,
6. முதலீட்டு டிரஸ்டுகள்,
7. இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம்.

குறுகிய கால மூலதன ஆதாரங்கள்

நாட்டு வங்கியர்

வட்டிக் கடைக்காரர்கள் போன்று நாட்டு வங்கியர் தொழில் நிறுவனங்களின் குறுகிய கால நிதித் தேவைகளை நிறைவு செய்து வந்தனர். இவர்கள் குறுகிய காலத்திற்கு கடன் அளிப்பர். ஆனால் இதற்காக மிக அதிக விகிதத்தில் வட்டி விதிப்பர். வணிக வங்கிகள் வளர்ச்சி அடைவதற்கு முன் இவர்களே பிரதான நிதி அளிப்பவர்களாக இருந்தனர், இந்நாட்களில் வணிக வங்கிகள் குறுகிய காலகடன் அளித்து தொழில் நிறுவனங்களுக்கு பெரிதும் உதவிபுரிகின்றன. எனினும் நாட்டு வங்கியர் தங்கள் தொழிலை முழுவதும் நிறுத்திவிட்டனர் என்று கூறமுடியாது. குறிப்பாக, சிறிய தொழில் நிறுவனங்கள் கடன் பெறுவதற்கு பிணையமாகக் காண்பிக்க போதிய சொத்துக்களைப் பெற்றிருக்காவிடில் இவர்களையே நாடுகின்றனர்.

வணிக வங்கிகள்

தொழில் நிறுவனங்களுக்கு குறுகிய கால நிதி அளிப்பதில் வணிக வங்கிகள் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன, பொது மக்களிடத்திலிருந்து பெறும் நிதி வைப்புகளிலிருந்து இவ்வாறு கடனுதவி செய்கின்றன. வைப்பாளர்கள் வங்கிக்கு குறுகிய கால அறிவிப்பு கொடுத்து தங்கள் பணத்தை திருப்பித் தர கோரலாம். எனவே தான் இவ்வங்கிகள் தங்களிடமுள்ள பணத்தை நீண்ட காலத்திற்கு முதலீடு செய்ய முடியாது.

தொழில் நிறுவனங்களின் குறுகிய கால நிதித் தேவைகளை வணிக வங்கிகள் பின் வருமாறு பூர்த்தி செய்யலாம்.

(அ) கடன், முன்பணம், அதிகப்பற்று, ரொக்க வரவு வைத்தல்

(ஆ) உண்டியல், கடன் உறுதிச் சீட்டு போன்றவற்றை கழிவு செய்தல்.

கடன், முன்பணம், ரொக்கவரவு போன்றவற்றை அனுமதிக்கும் பொழுது வங்கியவர் எளிதில் பணமாகக் கூடிய சொத்துக்களை பிணையமாகப் பெறுவார். இவ்வாறு செய்வது பிறசமயத்தில் ஏதாவது ஒரு நஷ்டம் ஏற்படாமல் பாதுகாத்துக் கொள்வதற்காகவேயாகும். பிணையமாகக் காண்பிக்கத் தகுந்த சொத்துக்களை பெற்றிருக்காத நிறுவனங்கள் கடன் பெற இயலாது. வங்கியர்

விதிக்கும் வட்டி விகிதம் மற்றவர்கள் விதிப்பதைவிட குறைவாகத்தான் இருக்கும். இதனால் தற்காலத்தில் குறுகிய காலக் கடன் தேவைக்களுக்காக தொழில் நிறுவனங்கள் வணிக வங்கிகளையே பெரிதும் சார்ந்து இருக்கின்றன.

உண்டியல்கள் மற்றும் உறுதிசீட்டுகள், ஆகியவற்றை வாடிக்கையாளரிடமிருந்து பெற்று அவற்றிற்கெதிராக வங்கியர் கடன் அளிக்கின்றனர். பணம் தரப்படும் முதிர்வு நாளன்று இவைகளை உரியவரிடம் சமர்ப்பித்து வங்கியர் பணத்தைப் பெற்றுக் கொள்வர். இதற்காக வங்கியர் பெறும் தள்ளுபடித் தொகை அவர்களுக்கு இலாபமாகும். இதுவும் வணிக நிறுவனங்களுக்கு கடன் அளிக்கும் முறைகளில் ஒன்றாகும்.

வியாபாரக் கடன்

பொருள் உற்பத்தியாளர் மொத்த விற்பனையாளருக்கும் கடனுக்கு பொருட்களை விற்கின்றனர். 30 முதல் 60 நாட்கள் வரையிலுமான காலவரையறைக்கு கடன் வசதி அளிக்கப்படும். பொருள்களை வாங்கும் வணிகரின் சொந்த நபர் உத்திரவாதத்தையும், அவரது தொழில் நன்மதிப்பையுமே பிணையமாகக் கொண்டு கடனுக்கு பொருள் விற்கப்படுகிறது. அதாவது எந்தப் பிணையமும் பெறாமல், வட்டியும் விதிக்காமல் விற்பனையாளர் தனது வியாபாரத்தைப் பெருக்கிக் கொள்வதற்காக கடன் வசதியளிக்கிறார். இந்த வகையிலே குறுகியகால நிதி வசதியாக வியாபாரக் கடன் அமைகிறது.

வாடிக்கையாளர் முன்பணம்

ஒரு நிறுவனத்தின் சரக்கிற்கு பொது மக்களிடம் அதிகம் தேவையிருப்பின் வாடிக்கையாளர் பொருள் வாங்குவதற்கு முன்பாகவே முன்பணம் அளித்துச் செல்வர். பொருள் விலையில் ஒரு பகுதியை இவ்வாறு முன்பணமாக வணிகர் பெறுகிறார். இதற்கு வட்டியளிக்க வேண்டியதில்லை. பொருளை ஒப்படைக்க ஆகும் காலத்தைப் பொருத்தே இந்த காலவரையறையும் அமைகிறது. இதுவும் ஒரு குறுகிய கால நிதிவசதியாக அமைகிறது.

பாடம் – 2

நிதியியல் பணிகள்

முன்னுரை

1980 ஆண்டிற்குப் பின் நிதி மேலாளரின் பணிகள் வெறும் அறிக்கை தயாரித்தலும் வெளியிடங்களிலிருந்து ரொக்கம் தேடுதலும் மட்டுமே என்ற நிலை மாறி, பெரிதும் விரிந்து விட்டன. வாணிபம் பெருகப் பெருக சிக்கல்கள் மிகுந்து விட்டன. இந்நிலையில் நிதி மேலாளர் ஒரு நிறுவனத்தின் சொத்துக்களில் பிரச்சனைகளுக்கும் தீர்வு காண வேண்டிய நிலையிலுள்ளார். ஒரு நிறுவனத்தில் பயன்படுத்தப்படும் மொத்த முதல், அது பயன்படுத்தப்படும் முறைகள் மற்றும் அவற்றினின்று பெறப்படும் வருமானங்களை மதிப்பீடு செய்தல் ஆகியவை நிதி மேலாளரின் பணிகளில் அடங்கும்.

நிதியியலின் பொதுவான பணிகள் (General Finance Functions)

நிதியியல் பொது நிர்வாகத்தின் ஒரு சிறப்புப் பணியாகக் கருதப்படுகிறது. நிதியியலில் பயன்படுத்தப்படும் அணுகு முறைகளும், அடிப்படைக் கோட்பாடுகளும், பொருளாதாரம், கணக்கு வைப்பு மற்றும் இவற்றோடு சம்மந்தப்பட்ட மற்ற விஷயங்களிலிருந்தும் பெறப்பட்டவை. நிதியியலுக்குத் தனிப்பட்ட கோட்பாடுகளும், விதிகளும் இருந்த போதிலும் இது ஒரு சார் நிலைப்பணியேயாகும்.

நிதியியல் பணிகள் ஒரு நிறுவனத்தின் எளிவரல் தன்மை (Liquidity) மற்றும் லாபம் ஈட்டும் திறன் (Profitability) ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்கின்றன. கீழ்க்கண்ட நிலைகளில் எடுக்க வேண்டிய முடிவுகள் இவற்றில் அடங்கும்.

அ) முதலை மையமாகக் கொண்டு செயல்படும் சூழ்நிலையில் நட்ட அபாயமுள்ள முதலீடுகள் மூலம் நிதி திரட்டும் முயற்சியில் அதிகச் செலவுகள்.

ஆ) செய்து வந்த வியாபாரத்தை விட்டோ அல்லது அத்துடன் மற்ற வியாபாரங்களைச் சேர்த்துக் கொள்ளுதல்.

இ) திட்டமிடுதலையும் (Planning) முன் மதிப்பீடு செய்தலையும் (Forecasting) பாதிக்கக்கூடிய பணவீக்கம்.

ஈ) புதிய நிதித் தோற்றுவாய்களையும், பழைய தோற்றுவாய்களைச் செவ்வனே பயன் படுத்துதல்.

உ) ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிக்காக செலவுகளை நிர்ணயித்து, மாறும் தொழில் நுட்பத்தை ஏற்க வழி செய்தல்.

எ) கணிப்பொறி உதவியுடன் உலக நாடுகள் அனைத்திற்கும் நிதி விவரங்களை அனுப்புதலும் மற்ற நாடுகளிலிருந்து தகவல்களைப் பெற்றுக் கொள்ளுதலும்.

1980க்குப்பின் நிதி மேலாண்மை, பெரிய வணிக நிறுவனங்களில் சவால்களை நிரம்பிய பணியாக மாறிவிட்டது. கடும் போட்டி நிறைந்த சூழ்நிலையில் ஒரு நிறுவனம் எவ்வாறு திறமையோடு செயல்படுகிறது என்பதை நிர்ணயிப்பத்தில் நிதி மேலாளரின் பணி பெரும் பங்கு வகிக்கிறது. குறிப்பாக கீழ்க்காணும் பிரச்சினைகள் தலைதூக்கி நிற்கின்றன.

1. முதலைப் பயன்படுத்திக் கொள்ளும் புதிய திட்டங்களில் எவற்றை ஏற்றுக் கொள்ளலாம் ?
2. ஒரு கம்பெனியின் சாதாரணப் பங்குகளின் மதிப்பை உயர்த்துவது எப்படி ?
3. கம்பெனியின் நடவடிக்கைகளுக்குத் தேவையான நடைமுறை மூலதனம் எவ்வளவு ?
4. நீண்டகால மூலதனத்தைப் பெறும் முறைகள் என்ன ? இவற்றின் அடக்கச் செலவுகள் என்னென்ன ?
5. சாதாரணப் பங்காதாயம் அளிப்பதா, வேண்டாமா ? எவ்வளவு அளிக்கலாம் ?

நிறுவனத்தின் குறிக்கோள்கள் :

இன்றைய வணிக நிறுவனங்கள் அதிகலாபம் ஈட்டுவதையே பெரும்பாலும் குறிக்கோளாகக் கொண்டுள்ளன. ஆனால் குறுகியகால லாபம் நீண்ட கால லாபத்தினின்றும் மாறுபட்டதாகி விடுகிறது. எடுத்துக்காட்டாக ஒரு

நிறுவனம் தன் இயந்திரங்களை பராமரிக்காவிட்டால் செலவு குறைந்து குறுகிய கால லாபம் அதிகரிக்கும். ஆனால் விரைவிலேயே இயந்திரங்கள் பழுதடைந்து வீணாகிப் பயனற்றுப் போய் விடுவதால் நீண்ட கால லாபம் பாதிக்கப்படுகிறது.

இரண்டாவதாக, இலாபத்தை அதிகப்படுத்தும் குறிக்கோள் 'காலத்தை' உதாசினப்படுத்தி விடுகிறது. ஏனெனில் இன்று பெறப்படும் பணத்திற்கு நாளை பெறப்படும் பணத்தை விட மதிப்பு அதிகம். ஆகவே நிறுவனத்தில் 'ரொக்க நடமாட்டம்' (Cash Flow) மற்றும் இலாபம் ஆகிய இரண்டும் எந்தக் காலத்தில் நடைபெறுகின்றன, என்பது மிகவும் முக்கியமாகிவிடுகிறது. இலாபத்தை அதிகரிக்கும் நடவடிக்கையில் ஒரு நிறுவனம் ஈடுபட்டுள்ள போது 20% மீள் வரவு (Return) உள்ள 3 ஆண்டு முதலீட்டுத் திட்டத்தைவிட 17% வரவு உள்ள 5 ஆண்டு திட்டம் அதிக மொத்த லாபம் அளிக்ககூடும். 3 ஆண்டு திட்டத்திலிருந்து பெறப்படும் லாபத்தை உடனே மறுமுதலீடு செய்ய முடியாவிட்டால் மட்டுமே இந்தக் கூற்று உண்மையாகும்.

மூன்றாவதாக, இலாப மேம்பாட்டுக் குறிக்கோள், கம்பெனியின் எதிர்கால நடவடிக்கையின் தரத்தை மறைத்து விடுகிறது. சில நிறுவனங்கள் விற்பனையை அதிகரிப்பதால் அதிக கவனம் செலுத்துக்கின்றன. இந்நிலையில் குறுகிய காலத்தில் குறைந்த லாபத்தை ஏற்கத் தயாராக உள்ளன. மேலும் சில நிறுவனங்கள் தங்கள் நடவடிக்கைகளை சந்தை நிலவரங்களுக்கேற்ப ஒரு பொருள் விற்பனையிலிருந்தோ தொழிலிருந்தோ மற்றொன்றிற்கு மாற்றிக் (Diversification) கொண்டு ஒரு பலமுள்ள நிறுவனமாகச் செயல்பட எண்ணுகின்றன இப்பாதையில் குறுகிய காலத்தில் இலாபக் குறைவையோ, குறைந்த இலாபத்தையோ அவை பொருட்படுத்துவதில்லை. இன்னும், சில நிறுவனங்கள் தங்கள் இலாபத்தில் ஒரு பகுதியை சமூக நலத்திற்குச் செலவிடத் தயங்குவதில்லை. பல நிறுவனங்களில் இலாபப் பெருக்குதல் முக்கிய குறிக்கோளாகச் சொல்லிக் கொள்ளப்பட்டாலும் இலாபத்தைத் தவிர மற்ற பல விஷயங்கள் நிறுவனத்தின் குறிக்கோள்களைத் தீர்மானிப்பதில் பெரும் பங்கு கொள்கின்றன.

மேற்சொன்ன காரணங்களுக்காக வேறு பல நிறுவனங்கள் சொத்து பெருக்கம் (Maximisation of wealth) என்பதைத் தம் குறிக்கோளாக வைத்துக் கொண்டிருக்கின்றன. இது ஒரு நீண்ட கால குறிக்கோளாகும். ஒரு நிறுவனத்தின் மதிப்பு (Value of a firm) அதன் சொத்தைச் சார்ந்திருக்கிறது.

இலாபத்தின் மீது கவனம் செலுத்துவதைவிட இக்குறிக்கோளானது ஒரு நிறுவனத்தின் பிணைப்பத்திரங்களின் (Securities) முக்கிய்மாக சாதாரணப் பங்குகளின் மதிப்பின் மீதி இலாபத்தின் விளைவு என்ன என்பதில் அதிக கவனம் செலுத்துக்கிறது. ஒரு நிறுவனத்தின் நீண்ட கால மதிப்பு அதன் இன்றைய மதிப்பைப் பொறுத்திருக்கிறது. எதிர் காலத்தில் அதன் மதிப்பு உயர்ந்ததாக இருந்தது என்றால் அதன் இன்றைய மதிப்பு தானாகவே உயர்ந்து விடுகிறது. எதிர்மறையாக எதிர் காலத்தில் ஒரு நிறுவனத்தின் மதிப்பு குறையும் என்று கவனிக்கப்பட்டால் அதன் இன்றைய மதிப்பு தானாகவே குறைந்து விடுவதையும் காணலாம். எனினும் ஒரு நிறுவனத்தின் நீண்டகால மதிப்பு அதில் இலாபம் ஈட்டும் திறனையும் பொறுத்திருக்கிறது.

நிறுவனத்தின் நீண்ட கால மதிப்பு நிறுவனத்தின் வளர்ச்சி, முதலீட்டாளர்களின் இடர்பு வாய்ப்பு கணிப்பு (Risk to Investors) அதன் பங்குகளின் சந்தை விலை மற்றும் அது அளிக்கும் பங்காதாயம் ஆகியவற்றைப் பொறுத்திருக்கிறது இருப்பினும் சொத்துப் பெருக்கத்தைத் தன் குறிக்கோளாகக் கொண்ட ஒரு நிறுவனம் கீழ்க்கண்டவற்றைச் செய்ய வேண்டும்.

1. அதிக நட்ட வாய்ப்பு நடவடிக்கைகளைத் தவிர்க்க வேண்டும். நீண்ட கால நோக்கில் இந்நடவடிக்கைகள் தீங்கு விளைவிக்கக் கூடுமாதலால் நிதானத்துடன் செயல்படுவது அவசியமாகிறது. குறுகிய காலத்தில் அதிக அளவு லாபம் தரக்கூடிய ஆனால் மிகவும் அபாயமான திட்டங்கள் ஏதேனும் ஒன்று தோல்வி அடைந்து விட்டால் கூட நிறுவனம் திவாலாக ஏதுவுண்டு.

2. கட்டாயம், பங்காதாயம் தொடர்ந்து கொடுக்கப்பட வேண்டும். பங்குதாரர்கள் நிறுவனத்தின் உரிமையாளர்கள் என்ற நிலையில் இருப்பதனால் அவர்கள் எதிர்பார்க்கும் பங்காதாயம் அவர்களுக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும். நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட முதற் சில ஆண்டுகளுக்கு பங்குகளையே பங்காதாயமாக (Bonus Shares) அளிப்பது, பணத்தை நிறுவனத்தில் தக்க வைத்துக் கொள்ளக் கூடிய உத்தியாகும். ஆனால் நிறுவனம் வளர வளர முதிர்ச்சியடையும் நிலையில், விரிவாக்கும் திட்டங்களுக்கு உடனடி ரொக்கம் குறைவாக

வைத்திருந்தால் போதும். இந்நிலையில் பங்காதாயத்தை ரொக்கப் பணமாக அளிப்பதில் அதிக சிரமம் தெரியாது. தொடர்ந்து திருப்தியான விகித ரொக்கப் பங்காதாயம் அளிப்பது நிறுவனத்திற்கு முதலீட்டாளர்களைக் கவருவதோடு, நிறுவனத்தின் மதிப்பையும் பங்குகளின் மதிப்பையும் உயர்த்தும்.

3. வளர்ச்சியை நாட வேண்டும். சந்தையில் நிறுவனத்தின் விற்பனைப் பங்கு அதிகரித்து விற்பனையும் அதிகரிக்கும் போது, சந்தையிலிருந்து நிறுவனத்தை விரட்டப்படும் வாய்ப்புக் குறைந்து விடுகிறது. விற்பனை அதிகரிப்பதால் பொருளாதாரத் தேக்கம் அல்லது தொய்வு நுகர்வோரின் தேவைகளில் மாறுதல் முதலியவை நிறுவனத்தின் பொருளாதார நிலையை பாதிப்பதில்லை. இதன் காரணமாகவே சொத்துப் பெருக்கத்தைக் குறிக்கோளாகக் கொண்ட நிறுவனங்கள் விற்பனை அதிகரிப்பதையும், வருமானப் பெருக்கத்தையும் தொடர்ந்து பின்பற்றி வருகின்றன.

4. சந்தையில் பங்கின் விலையைப் பராமரித்தல் – சொத்துப் பெருக்கத்தைத் தன் முக்கிய குறிகோளாகக் கொண்ட நிறுவனங்கள் பங்குச் சந்தையில் தங்கள் சாதாரணப் பங்குகளின் விலையைப் பற்றி அதிக கவலை கொள்கின்றன. சொத்துப் பெருக்கத்தின் நேர் விளைவு சந்தையில் சாதாரணப் பங்குகளின் விலையை உயர்த்துவதேயாகும். திருப்திஅளிக்கக் கூடிய விலையை சந்தையில் ஏற்படுத்த ஒரு நிறுவனம் பல முயற்சிகளை மேற் கொள்ளலாம். நிறுவனத்தின் நடவடிக்கைகளை விளக்கி முதலீட்டாளர்களை நிறுவனத்தின் பங்குகளின் மீது அக்கறை கொள்ளச் செய்யலாம். இம்மாதிரி செய்கைகளால் நிறுவனத்தின் பங்கின் விலை உயர வாய்ப்பு உண்டாகிறது.

சொத்துப் பெருக்கம் இலாபப் பெருக்கத்தை விட சிறப்பான குறிக்கோளாகக் கருதப்படுகிறது. சொத்துப் பெருக்கம், இலாப அதிகரிப்பை ஒரு நீண்டகால நோக்கில் உள்ளடக்கிக் கொள்கிறது. அதே நேரத்தில் இலாப அதிகரிப்பைத் தனித்து நோக்காமல் அத்துடன் இணைந்திருக்கும் வளர்ச்சி, ஸ்திரத்தன்மை, நட்ட வாய்ப்பு அச்சத்தைத் தவிர்த்தல் மற்றும் நிறுவனத்தின் பங்கின் சந்தை விலை ஆகிய குறிக்கோள்களையும் கவனத்தில் கொள்ளச் செய்கிறது.

நிதி மேலாண்மையின் குறிக்கோள்கள்

சொத்துப் பெருக்கத்தை செயலாற்றும் போது, நிதி மேலாளர் பல குறிக்கோள்களைக் குறுகிய கால உடனடி குறிக்கோள்களாகக் கொண்டு செயல்படுகிறார். இந்த குறிக்கோள்களைப் பல வகையாகப் பிரித்துக் கொள்ளலாம். கீழ்க்காணும் வகைகள் பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்டவை.

இலாப - நட்ட அபாய அணுகுமுறை

நிதி நிர்வாகம் குறிப்பிட்ட அபாய வாய்ப்பு நிலையில் இலாபத்தைப் பெருக்கும் வழிவகை கண்டறியும் நிலையில் செயல்பட வேண்டியுள்ளது என்பதை இவ்வணுகுமுறை உணர்த்துகிறது. ஆகவே நிதி ஒட்டக் கட்டுப்பாடுகளையும் (Funds Flow Controlls) அதே நேரத்தில் நடைமுறையில் ஏற்படும் மாறுதல்களுக்கேற்ப மாறிக் கொள்ளும் நீக்குப் போக்கையும் வலியுறுத்துகிறது. இம்முறையில் நான்கு குறிக்கோள்கள் வலியுறுத்தப்படுகின்றன.

அ) இலாபப் பெருக்கம்

நிதி நிர்வாகம் நீண்டகால இலாப அதிகரிப்பை முக்கியமாகவும் இதற்காக குறுகிய கால இலாப அதிகரிப்பையும் அடைவதற்கான செயல் முறைகளை நடை முறைப்படுத்த வலியுறுத்திக் கூறுகிறது.

ஆ) குறைந்தபட்ச நட்ட வாய்ப்பு

நட்ட வாய்ப்பை அதிகரிக்க கூடிய இனங்களைத் தவிர்க்கும் மற்றும் பிரச்சனைகளை முன் கூட்டியே எதிர்பார்த்தும், இடர்பாடுகளைத் தவிர்க்கும் நடவடிக்கைகளை, நிதி நிர்வாகம் தெரிந்து செயல்பட வேண்டும்.

இ) கட்டுப்பாடு

நிறுவனத்திற்குள் வரும் மற்றும் வெளியேறும் நிதிகளை அடிக்கடி கவனித்து அவை இலாபம் தரத்தக்க வகையில் பயன்படுத்தப்படுகின்றனவா என்று கண்கானிக்க வேண்டும். இதற்கான அறிக்கைகள் உரிய நேரத்தில் துல்லியமாகப்படம் பிடித்துக் காட்டுப்பவையாக இருத்தல் வேண்டும். தவறுகளும் பலவீனங்களும் அவ்வப்போது தெரிவிக்கப்பட்டு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

ஈ) நீக்குப் போக்கு

எந்த நிறுவனமும் உறுதியற்ற எதிர் காலத்தைக் கவனத்தில் கொள்ள வேண்டியிருக்கிறது. நிதிகளையும், நடவடிக்கைகளையும் நீக்குப் போக்கும் கட்டுப்படுத்தினால் எதிர்கால நட்ட வாய்ப்புக்களை மட்டுப்படுத்தலாம். நிதித் தோற்றுவாய்களை முன்னமேயே அறிந்து வைத்துக் கொண்டால் தேவை ஏற்படும் போது நீக்குப் போக்குடன் செயல்பட முடியும். இலாபம் தரக்கூடிய திட்டங்களை முன்கூட்டியே தெரிந்து வைத்துக் கொண்டால், மாறிவரும் சூழ்நிலைக்கேற்ற திட்டத்தைச் செயல்படுத்த முடியும். மேலும் உற்பத்தி மற்றும் சந்தைப் படுத்தும் பணிகளுக்கேற்ப விவரங்களையும் நிதிகளையும் ஏற்படுத்தித் தர நீக்குப் போக்கு மிக இன்றியமையாதது.

ரொக்க நிலை - இலாப ஈட்டுத்திறன் அணுகுமுறை

இந்த அணுகுமுறைப்படி நிதி மேலாளருக்கு இருகுறிக்கோள்கள் குறிப்பிட்டப்படுகின்றன. முதலாவது, நிறுவனத்தின் எளிவரல் தன்மை அல்லது ரொக்க நிலை (Liquidity) அதாவது நிறுவனம் எப்போதும் தன்னால் கொடுக்கப்பட வேண்டிய கட்டுப்பாடுகளை (Obligatory) அவ்வப்போது கொடுத்து முடித்து விட தேவைப்படும் ரொக்கம் கையில் வைத்துக் கொண்டுள்ளதா என்பது கவனிக்கப்படுகின்றன. இது தவிர தன்னிடம் சிறிது ரொக்கம் எதிர்பாராத செலவுகளுக்காகவும் வைத்திருத்தல் அவசியம். இரண்டாவது குறிக்கோள் – இலாப ஈட்டும் திறன். இது ஏற்கனவே கூறிய படி நிறுவனத்தின் குறிக்கோள். பங்குதாரர்களின் நீண்ட கால இலாபத்தை அதிகப்படுத்தி பங்குகளின் தற்கால மதிப்பை உயர்த்துவதே என்பதை உறுதிபடுத்துகிறது.

மேற்சொன்ன இரு அணுகுமுறைகளுமே ஒரே மாதிரியானவை. மேலும் இவை ஒன்றை ஒன்று சார்ந்திருக்கின்றன. உதாரணமாக இலாப ஈட்டு மற்றும் நட்ட வாய்ப்பு தவிர்ப்பு அணுகுமுறையில் ரொக்க நிலை அடங்கி விடுகிறது. அதே போல் 'ரொக்க நிலை – இலாப ஈட்டுத்திறன்' அணுகுமுறையில் நட்ட வாய்ப்பைக் குறைத்து நிறுவனத்தின் நடவடிக்கைகளில் கண்காணிப்பும், கட்டுப்பாடும் வைத்திருப்பது இணைந்து விடுகிறது. எந்த குறிக்கோளாயினும் நிதி மேலாளர் தன் நிறுவனத்தின் குறிக்கோள்களையும் நிதியியல்

பணிகளையும் செவ்வனே அறிந்து செயல்பட்டால் தான் குறிக்கோள்களை அடைவதில் வெற்றி காண முடியும்.

நிதி நிர்வாகத்தின் பணிகள்

மேலேகூறப்பட்ட குறிக்கோள்களை அடைய நிதி நிர்வாகம் பணிகளைச் செய்ய வேண்டியுள்ளது. இப்பணிகளை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். முதலாவதாக ரொக்க நிலையையும், ஈட்டுத் திறனையும் பற்றிய பணிகள்; இரண்டாவதாக சொத்துக்களையும், நிதிகளையும் பராமரிக்கும் பணிகள்.

ரொக்க நிலையைப் பற்றிய பணிகள்

ரொக்க நெருக்கடி ஏற்படாமல் தாராளப் பணப்புழக்கம் இருக்கும் படிச் செய்ய கீழ்க்காணும் அலுவல்கள் உதவுகின்றன.

அ) ரொக்க ஓட்டத்தை முன்கூட்டியே கவனித்தால் அன்றாட நடவடிக்கை இடையூறின்றி நடைபெற வேண்டுமென்றால், கொடுக்கபட வேண்டிய பாக்கிகளை அவ்வப்போது கொடுத்து பைசல் செய்துவிட வேண்டும். ரொக்க வரவு, ரொக்கச் செலவுக்கு ஈடு கொடுக்க வேண்டும். வாடிக்கையாளரிடமிருந்து பெறக்கூடிய பாக்கிகளை வசூல் செய்யும் காலத்தைக் கணக்கிட்டு, நாம் கடனுக்கு வாங்கியிருப்போருக்குக் கொடுக்க வேண்டிய காலத்தையும் பொருத்த வேண்டும்.

ஆ) நிதிகளை சேகரித்தல்

நிதிகளுக்குப் பல தோற்றுவாய்கள் உள்ளன. சில சமயங்களில் சில தோற்றுவாய்கள் கவர்ச்சிகரமாகத் தோற்றமளிக்கின்றன. சில தோற்றுவாய்களிடமிருந்து தேவைப்படும் அளவுக்கு நிதி கிடைக்காமல் போகலாம் அல்லது மிகவும் செலவு பிடிக்கும் தோற்றுவாயிலிருந்தும் கிடைக்கக்கூடிய தொகை, இவற்றுக்கான செலவுகள், மற்றும் அவை கிடைக்கும் காலம் ஆகியவற்றைப் பற்றிய துல்லியமான தகவல்களை எப்போதும் வைத்திருக்க வேண்டும்.

இ) உள் நிதிகளின் ஓட்டத்தைக் கண்காணித்தல்

ஒரு பெரிய நிறுவனம் பல வங்கிகளில் பல பயன்களுக்காகக் கணக்கு வைத்திருக்கும். அக்கணக்குகளில் செலுத்தப்படும் தொகை மற்றும்

அவற்றிலிருந்து செலவிடப்படும் தொகைகள் ஆகியவைப் பற்றி அவ்வப்போது தகவல் தந்து கொண்டேயிருக்க வேண்டும். தொடர்ந்து இதைக் கண்காணிப்பதின் மூலமும், ரொக்கத்தின் தொகையைக் கட்டுப்படுத்தியும், ஒரு நிதி மேலாளர் நிறவனத்தின் எளிவால் தன்மையையும், குறைந்த அளவே வெளியார்க் கடனையும் வைத்துக் கொள்ளலாம்.

இலாப ஈட்டுத்திறன் பற்றிய பணிகள்

இலாபத்தைத் தேடும் முயற்சியில் ஈடுபடுவதாக ஒரு நிதி மேலாளர் அலுவலகத்தின் முக்கியமான முடிவுகளை எடுக்க உதவுகிறார். இதில் அடங்கும் அலுவல்கள் :

அ) அடக்க விலைக்கட்டுப்பாடு

பல பெரிய நிறுவனங்களில் அடக்க விலைக் கணக்காளர் இருப்பார். அன்றாட அடக்க விலைக் குறிப்புகள் அடக்க விலை அமைப்புக்களுக்கு அனுப்பப்படும். இவற்றிலிருந்து பெறப்படும் அறிக்கைகளை நுணுக்கமாக ஆராய்ந்து செலவழிக்கப்பட்ட ரொக்கத்தையும் செலவு செய்ய வேண்டிய தொகையையும் பற்றிய தகவல்களை அறிந்து உரிய அறிவுரைகளை மேல்மட்ட மேலாண்மைக்குக் கொடுத்தல் இன்றியமையாத அலுவலாகக் கருதப்படுகிறது. அடக்கவிலைகள் உயரும்வரை முதலாகக் கவனிப்பவர் நிதி மேலாளரே. அந்நிதி நிலையில் தக்கப் பரிந்துரைகளைக் கூறி அடக்கவிலைகளை கட்டுக் கடங்கி இருக்க உதவுகிறார்.

ஆ) விலையை நிர்ணயித்தல்

விலை என்பது ஒரு நிறுவனத்தின் இன்றியமையாத முக்கியமான முடிவாகும். விலை நிர்ணய அடிப்படைகள் மற்றும் கொள்கைகள், அணுகுமுறைகள் ஒரு நிறுவனத்தின் மீது மக்கள் கொண்டுள்ள நல்லெண்ணம், நன்னம்பிக்கை ஆகியவற்றைக் கடுமையாக பாதிக்கக்கூடியவை. ஆகவே, விலை நிர்ணயம் சந்தைத் துறை மேலாளரும் நிதி மேலாளரும் சேர்ந்து எடுக்க வேண்டிய ஒரு இணைமுடிவாகும். சந்தைத்துறை மேலாளர், நிர்ணயிக்கப்படும் விலை சந்தையில் விற்பனையை எவ்வாறு பாதிக்கும், போட்டியாளரின் நடவடிக்கைகள் எவ்வாறிருக்கும் என்ற விவரங்களை தந்துதவுவார். நிதி

மேலாளர் அடக்கவிலை பற்றியும், வெவ்வேறு உற்பத்தி நிலைகளில் மாறும் அடக்க விலைகள் பற்றியும், வாணிபத்தை இலாபகரமாக நடத்த குறைந்தபட்ச விலை பற்றியும் தகவல்கள் தருவார். அதாவது இலாபத் தேவைகளை ஆய்வு செய்வதற்கு வேண்டிய கருவிகளையும், விலை நிர்ணயித்தற்கான கொள்கைகளை முடிவு செய்வதற்கான உதவிகளையும் அளிக்கிறார்.

இ) இலாபத்தை முன்கூட்டியே கணக்கிடுதல்

தகுந்த விபரங்களைச் சேகரித்து அவற்றை ஆராய்ந்து இலாப நிலைகளை முன்கூட்டியே அறிவித்தல் நிதி மேலாளரின் முக்கிய அலுவலாகும். எதிர்கால இலாபத்தைக் கணக்கிட தற்போதைய அடக்கவிலைகள் அவற்றில் ஏற்படக்கூடிய அதிகரிப்புகள் மற்றும் நிறுவனத்தின் விற்பனைத் திறமையில் ஏற்படிக்கூடிய அதிகரிப்புகள் மற்றும் நிறுவனத்தின் விற்பனைத் திறமையில் ஏற்படக் கூடிய மாறுதல்கள் முதலியவை பற்றிய விவரங்கள் தேவை. இவை ஒவ்வொன்றிலும் பல காரணங்களால் பாதிப்பு ஏற்படக்கூடும். நிதித்துறை உற்பத்தித் துறையிலிருந்தும், கொள்முதல் துறையிலிருந்து இடு பொருட்களுக்கான அடக்கவிலை விவரங்களும் சந்தைப்படுத்தும் துறையிலிருந்தும், கொள்முதல் துற்றயிலிருந்தும் விற்பனை பற்றிய விவரங்களும் பெற வேண்டும். விற்பனையும், அடக்கவிலையும் முன்கூட்டி அறிந்து விட்டால் இவற்றிலிருந்து ஒரு இலாப–நட்டக் கணக்குக் குறிப்பைத் தயார் செய்துவிடலாம். எதிர் பார்க்கக்கூடிய இலாபம் என்ன என்பதைத் தெளிவாகக் காட்ட முடியும். இதே முறையில் ஒரு திட்டதின் முதலீடு செய்யும் முன் அதிலிருந்து பெறக்கூடிய இலாபம் எவ்வளவு என்பதைக் கணக்கிட்டு சீர்தூக்கிப் பார்ப்பது மிக அவசியம். செய்யப்படும் முதலீட்டுக்கு பெறப்படும் ஆதாயம் சரியான அளவுதானா என்று சோதித்தல் வேண்டும்.

ஈ) எதிர்ப்பார்க்கும் வருவாயைக் கணக்கிடுதல்

ஒவ்வொரு முறை முதலீடு செய்யும் போதும் ஒரு நிறுவனம் அம்முதலீட்டில் பெறப்படும் வருவாயை அதன் நட்ட வாய்ப்பு அபாயத்துடன் ஒப்பிடல் வேண்டும். இம்முதலீட்டில் உள்ள நட்ட வாய்ப்பு அபாயத்திற்கு, பெறப்போகும் வருவாய் சரிக்கட்டும் நிலையில் உள்ளதா ? என்ற கேள்விக்கு விடைகள் தேவை. எதிர்பார்க்கும் வருவாய் என்பது முதலீடு செய்யும் முன்

கணிக்கப்பட வேண்டிய ஒன்று. சில நேரங்களில் இதை முதலில் அடக்கவிடலை (Cost of Capital) எனறு கூறப்படுகிறது. இது அந்த நிறுவனத்தின் இலாப ஈட்டுத் திறனைப் பொருத்தது.

நிர்வாகப் பணிகள்

மேற்சொன்ன குறிகோள்களை அடையும் பணியில் ஈடுபடும் போது நிதி மேலாளர் இருவகையில் செயல்படுவர். ஒன்று, நிர்வாக அதிகாரிகளாக அதாவது முடிவெடுப்பவர் மற்றும் நிறுவனக் கூட்டுத் தலைமையின் உறுப்பினர் என்ற வகையில் அதன் நீண்ட கால மதிப்பை உயர்த்தும் பணியில் ஈடுபட்டுள்ளார். இரண்டாவதாக, ஒரு திறப்புப் பணியாளராக அதாவது மேல் அதிகாரிகளுக்கு நல்ல முடிவெடுக்க உதவிபுரிபவராக, திதி விஷயங்களில் வல்லுனராகவும், ஆலோசகராகவும் பணிபுரிகிறார். அந்த இரு பாத்திரங்களுமே சொத்துக்களை நிர்வகித்தல் மற்றும் நிதிகளை நிர்வகித்தல் என்ற அலுவல்களில் அடங்கும்.

சொத்து நிர்வாகம்

ஒரு நிறுவனத்தில் வியாபாரத்திற்கு அதன் சொத்துக்களே அடிப்படை மூலதனமாகும். இதில் கட்டிடங்கள், பொறிகள், வாகனங்கள், சரக்கு பணம் முதலியவை அடங்கும். ஒரு நிறுவனத்தின் சொத்துக்கள் சரியானபடி நிர்வகிக்கப்பட வேண்டும். இதற்கு பல முக்கியமான முடிவுகள் எடுக்க வேண்டி உள்ளது. சொத்து நிர்வாகம் நிதி மேலாளரின் முடிவெடுக்கும் பணியைக் குறிப்பிட்டுக் காட்டுகிறது. நிதித் துறை அலுவலர்கள் இதரதுறை அலுவலர்களுடன் கலந்து பேசி நிறுவனத்தின் சொத்துக்களுடைய தற்போதைய பயன்களையும் எதிர்கால உபயோகங்களையும் பற்றி முடிவெடுக்கின்றனர். எடுத்துக்காட்டாக இவர்கள், நிறுவனத்தின் நடிவடிக்கைகளுக்குத் தேவையான மொத்த சொத்துக்கள் எவ்வளவு? எவ்வெவ்வகை சொத்துக்கள் எந்த விகிதத்தில் இருந்தால் இலாபக் குறிக்கோளை அடைய பயனுள்ளதாகும்? இருக்கும் சொத்துக்களை அதிக இலாபகரமாகப் பயன்படுத்துவது எப்படி? மேலும் சேதாரங்களையும் தேவையற்ற செலவினங்களையும் எவ்வாறு குறைக்கலாம்? ஆகிய பல விதங்களில் ஆராய்ந்து முடிவெடுக்க உதவுகின்றனர்.

நிதிகளை நிர்வகித்தல்

நிதிகளை ஒரு நிறுவனத்தின் ரொக்க நிலைச் சொத்துக்கள் எனக் கருதலாம். நிதிகள் என்பதில் ரொக்கம், கடன் வாங்கப்பட்ட பணம் மற்றும் நிறுவனத்தின் பங்குதாரர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட இலாபத்தொகை ஆகியவை அடங்கும்.

நிதிநிர்வாகத்தில், மேலாளர் ஒரு அறிவுரை பரிந்துரை கூறும் அதிகாரியாகச் செயற்படுகிறார். தேவையான நிதிகளைப் பெற்று வைத்திருந்தாலும், கொடுக்கப்பட வேண்டிய பாக்கியைக் கொடுத்துப் பைசல் செய்வதும், சொத்துக்களை வாங்க ஏற்பாடு செய்தலும் மற்றும் நீண்டகால நிதிகளைப் பெற்றுத் தருதலும் இவருடைய பொறுப்புகளாகின்றன. மேலும் இயக்குநர் குழுவினரால் பரிந்துரைக்கப்பட்ட பங்கு ஆதாயத்தைப் பங்குதாரர்களுக்குக் கொடுக்கத் தேவையான ரொக்கம் கைவசம் இருக்க வேண்டும்.

நிதியியல் நிர்வாகத்தின் செயல்பரப்பு

தற்கால நிதி மேலாளர்கள் ஒரு கூட்டுரு வணிக அமைப்பில் பல முடிவெடுக்கப்படும் நிலைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். இதற்கு, நிதிச் சந்தைகளைப் பற்றிய நிதி அறிக்கைகள் பற்றிய ஆழ்ந்த அறிவு அடிப்படைத் தேவை. இவற்றுடன் நட்ட வாய்ப்பு அபாயம், வருவாய், பணத்தின் நேர்மதிப்பு முதலியவற்றைக் கருவிகளாகக் கொண்டு நிறுவனத்தின் எதிர்கால நடவடிக்கைகளைக் கணிக்கிறார்கள். முடிவுகள் நீண்ட கால முடிவுகள் எனவும் குறுகிய கால முடிவுகள் சொத்துக்களின் நிர்வாகம் எனவும் வகைப் படுத்தப்படும். குறுகிய கால முடிவுகள் சொத்துக்களின் நிர்வாகம்குறுகிய கால ரொக்கத் தேவைகள் வரவேண்டியவை, சரக்கிருப்பு ஆகியவை பற்றிய முடிவுகளைச் சார்ந்திருக்கிறது. மேலும் இவ்வாண்டின் நடைமுறை வருமானங்களையும் செலவினங்களையும் ஒப்பிட்டு, கடனை நெம்பு கோலாக்கி சாதாரணப் பங்குகளின் வருமானத்தை உயர்த்த வாய்ப்புக்களையும் சீர்தூக்கிப் பார்க்க வேண்டியுள்ளது. நீண்ட காலச் சொத்துக்கள் நிர்வாகம் நீண்ட கால நிதித்தோற்று வாய்ப்புக்களை இனங்கண்டு கொள்வதிலும் பங்காதாயக் கொள்கைகளை உருவாக்குவதிலும், முதலீட்டுக் கொள்கைகளை

உருவாக்குதலிலும், முதலின் அடக்கவிலை, முதல் அமைப்பு ஆகியவற்றை நிர்ணயிப்பதிலும் மிகுந்த கவனம் செலுத்துகின்றது. இவற்றைச் சார்ந்த துறைகளிலும் நிறுவனத்தை மதிப்பீடு செய்தல் நிறுவனங்களை இணைத்தல் அல்லது வாங்குதல் முதலிய பணிகளிலும் முக்கியமான முடிவுகளில் நிதி நிர்வாகம் பங்கேற்கிறது.

வருமாண்டுகளில் கம்யூட்டர்களின் உபயோகம் அதிகமாகப் பெருகிற விடப்போகின்றது. பல வகையான கம்ப்யூட்டர்கள் சந்தைகளில் விற்பனைக்கு வர ஆரம்பித்து விட்டன. இவற்றால் நிதி நிர்வாகம் இன்னும் சிறப்பாகச் செயல்பட வாய்ப்பு ஏற்படும். நிதி நிர்வாகத்தின் செயற்பரப்பு இன்னும் விரிவடையத்தான் போகிறது.நிதி ஆய்வுகளில் கம்ப்யூட்டர்களின் உபயோகம் அதிகரித்து முடிவுகள் துல்லியமாகவும், சரியானதாகவும் எடுக்க வேண்டிய வாய்ப்புகள் பெருகிவிட்டன.

சுருங்கக் கூறின் கீழ்க்காணும் பணிகள் நிதி நிர்வாகத்தின் சிறப்புப் பகுதிகளாகக் கருதப்படுகின்றன.

1. நிதித் திட்டமிடுதல்.
2. திட்ட மதிப்பீடுகளின் மூலம் நிதிக்கட்டுப்பாடு செய்தல்.
3. செலவுகளை ஆராய்ந்து கட்டுப்பாடு செய்தல்.
4. மூலதனம் சேகரிக்கும் அடக்கவிலையை ஆராய்தல்.
5. நடைமுறைத் நிதித்தட்டுப்பாடு வராமல் பார்த்துக் கொள்ளுதல்.
6. நிதியை லாபம் பயக்கும் வகையில் பயன்படுத்துதல்.
7. விற்பனை விலையை நிர்ணயித்தல்.
8. லாபத்தைத் திட்டமிடுதல்.
9. மூலதனத்திலிருந்து கிடைக்கும் இலாபப்பயனை உச்சப்படுத்தும் முயற்சிகளை மேற்கொள்ளுதல்.
10. நிலையான சொத்துக்களை நன்கு நிர்வகித்தல்.
11. சரக்கிருப்பைக் கவனித்துத் தட்டுப்பாடில்லாமலும், அதிகச்சரக்கு வைக்காமலும் இருக்க ஆவண செய்யவேண்டும்.

12. விரிவு திட்டத்திற்கும், உற்பத்திப் பெருக்கத்திற்கும் வேண்டிய நிதி ஏற்பாடு செய்தல்.

13. உற்பத்தித் துறைகளை ஒப்பிட்டு இலாபகரமானவைகளை இனங்கண்டு பரிந்துரை செய்தல்.

14. கடன்களைக் கட்டுப்படுத்தி விரைவில் வசூல் நடவடிக்கை எடுத்தல்.

15. வரி விதிகளை உணர்ந்து வரித்திட்டங்களை செயலாற்றி இலாபத்தை பெருக்குதல்.

16. நிதிபற்றிய நிறுவன அமைப்பை ஏற்படுத்துதல்.

17. நிதித்துறை பணியாளரை தேர்ந்தெடுத்தல்.

18. பணியாளர்களை முறையாக இயக்குதல்.

கூட்டுரு ஆவணங்கள் - மூலதன அமைப்பு

நிலைத்த முதலும் நடைமுறை முதலும்

ஒரு தொழிலை நடத்துவதற்குத் தேவைப்படும் மூலதனத்தை நிர்ணயிக்குமுன், ஆரம்பச் செலவுகள் தவிர தொழில் தொடங்கிய பின் பராமரிக்க வேண்டிய செலவுகளைப் பற்றியும் ஆராய வேண்டும். பொதுவாக, கம்பெனி தன் தொழிலை நடத்துவதற்கு இருவகையானத் தேவைகளை நிறைவு செய்ய வேண்டும். அவை 1. நிலையான சொத்துக்கள். 2. நடைமுறைச் சொத்துக்கள், இவற்றிக்காக திரட்டப்படும் மூலதனத் தொகையை முறையே நிலைத்த முதல் நடைமுறை முதல் என்று அழைக்கிறோம்.

1. நிலைத்த முதல்

நிலையான சொத்துக்களில் முதலீடு செய்யப்படும் தொகையைத்தான் நிலைத்த முதல் என்கிறோம். நிலையான சொத்துக்கள் என்பவை தொழிலில் நிரந்தரமாகவோ அல்லது நீண்டகாலத்திற்கோ பயன்படுத்திக் கொள்ளும் நோக்கத்துடன் (மீண்டும் விற்கும்நோக்கத்துடனல்லாது) வாங்கப் பெறும் சொத்துக்கள் அனைத்துமே நிலையான சொத்துக்கள் எனலாம். உதாரணம் நிலம், கட்டிடம், பொறியும் பொறித்தொகுதியும், மனைத் துணைப் பொருட்கள், உரிமைச்சாசனங்கள் போன்றவைகளாகும். இத்தகைய சொத்துக்கள் நீண்ட காலத்திற்கு உழைக்கும் திறனுடையவை, இவற்றில் முதலீடு செய்யப்படும் தொகையானது நிரந்தரமாகவோ அல்லது நீண்டகாலத்திற்கோ முடக்கம் செய்யப்படுகின்றது. எனவே தான் இதை நீண்ட கால முதல் அல்லது நிலைத்த முதல் என அழைக்கின்றோம்.

நிலைத்த முதல் எவ்வளவு என்பதை எவ்வாறு கணக்கிடுவது பொதுவாகக் கூறினால் குறிப்பிட்டக் கம்பெனியில் தொழிலுக்கு தேவைப்படும் அனைத்து நிலைத்த சொத்துக்களின் மொத்த மதிப்பே அக்கம்பெனி முதலீடு செய்யவிருக்கும் நிலைத்த முதலாகும். இத்தொகையைப் பின்வரும் காரணிகள் நிருணயிக்கின்றன.

அ) தொழிலின் இயல்பு

வர்த்தகம் புரியும் நிறுவனங்களுக்கு அதிக அளவில் நிலைத்த சொத்துக்கள் தேவையில்லை மாறாக, பொருள் உற்பத்தி செய்யும் தொழில் நிறுவனங்களுக்கு அதிக அளவில் நிலைத்த சொத்துகளில் முதலீடு செய்ய வேண்டியிருக்கும்.

ஆ) தொழிலின் அளவு

கனரகத் தொழில்கள், இரயில் போக்குவரத்து போன்றவைகள் பெரும் அளவில் தான் செயல்பட முடியும், எனவே இத்தகையப் பேரளவு தொழில் நிறுவனங்களுக்கு அதிக அளவில் நிலைத்த முதல் தேவைப்படும், சிறு தொழில்களுக்கு குறைந்தளவு நிலைத்த முதல் போதுமானதாகும்.

இ) உற்பத்தி முறைகள்

மிகவும் நவீன, சிக்கல் நிறைந்த செய்முறைகளையும் இயந்திரங்களையும் பயன்படுத்தும் தொழிலகங்களுக்கு அதிக மூலதனம் தேவைப்படும்.

2. நடைமுறை முதல்

கம்பெனியின் அன்றாட நிதித் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு ஒதுக்கப்பட்ட தொகையே நடைமுறை முதல் எனப்படும். கச்சாப் பொருட்கள் வாங்குவதற்கும், உற்பத்தி செலவுகளுக்கும், சம்பளம், விளம்பரம், வாடகை போன்ற செலவுகளுக்கும் தேவைப்படும் பணமே நடைமுறை முதல் எனலாம்.

தொழில் சுமுகமாக நடைபெற வேண்டுமாயின், அன்றாடத் தேவைகளை நிறைவு செய்யப் போதிய அளவில் நடைமுறை முதல் இருத்தல் அவசியம்.

நடைமுறை மூலதனத்தைச் சரியாக வரையறுத்துக்கூற வேண்டுமாயின் பின்வருமாறு கூறலாம். நடைமுறைப் பொறுப்புக்களிலும் மிகுந்த நடைமுறைச் சொத்துக்களின் மதிப்பே நடைமுறை முதல் ஆகும். அதாவது :

நடைமுறைச் சொத்துக்கள்–நடைமுறைப் பொறுப்புகள்=நடைமுறை முதல்
(Current Assets)–(Current Liabilities)=(Working Capital)

நடைமுறைச் சொத்துக்களுக்கு உதாரணமாக கச்சாப் பொருட்கள், முற்றுப் பெறாப் பொருட்கள், விற்பனைக்குத் தயாராயிருக்கும் சரக்கு,

கடனாளிகள், வரவுக்குரிய உண்டியல்கள், வங்கியிலும் கையிலுமுள்ள ரொக்கம் ஆகியவற்றைக் கூறலாம்.

நடைமுறை பொறுப்புகளுக்கு உதாரணமாக, கடனீந்தோர், செலுத்தற்குரிய உண்டியல்கள், வங்கி அதிகப்பற்று ஆகியவற்றைக் கூறலாம்.

நடைமுறை மூலதனத்தைக் குறுகியகால மூலதனம் என்றும் கூறலாம். ஏனெனில், நிலைத்த முதலுடன் ஒப்பிடும் பொழுது, நடைமுறை முதல் குறுகிய காலத்திற்குத் தான் முதலீடு செய்யப்படுகிறது. கச்சாப் பொருட்கள் வாங்கும் செலவு, சம்பளம், கூலி, வாடகை போன்ற செலவுகளுக்காகக் கொடுத்தப் பணத்தை பொருட்களை விற்று உடன் மீட்டுப் பெறுகின்றோம். ஆனால் இதிலுள்ள பிரச்சனை என்னவெனில் இவ்வாறு குறுகிய காலத்தில் மீட்டுப் பெற்று பணத்தை மறுபடியும் முன்போலவே செலவினங்களில் ஈடுபடுத்த வேண்டும். எனவே நடைமுறை முதலுக்காக ஒதுக்கப்பட்டத் தொகையானது மீண்டும் மீண்டும் தொழிலில் ஈடுபடுத்தப்படுகிறது. இக்காரணத்திற்காகத் தான் இதை "சுழல் முதல்" (Revolving Caital) என அழைக்கின்றோம்.

நடைமுறை மூலதனத்தை இருவகையாகப் பிரிக்கலாம். அவையாவன :

அ) நிரந்தரமான நடைமுறை மூலதனம் (Fixed Working Capital)

நடைமுறையில் ஒரு குறிப்பிட்ட அளவு சரக்கானது தொழிலில் இருந்து கொண்டேயிருக்கும். இது போலவே போதிய அளவு கச்சாப் பொருட்கள், வேலை முடிவுபொறப் பொருட்கள், உபகருவிகள் ஆகியவை வைத்திருக்க வேண்டியதிருக்கும். மாதந்தோறும் சம்பளமும் அவ்வப்போது பிற செலவுகளும் கொடுக்க வேண்டியருக்கும். எனவே, இவைகளுக்கான தொகையானது தொழிலில் நிரந்தரமாக ஈடுபடுத்தப்படுகிறது. எனவே தான் இந்த நடைமுறை மூலதனத்தைச் சிறந்த நிரந்தர நடைமுறை மூலதனம் என்கிறோம். (Permanent Working Capital)

ஆ) மாறுபடும் நடைமுறை மூலதனம் (Fluctuating Working Capital)

மேற்கூறப்பட்ட நடைமுறை மூலதனமல்லாது, கம்பெனியின் பொருட்களின் தேவை சில பருவங்களில் அதிகரிக்கும் பொழுது உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய கூடுதல் நடைமுறை மூலதனம் தேவைப்படும்.

குறிப்பிட்ட அந்தப்பருவம் முடிவடைந்தவுடன் அந்த ஆண்டின் பிற மாதங்களில் அந்த கூடுதல் முதல் தேவைப்படாது. இவ்வாறு மாறுபடும் மூலதனத்திற்கு மாறுபடும் நடைமுறை மூலதனம் என்று பெயர்.

நடைமுறை மூலதனத்திற்கு நிர்ணயிக்கும் காரணிகள்

ஒரு நிறுவனத்தின் நடைமுறை மூலதனத்தை தேவையை நிர்ணயிக்கும் பொழுது பொதுவான சூத்திரம் எதுவும் கிடையாது. அந்தந்த நிறுவனத்தின் தனிப்பட்ட இயல்பு அளவு ஆகியவைகளைக் கருத்தில் கொண்டுதான் நடைமுறை மூலதனத்தை நிர்ணயிக்க முடியும். உதாரணமாக உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் நிறுவனமாயின் குறைவாகத்தான் நடைமுறை முதல் தேவைப்படும். மாறாக, வியாபார நிறுவனமாயின் அதிக அளவு நடைமுறை முதல் தேவைப்படும். இத்துடன் பின்வரும் காரணிக்கும் நிறுவனத்தின் நடைமுறை முதலை நிர்ணயிக்கின்றன.

அ) உற்பத்திக்காலம்

உற்பத்தி முறை துவங்குவதிலிருந்து முடிவடையும் வரையிலும் உள்ள கால இடைவெளி அதிகமிருந்தால் அதிக அளவு மூலதனம் தேவைப்படும். உதாரணமாக கப்பல் கட்டும் தொழில் நிறுவனத்திற்கு அதிக நடைமுறை முதல் தேவைப்படும். ஏனெனில் ஒரு கப்பலைக் கட்டுவதற்கு மூன்றாண்டு காலத்திற்கும் மேல் ஆகிறது. இதற்கு மாறாக ரொட்டி தயாரிக்கும் நிறுவனத்திற்கு குறைந்தளவுக்குத் தான் நடைமுறை மூலதனம் தேவைப்படுகிறது. ஏனெனில் ஒரே நாளில் ரொட்டிகளைத் தயாரிக்க முடிகிறது.

ஆ) நடைமுறை முதல்

தயாரிக்கப்படும் பொருள்களின் தன்மையும் மதிப்பும் தயாரிக்கப்படும் பொருளுக்காக கச்சாப் பொருள் மிக அதிகமாக இருப்பின், அவற்றை வாங்குவதற்காக அதிக நடைமுறை முதல் தேவைப்படும்.

இ) விற்பனை வேகம்

உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை உடனுக்குடன் விற்கப்பட்டால் அதில் ஈடுபடுத்தப்பட்ட நடைமுறை முதல் விலைவில் மீட்கப்பட்டு மீண்டும் அடுத்தாற்போன்று தயாரிக்கப்படும் பொருட்களில் ஈடுபடுத்த வசதி ஏற்படும்.

இதனால் குறைந்தளவு நடைமுறை மூலதனம் இருந்தால் போதுமானது. இதற்கு மாறாக உற்பத்தியான பொருட்களை விற்பதற்கு அதிக நாட்கள் தேவைப்பட்டால் அதிக ஈடுபடுத்தப்பட்ட நடைமுறை மூலதனம் அப்படியே முடங்கிக் கிடக்கும். அடுத்து தயாராகும் பொருட்களுக்காக அதிகப்படியான நடைமுறை மூலதனம் தேவைப்படும்.

ஈ) கொள்முதல் மற்றும் விற்பனைக் கொள்கைகள்

கொள்முதல் மற்றும் விற்பனை செய்யும் முறைகளும் நடைமுறை மூலதனத்தை நிர்ணயிக்கின்றன. உதாரணமாக எல்லாப் பொருட்களையும் ரொக்கத்திற்கு வாங்கி கடனுக்கு விற்பனை செய்வதால் அதிக அளவு நடைமுறை மூலதனம் தேவைப்படும். மாறாக கடனுக்குக் கொள்முதல் செய்து ரொக்கத்திற்கு விற்போமேயானல் குறைந்தளவு மூலதனம் தான் தேவைப்படும்.

உ) சிறப்புத் தேவைகள்

சர்க்கரை, கம்பளி நெசவு போன்ற தொழில்களில் ஒரு சில குறிப்பிட்ட பருவங்களில் அதிகப்படியான கச்சாப் பொருட்களை கொள்முதல் செய்து அவைகளையே வருடம் முழுவதற்கும் பயன்படுத்திக் கொள்ள வேண்டியிருக்கும். எனவே, இது போன்ற தொழில்களில் வருடத்தின் சில பருவங்களில் மட்டும் அதிகப்படியான நடைமுறை மூலதனம் தேவைப்படும்.

ஊ) மனித சக்தியும், இயந்திர சக்தியும்

மனித சக்தியை அதிகமாகப் பயன்படுத்தி பொருள் உற்பத்தி செய்ப்படும் தொழில் நிறுவனங்களில் அதிக அளவு நடைமுறை மூலதனம் தேவைப்படும். மாறாக, பொருள் உற்பத்தி செய்முறைகள் இயந்திரமாக்கப்பட்டிருந்தால் நடைமுறை மூலதனம் குறைவாகத் தேவைப்படும்.

நிதி ஆதாரங்கள்

ஒரு தொழில் நிறுவனத்தின் மொத்த மூலதனத் தேவைகளை நிர்ணயிப்பது பற்றியும், மூலதனத்தின் ஒரு சில முக்கிய கூறுகள் பற்றியும் இதுவரைப் பார்த்தோம். நிலைத்த முதல் நடைமுறை முதல் ஆகிய தேவைகளை மதிப்பீடு செய்தபின், அவற்றிற்கான தொகையை எவ்வாறு திரட்டுவது என்பது அடுத்து எழும் பிரச்சனையாகும்.

ஒரு கம்பெனியானது பொதுவாக இரு வழிகளில் முதல் திரட்டலாம். அதாவது உடமையாளர்களிடமிருந்து திரட்டுதல் மற்றும் வெளியாரிடமிருந்து கடனாகப் பணம் திரட்டுதல். பங்குகளை வெளியாருக்கு விற்று அவர்களிடமிருந்து பெறும் தொகையே பங்கு மூலதனமாகிறது இவற்றைக் கொண்டு தொழில் நடத்துவதால் நாளடைவில் கிடைக்கும் இலாபத்திலிருந்து இலாப ஈவு கொடுத்தது போக மீதியிருக்கும் இலாப மிகுதிகளும் தொழிலில் தான் ஈடுபடுத்தப்படுகின்றன. இவையணைத்தும் சேர்ந்தே உடைமையாளர் மூலதனம் எனப்படும். மாறாக, வெளியாரிடமிருந்து கடன் மூலம் பெறும் தொகையே கடன் மூலதனம் எனப்படுகிறது. கடன் பெறுவதற்காக கடன் பத்திரங்களை கம்பெனி வெளியிடுகிறது.

நிலைத்த முதல், நடைமுறை முதல் ஆகியவற்றை மேற்கூறப்பட்ட பல வகைகளிலும் திரட்டலாம். இவ்வழிமுறைகளை அடுத்து வரும் அட்டவனை மூலம் விளக்கலாம். நிலைத்த முதல் திரட்டும் வழிமுறைகளை பயன்படுத்தியே நிரந்தரமான நடைமுறை மூலதனத்தையும் திரட்டலாம்.

அட்டவணை



நீண்டகால மூலதனத்திற்கான ஆதாரங்கள்

பங்குகள்

நிலைத்த முதல் திரட்டுவதற்கு பங்குகளை வெளியிடுவதுதான் சிறந்த வழி. மேலும் பங்குகளால் பொறுப்பு வரையறுக்கப்பட்டக் கம்பெனியானது கட்டாயம் பங்கு மூலதனத்தைப் பெற்றிருக்க வேண்டும். மொத்த மூலதனத் தொகையானது பல சம மதிப்புடைய பிரிவுகளாகப் பகுக்கப்படுகிறது. ஒவ்வொரு பிரிவையும் "பங்கு" என்று அழைக்கின்றோம்.

பங்குகளின் வகைகள்

பங்குகள் மூவகைப்படும். அவை 1) முன்னுரிமைப் பங்குகள் (Preference Shares) 2) சாதாரணப் பங்குகள் (Equity Shares) மற்றும் 3) பின்னுரிமைப் பங்குகள் (Deferred Shares) அல்லது நிறுவினோர் பங்குகள். தனிக்கம்பெனியானது இவையனைத்தையும் அல்லது இவற்றில் எவையேனும் ஒன்றை வெளிடலாம். ஆனால் கம்பெனிச் சட்டம் பிரிவு 86ன்படி பொதுக் கம்பெனியானது சாதாரணப் பங்குகளையும், முன்னுரிமைப் பங்குகளையும் மட்டும் தான் வெளியிடமுடியும்.

அ) முன்னுரிமைப் பங்குகள்

முன்னுரிமைப் பங்கு என்பது கீழ்வரும் இரு நிபந்தனைக்ளையும் பூர்த்தி செய்ய வேண்டும்.

1. இலாப ஈவு அளிப்பதில் முன்னுரிமையைப் பெற்றிருக்க வேண்டும்.
2. பங்கு மூலதனத் தொகை (கம்பெனி கலைப்பின் பொழுது) திருப்பி அளிக்கப்படும் பொழுது முன்னுரிமைப் பெற்றிருக்க வேண்டும்.

இலாப ஈவைப் பொறுத்தமட்டில் முன்னுரிமை என்பது சாதாரண பங்குதாரர்கள் எவ்வித இலாப ஈவையும் பெறுவதற்கு முன், முன்னுரிமைப் பங்குதாரர்கள் தங்களுக்குரிய இலாப ஈவை குறிப்பிட்ட விகிதத்தில் பெற்றுக் கொள்வார். இதுபோலவே, கம்பெனி கலைக்கப்படும் பொழுதும், முன்னதாகத் தங்கள் மூலதனத்தைத் திரும்பப் பெற்றுக் கொள்வார்கள். இவ்வாறு இலாப ஈவை வருடந்தோறும் பெறுவதிலும் இறுதியில் மூலதனத்தைத் திரும்பப் ,பெறுவதிலும் முன்னுரிமை பங்குதாரர்கள் மற்றப் பங்குதாரர்களைக் காட்டிலும் முன்னுரிமையைப் பெற்று இருப்பார்கள்.

முன்னுரிமைப் பங்குகளின் வகைகள்

முன்னுரிமைப் பங்குகளிலும் பல வகைகள் உள்ளன.

1. குவிவு முன்னுரிமைப் பங்குகளும், குவியா முன்னுரிமைப் பங்குகளும்

கம்பபெனி நட்டம் அடைந்திருந்தாலோ அல்லது போதிய அளவில் இலாபம் சம்பாதிக்காமலிருந்தாலோ அந்த ஆண்டிற்கான இலாப ஈவு

முன்னுரிமைப் பங்குதாரர்களுக்கு கிடையாது. பின்வரக்கூடிய ஆண்டுகளில் போதி அளவு இலாபம் சம்பாதித்திருந்தால், அந்த ஆண்டிற்கான இலாப ஈவுடன் முந்தைய ஆண்டிற்கான (அல்லது ஆண்டுகளின் இலாப ஈவு பாக்கியையும் சேர்த்துப் பெற்றுக் கொள்ளும் உரிமையைப் பெற்றிருந்தால் அப்பங்குகளுக்கு குவிவு முன்னுரிமைப் பங்குகள் (Cumulative Preference Shares) என்று பெயர். இப் பங்குதாரர்களுக்கு இலாப ஈவு பாக்கிகள் குவிந்து கொண்டே வந்து இலாபகரமான ஆண்டில் முழுத்தொகையும் கிடைக்கிறது. மாறாக குவியா முன்னுரிமைப் பங்குகளுக்கு இத்தகைய உரிமை கிடையாது. அதாவது, குவியா முன்னுரிமைப் பங்குதாரர்களுக்கு இலாப ஈவு பாக்கியை பின்வரும் ஆண்டுகளில் பெறும் உரிமை கிடையாது. எந்தவொரு ஆண்டலாவது இலாப ஈவு அளிக்கப்படாவிட்டால் அது முன்னுரிமைப் பங்குதாரர்களின் நஷ்டமே, இலாப ஈவு பாக்கி குவியாததால் இவற்றை குவியா முன்னுரிமைப் பங்குகள் (Non-Cumulative Preference Shares) என்று அழைக்கலாம்.

2. பங்குபெறும் மற்றும் பங்குபெறா முன்னுரிமைப் பங்குகள்

பொதுவாக முன்னுரிமைப் பங்குகளுக்கு ஒரு குறிப்பிட்ட விகிதத்தில் தான் (நிரந்தரமாக) இலாப ஈவு அளிக்கப்படும். இது போக மீதியிருக்கும் இலாபம் சாதாரணப் பங்குகளின் மீதான இலாப ஈவுக்காக பயன்படுத்தப்படும். சாதாரணமாக இந்த இலாப மிகுதியில் முன்னுரிமைப் பங்குதாரர்களுக்கு இலாப மிகுதியில் பங்கு பெறா முன்னுரிமைப் பங்குகள் (Non-Participating Preference Shares) என்று பெயர். இதற்கு மாறாக பெற்றுக் கொண்டு அதன் பிறகு சாதாரண பங்குதாரர்களுக்கு குறிப்பிட்ட விகிதத்தில் இலாபஈவு அளித்தது போக அதற்குப் பிறகும் எஞ்சியிருக்கும் இலாப மிகுதியில் முன்னுரிமைப் பங்குதாரர்கள் பங்கு பெறும் உரிமையைப் பெற்றிருந்தால், அவர்களது பங்குகளுக்கு (இலாபமிகுதியில்) பங்கு பெறும் முன்னுரிமைப் பங்குகள் (Participating Preference Shares) என்று பெயர்.

3. மீட்பு முன்னுரிமைப் பங்குகள் மற்றும் மீளா முன்னுரிமைப் பங்குகள்

சாதாரணமாக, கம்பெனி கலைக்கப்படும் பொழுதுதான் மற்ற பங்குகளைப் போல் முன்னுரிமைப் பங்குகள் மூலதனம் திருப்பித் தரப்படும். எனவே, இத்தகைய பங்குகளை மீளா முன்னுரிமைப் பங்குகள் (Irredeemable

Preference Shares) என அழைக்கின்றோம். மாறாக முன்னுரிமைப் பங்குகளை வெளியிட்டபின், குறிப்பிட்ட கால வரையறை முடிந்த பின்பு, அப்பங்குகளை கம்பெனி திரும்பப் பெற்றுக் கொண்டு அந்த மூலதனத்தை திருப்பியளித்தால் அத்தகைய பங்குகளை மீட்பு முன்னுரிமைப் பங்குகள் (Redeemable Preference Shares) என்கிறோம். எனவே, கம்பெனி கலைக்கப்படுவதற்கு முன்பாகவே மூலதனம் திருப்பளிக்கப்படுகிறது. இத்தகையப் பங்குகளை வெளியிடுவதற்கு முன் மூன்று நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படவேண்டும்.

அ) மீட்கக் கூடிய இத்தகையப் பங்குகள் முழுவதும் செலுத்தப்பட்ட பங்குகளாக இருத்தல் வேண்டும்.

ஆ) இத்தகைய நோக்கிற்காக புதிதாக பங்குகளை வெளியிடுவதன் மூலம் கிடைக்கும் தொகையோ அல்லது ஏற்கனவே கம்பெனி சம்பாதித்திருக்கும் இலாப மிகுதியிலிருந்தோதான் முன்னுரிமைப் பங்குகளை மீட்க வேண்டும்.

இ) இலாபத்திலிருந்து முன்னுரிமைப் பங்குகளை மீட்டால் காப்புநிதி (Capital Redemption Reserve) என்றும் ஒரு கணக்கைத் துவங்கி, மீட்கவிருக்கும் பங்குகளின் முகமதிப்புத் தொகைக்கு சமமான தொகையை அக்கணக்கிற்கு மாற்றம் செய்ய வேண்டும்.

முன்னுரிமைப் பங்குகளினால் கிட்டும் நன்மைகள்

நிலைத்த முதல் ஈட்டுவதற்காக முன்னுரிமைப் பங்குகளை வெளியிடுவதால் கம்பெனிக்கு பின்வரும் நன்மைகள் கிட்டும்.

1. தடங்களில்லாது தொடர்ந்து குறிப்பிட்ட விகிதத்தில் வருமானம் கிடைக்க வேண்டும் என்று விரும்பும் முன்னெச்சரிக்கை மிக்க முதலீட்டாளர்களிடமிருந்து திரட்டுவதற்கு இப்பங்குகள் பயன்படும்.

2. தங்களுடைய நலன்களைப் பாதிக்கும் விஷயங்கள் சம்பந்தப்பட்ட தீர்மானங்கள் தான் இப்பங்குதாரர்கள் வாக்களிக்கும் உரிமையுடையவர்கள் இதனால் பிற விஷயங்கள் நிர்வாகத்தில் குறுக்கீடு இருக்காது.

3. இப்பங்குகளுக்கு ஒரு குறிப்பிட்ட விகிதத்திலேயே இலாபஈவுகளை அளிப்பதாலும் சாதாரணமாக பங்கு பெறும் முன்னுரிமைப் பங்குகளைத்

தவிர இலாப மிகுதியில் எவ்வித உரிமையையும் அளிக்காமலிருப்பதாலும் சாதாரணப் பங்குதாரர்களுக்கு அதிக இலாப ஈவு அளிக்க முடியும்.

4. சாதாரணப் பங்குகள் மற்றும் கடன் பத்திரங்கள் ஆகியவற்றின் விற்பனையை அதிகரிக்கும் நோக்குடன் அவற்றுடன் சேர்த்து இந்த முன்னுரிமைப் பங்குகளை அளிக்கலாம்.

5. குறுகிய காலத்திற்கு மட்டும் கூடுதல் மூலதனம் திரட்ட வேண்டியிருந்தால், மீட்பு முன்னுரிமைப் பங்குகளை வெளியிடலாம். பிறகு இலாபம் மிகுதியிலிருந்து இப்பங்குகளை மீட்டுக் கொள்ளலாம்.

6. கடன் பத்திரங்கள் மூலம் நிதி திரட்டுவதைக் காட்டிலும், முன்னுரிமைப் பங்குகளை வெளியிடுவதன் மூலம் நிதி திரட்டினால் பின்வரும் நன்மைகள் கிட்டும்.

அ) கம்பெனிச் சொத்துகக்ளை அடமானம் காட்டத் தேவையில்லை.

ஆ) கடன் பத்திரங்களின் மீதான வட்டியைப் போலல்லாது முன்னுரிமை இலாப ஈவானது கம்பெனி இலாபம் சம்பாதித்தால் தான் அளிக்கப்படும். இலாபமில்லையேல் இலாபஈவும் தரவேண்டியதில்லை.

முன்னுரிமைப் பங்குகளின் குறைபாடுகள்

மேற்கூறப்பட்ட நன்மைகள் முன்னுரிமைப் பங்குகளால் கம்பெனிக்கு கிட்டினாலும் அவற்றால் சில தீமைகளும் ஏற்படுவதுண்டு. அவை.

1. முன்னுரிமைப் பங்குகள் கம்பெனிக்கு ஒரு நிரந்தர பளுவாகும். எவ்வாறெனில், ஒவ்வொரு ஆண்டும் குறிப்பிட்ட விகிதத்தில் இலாபஈவு கொடுக்க வேண்டியிருக்கிறது. அதிலும் குவிவு முன்னுரிமைப் பங்குகளாக இருந்தால் இலாபஈவு பாக்கிகளையும் சேர்த்துக் கொடுக்க வேண்டியிருக்கிறது.

2. இலாபஈவு பெறுவதிலும், மூலதனத்தை திரும்பப் பெறுவதிலும் இப்பங்குகள் முன்னுரிமைகளைப் பெற்றிருப்பதால் சாதாரணப் பங்குதாரர்கள் புறக்கணிக்கப்படுவதாக எண்ணுவார்கள். எனவே பங்கு மாற்றங்களில் சாதாரண பங்குகளின் மதிப்பு குறையலாம்.

3. நிதிக் கஷ்டம் இருக்கும் காலங்களிலும் தொடர்ந்து முன்னுரிமை இலாபஈவு கொடுப்பதால் கடனீந்தோர் அதைப்பற்றி கவலையடையலாம்.

4. வருமான வரிகளைக் குறைக்கும் பொருட்டு இலாபஈவு விகிதத்தைக் குறைக்க முடியாது.

ஆ. சாதாரணப் பங்குகள் :

கம்பெனிச் சட்டம் பிரிவு 85(2)ன் படி முன்னுரிமைப் பங்குகளைத் தவிர பிற அனைத்துப் பங்குகளுமே சாதாரண பங்குகளெனப்படும். எனவே, சாதாரணப் பங்குகள் முன்னுரிமைப் பங்குகளுக்குரிய எவ்வித சிறப்பு உரிமைகளையும் பெற்றிருக்காது. ஆண்டுதோறும் கிடைக்கும் இலாபத்தில் முன்னுரிமை இலாபஈவு கொடுத்த பிறகே சாதாரணப் பங்குகளுக்கான இலாபஈவு கொடுக்கப்படும். இலாபஈவு விகிதமானது அந்தந்த ஆண்டில் இலாபத்திற்கேற்ப இயக்குநர் அவையால் தீர்மானிக்கப்படும். கம்பெனி கலைக்கப்படும் பொழுது எல்லோருக்கும் கொடுத்த பிறகு கடைசியாக சாதாரணப் பங்கு மூலதனம் திருப்பியளிக்கப்படும்.

சாதாரணப் பங்குதாரர்கள் உண்மையிலேயே கம்பெனி நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துபவர்களாவர். தொழிலின் நட்டத்தை (Risk) மேற்கொள்பவர்களும் இவர்களே. அதிக இலாபம் கிடைக்கும் பொழுது அதிக இலாபமாகவும், தொழில் மந்த நிலையை அடையும் பொழுது குறைந்த விகிதத்தில் இலாப ஈவும் இவர்கள் பெறுகிறார்கள்.

சாதாரணப் பங்குகளால் கிட்டும் நன்மைகள்

நீண்டகால மூலதனம் திரட்டுவதற்காக, சாதாரணப் பங்குகளை வெளியிடுவதால் கம்பெனிக்கு பின்வரும் நன்மைகள் கிட்டும்.

1) கம்பெனி கலைக்கப்படும்வரை எந்தச் சூழ்நிலையிலும் சாதாரணப் பங்கு மூலதனத்தை திருப்பிக் கொடுக்க வேண்டியதில்லை. எனவே நீண்ட கால நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள இது சிறந்த முறையாகும்.

2) இலாபம் இருந்தால்தான் இப்பங்குகளின் மீதான இலாபஈவு வழங்கப்படும். இதனால் கம்பெனிக்கு எவ்வித நிதிச் சுமையும் ஏற்படுவதில்லை.

3) குறிப்பிட்ட நிரந்தமான இலாப ஈவு விகிதம் எதுவும் கிடையாது. ஆகையால் நித நெருக்கடி ஏற்படுவதில்லை.

4) இப்பங்குகளுக்காக கம்பெனிச் சொத்துக்கள் எவற்றின் மீதும் குறிப்பிட்ட பற்றுப் பொறுப்பு எதுவும் ஏற்படுவதில்லையாதலால் கம்பெனி வெளியில் கடன் பெறுவதற்கான சொத்துக்களை அடமானம் வைப்பது எளிது.

சாதாரணப் பங்குகளின் குறைபாடுகள் :

1) சாதாரணப் பங்குகள் மட்டிலுமே வெளியிடப்பட்டால், பங்குதாரர்களில் ஒரு பகுதியினர் சேர்ந்து கொண்டு நிர்வாகத்தை தங்கள் கைகளில் முடக்கிக் கொள்கின்றனர்.

2) சாதாரணப் பங்குகளையே அதிகம் வெளியிட்டால், மிகை மூலதன நிலையினைக் கம்பெனி அடையும்.

3) சாதாரணப் பங்குகளைக் கொண்டு நிதித் தேவையை பூர்த்தி செய்வது அதிக செலவுகளை ஏற்படுத்துவதாகத் தான் உள்ளது.

இ) நிறுவினோர் பங்குகள்

இத்தகைய பங்குகள் குறைந்த முகமதிப்பை உடையனவாக இருக்கும். கம்பெனியைத் தோற்றுவித்தவர்களுக்கு (Promoters) இத்தகையப் பங்குகள் கம்பெனியால் அளிக்கப்படுகின்றன. ஆயினும் அவர்கள் ஆற்றிய பணிக்கான சன்மானமாக இந்தப் பங்குகள் குறைந்த மதிப்புடையதாயிருப்பினும் அதிக எண்ணிக்கையில் இருப்பதால், நிருவாக அதிகாரத்தை இவர்கள் கைப்பற்ற அதுவொரு வழியாக அமைகின்றது. இத்தகையப் பங்குகள் முன்னுரிமைப் பங்குகளுக்கும், சாதாரணப் பங்குகளுக்கும் அடுத்த படியாகத்தான் இலாப ஈவினை பெறும் உரிமையையும் மற்றும் மூலதனம் திரும்பப் பெறும் உரிமையையும் பெற்றிருக்கும் கம்பெனிச் சட்டத்தின்படி, பொதுக் கம்பெனியானது இத்தகைய பங்குகளை வெளியிட முடியாது. எனவே, தனிக் கம்பெனிகள் தான் பின்னுரிமைப் பங்குகளை வெளியிடலாம்.

பாடம் - 4

கடன் பத்திரங்கள்

முன்னுரை

கம்பெனி தான் பெற்ற கடனுக்கு அத்தாட்சியாக தன்னுடைய முத்திரையிட்டு அளிக்கும் பத்திரம கடன் பத்திரமாகும். மொத்தம் தான் கடனாகப் பெறவிருக்கும் தொகையை சம மதிப்புடைய உட்பிரிவுகளாகப் பிரித்து ஒவ்வொரு பிரிவுக்கும் தனித்தனிக் கடன் பத்திரமாக கம்பெனி வெளியிடும். பங்குகளைப் போன்றே கடன் பத்திரங்களும் தகவலறிக்கையின் மூலம் பொது மக்களுக்காகவே வெளியிடப்படுகின்றன. ஒவ்வொரு கடன் பத்திரமும் தனித்தனியாக ஒரு குறிப்பிட்ட காலவரையறைக்குள் வெளியிடப்படுகின்றன. இந்தக் காலவரையறை முடியும் பொழுது இவைகளைக் கம்பெனி திரும்பப் பெற்றுக் கொண்டு பணத்தைக் கடன்காரர்களுக்குத் திருப்பியளிக்கும். பொதுவாக கம்பெனிச் சொத்துக்களை அடமானமாகக் காட்டித்தான் இக்கடன் பத்திரங்கள் வெளியிடப்படும். இது சம்பந்தப்பட்ட நிபந்தனைகள் யாவும் பத்திரங்கள் பின்புறம் அச்சிடப்பட்டிருக்கும். வெளியோர் ஒருவர்தான் கம்பெனிக்களித்திருக்கும் கடனுக்கு அத்தாட்சியாகத்தான் இப்பத்திரத்தைப் பெறுகிறார். இதனால் அவருடைய தகுதி என்னவெனில் கம்பெனியின் கடனீந்தோர் என்பதேயாகும்.

கடன்பத்திரங்களின் வகைகள்

1. **பிணையத்தை அடிப்படையாகக் கொண்டு பிரித்தல்**

அ) பிணையில்லாக் கடன் பத்திரங்கள் (Unsecured Debentures) என்பவை, கம்பெனிச் சொத்துக்களைப் பிணையமாகக் காண்பிக்காமல் வெறும் உறுதிமொழியுடன் வெளியிடப்படும் பத்திரங்கள் ஆகும்.

ஆ) பிணைக்கடன் பத்திரங்கள் (Secured Debentures) என்பவை கம்பெனியின் சொத்துக்களைப் பிணையமாகக் காண்பித்து வெளியிடப்படும் பத்திரங்களாகும்.

2. பதிவு செய்தலை அடிப்படையாகக் கொண்டு பிரித்தல்

அ) பதிவுக் கடன் பத்திரங்களை (Registtered Debentures) வெளியிடும் பொழுது அவற்றை வாங்கும் நபரின் (கடன் பத்திரக்காரரின்) முழுவிவரங்களையும் கம்பெனியானது தனது பதிவேட்டில் பதிவு செய்து கொள்ளுகின்றன. எனவே கடன் பத்திரக்காரர் தனது பத்திரங்களை பிறருக்க உரிமை மாற்றம் செய்து கொடுக்கும் பொழுது அது சம்பந்தப்பட்ட விவரங்களைக் கம்பெனிக்குத் தெரியப்படுத்தி பதிவு செய்து கொள்ள வேண்டும்.

ஆ) கொணர்பவர் கடன் பத்திரம் (Bearer Debentures) என்பது கடன் பத்திரக்காரரின் விவரங்கள் எதுவும் பதிவு செய்யப்படாமல் வெளியிடப்படும் பத்திரமாகும். எனவே இப்பத்திரங்களை ஒருவருக்கொருவர் (கம்பெனியிடம் பதிவு செய்து கொள்ளாமலே) எளிதாக மாற்றிக் கொள்ளலாம். இப்பத்திரத்தின் மீதான வட்டியானது, பத்திரத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் சீட்டை யார் வைத்திருக்கிறாரோ அவருக்கு அளிக்கப்படும்.

3. மீட்பதை அடிப்படையாகக் கொண்டு பிரித்தல்

அ) மீட்பு கடன் பத்திரங்கள் (Redeemable Debentures) வெளியிட்டால் குறிப்பிட்ட காலவரையறை முடிந்தவுடன் அவற்றை கம்பெனி திரும்பப் பெற்றுக் கொண்டு கடனீந்தோருக்கு பணத்தை திருப்பியளிக்க வேண்டும்.

ஆ) மீளாக் கடன் பத்திரங்களை (Irredeemable Debentures) வெளியிடும் பொழுது அதை மீட்பதற்கான எவ்விதக் காலவரையறையும் குறிப்பிடப்படுவதில்லை. தனக்கு வசதி ஏற்படும்பொழுது கம்பெனி இப்பத்திரங்களை மீட்டுக் கொள்கிறது.

4. தகுதியை அடிப்படையாகக் கொண்டு பிரித்தல்

அ) கம்பெனிச் சொத்துக்களைப் பிணையமாகக் காண்பித்து கடன் பெறும் பொழுது சொத்துக்களின் உரிமைப்பத்திரங்களையும் (title deeds) எழுத்துமூலமான ஒரு உறுதிமொழிப் பத்திரத்தையும் பிணையமாகக் காண்பித்து பத்திரங்களை வெளியிடலாம். இவைகளை சாதாரணக்கடன் பத்திரங்கள் (Equitable Debentures) என்கிறோம்.

ஆ) மேற்கூறப்பட்ட சூழ்நிலைகளில், கடனுக்கு பிணையமாகக் காண்பிக்கப்படும் சொத்துக்களின் சட்டப்பூர்வமான உரிமையே கடனீந்தோருக்கு மாற்றம் செய்து கொடுத்து, கடன் பத்திரங்களை வெளியிட்டால் இவைகளை சட்டமுறைக் கடன் பத்திரங்கள் (Legal Debentures) என்கிறோம்.

5. **முன்னுரிமையை அடிப்படையாகக் கொண்டு பிரித்தல்**

அ) முதல் நிலைக்கடன் பத்திரங்கள் (First Debentures) மற்ற கடன் பத்திரங்களை மீட்பதற்குமுன் இப்பத்திரங்களின் மீதான கடன் தொகையைத் திருப்பியளிக்க வேண்டும்.

ஆ) இரண்டாம் நிலை பத்திரங்கள் (Second Debentures) முதல் நிலைக்கடன் பத்திரங்கள் மீட்க பெற்ற பின்பு இவைகள் மீதான பணம் திருப்பியளிக்கப்படும்.

6) **மாற்றம் செய்து கொள்வது**

அ) மாற்றக்கூடிய கடன் பத்திரங்கள் (Convertible Debentures) இவைகளை பங்குகளாக மாற்றிக் கொள்ளக்கூடிய வசதியை கடன் பத்திரக்காரர்களின் விருப்பததிற்கு விடப்படும்.

ஆ) மாற்றவியலாக்கடன் பத்திரங்கள் (Non-Convertible Debentures) இவைகளை பங்குகளாக மாற்றிக் கொள்ள இயலாது.

கடன் பத்திரங்களின் வகைகளை விளக்குவதற்கு அடுத்த பக்கத்தில் காட்டியுள்ள அட்டவணை உதவியாயிருக்கும்.

கடன் பத்திரங்களினால் விளையும் நன்மைகள்

நீண்ட கால நிதித் தேவைகளுக்காக கடன் பத்திரங்களை கம்பெனி வெளியிடுவதால் பின்வரும் நன்மைகள் கிட்டும்.

1. நிருவாகத்தில் எவ்வித பங்கும் அளிக்காமல் கடன் பத்திரங்களை வெளியிட்டு கடன் பெற முடியும்.
2. நீண்டகாலத்திற்கு கடன் பத்திரங்கள் மூலம் கடன் பெற முடிகிறது. குறிப்பட்டகாலவரையறை முடியுமுன் கடனைத் திருப்பியளிக்க வேண்டியதில்லை. இதனால் நிதி நிலைமை ஸ்திரத்தன்மை ஏற்படுகிறது.

நிதிக் கொள்கைகளையும் நீண்டகாலத்திற்கு ஏற்ப அமைத்துக் கொள்ள முடியும்.

3. பொதுவாக, கடன் பத்திரங்களுக்கான வட்டி விகிதம் இலாப, ஈவு விகிதத்தை விடக்குறைவாகத்தான் இருக்கும்.

4. எச்சரிக்கை மிகுந்த முதலீட்டாளர்களிடமிருந்தும் நிதி திரட்ட இது ஒரு வழியாகும். ஏனெனில் கடன் பத்திரம் அவருக்கு நிரந்தரமான விகிதத்தில் வட்டி தொடர்ந்து கிடைக்க வழி செய்கிறது. மேலும் அவர் பிணையத்தின் பேரில்தான் கடனளிக்கிறார்.

5. சிறுசிறு கடன்கள் கம்பெனிக்கு அதிகமிருப்பின் அவையனைத்தையும் அடைக்க மொத்தமாகக் கடன் பத்திரங்களை வெளியிடலாம்.

<u>அட்டவணை</u>



கீழ்வரும் கம்பெனிக்களுக்கு கடன் பத்திரங்கள் ஏற்றவையல்ல

1. அதிக ஏற்ற இறக்கமுள்ள வருமானத்தைவுடைய கம்பெனிகள். ஏனெனில் குறைவான வருமானமுள்ள காலங்களில் வட்டியளிப்பது பெரும் சுமையாகவிருக்கும்.

2. குறைந்த விகிதத்தில் இலாபம் சம்பாதிக்கும் கம்பெனிகள், ஏனெனில் கடனுக்களிக்கும் வட்டி விகிதத்தைவிட இலாப ஈவு விகிதம் மிகக் குறைவாகவிருக்கும்.

3. கடன் பெறுவதற்காக பிணையமாகக் கட்டுவதற்குரிய போதிய அளவ சொத்துக்களைப் பெற்றிருக்காத கம்பெனிகள்.

4. ஆடம்பரப் பொருட்களை உற்பத்தி செய்யும் கம்பெனிக்கு தனது பொருட்களுக்கு போதிய அளவு தேவை எப்பொழுதுமிருக்காது. எனவே இவைகளுக்கு நீண்டகாலக் கடன் பெறுவது உகந்ததல்ல.

பொது வைப்பு

சில கம்பெனிகள் பொதுமக்களிடமிருந்து நிதி வைப்புகளை ஏற்றுக் கொள்கின்றன 6 மாதங்கள் முதல் 7 ஆண்டுகள் வரையிலும் 9 சதவீதம் முதல் 15 சதவீதம் வரையிலுள்ள வட்டி விகிதத்தில் பொது வைப்புக்களை (Public Deposits) ஏற்றுக் கொள்கின்றன. பங்குதாரர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் ½ சதவீதம் வட்டியளிக்கின்றன. புகழ்பெற்ற கம்பெனிகளில் தங்கள் சேமிப்புத் தொகையை பொது மக்கள் வைப்புக் கணக்குகளில் முதலீடு செய்கின்றனர். குறுகிய காலத்திற்கும், நடுத்தர மற்றும் நீண்டகாலங்களுக்கும் பொது வைப்புக்களை ஏற்றுக்கொள்வதாலும் வங்கிகளைவிட சற்று அதிக வட்டியளிப்பதாலும் பொது மக்களிடமிருந்து இவ்வாறு பணம் பெற முடிகிறது.

ஆரம்ப காலங்களில், பம்பாய், அகமதாபாத் மில்களிலும் வங்காளம், அஸ்ஸாம் ஆகிய நகரங்களிலிருந்த மலைத் தோட்டக் கம்பெனிகளிலும்தான் இம்முறை கையாளப்பட்டு வந்தது. ஆனால் இந்நாட்களில் எல்லா தொழில்களில் ஈடுபட்டிருக்கும் கம்பெனிகளும் இம்முறையைப் பின்பற்றுகின்றன. 1978–ஆம் ஆண்டு திருத்தப்பட்ட கம்பெனிகள் (வைப்பு ஏற்பு) விதிகளின்படி, ஒரு கம்பெனியானது. செலுத்தப்பட்ட மூலதனம் மற்றும் ஒதுக்கீடுகளின் (Free

reserves) மொத்த தொகையில் 25 சதவீதம் வரையறைக்குமேல் பொது மக்களிடமிருந்து பொது வைப்புகளை ஏற்க முடியாது.

பொது வைப்புகளினால் கம்பெனிக்கு கிட்டும் நன்மைகள்:

குறுகிய மற்றும் நீண்டகால நிதியைத் திரட்ட இம்முறை பின்வரும் வழிகளில் நன்மை தருவதாய் உள்ளது.

1. அதிக சட்டச் சடங்குகள் கிடையாது. மிக எளிதான இம்முறையில் நிதி திரட்டலாம்.
2. கம்பெனிச் சொத்துக்களின் மீது எவ்வித வில்லங்கமும் ஏற்படுத்தாமல் இம்முறையில் நிதி திரட்ட முடிகிறது.
3. வைப்பாளருக்கு வங்கி வட்டியைவிட இதில் அதிக வட்டி கிடைக்கலாம். ஆயினும் கம்பெனியைப் பொறுத்தமட்டிலும், வேறு வழிகளில் நிதி திரட்டுவதைவிட இம்முறையில் திரட்டப்படும் நிதிதான் மலிவானது ஆகும். ஏனெனில் வங்கி அல்லது பிற நிறுவனங்களிலிருந்து கடன் பெற்றால் இதைவிட அதிகவட்டி கொடுக்க வேண்டியிருக்கும்.
4. ஒரு பகுதி மூலதனத்தை இம்முறையில் திரட்டுவதால் குறிப்பிட்ட விகிதத்தில் வட்டியளித்த பிறகு மீதமிருக்கும் மூலதனத்தை, ஆக்க பூர்வமாக பயன்படுத்துவதற்கும், இலாபத்திலிருந்து அதிக விகிதத்தில் இலாப ஈவு அளிக்கலாம்.
5. ஜவுளி மில் போன்றவைகளுக்கு இது வசதியான முறையாகும். கச்சாப் பொருட்களை கொள்முதல் செய்வதற்கும் உற்பத்தி செய்வதற்கும் ஆகும் செலவுகளை ஏற்பதற்காக இம்முறையில் நிதி திரட்டி, பொருட்கள் விற்பனையானவுடன் இவைகளைத் திருப்பிக் கொடுத்து விடலாம்.

இம்முறையிலுள்ள குறைபாடுகள்

1. இம்முறையில் நிதி திரட்டுவது எப்போதும் நிம்மதி அளிப்பதல்ல. தொழில் துறையில் மந்தநிலை நிலவினால் பொதுமக்கள் தங்கள் சேமிப்புத் தொகைகளைத் திரும்பப் பெற முயலுவார்கள். திடீரென இதன்மூலம் திரட்டிய தொகையனைத்தையும், திருப்பித் தந்தால் கம்பெனிக்கு நிதி நெருக்கடி ஏற்படும். தொழில் பூரிப்புநிலை நிலவினால்

நிதி திரட்ட முடியும், மந்தநிலை நிலவினால் பொதுமக்கள் முதலீடு செய்ய முன் வரமாட்டார்கள். எனவே இவர்கள் நெருக்கடிகால நண்பர்களாகக் கொள்ள முடியாது.

2. வைப்பாளர்கள் கேட்கும் போது பணத்தைத் திருப்பிக் கொடுக்காவிட்டால், கம்பெனியில் நன்மதிப்பு பாதிக்கப்படும்.

இலாபத்தை மறுபடியும் ஈடுபடுத்தல்

நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிதித்தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளும் பொருட்டு கம்பபெனி தான் சம்பாதிக்கும் இலாபத்தில் ஒரு பகுதியை தொழிலிலேயே ஈடுபடுத்தி வரலாம். அதிக விகிதத்தில் இலாப ஈவு அளிப்பதற்கு பதிலாக, இலாபத்தை தொழில் முன்னேற்றத்திற்கும் தொழில் அபிவிருத்திக்கும் பயன்படுத்தி வருவது சிறந்த நிதிக் கொள்கையாகும். இம்முறையே அகசெல்வாதாரம் என்கிறோம். தாமே நிதி வசதியை ஏற்படுத்திக் கொள்ளுதல் என்றும் கூறலாம்.

ஆண்டுதோறும் கிடைக்கும் இலாபத்திலிருந்து ஒரு காப்பு நிதியை ஏற்படுத்தி கம்பெனி தனது நிதித் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளலாம். கம்பெனி அதிக இலாபம் சம்பாதிக்கும் பொழுது இந்த நிதிக்கு அதிக ஒதுக்கீடு செய்தால், தொழில் மந்த நிலையை அடையும் பொழுது அதைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

1. கம்பெனி தனக்குத்தானே நிதி வசதியை ஏற்படுத்திக் கொள்வதற்கு இந்த முறை வகை செய்கிறது. வெளியாரிடமிருந்து கடன் பெறுவதைக் காட்டிலும் இது மிகச் சிறந்த கொள்கையாகும். நாளடைவில் இது கம்பெனிக்கு நன்மை பயக்கும்.

2. இது ஓர் எளிதான செலவில்லாத நிதி திரட்டு முறையாகும். எவ்விதச் சட்ட சடங்குகளையும் பின்பற்றித் தேவையில்லை. மேலும் இதற்காக யாருக்கும் வட்டி அளிக்க வேண்டியதில்லை.

3. நிதி நிலைமையில் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துகிறது.

4. நாளடைவில் பங்குதாரர்களும் இதனால் நன்மையே அடைவர். எவ்வாறெனில் அதிக நிதி வசதியுடன் கம்பெனி அதிக இலாபம் சம்பாதிப்பதால் பங்குகளின் மதிப்பு உயரும்.

பாடம்-5

மூலதனம் ஏற்படுத்தல்

முன்னுரை

பங்குகள், கடன்பத்திரங்கள் ஆகியவற்றை வெளியிடுவதன் மூலம் கிடைக்கும் தொகையும் மற்றும் இலாப மிகுதிகளிலும் சேர்ந்த மொத்தத் தொகையைதான், மூலதன நிதி அல்லது மூலதனம் ஏற்படுத்தல் என்கிறோம். மூலதன நிதி என்னும் சொல்லை விரிவான பொருளில் கூறும்போது, மூலதனத் தொகையின் தன்மையையும் இது குறிக்கின்றது. உதாரணமாக, எவ்வகையானப் பங்குகள் கடன் பத்திரங்கள் வெளியிடவேண்டும். ஒவ்வொரு வகையிலும் எவ்வளவு மதிப்புள்ள பங்குகள் அல்லது பத்திரங்கள் வெளியிடப்பட வேண்டும் என்ற விசயங்களும், மூலதன நிதி என்னும் தலைப்பில் அடங்கும், எனினும் மூலதனத்தொகையின் தன்மையைப் பற்றி மூலதனக் கூறுகளுக்கிடையேயான விகிதம் என்னும் தலைப்பில் விரிவாகப் பார்க்கப் போவதால் இங்கே நாம் மூலதனத் தொகையின் அளவினை மட்டும் விரிவாகக் காண்போம்.

மூலதனம் ஏற்படுத்தல் பற்றிய கோட்பாடுகள்

1. அடக்கவிலைக் கோட்பாடு (Cost Theory)
2. ஆதாயக் கோட்பாடு (Earnings Theory)

1. அடக்கவிலைக் கோட்பாடு

இக்கோட்பாட்டின்படி ஒரு தொழில் நிறுவனத்தினை தொடங்கி நடத்துவதில் ஏற்படும் மொத்த செலவே (அடக்க விலையே அந்த நிறுவனத்தின் மூலதன அளவாகக் கொள்ளப்படுகிறது. அதாவது (1) நிலம், கட்டிடம், இயந்திரம் போன்றவை நிலைத்த சொத்துக்களுக்காகும், அடக்க விலை (2)நிறுவனத்தினை நடத்திடத் தேவைப்படுகின்ற நடைமூலதனம் (3)நிறுவனத்தினை உருவாக்கும் போது ஏற்படும் செலவுகள் (4) இதர ஸ்தாபனச் செலவுகள் ஆகிய இவையனைத்தின் கூட்டு மொத்தமே ஒரு நிறுவனத்தின் மூலதன அளவாகக் கருதப்படுகிறது.

இந்தக் கோட்பாடு எளிமையானது ஒரு நிறுவனத்தினை முதன் முதலில் அமைக்கும் பொழுது அப்பொழுது நிலவுகின்ற நிலைத்த சொத்துக்களின் விலைகளை வைத்து மூலதன அளவை எளிதாக நிர்ணயித்து விட முடியும். ஆனால் இக்கோட்பாடானது ஒரு நிறுவனத்தின் எதிர்காலத் தேவைகளைக் கணக்கில் கொண்டிடவில்லை. நிறுவனத்தினை அமைக்கும் பொழுது தேவைப்படும் நிலைத்த சொத்துக்களையே கணக்கில் கொண்டுள்ளது. எனவே, ஏற்கனவே இயங்கிக் கொண்டிருக்கின்ற ஒரு நிறுவனத்தின் மூலதன அளவினை இக்கோட்பாட்டின் அடிப்படையில் அளந்தரிதல் எளிதன்று அதுமட்டுமல்லாது தொடக்க காலத்தில் வாங்கப்பட்ட ஒரு நிலைத்த சொத்து முறையாக மற்றும் முழுமையாகப் பயன்படுத்தப்படாவிட்டால் நிறுவனம் போதிய அளவு பங்குத் தொகையினை தரவியலாது, இது மிகை மூலதனத்திற்கு இட்டுச் செல்லும். அதே போன்று நிலைத்த சொத்துக்களை அவற்றின் உண்மையான மதிப்பிற்கு அதிகமாக மதிப்பீடு செய்யப்பட்டிருக்கலாம். அல்லது காலத்திற்கு ஒவ்வாததாக இருக்கலாம். இவற்றின் காரணமாக தொடர்ச்சியாக வருமானம் ஈட்ட முடியாத நிறுவனங்களால் இந்த அடக்கவிலை கோட்பாட்டின் அடிப்படையில் மூலதன அளவினைக் கணிக்க முடியாது. ஆனாலும், மிக அதிகமாக நிலைத்த சொத்துக்கள் தேவைப்படும். பொது பயனிட்டுத் தொழில்களில் (உம். போக்குவரத்து) இந்த கோட்பாட்டினைக் கடைபிடிக்கலாம்.

2. ஆதாய கோட்பாடு

ஒரு நிறுவனத்தின் உண்மையான மதிப்பு அது எந்த அளவிற்கு ஆதாயம் தரத்தக்கதாக உள்ளது என்பதையே பொறுத்துள்ளது. எனவே ஒரு நிறுவனத்தின் மூலதன அளவினை அதன் சொத்து மதிப்பில் அல்லாது அதன் ஆதாய விகிதாச்சாரத்தைக் கணக்கில் கொண்டு நிர்ணயிக்கலாம். இந்த ஆதாயக் கோட்பாட்டின்படி எதிர்பார்க்கக் கூடிய ஆதாயங்கள் கணிக்கப்படுகின்றன. அதில் சராசரி ஆதாயம் கண்டுபிடிக்கப்பட்டு அதுவே நிர்ணயிக்கப்பட்ட விகிதாச்சாரத்தின் அடிப்படையில் மூலதன அளவாகக் கணக்கீடு செய்யப்படுகின்றன. உதாரணமாக ஒரு நிறுவனத்தின் சராசரி இலாபம் ரூ.50,000 என மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. அதே தொழிலில் ஈடுபட்டுள்ள இதர நிறுவனங்கள் 10 சதவீதம் இலாபம் சம்பாதித்து வருகின்றன என்பதும் கண்டறியப்படுகிறது. எனவே இந்த குறிப்பிட்ட நிறுவனத்தின் மூலதன அளவானது

50,000 x (100/10) = Rs. 5,00,000

இந்த கோட்பாட்டின் படி ஒரு நிறுவனம் ஈட்டக்கூடிய இலாபத்தினையும் அதே தொழிலில் ஈடுபட்டுள்ள இதர நிறுவனங்கள் ஈட்டும் சராசரி இலாப விகிதாச்சாதத்தையும் நிர்ணயிக்க வேண்டியுள்ளது. புதிதாக அமைக்கப்படும் ஒரு நிறுவனமானது தனது எதிர்கால இலாபத்தினை மதிப்பீடு செய்வது என்பது எளிதான காரியமல்ல. அதே போன்று ஒரு தொழிலில் நிலவுகின்ற ஆதாய விகிதாச்சாரத்தினை நிர்ணயிப்பது என்பதும் எளிதான ஒரு காரியமல்ல. மதிப்பீடு என்பது நடைமுறைக்கு வரும் பொழுது தவறாகப் போய்விடக் கூடும். எனவே இந்தக் கோட்பாடு புதிய நிறுவனங்களுக்கு அவ்வளவாகப் பொருந்துவது இல்லை. புதிதாக அமைக்கப்படும் நிறுவனங்கள் முதலில் அடக்கவில்லைக் கோட்பாட்டின் அடிப்படையில் மூலதன அளவினை நிர்ணயித்துக் கொண்டு பின்னர் தேவைக்கேற்ப வேண்டிய மூலதனத்தினை சேகரித்துக் கொள்ளலாம்.

மிகை மூலதனம்

கம்பெனி வெளியிட்டுள்ள பங்குகள், கடன் பத்திரங்கள் போன்றவற்றின் மீது நியாயமான விகிதத்தில் இலாபஈவு அல்லது வட்டிபளிக்கத் தேவையான அளவில் கம்பெனி இலாப ஈட்டிவியிலாதிருந்தாலோ அல்லது பங்குகள் போன்ற நீண்ட கால பிணையங்களின் மதிப்பை விட சொத்துக்களின் தற்போதைய மதிப்பு குறைவாக இருந்தாலோ, கம்பெனி மிகைமூலதனத்தைப் (Over Capitalisation) பெற்றுள்ளது என்று பொருளாகும். சுருங்கக் கூறின் கம்பெனியானது தனது நிதித்தேவைகளுக்கும் அதிகமாகப் பங்குகளையும் கடன் பத்திரங்களையும், விற்று மூலதனத்தை ஏற்படுத்திய போதிய அளவு இலாபத்தை ஈட்டமுடியாமலிருத்தல் அக்கம்பெனியானது மிகை மூலதனத்தைப் பெற்றிருப்பதாகக் கருதப்படும். இத்தகைய சூழ்நிலைகளில் கம்பெனி தனது பங்குதாரர்களுக்களிக்கும் இலாபஈவானது மிகக்குறைந்தாகவிருக்கும் பங்குகளை குறைந்த விலையில்தான் (பங்கு மாற்று நிலையங்களில்) விற்க முடியும்.

மிகை மூலதனம் என்பது மூலதனத்தொகை அதிக அளவில் இருப்பதாகக் கொள்ளக்கூடாது, மாறாக அதன் பொருள் என்னவெனில், தேவைக்கதிகமாக பெற்ற மூலதனங்களை சரியான வகையில்

பயன்படுத்தாததால் குறைந்த இலாப ஈவு அளிக்க வேண்டிய நிலைமை ஏற்படுகின்றது! என்பதேயாகும். தற்பொழுது கம்பெனி வசமிருக்கும் மூலதனமானது சரியான வகையில் பயன்படுத்தப்படவில்லை என்பதையே மிகை மூலதன நிலைமை குறிக்கின்றது.

மிகை மூலதன நிலைமைக்கான காரணங்கள்

1. தனது தேவைக்கும் அதிகமான அளவில் பங்குகளை விற்று மூலதனம் திரட்டினால் அத்தொகையானது சரியான வகையில் பயன்படுத்தப்படாமல் மிகை மூலதன நிலை உருவாகும்.
2. கம்பெனியைத் தோற்றுவிக்கும் பொழுது அதிக அளவில் துவக்கச் செலவுகள் ஏற்பட்டால் அத்தொகையானது இருப்பு நிலைக்குறிப்பில் ஒரு சொத்தாகக் (புலனாகச் சொத்தாக) காண்பிக்கப்படும் இதனாலும் மிகை மூலதன நிலைமை ஏற்பட ஏதுவாகிறது.
3. சொத்துக்களை வாங்கும் பொழுது மிகவும் அதிக விலையைக் கொடுப்பதும் ஒரு காரணமாகச் கொள்ளலாம்.
4. வருமானம் மூலதனத்தேவை ஆகியவை பற்றிய மதிப்பீடுகள் தவறாக இருத்தல்.
5. அதிக அளவில் வெளியாரிடமிருந்து கடன் பெற்றால் அதற்காக அளிக்கும் வட்டித் தொகையானது இலாபத்தில் பெரும்பகுதியினை விழுங்கி விடும் எனவே இலாப ஈவு மிகக் குறைந்த விகிதத்திலிருக்கும்.
6. சொத்துக்களில் ஏற்படும் தேய்மானம், சொத்துக்களை மாற்றுதல் போன்றவற்றிற்கு வருடாந்தர இலாபத்தில் "போதிய அளவில் ஒதுக்குதல் செய்யாவிடில் நாளடைவில் வருமானம் சம்பாதிக்கும் திறமை குறைந்து போகும்.
7. இலாபத்திலிருந்து ஒவ்வொரு ஆண்டும் போதிய அளவு காப்பு நிதிக்கு மாற்றம் செய்யாது அதிக, இலாப ஈவு அளித்து வந்தால் நாளடைவில் மிகை மூலதன நிலைமை ஏற்பட்டுவிடும்.
8. அதிக அளவில் வரிகட்ட வேண்டிய நிலை இருந்தால் இலாபத்தில் ஒரு சிறுபகுதி தான் மிஞ்சும். எனவே காப்பு நிதிக்கு ஒதுக்குதல்

இயந்திரங்களை மாற்றுதல் ஆகியவற்றிற்கு போதிய நிதிவசதி இல்லாமல் போய்விடும். இலாப ஈவும் குறைந்தளவில் தான் இருக்கும். இதுவும் இறுதியில் மிகை மூலதன நிலைமையைத்தான் உருவாக்கும்.

தீமைகள்

மிகை மூலதன நிலைமையினால் கம்பெனிக்கும் பங்குதாரர்களுக்கும், சமுதாயத்திற்கும் பொதுவாக தீமைகள் விளைகின்றன.

அ) கம்பெனிக்கு விளையும் தீமைகள்

1. மிகை மூலதன நிலையிலுள்ள கம்பெனிகளில் குறைந்த விகிதத்தில் இலாப ஈவு கொடுக்கப்படுவதால், பங்குதாரர்கள் தங்கள் கம்பெனி மீது வைத்திருக்கும் நம்பிக்கை குறையத் தொடங்கும். இதனால் பங்கு மாற்று நிலையத்தில் கம்பெனியின் பங்குகளின் விலை சரியும்.
2. முதலீடு செய்வதற்கேற்ற வருமானம் கிடைக்காததால், கம்பெனி வெளியாரிடமிருந்து கடன் பெறும் தகுதி குறைந்து விடும்.
3. தேய்மானம், புதுப்பித்தல், மாற்றம் செய்தல் ஆகியவற்றிற்கான ஒதுக்குதல்களைச் செய்ய முடியாது போய்விடும்.
4. இலாபத்தை அதிகரித்துக் காட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டு கணக்குகளை திரித்து எழுத நேரிடலாம்.

ஆ) பங்குதாரர்களுக்கு ஏற்படும் தீமைகள்

1. தங்கள் பங்குகளுக்கு போதிய அளவு இலாபஈவு கிடைக்காது.
2. குறைந்த இலாபஈவு கொடுக்கப்படுவதால், பங்குகளின் மதிப்பு குறைகிறது. இதனால் தங்களது பங்குகளைக் குறைந்த விலையில் தான் விற்கமுடியும்.
3. பங்குதாரர்கள் கடன் வாங்குவதென்றாலும் தங்களது பங்குகளை பிணையங்களாகக் காண்பிப்பதில் சிரமம் ஏற்படுகிறது.
4. இத்தகைய கம்பெனிகளின் பங்குகள் நிலையான மதிப்புடையதாக இல்லாதிருப்பதால் ஊகவாணிகமும், சூதாட்டமும் தான் ஏற்படுகிறது.

இ) சமுதாயத்திற்கு உண்டாகும் தீமைகள்

1. போட்டிகள் நிறைந்த தொழிற்துறையில் இத்தகைய கம்பெனிகள் நீடித்து நிற்க முடியாமல் இறுதியில் கலைக்கப்பட நேரிடும்.

2. இத்தகைய, கம்பெனிகள் தங்களது தொழிலாளர்களின் சம்பளத்தைக் குறைக்க முற்படும் பொழுது தொழிலாளர் போராட்டங்கள் தான் மிஞ்சும். இறுதியாக கம்பெனி கலைக்கப்படும் பொழுது தொழிலாளர்கள் வேலையிழக்க நேரிடுகிறது.

3. திறமைக்குறைவால், இக்கம்பெனிகள் தங்களது பொருட்களின் விலையைக் கூட்டுகின்றன மாறாக, பொருட்களின் தரம் குறைக்கப்படும். இதனால் பாதிக்கப்படுவது அப்பொருட்களை உபயோகிக்கும் பொதுமக்களே யாவர்.

4. பல கம்பெனிகளின் நியாயமான நிதித்தேவைகள் நிறைவு செய்யப்படாமலிக்கும் பொழுது, இத்தகைய கம்பெனிகளில் நிதி வசதியானது விரயம் செய்யப்படுகிறது.

இந்நிலையை எவ்வாறு சீரமைப்பது?

1. அதிக அளவு மூலதனத்தைப் பெற்றுள்ள கம்பெனிகள் தங்கள்து கடன் பத்திரங்களின் மீதான பணத்தை திருப்பியளித்து அவைகளை மீட்கலாம், இலாபத்திலிருந்து கிடைக்கும் தொகையிலிருந்து தான் இதை செய்யவேண்டும்.

2. பழைய கடன் பத்திரங்களுக்குப் பதிலாக குறைந்த வட்டியளிக்கும் புதுப்பத்திரங்களை பெற்றுக்கொள்ளுமாறு கடன்காரர்களைக் கேட்டுக் கொள்ளலாம்.

3. முன்னுரிமைப் பங்குகளின் மீதான இலாபஈவு விகிதத்தைக் குறைப்பதற்கான முயற்சியை மேற்கொள்ளலாம்.

4. பங்குகளின் முகமதிப்பையோ அல்லது அவற்றின் எண்ணிக்கையையோ குறைக்கலாம்.

குறை மூலதனம்

எந்தவொரு கம்பெனியாவது தன்னையொத்தப் பிற கம்பெனிகளைக் காட்டிலும் மிக அதிக அளவில் இலாபஈவுகளை அளித்து வந்தாலோ அல்லது தனது தொழிலை திறமையுடன் நடத்தப் போதிய மூலதனம் இல்லாமலிருந்தாலோ, அந்தக் கம்பெனியானது குறை மூலத்தைப் (Under Capitalisation) பெற்றிருப்பதாகக் கொள்ளலாம். எனவே குறை மூலதன நிலைமையானது மிகை மூலதன நிலைமையின் நேர் எதிரிடையாகும். குறை மூலதன நிலையில் ஒரு கம்பெனியானது தனது நிதிவசதிகளை மிகவும் சிக்கனமாகவும், திறமையுடன் பயன்படுத்த வேண்டியிருக்கும். இதன் விளைவாக, இலாபஈவு விகிதமும் பங்கு மதிப்பும் உயர்ந்திருக்கும் உண்மைநிலை என்னவெனில் கம்பெனியானது தனது தேவைகளுக்கேற்ப போதிய நிதிவசதியைப் பெற்றிருக்கவில்லை என்பதேயாகும், இந்நிலையில் தொழிலின் மொத்த மதிப்பானது கணக்கில் காட்டப்பட்டிருப்பதை விட மிக அதிகமாக இருக்கும்.

காரணங்கள் :-

1. கம்பெனியைத் தோற்றுவிக்கும் பொழுது தொழிலின் வருவாய்த் திறமையைக் குறைத்து மதிப்பிட்டிருக்கலாம், மதிப்பிட்டதைவிட அதிகமாக வருமானம் கிடைக்கும் பொழுதும் அதிக இலாப ஈவு அளிப்பில்லாது, தேவையான அளவுக்கு மூலதனம் இல்லாது போய்விடுகிறது.
2. தொழிற்துறையில் மந்தநிலை ஏற்பட்டிருக்கும் பொழுது கம்பெனி தோற்றுவிக்கப்பட்டிருந்தால் பிற்சமயத்தில் எதிர்ப்பார்பைவிட அதிகமாகவே வருவாய் கிடைக்கும். எதிர் பாராத விதமாய் கிடைக்கும் அதிக இலாபங்களினால் கம்பெனி குறை மூலதன நிலையை அடையலாம்.
3. தன்னுடைய காப்பு நிதியிலிருந்து செலவழித்து நவீனமுறைகளையும் நவீன இயந்திரங்களையும் பயன்படுத்தி வருமானத்தைப் பெருக்கிக் கொள்ளலாம். இதனால் அதிக இலாபமடைந்து தொழிலின் உண்மையான மதிப்பு அதிகரிக்கலாம். எனவே குறை மூலதன நிலையை கம்பெனி அடையலாம்.

4. வருடாந்திர இலாபத்திலிருந்து அதிகம் இலாபஈவு அளிக்காமல் சேமிப்பாக வைத்திருந்து அதைக் கம்பெனித் தொழிலிலேயே மறுபடியும் ஈடுபடுத்தினால் மிக விரைவில் தொழில் வளர்ச்சியடைந்து அதிக இலாபத்தை ஈட்டும்.

குறை மூலதன நிலையால் ஏற்படும் தீமைகள்

1. இத்தகைய கம்பெனிகளில் இரகசிய காப்பு நிதிகளை ஏற்படுத்த நிருவாகம் முயலும். இதன் விளைவாக உண்மையான விலையை விடக்குறைந்த விலையில் பிற பங்குதாரர்களிடமிருந்து பங்குகளை வாங்கிப் பயனடைய நிருவாகத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் முயலுவார்கள்.
2. அதிக அளவில் இலாபம் சம்பாதிப்பதால் மற்றவர்களுக்கும் அதே துறையில் போட்டியாக வருவார்கள்.
3. அதிக அளவில் இலாபம் ஈட்டப்பட்டால் தொழிலாளர்கள் அதிகக் கூலி கேட்பர் மறுத்தால் தொழில் தகராறுகள் துவங்கும்.
4. அதிக இலாபம் சம்பாதிப்பதால் உபயோகிப்பாளர்கள் தாங்கள் அதிக விலை கொடுப்பதாக எண்ணத் தொடங்குவார்கள்.
5. இலாபம் அதிகரிக்க அதிகரிக்க அரசு மிக அதிக விகிதத்தில் வரி விதிக்கலாம். எவ்வாறு சரிப்படுத்துவது?

குறை மூலதன நிலைமையைச் சரிப்படுத்தும் பொருட்டு தற்போதிருக்கும் சொத்துக்களின் உண்மையான மதிப்பை நிருணயித்து கூடுதல் மதிப்பிற்கான தொகையளவிற்கு போதிய பங்குகளை ஏற்படுத்தி தன் பங்குதாரர்களுக்கே அளிக்கலாம். மேலும் காப்பு நிதி, இலாப மிகுதி ஆகியத் தொகைகளுக்கு சமமாகப் புதுப்பங்குகளை ஏற்படுத்தி போனஸ் பங்குகளாக அளிக்கலாம். இவைகளினால் பங்குகளின் ெ[...] மதிப்பும் அதிகரிக்கும் இலாப ஈவு விகிதம் குறையும்.

Dr.TPM.Lib.MKU
R- 255310
RACK : 8F:5

நீர்த்த முதல்

மூலதனமானது கம்பெனியின் பொறுப்புக (Liability) கணக்குகளில் ஒன்றாகும். எனவே இதற்கு சமமான மதிப்புடைய சொத்துக்களும் கம்பெனியிடம் இருக்க வேண்டும். இவ்வாறு மூலதனத்தொகைக்குச் சமமான

Dr. T. P. M. LIBRARY

மதிப்புள்ள சொத்துக்கள் இல்லாது போய் விட்டால் அந்த மூலதனத்தை நீர்த்த மூலதனம் (Watered Capital) என்கிறோம். ''சொத்துக்களின் மதிப்பையும், கம்பெனியின் வருமான ஆற்றலையும் மிஞ்சிய முதல் தொகை நீர்த்த முதலாகும்'' என்பது ஓர் அறிஞரின் விளக்கமாகும்.

பொதுவாக, நீர்த்த முதல் ஏற்படுவது கம்பெனி தோற்றுவிக்கப்படும் காலத்திலேயாகும். உதாரணமாக, ஒரு கம்பெனி தோற்றுவிக்கப்படும் பொழுது அதற்காக வாங்கப் பெற்ற இயந்திரம் ஒன்றிற்கு ரூபாய். 1,50,000 கொடுக்கப்பட்டதாகக் கொள்வோம். இயந்திரத்தை சரியாக மீண்டும் மதிப்பீடு செய்து பார்க்கும் பொழுது அதன் மதிப்பு ரூ.1,00,000 தான் எனத்தெரியவருவதாகக் கொள்வோம். இவ்வாறு இருக்கும் போது, அதிகப்படியாக கொடுக்கப்பட்ட ரூ. 50,000க்கு சமமதிப்புள்ள சொத்து எதுவும் கம்பெனிக்கு வரவில்லை. எனவே இத்தொகையை நீர்த்த மூலதனம் என்று கூறலாம்.

நீர்த்த மூலதனமும் மிகை மூலதனமும் ஒன்று எனக்கருதக்கூடாது. பொதுவாக, தொழிலின் துவக்க காலத்தில் நீர்த்த முதல் ஏற்படும். ஆனால் தொழில் துவங்கி சில காலம் கடந்துதான் மிகை மூலதன நிலைமை தெரியவரும். மிகை மூலதனம் ஏற்படுவதற்கு நீர்த்த மூலதனமே காரணமாகவும் ஆகலாம். மாறாக, சில சமயங்களில் நீர்த்த மூலதனம் இருப்பினும் கூட அதிகவருமானம் காரணமாக மிகை மூலதன நிலை ஏற்படாமலிருக்கலாம்.

4. மூலதனக் கூறுகளுக்கிடையேயான விகிதம்

ஏற்கனவே கூறியது போல கம்பெனியானது மூவகைப் பிணையங்களை வெளியிடலாம். 1. சாதாரணப் பங்குகள் 2. முன்னுரிமைப் பங்குகள் மற்றும் 3.கடன் பத்திரங்கள். இவைகளில் எந்தவகைப் பிணையங்களை ஒரு கம்பெனி வெளியிட வேண்டும் என்று தீர்மானிக்க வேண்டியுள்ளது. இதனை 'மூலதனக் கட்டமைப்பு' என்னும் தலைப்பில் அறிகிறோம். ஒரு கம்பெனியானது இந்த மூவகைப் பிணையங்களால் ஒன்றிற்கு மேற்பட்டதை வெளியிட முடிவு செய்யும் பொழுது இந்தப் பிணையங்களை எந்த விகிதத்தில் வெளியிடுவது என்னும் பிரச்சனை எழுகிறது. இதுவே மூலதனக் கூறுகளுக்கிடையேயான விகிதம் எனப்படுகிறது.

மொத்த மூலதனத்தில் சாதாரண பங்குகளின் மதிப்பு எத்தனை சதவீதம், முன்னுரிமைப் பங்குகள், கடன் பத்திரங்கள் போன்ற நிலையான இலாபஈவு அல்லது வட்டி வகிதத்துடன் கூடிய பிணையங்களின் மதிப்பு எத்தனை சதவீதம் என்று கணக்கிட்டுப் பார்ப்பது மிகவும் அவசியமானதாகும்.

சில நிறுவனங்களில், மொத்த மூலதனத்தில் சாதாரணப்பங்குகளின் விகிதாச்சாரம் குறைவாகவும், பிறபிணையங்களின் விகிதச்சாரம் அதிகமாகவும் இருக்கலாம்.

வேறு சில நிறுவனங்களில் இதற்கு நேர் எதிரிடையான சூழ்நிலை இருக்கலாம். பின்வரும் உதாரணங்களை ஆய்வோம்.

	மொத்த மூலதனம் ரூபாய்	சாதாரண பங்கு மூலதனம் ரூபாய்	விகிதாச்சாரம்
'அ' கம்பெனி	5,00,000	1,00,000	20%
'ஆ' கம்பெனி	5,00,000	4,00,000	80%

சாதாரணப் பங்குகளின் மதிப்பு விகிதாச்சாரம் குறைவாக இருந்தால், பிற பிணையங்களின் (நிலையான இலாபஈவு அல்லது வட்டி விகிதமுடையவை) விகிதாச்சாரம் அதிகமாக இருக்கும் மேற்கூறிய உதாரணத்தில் 'அ' கம்பெனியின் 20% சாதாரணபங்கு மூலதனமும், 80% கடன் மூலதனமும் இருப்பதாகக் கொள்வோம். இதன் பொருள் என்னவெனில் குறிப்பிட்ட விகிதத்தில் வட்டிக்கு கடன் வாங்கி அதைக் கொண்டு தொழிலை நடத்துவதால் கிடைக்கும் அதிக இலாபத்திலிருந்து வட்டியை அளித்துவிட்டு மீதமிருக்கும் இலாபத்திலிருந்து சாதாரண பங்குத்தாரர்களுக்கு அதிக இலாப ஈவு அளிக்க முடிகிறது. எனவே தான் வட்டி விகிதத்தைவிட இலாப ஈவு விகிதம் அதிகமாக இருக்கிறது. இது ஒரு நல்ல திட்டமாகத் தோன்றும், ஆனால் இம்முறையானது அதிக இலாபம் தொழிலில் கிடைக்கும் வரையில் தான் பங்குதாரர்களுக்கு நன்மைபயக்கும் இலாபம் குறையக் குறைய அவர்கள் நலன்கள் பாதிக்கப்படும். எவ்வாறெனில் குறைந்த இலாபத்திலிருந்து வட்டி கொடுத்தால் மீதமிருக்கும் இலாபத்திலிருந்து மிக்க குறைந்த அளவில் தான் பங்குதாரர்களுக்கு இலாப ஈவு அளிக்க முடியும். என்வே தொழில் இலாபகரமாய் இருக்கும் வரையிலும் தான் கடன் மூலதன விகிதம்

அதிகமாகவும், சாதாரண பங்கு மூலதன விகிதம் குறைவாகவும் இருக்கலாம். மாறாக, குறைந்த இலாபம் சம்பாதிக்கும் அல்லது நஷ்டம் ஏற்படும் நிலையை அடைந்தால் இம்முறையானது கம்பெனிக்கு உகந்ததல்ல 'ஆ' கம்பெனியின் சூழ்நிலையனது இதற்கு மேற்கூறியதற்கு நேர் எதிரான விளைவுகளைத் தரும்.

இப்போது மேற்கூறிய உதாரணத்தை விரிவுப்படுத்திப் பார்ப்போம்.

சாதாரணப்பங்கு மூலதனம் குறைந்த விகிதத்திலிருந்து 'அ' கம்பெனியின் இலாபம் ரூ.60,000 லிருந்து ரூ.50,000க்கு குறையும் பொழுது அது தனது பங்குதார்களுக்கு அளிக்கும் இலாபஈவு விகிதம் 20% லிருந்து 10%க்கு விரைவாகக் குறைந்து விடுகிறது. மாறாக 'ஆ' கம்பெனியின் (சாதாரணப் பங்கு மூலதனம் அதிக விகிதத்திலிருந்து) இதே மாதிரி இலாபம் குறையும் பொழுது அதன் இலாப ஈவு விகிதம் 12½% லிருந்து 10%க்கு தான் குறைகிறது.

இவ்வாறு ஒரு கம்பெனியின் மூலதனத்தில் சாதாரணப் பங்குகுளின் மதிப்பின் விகிதம் குறைவாக இருந்தால் அதைஅதிக விகிதாச்சார மூலதனம் என்றும் சாதாரணப் பங்குகளின் மதிப்பு விகிதம் அதிகமாக இருந்தால் குறைந்த விகிதாச்சார மூலதனம் என்றும் கூறுகிறோம். மேலே கூறப்பட்ட உதாரணத்தில் 'அ' கம்பெனி குறைந்த விகிதாச்சார மூலதனத்தையும், 'ஆ' கம்பெனி குறைந்த விகிதாச்சார மூலதனத்தையும் பெற்றிருக்கின்றன.

எவ்வகையான பிணையங்கள் அதிகமாகவும், எவ்வகையான பிணையங்கள் குறைவாகவும் வெளியிடப்பட வேண்டும் என்பது பொதுவாகக் கீழ்வரும் காரணிகளால் நிர்ணயிக்கப்படுகிறது.

1. ஏற்கனவே விளக்கியிருப்பது போன்ற நிர்ணயிக்கப்பட்ட விகிதத்தில் வட்டிக்கு இலாபஈவுக்கு மூலதனத்தினை திரட்டி அதைக் கொண்டு தொழிலை நடத்துவதால் சாதாரண பங்குதாரர்களுக்கு அதிக இலாபம் கிடைக்க வாய்ப்பு உள்ளது. எனவே இந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொண்டு நிலைத்த வட்டி அல்லது இலாபஈவு உள்ள பிணையங்களை வெளியிட நிறுவனங்கள் முன் வரலாம்.

2. சாதாரண பங்குகளுக்குத்தான் கம்பெனியின் அனைத்து பிரச்சனைகளிலும் வாக்களிக்க உரிமையுண்டு, எனவே, ஏற்கனவே சாதாரண பங்குகளைக் கொண்டுள்ள பங்குதாரர்கள் தங்களுக்கு

அதிகாரத்தினை நிலைநிறுத்திக் கொள்ளவும் அதே நேரத்தில் வேண்டிய மூலதனத்தினை திரட்டவும் முன்னுரிமை பங்குகளையும், கடன் பத்திரங்களையும் வெளியிட முடிவு செய்யலாம்.

3. முதலீட்டாளர்கள் பல்வகைப்பட்டோர் எச்சரிக்கை மிகுந்தோர் முன்னுரிமைப் பங்குகளை விரும்பலாம். துணிச்சல் மிக்கோர் சாதாரணப் பங்குகளை விரும்பலாம். இன்னும் பலர் அனைத்து வித பிணையங்களிலும் முதலீடு செய்ய விரும்பலாம். எனவே அனைத்துவித பிணையங்களையும் ஒரு கம்பெனி வெளியிட வேண்டியிருக்கலாம். அதிலும் எந்த பிணையம் எந்த அளவிற்கு வெளியிடப்படும் என்பது, முதலீட்டார்களின் தன்மையைப் பொறுத்துள்ளது.

4. பல்வேறு விதமான பிணையங்களை பல்வேறு அளவில் வெளியிடுவது என்பது ஒவ்வொரு பிணையத்தினையும் வெளியிடுவதில் கம்பெனிக்கு ஏற்படும் செலவினையும் (Cost) அதாவது தன்பேரில் கம்பெனி தரவேண்டிய வட்டி அல்லது இலாப ஈவின் அளவினையும் பொறுத்துள்ளது.

5. பிணையங்களை வெளியிடும் பொழுது எதிர்காலத்தில் மூலதன அளவினை அதிகரிப்பதற்கோ அல்லது குறைப்பதற்கோ வேண்டிய வசதியினையும் உருவாக்கிக் கொள்ள வேண்டும். இவ்வகையில் முன்னுரிமைப் பங்குகளும் கடன்பத்திரங்களும் முக்கியத்துவம் வாய்ந்த பிணையங்களாகும்.

பாடம் - 6

மூலதன அங்காடி (CAPITAL or FINANCIAL MARKET)

முன்னுரை

மூலதன அங்காடி என்பது பொதுவாக நீண்ட கால நிதிக்கான அங்காடி என்ற பொருள்படுகின்றது. அமைப்புபடைய மூலதன அங்காடியில் நீண்டகால நிதியை அளிப்பவர்களும் பயன்படுத்துபவர்களும் அடங்குகின்றனர். இச்சந்தையில் பங்குகள் வெளியிடுதல், கடன் பத்திரங்கள் வெளியிடுதல் வழியாக நீண்ட கால நிதியை கையாளுகின்றது. மூலதன அங்காடி மூலம் சமுதாயத்தின் சேமிப்புகள், தொழில் நிறுவனங்கள் மற்றும் பொதுத்துறை அமைப்புகள் போன்றவற்றிற்கு நிதியாக கிடைக்கும்படி செய்யப்படுகின்றது. சமுதாய சேமிப்பு என்பதில் தனிநபர் சேமிப்புகள், தனியார் துறை சேமிப்புகள் மற்றும் நிறுவன சேமிப்புகள் அடங்குகின்றன. மூலதன அங்காடி மூலம் கிடைக்கும் நிதி தொழிலின் தேவைக்குப் பயன்படுகின்றது.

மூலதன அங்காடி - விளக்கம் (Capital Market)

மூலதன அங்காடி என்பது பணத்திற்கான நீண்டகால கொடுக்கல் மற்றும் வாங்கல் நிகழும் அங்காடி அமைப்பாகும். அருன்.கே.தத்தா–குப்தா (Datta-Guptha) என்பவர்கள் மூலதன அங்காடியை பின்வருமாறு வரையறுத்துக் கூறுகின்றார்கள்.

பல்வேறு வகையான மூலதனத்தின் தேவை மற்றும் அளிப்புக்கு இடையே இணைப்பை ஏற்படுத்தும் நிறுவனங்கள், முதலீடுகள் மற்றும் நடைமுறைகள் ஆகியவற்றின் தொகுப்பை மூலதன அங்காடி என்று கூறுகின்றார்கள்.

மூலதன அங்காடி, பழைய மூலதன அங்காடி (Old Capital Market) அதாவது செயல்பட்டு வருகின்ற நிறுவனங்களின் பங்குகள் மற்றும் கடன் பத்திரங்களுடன் தொடர்புடையவை மற்றும் புதிதாக தோன்றுகின்ற நிறுவனங்களின் பங்குகள் மற்றும் கடன்பத்திரங்களுக்கான அங்காடி என இருவகையாக பிரிக்கப்படுகின்றது.

மூலதன அங்காடியில் தனிநபர்கள் முதலீட்டு நிறுவனங்கள், பங்கு அங்காடிகள், நிதி நிறுவனங்கள், காப்பீட்டு கழகங்கள், பரஸ்பர நிதி (Mutual Fund) அமைப்புகள் போன்றன அங்கம் வகிக்கின்றன.

முதலீடு செய்ய விரும்பும் தனிநபர்கள், பொதுத்துறை நிறுவனங்கள், அயல்நாட்டு முதலீடு செய்பவர்கள் (Foreign Investors), வங்கிகள், நிதி நிறுவனங்கள், காப்பீட்டு கழகம், முதலீட்டு நிறுவனங்கள், பன்னாட்டு நிறுவனங்கள் போன்றன இந்திய மூலதன அங்காடியில் நீண்டகாலக் கடன்களை கொடுக்கும் நிறுவனமாக செயல்படுகின்றன.

தொழிற் சாலைகள்

அரசுத் துறை நிறுவனங்கள்,. அரசு சார்ந்த நிறுவனங்கள் போன்றவை. இந்திய மூலதன அங்காடியில் நீண்டகாலக் கடனகளை பெறுகின்றன.

மூலதன அங்காடியின் இயல்புகள் அல்லது தன்மைகள் (Nature and Characteristics of Capital Market)

இந்திய மூலதன அங்காடி, இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்படுகின்றன. அவை அமைப்பற்ற மூலதன அங்காடி மற்றும் அமைப்புடைய மூலதன அங்காடியாகும்.

அமைப்பற்ற மூலதன அங்காடி (Unorganised Capital Market)

இதில் நாட்டுப்புற வங்கிகள் மற்றும் லேவாதேவிக்காரர்கள் அடங்குகின்றனர். இந்த அங்காடியில் பல்வேறு அமைப்புகளுக்கிடையே நெருங்கியத் தொடர்பு இல்லை. அமைப்புடைய துறையிலிருந்து முற்றிலும் விலகியிருக்கின்றது. இவர்கள் அளிக்கும் நிதித் தேவையை விட பற்றாக்குறையாகவே இருக்கின்றது. நாட்டுப்புற வங்கிகளும், லேவாதேவிக்காரர்களும் நுகர்வுச் செலவுக்காக அதிகம் கடன் தருகின்றனர். உற்பத்திக்கு அதிகம் கடன் தருவதில்லை. இவர்கள் விதிக்கும் வட்டி மிக அதிகமாகும்.

அமைப்பற்ற மூலதன அங்காடியை ஒழுங்குபடுத்துவதற்கு இந்திய ரிசர்வ் வங்கி பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. ஆனால் இந்த நடவடிக்கைகள் இவற்றை முழுமையாக கட்டுப்படுத்த முடியவில்லை.

அமைப்புடைய மூலதன அங்காடி (Organised Capital Market)

அமைப்புடைய அங்காடியில் நீண்டகால மூலதனத்திற்கான தேவை கூட்டுப்பங்கு நிறுவனங்கள், அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களுக்கு பல்வேறு வளர்ச்சி நடவடிக்கைகளுக்காக எழுகின்றது. நிதிக்கான அளிப்பிற்கு தனிப்பட்ட முதலீட்டாளர்கள் நிறுவன முதலீட்டாளர்கள், வங்கிகள், முதலீட்டு டிரஸ்டுகள் ஆயுள் காப்புறுதி நிறுவனங்கள், நிதிக்கழகங்கள், அரசு மற்றும் பன்னாட்டு நிதி அமைப்புகள் மூல ஆதாரமாக உள்ளன.

இந்தியாவில் மூலதன அங்காடியில் அமைப்புடைய பகுதி இருந்த போதிலும் அது சமீப காலம் வரை சரியாக வளரவில்லை. இதற்கான காரணங்களாவன :

1. வேளாண்மை இந்தியாவில் ஒரு முக்கிய தொழிலாகும். ஆனால் இத்துறை மூலதன அங்காடியில் கடன் அளிப்போராக இல்லை.
2. கடந்த காலத்தில் தொழில் வளர்ச்சியில் வெளிநாட்டு நிறுவனங்கள் அதிக பங்கேற்றது. இது லண்டன் மூலதன அங்காடியை சார்ந்து இருந்தது. இந்திய மூலதனச் சந்தையை சார்ந்திருக்கவில்லை. இதனால் மூலதன அங்காடி வளரவில்லை.
3. இந்தியாவில் மேலாண்மை பதிலாள் முறை (Managing Agency System) நாளடைவில் நடைமுறையில் இருந்து வந்தது. இம்முறையில் மேலாண்மை பதிலாட்களே தொழில்களை தொடங்கி வளர்ச்சி பெற செய்தனர். இதனால் மூலதன அங்காடி வளரவில்லை.
4. பங்கு அங்காடியில் வர்த்தகத்திற்கு உட்படும் பிணையங்களின் எண்ணிக்கை அதிகமாக இல்லை. மூலதன அங்காடியில் வெளியிடப்படும் பிணையங்கள் பாதிக்கு மேல் அரசின் பிணையங்களாக இருந்து வருகின்றன.
5. பங்கு அங்காடி பற்றிய அறிவு பொது மக்களிடையே பரவவில்லை.
6. தனிப்பட்டவர்களின் முதலீட்டுப் பழக்கம் மற்றும் நிதி நிறுவனங்கள் விதித்தத் தடைகள் மூலதனச் சந்தையளவைக் குறைத்தது.

7. கருப்புப்பண புழக்கமும், நாட்டுப்புற வங்கியர்களின் செயல் திறனும் பேரளவில் இருந்து வருகின்றது.

மேலே கூறப்பட்ட காரணங்களால் மூலதன அங்காடி இந்தியாவில் நன்கு வளர்ச்சிப் பெறவில்லை. எனினும் தற்போது நிலைமை மாறி இந்திய மூலதன அங்காடி ஓரளவிற்கு வளர்ச்சிப் பெற்று வருகின்றது.

இந்திய மூலதன அங்காடியின் கட்டமைப்பு

இந்திய மூலதன அங்காடி கட்டமைப்பில் நான்கு கூறுகள் உள்ளன. அவைகளாவன :

1. நீண்டகால நிதிக்கானத் தேவை (Demand for Long-term Loans)
2. நீண்டகால நிதிக்கான அளிப்பு (Supply of Long-term Funds)
3. நிதி இடையீட்டாளர்கள் (Financial Intermediaries)
4. அரசின் கொள்கைகள் (Government Policies)

நீண்டகால நிதிக்கான தேவைக்காக பிணையங்கள் வெளியிடுதல், காலவரை கடன்கள் மற்றும் பொது வைப்புகள் தோற்றுவிக்கப்படுகின்றன.

நீண்டகால நிதிக்கான அளிப்பு, இல்லத்துறை சேமிப்புகள், நிறுவன சேமிப்புகள், அயல்நாட்டு மூலதனம், நிறுவன முதலீட்டாளர்கள் மற்றும் அரசு மூலதனம் மூலம் ஏற்படுகின்றன. முக்கிய நிதி இடையீட்டாளர்களாக பங்குமாற்று நிலையங்கள், வெளியீட்டு – அகங்கள் (Issue Houses); ஒப்புறுதியாளர்கள் (Under-Writers), வியாபார வங்கிகள் (Merchant Banking) உள்ளன. இவை நீண்டகால நிதிக்கான தேவைக்கும் அளிப்பிற்கும் இடையே இணைப்பை ஏற்படுத்துகின்றன.

அரசின் கொள்கைகள், மூலதன அங்காடியில் மேற்கூறிய மூன்று கூறுகளிலும் பல விளைவுகளை ஏற்படுத்துகின்றன. அரசின் கொள்கைகளில் இதற்காக பல முக்கிய சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. அவைகளாவன,

1. மூலதன வெளியீட்டு கட்டுப்பாட்டுச் சட்டம்,
2. நிறுவனச் சட்டம்,

3. பிணையங்கள் ஒப்பந்த ஒழுங்குப்படுத்தும் சட்டம்,

4. நிதிச் சட்டம் மற்றும்

5. வருமான வரிச்சட்டம்

இச்சட்டங்கள் மூலதன அங்காடி செயல்படுவதை ஒழுங்குப்படுத்துகின்றன.

மூலதன அங்காடியின் முக்கியத்துவம் (Importance of Capital Market)

பொருளாதார வளர்ச்சியின் வேகம் நீண்டகால முதலீட்டு வீதம் மற்றும் மூலதன ஆக்கவீதம் ஆகியவற்றை சார்ந்திருக்கின்றது.

மூலதன ஆக்கம் முதலீடு செய்யக்கூடிய நிதியை திரட்டுதல் சேர்த்தல், பயன்படுத்துதல் ஆகியவற்றை பொறுத்திருக்கின்றது. மூலதன அங்காடி ஒரு நாட்டின் மூலதன சாதனங்களை ஒன்று திரட்டி முதலீட்டாளர்களுக்கு கிடைக்கும்படி செய்கிறது. வளர்ச்சிப் பெற்ற மூலதன அங்காடி, சாதனங்களை திரட்டி உலக அளவில் நிதியை கடன் அளிக்கும்படி செய்கின்றது.

தொழிற்சாலைகள் மற்றும் வியாபார நிறுவனங்களின் அளவு, தொழில்நுட்ப வளர்ச்சி, பேரளவு உற்பத்தி மற்றும் பிறகாரணிகள் முதலீட்டிற்கான மூலதனத் தேவையை அதிகரிக்கச் செய்தது. ஆனால் மூலதன தேவையைச் சமாளிப்பதற்கான நிதி போதுமானதாக இல்லை. மூலதன அங்காடி வளர்ச்சி பெற்றால் நிதிப் பற்றாக்குறை பிரச்சனையை தீர்க்கலாம்.

அமைப்புடைய மூலதன அங்காடி சிறிய மற்றும் சிதறிக்கிடக்கின்ற சேமிப்புகளை ஒன்று திரட்டி அவற்றை குவித்து முதலீட்டிற்கான நிதி கிடைப்பதை அதிகரிக்கச் செய்யலாம். கூட்டுப் பங்கு நிறுவனங்கள் துரிதமான வளர்ச்சசியடைந்தால் மூலதன அங்காடியும் அதிகளவிற்கு வளர்ச்சி அடைகின்றது. வளர்ச்சி பெற்ற மூலதன அங்காடி பல லாபம் மிகுந்த முதலீட்டு வாய்ப்புகளை சிறிய சேமிப்பாளர்களுக்கு ஏற்படுத்தித்தருகின்றது. இவ்வாறு மூலதன அங்காடி வளர்கின்ற நாடுகளின் தொழில வளர்ச்சிக்கு துணை செய்கின்றது.

பிணையங்கள் அங்காடி (Securities Market)

ஒரு நாட்டின் மூலதன அங்காடியின் முக்கிய அங்கம் பிணையங்கள் அங்காடியாகும் (Securities Market), மூலதன அங்காடி, நீண்டகால நிதியை அளிப்பவர்கள் மற்றும் பயன்படுத்துபவர்கள் அடங்கிய ஒரு அமைப்பாகும். பிணையங்கள் அங்காடி, பிணையங்கள் வாங்குபவர்கள் மற்றும் விற்பவர்கள் அடங்கிய அமைப்பாகும். பிணையங்கள் அங்காடி பங்குகள் மற்றும் கடன் பத்திரங்கள் வெளியீடுகள் மூலம் நீண்டகால நிதி நடவடிக்கைகளுடன் தொடர்புடையது.

பிணையங்கள் அங்காடியில் புதிய வெளியீடுகளுக்கான அங்காடி மற்றும் இருக்கின்ற பிணையங்களுக்கான அங்காடி என்ற இரு அங்காடிகள் சேருகின்றன. புதிய வெளியீடு அங்காடி, புதிய நிறுவனங்கள் வெளியிடும் பிணையங்களை சந்தையிடுவதற்கு உதவுகின்றது. புதிய பிணையங்கள் அங்காடியில் ஒப்புறுதியாளர்கள், தரகர்கள், வியாபார வங்கிகள், இடைநிலையாளர்களாக செயல்படுகின்றனர். ஒப்புறுதியாளர்கள் பங்குகள் முழுமையாக வாங்கப்படும் என்பதற்கு உத்தரவாதம் அளிக்கின்றார்கள். புதிய வெளியீடுகள் தொடர்பாக வெளியீடுகளை மேற்கொள்கின்றனர்.

புதிய வெளியீடுகள் அங்காடி (New Issues Market)

புதிய வெளியீடுகள் அங்காடி முதன் முதலில் சந்தையில் விற்பனை செய்யப்படும் பிணையங்களுக்கான அங்காடியை குறிக்கின்றது. இந்த அங்காடி முதலீட்டிற்கான நிதியை அதனுடைய உரிமையாளர்களிடமிருந்து உற்பத்தித்துறைக்கு மாற்ற வழிவகை செய்கிறது. இது முதலீட்டு சாதனங்களை உற்பத்தி நிறுவனங்களுக்கு இடையே பங்கீடு செய்கின்றது. ஒரு வலுவான புதிய வெளியீட்டு அங்காடி சேமிப்பை பெருக்கி அவை தொழில் நிறுவனங்களில் நுழைவதற்கு வழிவகை செய்கின்றது. புதிய வெளியீடுகளுக்கான அங்காடி நடவடிக்கையில் புதிய பிணையங்கள் வெளியிடுவதன் மூலம் மூலதனத்தை எழுப்புவதற்கான பல்வேறு முறைகள் அடங்குகின்றன.

புதிய வெளியீடுகள் அங்காடி தனிப்பட்ட முதலீட்டாளர்கள் மற்றும் நிறுவன முதலீட்டாளர்களின் சேமிப்புகளை திரட்டுவதில் முதன்மை பங்கு வகிக்கின்றது. தனிப்பட்ட முதலீட்டாளர்கள் அவர்களுடைய சேமிப்புகளை

பிணையங்களில் முதலீடு செய்கின்றனர். நிறுவன முதலீட்டாளர்களை, பின்வரும் மூன்று முக்கியப் பிரிவுகளில் உட்படுத்தலாம்.

1. தனிப்பட்ட நிறுவன முதலீட்டாளர்கள், முதலீட்டு டிரஸ்ட், தொழில் நிறுவனங்கள் மற்றும் வணிக வங்கிகளில் அவர்களுடைய சொந்தக் கணக்கில் முதலீடு செய்கின்றனர்.
2. தனிப்பட்ட நிறுவன முதலீட்டாளர்கள் (Private Institutional Investors) தங்களது வாடிக்கையாளர்களுக்காக முதலீடு செய்கின்றனர்.
3. பொது நிறுவன முதலீட்டாளர்கள் (Public Institutional Investors) இதில் தனியார் நிறுவனங்களுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் நிதியளிப்பதில் ஈடுபடுகின்றனர். இந்திய தொழில் நிதிக்கழகம், இந்தியத் தொழில் மற்றும் முதலீட்டுக் கழகம், இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி போன்றவை இதில் அடங்குகின்றன.

பிணையங்கள் அங்காடி இரண்டு தலைப்புகளில் ஆராயப்படுகின்றன. 1. புதிய வெளியீடுகள் அங்காடி 2. பங்குமாற்று நிலையம்.

புதிய வெளியீடுகள் அங்காடி புதிய பங்குகள் மற்றும் கடன் பத்திரங்கள் தனிநபருக்கும், நிறுவனங்களுக்கும் ஒதுக்கப்படுவதுடன் தொடர்புடையது. அதாவது புதிய வெளியீடுகள் அங்காடியில் பிணையங்களின் புதிய வெளியீடுகள் தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆனால் பங்குமாற்று நிலையங்கள் பிணையங்களின் மறுவிற்பனையில் தொடர்பு கொண்டுள்ளது. இந்த அங்காடியில் பிணையங்கள் ஊக நோக்கத்திற்காக அல்லது முதலீட்டிற்காக பரிமாறிக் கொள்ளப்படுகின்றது.

மூலதனம் எழுப்புவதற்கான முறைகள் (Method of Raising Capital)

புதிய வெளியீட்டு அங்காடியில் இருந்து மூலதனம் எழுப்ப பின்வரும் முறைகளை பின்பற்றலாம்.

பொதுப் பங்கொப்பம் (Public Subscription)

நிறுவனங்கள் அதனுடைய நீண்டகால நிதி தேவையை சமாளிக்க புதிய மூலதனத்தை எழுப்புவது பொதுவான வழியாகும். இம்முறையில் தகவல்

அறிக்கையை (Prospectus) வெளியிடப்பட்டு நிறுவனத்தின் பிணையங்களை வாங்க பொதுமக்களுக்கு அழைப்பு விடப்படுகின்றது. நிறுவனத்தின் பிணையங்களை வாங்குவதில் ஆர்வம் கொண்டுள்ள முதலீட்டாளர்கள் எத்தனை பிணையங்கள் வாங்க விருப்பம் உள்ளது என்பதை குறித்து உரிய விண்ணப்பத்தில் விண்ணப்பிக்க வேண்டும். நிறுவனமானது கம்பெனிச் சட்டத்தின் சரத்துகளுக்குட்பட்டு பங்குகளை ஒதுக்கீடு செய்கின்றது.

தனி ஒதுக்கல் (Private Placement)

நிறுவனங்கள் அதனுடைய பிணையங்களை தனி நபருக்கு, நிதி நிறுவனங்களுக்கு, தரகர்களுக்கு (Brokers) விற்பனை செய்யலாம். இம்முறையை பின்பற்றுவதால் நிறுவனம் துரிதமாக மூலதனத்தை பெற முடிகின்றது. பொது மக்களுக்கு தகவல் அறிக்கை மூலம் பங்குகள் வெளியீடுவதன் சிக்கல்கள் இம்முறையில் தோன்றுவது இல்லை. குறைந்தளவு பங்கொப்பம் பெறமுடியாத இடர் தவிர்க்கப்படுகின்றது. மந்தமான காலத்தில் சிறிய வெளியீடுகளுக்கு இம்முறை மிகவும் பொருத்தமானது.

இம்முறையில் பொது மக்களுக்கு பிணையங்கள் வாங்கும் வாய்ப்பில்லாமல் போகின்றது. நிதி இடையீட்டாளர் பங்குகளை விற்பனை செய்யாமல் அவர்களே வைத்துக் கொள்ளலாம். இதனால் நிறுவனத்தின் உரிமை ஒரு சிலரிடம் குவிந்து விடுகின்றது.

உரிமைப் பங்கொப்பம் (Privileged Subscription or Right Issue)

நிறுவனத்தின் பங்குகள் தற்போதுள்ள பங்குதாரர்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றன. கம்பெனிச் சட்டம் பிரிவு 81–ன்படி தற்போதுள்ள பங்குதாரர்களுக்கு புதிய வெளியீடுகளில் பங்கொப்பம் செய்வதற்கு உரிமை அளிக்கப்படுகின்றது. ஒரு நிறுவனம் அது தோற்றுவிக்கப்பட்டு இரண்டாண்டுகளுக்கு பிறகு அல்லது முதல் ஒதுக்கீடு (First Allotment) முடிந்த ஓராண்டிற்கு பிறகு நிறுவனத்தின் பங்குதாரர்களுக்கு ஒரு குறிப்பிட்ட விகிதாச்சாரத்தில் பங்குகளை ஒதுக்கலாம். இவ்வகையான ஒதுக்கீடு உரிமை வெளியீடு .(Right Issue) எனப்படுகின்றது. உரிமை வெளியீடுகள் இந்தியாவில் சிறப்பாக அமைந்துள்ளன.

உரிமை வெளியீடுகள் மூலம் பங்குகளை விற்பனை செய்வது எளிதானது. நிறுவனம் தகவலறிக்கையை வெளியிட்டு விற்பனை செய்வதைவிட எளிதானது. பங்குதாரர்கள் நிறுவனத்தின் வருங்காலம் பற்றி நல்லெண்ணம் கொண்டிருந்தால் தான் உரிமைப் பங்குகளை ஏற்றுக் கொள்வார்கள்.

தனிக்குழுவின் பங்கொப்பம் (Subscription by Inside Coterie)

நிறுவனங்கள் தோற்றுவிப்பாளர்கள், இயக்குநர்கள் மற்றும் பணியாளர்கள் அடங்கிய குழுவிற்கு பங்கொப்பம் செய்கின்றது. ஒரு குறிப்பிட்ட சதவீதம் இக்குழுக்களால் பங்கொப்பம் செய்வதற்கு ஒதுக்கப்படுகின்றது.

பங்குமாற்று நிலைய ஒதுக்கல் (Stock Exchange Placing)

இம்முறையில் பங்குமாற்று நிலையம் தரகர்களின் உதவியுடன் தனி நபர்களுக்கு ஒதுக்கலாம். இந்தியாவில் இம்முறை நீக்கப்பட்டு விட்டது. தற்போது கையாளப்படுவது இல்லை.

பிணையங்களை விற்பனை செய்யும் முறை (Techniques of Selling Securities) :

பிணையங்கள் விற்பனை செய்வதற்கு பின்வரும் முறைகள் உள்ளன.

1. நேரடி விற்பனை (Direct Sale) :

இம்முறையில் முதலீட்டாளர்களுக்கு விளம்பரங்கள் மூலம் வேண்டுகோள் விடுத்து (Appeal) பிணையங்கள் நேரடியாக விற்பனை செய்யப்படுகின்றது. விளம்பரங்கள் செய்தித்தாள்களில் வெளியிடப்பட்டு பொது மக்களுக்கு தகவலறிக்கை வெளியிடப்படுகின்றது. தகவலறிக்கையில் நிறுவனத்தைப் பற்றி விவரங்கள் முழுமையாக தரப்பட வேண்டும்.

பிணையங்கள் நேரடியாக விற்பனை செய்வது புதிய வெளியீடுகளை விற்பனை செய்வதற்கான பொதுவான முறையாகும். இம்முறையின் மூலம் நாடு முழுவதும் பரவிக்கிடக்கின்ற பல்வேறு முதலீட்டாளர்களிடமிருந்து நிதியை எழுப்ப முடிகின்றது. குறைந்த சேமிப்புடைய நபர்கள் கூட பங்குகளை வாங்க முடிகின்றது. பங்குகள் ஒரு சிலரிடம் குவிவதும் தடுக்கப்படுகின்றது. இம்முறை மூலம் பங்குகளை விற்பனை செய்ய அதிகம் செலவானாலும் சிறந்த முறையாக உள்ளது.

2. விற்பனைக்கு முனைவு (Offer for Sale) :

புதிய நிறுவனத்தின் பங்குகளின் பெரும்பகுதி சில சமயங்களில் தோற்றுவிப்பாளர்களுக்கும், பிடிப்புநிறுவனத்திற்க்கும் விற்பனை செய்யப்படுகின்றன. இந்தியாவில் உள்ள வெளிநாட்டு நிறுவனங்கள் அதனுடைய பங்கு பிடிப்புகளை (Share Holdings) குறைத்துக் கொள்ள வேண்டுமென மத்திய அரசு கேட்டுக் கொண்டது. இந்நிலையில் பெரிய பங்குதாரர்கள் அவர்களுடைய பங்குகளை பொதுமக்களுக்கு விற்பனைக்கு முனைவு என்பதன் மூலம் விற்பனை செய்தனர். இந்த விற்பனை முறையில் நிறுவனத்திற்கும், முதலீடு செய்யும் பொதுமக்களுக்கும் இடையே நேரடித் தொடர்பு இல்லை.

பெரிய பங்குதாரர் அவர்களுடைய பங்குகளை விற்பனை செய்யும் போது பங்குகளின் முகமதிப்பைவிட அதிக விலையில் விற்பனை செய்யலாம். இந்நிலையில் இலாபம் பங்குகளை விற்க முனைபவருக்கு கிடைக்கின்றது; ஆனால், நிறுவனத்திற்கு கிடைப்பதில்லை.

இம்முறையில் பங்குகள் விற்பனை நடைபெறுகின்ற போது நிறுவனம் பங்குகளை விற்பதால் ஏற்படும் சிரமங்களை ஏற்க வேண்டியிருக்கின்றது.

3. இடைநிலையாளர்கள் மூலம் விற்பனை (Sale Through Intermediaries)

இம்முறையில் நிறுவனம் பங்கு அங்காடி தரகர்கள் (Share Brokers) வணிக வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் புதிய பிணையங்களை விற்பனை செய்ய உதவுவதற்கு கமிஷன் அடிப்படையில் இடைநிலையாளர்களை நியமிக்கின்றது.

நிறுவனம் வெற்றுப் பங்குகள் விண்ணப்பப் படிவத்தை (Blank Application Form) இடைநிலையாளர்களுக்கு அளிக்கின்றது. இடைநிலையாளர்கள் அவர்களுடைய வாடிக்கையாளர்களுக்கும், பொது மக்களுக்கும் விண்ணப்பப்படிவங்களை அளித்து பங்குகளை வாங்க விண்ணப்பிக்கும்படி வேண்டுகோள் விடுக்கின்றனர். பங்கு ஒதுக்குகள் பெற்ற விண்ணப்பங்களுக்கு உரிய கமிஷன் தொகை இடைநிலையாளர்களுக்கு அளிக்கப்படுகின்றது.

இம்முறையை, நிறுவனம் அதனுடைய 49 சதவீதம் பங்குகளை பொது மக்களுக்கு முனைவு அளித்தால்தான் வெற்றிக்கரமாக பயன்படுத்த முடியும். இடைநிலையாளர்கள் நிறுவனத்தின் எல்லா புதிய பங்கு வெளியீடுகளையும் விற்பனை செய்ய முடியும் என்பதை உறுதியாக கூற முடியாது எனினும் தற்போது எல்லா புதிய வெளியீடுகளுக்கும் பொது மக்களின் அமோக ஆதரவு கிடைக்கின்றது.

4. மேலாண்மை தரகர்கள் மூலம் விற்பனை (Sale Through Managing Brokers)

சமீப ஆண்டுகளில் நிறுவனத்தின் பிணையங்களை அங்காடிப் படுத்துவதில் மேலாண்மை தரகர்கள் முக்கியப்பங்கு வகிக்கின்றனர். மேலாண்மை தரகர்கள் தகவலறிக்கைத் தயாரிப்பது முதல் பிணையங்களை பட்டியலிடுவது வரையிலான பணிகளை ஆற்றுகின்றனர். இத்தரகர்கள் பிணையங்கள் வெளியிட வேண்டிய சரியான நேரம், நிதி நிறுவனங்களிடமிருந்து உதவி பெறுதல் குறித்த அறிவுரைகளை அளிக்கின்றனர். தற்போது பொதுத்துறையில் உள்ள பல நிறுவனங்கள் மேலாண்மை தரகர்களாக பணியாற்றுகின்றன.

இந்தியத் தொழிற்கடன் மற்றும் முதலீட்டுக் கழகம், பாரத ஸ்டேட் வங்கி, இந்தியன் வங்கி, கனரா வங்கி போன்றவைகள் மேலாண்மை தரகர்களாக செயல்படுகின்றன.

5. ஒப்புறுதியர் மூலம் விற்பனை (Sale Throuugh Under - Writer) :

பொது மக்களுக்கு முனைவு செய்யப்படும் எல்லாப் பிணையங்களும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றனவா ? என்பதை உறுதி செய்வதற்கு இம்முறை முக்கியமானதாகும். இம்முறையில் நிறுவனம் வெளியிடும் எல்லா பங்குகளின் விற்பனைக்கும் உத்தரவாதம் ஒப்புறுதியாளர்களால் அளிக்கப்படுகின்றது. பிணையங்கள் பொது மக்களிடம் விற்பனை ஆகாவிட்டால் ஒப்புறுதியாளர்கள் அதை வாங்கிக் கொள்ள வேண்டும்.

இம்முறை நேரடி விற்பனை முறைக்கு துணையானது. புகழ்பெற்ற நிறுவனங்கள் ஒப்புறுதியாளர்களாக இருக்கும் பொழுது பிணையங்கள் எளிதாகவும், துரிதமாகவும் விற்பனையாகிவிடும்.

ஒப்புறுதியாளர்களை நியமிப்பதால் அவர்கள் நிறுவனத்தின் பங்குகளையும், கடன் பத்திரங்களையும் விற்பதால் நிறுவனம் பொது மக்கள் பங்குகளை ஏற்கின்றார்களா ? இல்லையா ? என்பது பற்றி கவலை கொள்ள வேண்டியது இல்லை. நிறுவனத்தின் பங்குகளுக்கு ஒப்புறுதியாளர் நியமிக்கப்பட்டால் அந்நிறுவனத்தின் பங்குகளை பொதுமக்கள் விரும்பி ஏற்கின்றனர்.

மேற்கூறிய முறைகளில் புதிய பிணையங்கள் வெளியீடு விற்பனை செய்யப்படுகின்றது.

பாடம் - 7

பங்கு மாற்று நிலையம்
(STOCK EXCHANGE)

முன்னுரை

பங்குமாற்று நிலையம் என்பது பிணையங்கள் (Securities) வாங்குவதற்கும் விற்பதற்குமான அமைப்பு உடைய ஓர் அங்காடியாகும். 1956–ம் ஆண்டு பிணைய ஒப்பந்தச் (ஒழுங்குப்படுத்து) சட்டம் பிணையங்கள் வாங்குவதையும் விற்பதையும் ஒழுங்குப்படுத்துவதற்காக அமைக்கப்பட்ட ஒரு நிறுவனம் அல்லது அமைப்பு என்று பங்குமாற்று நிலையத்தை வரையறுத்துக் கூறுகின்றது.

பங்குமாற்று நிலையங்கள் பல்வேறு பொருளாதாரப் பணிகளை ஆற்றுகின்றன. பொருளாதார வளர்ச்சிக்கு வேண்டிய நிதிவசதியை ஏற்படுத்தித் தருகின்றது. பிணையங்களின் மதிப்பை நிர்ணயிப்பது, பிணையங்கள் மீதான நடவடிக்கைகளுக்கு பாதுகாப்பு அளிப்பது, முதலீடுகளை ஊக்குவிப்பது ஆகியன பங்குமாற்று நிலையத்தின் முதன்மையானப் பணியாகும்.

பங்குமாற்று நிலையத்தின் பணிகள் அல்லது செயல்பாடுகள் (Functions of Stock Exchange)

நவீன தொழில் உலகின் முக்கிய உறுப்பாகவும், நிதிக்காக நரம்பாகவும் அமையும் பங்குமாற்று நிலையம் பின்வரும் முக்கியப் பணிகளை ஆற்றுகின்றது.

1. உடனடி மற்றும் தொடர் சந்தையை அளிக்கின்றது (Ready and Continuous Market)

பங்குமாற்று நிலையம் பல்வேறு நிறுவனங்கள் வெளியிடும் பிணையங்களுக்கு உடனடி சந்தையை ஏற்படுத்தித் தருகின்றது. முதலீட்டாளர்கள் பணத்தை பிணையங்களாகவும், பிணையங்களை பணமாகவும் உடனடியாக மாற்றிக் கொள்ள உதவுகின்றது. இதனால் பிணையங்களுக்கான ரொக்கமாக்கும் தன்மை கிடைக்கின்றது. பிணையங்களுக்கான ரொக்கமாக்கும் தன்மை பங்குகள் மற்றும் கடன் பத்திரங்கள் மீது முதலீடு செய்ய பொதுமக்களைத் தூண்டுகின்றது.

2. பிணையங்களின் மதிப்பீடு (Evaluation of Securities)

பல்வேறு வகையான பிணையங்களின் விலையைத் தீர்மானிக்க பங்குமாற்று நிலையம் உதவுகின்றது. எந்த விலையில் பேரங்கள் நடைபெற்றன என்பது குறிக்கப்பட்டு பொது மக்களுக்கு அறிவிக்கப்படுகின்றது. இதிலிருந்து முதலீட்டாளர்கள் பல்வேறு பிணையங்களின் நடப்பு விலைகளை அறிந்து கொள்ள முடிகின்றது. ஒரு சிறந்த ஒழுங்குப்படுத்தப்பட்ட பங்குமாற்று நிலையம் மதிப்பீட்டு பணியை துரிதமாக செய்ய முடிகின்றது.

3. சேமிப்பைத் திரட்டுதல் (Mobilisation of Savings)

தனிப்பட்டோர், வியாபார நிறுவனம், கூட்டுறவு அமைப்பு ஆகியவற்றின் சேமிப்பைத் திரட்டி பிணையங்கள் மீது முதலீடு செய்ய பங்கு மாற்று நிலையம் உதவுகின்றது. பங்குமாற்று நிலையத்தில் பிணையங்களை வாங்க பங்குதாரர்கள் உதவுகின்றனர்.

4. மூலதன ஆக்கம் (Capital Formation)

பங்குமாற்று நிலையம் சேமிப்பை திரட்டுவதுடன் பொதுமக்களை சேமிக்கவும் தூண்டுகின்றது. பலவகையான பிணையங்களின் சம்பந்தமான அறிக்கைகள் நிறுவனங்களின் நிதி நிலை, இலாப வாய்ப்புகள் ஆகியவை பற்றிய செய்திகளை அவ்வப்போது வெளியிடுகின்றது. இச்செய்திகள் பங்குகள் மற்றும் பிணையங்கள் மீது முதலீடு செய்யத் தூண்டுகின்றன. இவை மூலதன ஆக்கத்திற்கு வழி வகுக்கின்றது.

5. மூலதனத்தை முறைப்படுத்துதல் (Canalisation of Capital)

பங்கு மாற்று நிலையம் சேமிப்பை உற்பத்தி வழியில் செலுத்துகின்றது. அதிக லாபம் தரக்கூடிய பிணையங்கள் மீது பொதுமக்கள் தங்கள் சேமிப்பை முதலீடு செய்வர். இதனால் பலவீனமான நிறுவனங்களின் பிணையங்கள் எளிதில் வாங்கப்படுவதில்லை. இது மூலதனம் சரியான வழியில் செல்ல உதவுகின்றது.

6. பாதுகாப்பு அளிக்கின்றது (Provides Safety)

பங்குமாற்று நிலையங்கள் பிணையங்களுக்கு உயர்ந்த பாதுகாப்பு அளிக்கின்றது. இந்நிலையங்கள் நன்கு வரையறுக்கப்பட்ட சட்ட திட்டங்களுக்குப்பட்டு செயல்படுகின்றது. இது ஊக வாணிபத்தையும் பிற

தவறுகளையும் குறைக்கின்றது. இதனால் முதலீட்டாளர்கள் பாதுகாப்பைப் பெறுகின்றனர்.

7. தொழில் வளர்ச்சியின் அளவீடு (Barometer of Business Progress) :

நாட்டின் தொழில் நிலையை அளவிடும் கருவியாக பங்குமாற்று நிலையம் செயல்படுகின்றது. பூரிப்பும் மந்தமும் பல்வேறு பிணையங்களின் விலைக் குறியீட்டினால் பிரதிபலிக்கின்றது. பங்குமாற்று நிலையத்தில் ஏற்படும் பிணையங்களின் விலைக்குறியீட்டினால் பிரதிபலிக்கின்றது. பங்குமாற்று நிலையிலுள்ள ஏற்ற இறக்கங்களுக்கு காரணமாகின்றன என்பதைக் காட்டுகின்றது.

8. ஊக வாணிப்பத்திற்கு வழி வகுத்தல் (Facilitates Speculation) :

பங்கு மாற்று நிலையம் பிணையங்களில் ஊக வாணிபத்திற்கு வாய்ப்பளிக்கின்றது. சீரான ஊக வாணிபம் தேவையையும் அளிப்பையும் சமப்படுத்தி ஓரளவுக்கு விலையை ஒழுங்குப்படுத்துகின்றது.

பங்கு மாற்று நிலையம் ஆற்றும் பல்வேறு பணிகளில் இருந்து ஒரு நாட்டின் மிக முக்கியமான நிறுவனமாக இது அமைந்துள்ளது என்பதை அறியலாம். பொதுவாக நாட்டின் அரசியல், பொருளியல் மற்றும் சமூக மாற்றங்களின் விளைவையும் பங்குமாற்று நிலையத்தின் செயல்களிலிருந்து அறிந்து கொள்ள முடிகின்றது.

பங்கு மாற்று நிலையத்தின் சேவைகள் (Services of Stock Exchange)

ஒரு சிறந்த பங்குமாற்று நிலையம் பல முக்கிய சேவைகளை ஆற்றுகின்றது. சமுதாயத்திற்கும், முதலீட்டாளர்களுக்கும் நிறுவனத்திற்கும் பல சேவைகளை ஆற்றுகின்றது.

1. சமுதாயத்திற்கு ஆற்றும் சேவைகள் (Services to the Community)

அ) நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு தேவைப்படும் நிதி வசதியை உருவாக்கிக் கொடுக்கின்றது.

ஆ) நாட்டின் துரிதத் தொழில் வளர்ச்சிக்கு தேவையான நிதியை எழுப்பித் தரும் கருவியாக உள்ளது.

இ) முதலீடு திறமையற்ற வகையிலிருந்து திறமையான வகைக்கும், உற்பத்தியற்ற வகையிலிருந்து உற்பத்தி வகைக்கும், பொருளாதார ரீதியற்ற வகையிலிருந்து பொருளாதார ரீதியான வகைக்கும் செல்ல பங்குமாற்று நிலையம் கிடைக்கின்ற சேமிப்பை சிறந்த வகையில் பயன்படுத்த பங்கு மாற்று நிலையம் சேவை புரிகின்றது.

ஈ) மூலதன திரட்சிக்கு வகை செய்கின்றது. சேமிப்புப் பழக்கத்தையும் முதலீடு மற்றும் இடர் ஏற்கும் பண்பையும் முதலீட்டாளர்களுக்கு ஏற்படுத்துகின்றது.

உ) பொது மக்கள் தங்கள் முதலீடுகளை ரொக்கமாக்கிக் கொள்ளவும் ரொக்கத்தை முதலீடாக்கிக் கொள்ளவும் வகைச் செய்கின்றது.

2. முதலீட்டாளருக்கு புரியும் சேவைகள் (Services to the Investors)

அ) பிணையங்களுக்கான நிலையான சந்தையையும் முதலீட்டுக்கான நீர்மைத்தன்மையும் (Liquidity) அளிக்கின்றது.

ஆ) பிணையங்களின் மீதான கடன் நடவடிக்கைகளுக்கு பாதுகாப்பு அளிக்கின்றது.

இ) பல நிறுவனங்களின் பிணைய மதிப்புகளை தினமும் வெளியிடுவதால் முதலீட்டாளர்கள் தங்கள் பிணையங்களில் உண்மை மதிப்பை அறிந்து கொள்ள முடிகின்றது.

ஈ) தொடர்ந்து நிலையான அங்காடியாக பணிபுரிவதால் முதலீட்டாளர்களுக்கு ஏற்படக்கூடிய அச்சத்தை தவிர்க்க முடிகின்றது.

உ) முதலிட்டாளர்கள் நம்பிக்கையுடன் பிணையங்களில் முதலீடு செய்ய பாதுகாப்பு அளிக்கின்றது.

3. நிறுவனங்களுக்கு ஆற்றும் சேவைகள் (Services to the Companies)

அ) பங்குமாற்று நிறுவனத்தின் பட்டியலில் ஒரு நிறுவனத்தின் பங்குகள் சேர்க்கப்பட்டால் அந்நிறுவனத்தின் மதிப்பு உயரும். அந்நிறுவனம் வலுவானது என்ற எண்ணம் உருவாகும்.

ஆ) ஒரு நிறுவனத்தின் பிணையங்களுக்கான அங்காடியை விரிவடையச் செய்கின்றது. இது நிறுவனம் சீராக செயல்பட உதவுகின்றது.

இ) நிறுவனத்தின் பங்குகளையும் கடன் பத்திரங்களையும் பொது மக்களையும் பொது மக்களை கவரும் வகையில் அளிக்கின்றது.

ஈ) பங்குமாற்று நிலையம், பிணையங்களின் விலைகளில் உள்ள ஏற்றத்தாழ்வைக் குறைக்கின்றது. இது முதலீட்டாளர்களுக்கு நிறுவனத்தின் பிணையங்களின் மீதான நம்பிக்கையை ஏற்படுத்துகின்றது.

உ) நிறுமத்தின் பங்குகளை விற்பதற்கான வாய்ப்பை பங்குமாற்று நிலையம் அதிகரிக்கின்றது. இது நிறுவனம் தடங்கலின்றி செயல்பட வழிவகை செய்கின்றது.

இந்தியாவில் பங்குமாற்று நிலையம் (Stock Exchange in India)

பங்குமாற்று நிலையம் இந்தியாவில் சமீப காலத்தில் தோன்றிய ஒன்றாகும். முதல் பங்குமாற்று நிலையம் பம்பாயில் 1887–ம் ஆண்டு அமைக்கப்பட்டது. தற்போது அரசால் அங்கீகரிக்கப்பட்ட 19 பங்குமாற்று நிலையங்கள் செயல்படுகின்றன. இவற்றில் பம்பாய் மற்றும் கல்கத்தாவில் உள்ள பங்குமாற்று நிலையத்திற்கு நிரந்தர அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது. பிற இடங்களில் உள்ளவைகளுக்கு அவ்வப்போது அங்கீகாரம் அளிக்கப்பட்டு வருகின்றது.

பங்குமாற்று நிலையத்தின் செயல்பாட்டை ஒழுங்குப்படுத்த 1957ல் பிணையங்கள் ஒப்பந்தச் (ஒழுங்குபடுத்தும்) சட்டம் செயல்முறைக்கு வந்தது. இது இந்தியாவில் பங்கு மாற்று நிலையங்கள் செயல்படுவதை ஒழுங்குப்படுத்துகின்றது.

பங்குமாற்று நிலையத்தை ஒழுங்குப்படுத்துதல் (Regulation of Stock Exchange)

இந்தியாவில் பங்குமாற்று நிலையங்கள் மத்திய அரசின் கடுமையான மேற்பார்வைக்கும், கட்டுப்பாட்டிற்கும் உட்பட்டு இருக்கின்றது. அரசு 1956–ம் ஆண்டு பிணையங்கள் ஒப்பந்தச் (ஒழுங்குபடுத்தும்) சட்டம் இயற்றி பங்குமாற்று நிலையத்தின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்துகின்றது. இச்சட்டத்தின் முக்கிய

நோக்கம் இந்தியாவில் செயல்படும் எல்லா பங்குமாற்று நிலையங்களையும் கட்டுப்படுத்தி உண்மையான பொருளாதார வளர்ச்சிக்கு உதவ வகை செய்வதாகும்.

பங்குமாற்று நிலையத்தை ஒழுங்குப்படுத்துவதற்கான தேவை (Need for Control of Stock Exchange)

பங்கு மாற்று நிலையங்களை தொடர்ந்து கட்டுப்படுத்துவது பின்வரும் காரணங்களால் அவசியமாகின்றது.

1. நாட்டிலுள்ள பல்வேறு பங்குமாற்று நிலையங்களும் ஒரே சட்ட திட்டத்தின் கீழ் செயல்படச் செய்தல்.
2. பங்குமாற்று நிலையத்தில் விரும்பப்படாத நபர்கள் உறுப்பினராகாமல் செய்தல்.
3. ஒரு பகுதியில் உள்ள பங்குமாற்று நிலையத்தின் எண்ணிக்கையை குறைத்தல்.
4. விரும்பத்தகாத ஊக வாணிப நடவடிக்கைகளான விருப்பப்பேரம், முடக்குதல் போன்றவற்றை தடுத்தல்.
5. பங்குமாற்று நிலையம் ஒரு சிலரின் சர்வாதீன உரிமையின் கீழ்வருவதைத் தடுத்தல்.
6. பல நிறுவனங்களின் பிணையங்களை சரியாக வரிசைப்படுத்துதல்.

மேற்கூறிய காரணங்களால் பங்குமாற்று நிலையத்தை அவ்வப்பொழுது ஒழுங்குபடுத்துவது அவசியமாகின்றது.

1956-ம் ஆண்டு பிணையங்கள் ஒப்பந்தச்சட்டம் (1956 Securities Contracts Regulation Act)

இச்சட்டத்தில் பல்வேறு ஒழுங்குமுறை நடவடிக்கைகள் உள்ளன. அவையாவன :

1. பங்குமாற்று நிலையத்தை அங்கீகரித்தல்

இச்சட்டத்தின்படி மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட பங்குமாற்று நிலையங்களில்தான் பங்குமாற்று நடவடிக்கைகள் மேற்கொள்ள உரிமை

உண்டு. அங்கீகரிக்கப்படாத பங்குமாற்று நிலையங்கள் சட்டத்திற்கு புறம்பானது. மத்திய அரசு பங்குமாற்று நிலையத்திற்கு அங்கீகாரம் அளிப்பதற்கு முன்பு அதன் சட்டத் திட்டங்களும் துணை விதிகளும் முதலீட்டாளரின் விருப்பத்தை பாதுகாக்கின்றதா ? என்பதை கவனிக்கின்றது. பங்குமாற்று நிலையங்கள் அவ்வப்போது மத்திய அரசு விதிக்கின்ற சட்டத் திட்டங்களுக்குட்பட்டு செயல்பட வேண்டும்.

2. பங்குமாற்று நிலையத்தின் துணை விதிகள் (Stock Exchange bye laws)

அங்கீகரிக்கப்பட்ட பங்குமாற்று நிலையம் மத்திய அரசின் உரிமையைப் பெற்று துணை விதிகளை அமைத்துக் கொள்ள வேண்டும். பங்கு மாற்று நிலையத்தின் துணை விதியின் மூலம் அவற்றை மத்திய அரசு ஒழுங்குப்படுத்துகின்றது.

3. ஊக வாணிபத்தை குறைத்தல் (Curb on Speculation)

மத்திய அரசு விரும்பத்தகாத ஊக வாணிபத்தைத் தடுக்க பிணையங்களை வாங்குவதையும், விற்பதையும் தடைசெய்கின்றது. இச்சட்டம் விருப்பப் பேரத்தை சட்டத்திற்கு புறம்பானதாக ஆக்க உள்ளது. சில பிணையங்களின் முன்னோக்கிய பேரங்களை குறைத்துள்ளது. பெயரிடா மாற்றங்களுக்கான காலத்தை ஒழுங்குபடுத்தியுள்ளது.

4. பங்கு மாற்று நிலையத்தின் அறிக்கை (Reporting by Stock Exchange)

ஒவ்வொரு அங்கீகரிக்கப்பட்ட பங்குமாற்று நிலையமும் ஆண்டறிக்கையையும் அன்றாட நடவடிக்கையையும், மத்திய அரசு கேட்கும் செய்திகளையும் அவ்வப்போது அளிக்க வேண்டும்.

மத்திய அரசின் தன்விருப்புரிமை அதிகாரங்கள் (Discretionary Powers of the Centre)

பங்கு மாற்று நிலையத்தை ஒழுங்குபடுத்த மத்திய அரசு தன் விருப்புரிமை அதிகாரங்கள் சிலவற்றைப் பயன்படுத்துகின்றன.

அ) பங்கு மாற்று நிலையத்திற்கான அங்கீகாரத்தை விலக்கிக் கொள்ளலாம்.

ஆ) அமைப்பு மற்றும் நிர்வாகம் சம்பந்தமான சில சட்டதிட்டங்களை திருத்தும்படிச் செய்யலாம்.

இ) அவசர காலங்களில் பங்குமாற்று நிலையத்தின் வியாபாரத்தை சில நாட்களுக்கு விலக்கிக் கொள்ளலாம்.

ஈ) சில பிணையங்களின் மீதான வியாபாரத்தை தடை செய்யலாம். இது போன்ற சில அதிகாரங்களை பங்குமாற்று நிலையத்தை ஒழுங்குபடுத்த மத்திய அரசு பயன்படுத்துகின்றன.

பங்குமாற்று நிலைய இயக்குநரகம் (Directorate of Stock Exchange)

பிணையங்கள் ஒப்பந்தச் சட்டத்தின்படி பங்குமாற்று நிலையத்தை நெறிப்படுத்துவதற்காக பங்குமாற்று நிலைய இயக்குநரகம் 1956–ம் ஆண்டில் அமைக்கப்பட்டது. இது மத்திய அரசையும் நாட்டின் பங்குமாற்று நிலையங்களையும் இணைக்கும் பாலமாக பயன்படுகிறது. இவ்வியக்குநரகம் பின்வரும் பணிகளை ஆற்றுகின்றது.

1. பங்குமாற்று நிலைய நடவடிக்கைகளை விழிப்புடன் கண்காணிக்கின்றது.
2. பங்குமாற்று நிலையங்களின் அறிக்கைகளை ஆராய்கின்றது.
3. விருப்ப பேரத்தை தடுக்கின்றது.
4. பிணையங்கள் வகைப்படுத்துதலை நடைமுறைப்படுத்துகின்றது.

பங்குமாற்று நிலையத்தை ஒழுங்குபடுத்துவதில் பிணையங்கள் ஒப்பந்தச்சட்டம் பெரும் பங்காற்றி வருகின்றது. பங்குமாற்று நிலையத்தின் விரும்பத்தகாத போக்குகள் கட்டுப்படுத்தப்பட்டு இருக்கின்றன. இந்திய மூலதனச் சந்தையின் முக்கிய நிறுவனமாக பங்குமாற்று நிலையம் விளங்கவும், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவவும் இச்சட்டம் வகை செய்துள்ளது. இருந்த போதிலும் இந்திய பங்கு மாற்று நிலையத்தில் பலகுறைபாடுகள் இன்னும் மலிந்து காணப்படுகின்றன. இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளில் பங்குமாற்று நிலையம் செயல்படுவதைப்போல இந்தியாவிலும் செயல்பட நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

"பிணையங்களை பட்டியலிடுதல்"

பங்குமாற்று நிலையத்தில் அரசு மற்றும் நிறுமங்களின் பங்குகள் கடன்பத்திரங்கள் போன்றவற்றின் வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. எல்லாப் பிணையங்களும் பங்குமாற்று நிலையத்தில் வியாபாரம் செய்ய அனுமதிக்கப்படுவதில்லை. ஒவ்வொரு பங்கு மாற்று நிலையமும் அது மேற்கொள்ளும் வியாபார நடவடிக்கைகளுக்கு நிறுவனங்களின் பெயர்கள் அடங்கிய பட்டியலை வைத்திருக்கின்றன. இது அதிகாரப் பூர்வ வியாபார பட்டியலில் உள்ள நிறுவனங்களின் பட்டியலாகும். (Official Trade List) பல அதிகாரப் பூர்வ வியாபார பட்டியலில் உள்ள நிறுவனங்களின் பிணையங்கள் மட்டும் பங்குமாற்று நிலையத்தில் வியாபாரத்திற்கு உட்படுத்தப்படும் பட்டியலில் இடம் பெறாத நிறுவனங்களின் பிணையங்கள் வியாபாரத்திற்கு உரியது அல்ல. ஒரு நிறுவனம் அதனுடைய பிணையங்களை பங்குமாற்று நிலையத்தில் வியாபார நடவடிக்கையில் ஈடுபடுத்த விரும்பினால் பங்குமாற்று நிலையத்திற்கு விண்ணப்பம் செய்ய வேண்டும். பங்குமாற்று நிலையத்தின் பட்டியலில் இந்நிறுவனங்கள் அனைத்தின் பிணையங்களும் சேர்க்கப்படும்.

பட்டியலிடல் விளக்கம் (Meaning of Listing) :

பிணையங்களின் பட்டியலிடல் என்பது பங்குமாற்று நிலையத்தில் பதிவேட்டில் நிறுவனத்தின் பிணையங்களை சேர்ப்பதாகும். ஒரு நிறுவனத்தின் பங்குகள் பட்டியலில் சேர்க்கப்பட்டால்தான் அது நிறுவனத்தின் வியாபார நடவடிக்கைக்கு உட்படுகின்றது. ஒரு நிறுவனம் தேவையான விவரங்களை பங்குமாற்று நிலையத்திற்கு அளித்து அது குறிப்பிடும் சட்டத்திட்டங்களை பின்பற்றினால் அதனுடைய பிணையங்கள் பட்டியலில் சேர்க்கப்படும்.

பொது வரையறுத்த நிறுவனம் அதனுடைய பிணையங்களை பங்குமாற்று நிலையத்தில் பட்டியலிடுவதனால் நிறுவனத்தின் நிதிவலிமை வெளிப்படுகின்றது. (Financial Soundness) பொதுமக்கள் நம்பிக்கையுடன் பிணைபங்களில் முதலீடு செய்வார்கள்.

பட்டியலிடுவதன் நோக்கங்கள்

பிணையங்களை பட்டியலிடுவதற்கான நோக்கங்கள் பின்வருவனவாகும். 1) சந்தையிடுதல் எளிது; 2)பிணையங்களுக்கு நீர்மைத்தன்மை கிடைக்கின்றது; 3) மாற்றுகை எளிதாக உள்ளது; 4) பொதுமக்கள் மற்றும் முதலீட்டாளர்கள் நலன் பாதுகாக்கப்படுகிறது.

பிணையங்களை பட்டியலிடுவதற்கான நடைமுறை (Procedure for Listing of Securities)

ஒரு நிறுவனம் தனது பிணையங்களை பட்டியலிட குறிப்பிடப்பட்ட வடிவத்தில் பின்வரும் சான்றுகளுடன் (Evidence) விண்ணப்பிக்க வேண்டும்.

1. நிறுவனத்தின் அமைப்பு முறையேடு மற்றும் சங்க நடைமுறை விதிகளின் பிரதிகள் (Copies).
2. தகவல் அறிக்கை அல்லது தகவல் அறிக்கைக்குப் பதிலான அறிக்கை (Prospectus).
3. இயக்குநர் அறிக்கை இருப்பு நிலைக்குறிப்பு.
4. ஒப்புறுதியாளருடன் ஒப்பந்தம் (Agreement with Under-Writers).
5. பங்கு மற்றும் கடன் பத்திர சான்றிதழ்களின் மாதிரி படிவம் ஒதுக்கீட்டு கடிதம்.
6. மூலதன கட்டமைப்பு விபரங்கள்.
7. நிறுவனத்தின் லாப ஈவு (Dividend) பகிர்வு விபரம்.
8. பட்டியலிட அனுமதி கேட்கும் பங்குகள் அல்லது பிணையங்களின் விவரங்கள் நிறுவனம் தொடங்கியதிலிருந்து நிறுவனத்தின் நடவடிக்கை குறித்த சுருக்கமான வரலாறு.
9. மூலதன வெளியீட்டு கட்டுப்பாட்டாளரின் இசைவிற்கான சான்றிதழ் ஏதாவது இருந்தால்.
10. பட்டியிலிடுவதற்கான ஒப்பந்தம் பற்றி பங்குமாற்று நிலையம் திருப்தியடைந்தால் நிறுவனத்தின் பிணையங்கள் பட்டியலில் சேர்க்கப்படுகின்றன.

பட்டியலிடுவதின் நன்மைகள் (Advantages of Listing)

ஒரு நிறுவனத்தின் பிணையங்களை பட்டியலிடுவதால் பின்வரும் நன்மைகள் கிடைக்கின்றது.

1. நிறுவனத்திற்கும் அதன் மேலாண்மைக்கும் உயர்தகுதி கிடைக்கின்றது.
2. நிதி எழுப்பிக் கொள்வது எளிது.
3. நிதி நிறுவனங்களும், வணிக வங்கிகளும் குறுகிய கால பிணையங்களை பட்டியலிடுவதால் அதன் அங்காடித் தன்மை அதிகரிக்கின்றது. பிணையங்களை வைத்திருப்பவர்கள் எளிதில் விற்பனை செய்ய முடிகின்றது.
4. பிணையங்களைப் பட்டியலிடுவது முதலீட்டாளர்களுக்கு பாதுகாப்பை தருகின்றது.
5. பட்டியலிடப்பட்ட பிணையங்களுக்கு அதிக விலை கிடைக்கின்றது.
6. பட்டியலிடப்பட்ட பிணையங்களை வைத்து கடன் கோர முடிகின்றது.
7. நிறுவனங்கள் தனது நடவடிக்கைகளை விரிவுபடுத்த தேவையான மூலதனத்தை எளிதில் திரட்டிக் கொள்ள முடிகிறது.
8. பட்டியலிடப்பட்ட நிறுவனங்களின் செயல்பாட்டை முதலீட்டாளர்கள் அறிந்து கொள்ள முடிகிறது.

பட்டியலிடுவதின் குறைபாடுகள் (Disadvantages of Listing)

நிறுவனத்தின் பிணையங்களை பட்டியலிடுவதானால் பல நன்மைகள் கிடைத்த பொழுதும் சில குறைபாடுகளும் காணப்படுகின்றன.

1. பட்டியலிடுவது ஒரு நிறுவனத்தின் நிதி வலுவிற்கான உத்தரவாதம் இல்லை.
2. பட்டியலிடப்படும் நிறுவனத்தின் பங்குகளை ஊக வணிகர்கள் வாங்கி பங்குகளின் விலையில் ஏற்ற இறக்கங்களை ஏற்படுத்தலாம்.
3. ஒரு சில நபர்கள் ஒரு நிறுவனத்தின் பங்குகளை பெருமளவு வாங்கி அதன் மேலாண்மையில் ஆதிக்கம் செலுத்தலாம்.
4. நிறுவனத்தை மேலாண்மை செய்பவர்கள் நிறுவனத்தின் பங்குகளை வாங்கி அதன் விலையை உயரசெய்து விற்று லாபம் சம்பாதிப்பதில் ஈடுபடலாம்.

5. பட்டியலிடுவதற்கு நிறுவனத்தைப் பற்றிய சில ரகசிய விபரங்களையும் விவரமாக வெளியிட வேண்டியிருக்கின்றது. இது நிறுவனத்தின் நலனிற்கு பாதகமாக இருக்கலாம்.

6. பட்டியலிடப்பட்ட நிறுவனங்களின் வியாபார நடவடிக்கைகளில் ஊழல்கள் செய்ய இடம் அளிக்கின்றது.

மேற்கூறிய குறைபாடுகள் தீர்க்கக்கூடிய குறைபாடுகளேயாகும். இந்தியாவில் பிணையங்கள் மாற்றுவாரியம் (Securities Exchange Board of India) பங்குமாற்று நிலையத்தின் செயல்பாடுகளில் ஏற்படும் குறைகளை தீர்க்க உதவுகின்றது.

இந்திய பிணையங்கள் மாற்று வாரியம் (Securities Exchange Board of India)

பிணையங்கள் மாற்று வாரிய இந்தியச் சட்டம் 1992ன் கீழ் மத்திய அரசு ஆவண பிணையங்கள் மாற்று வாரியத்தை அமைத்துள்ளது. இது ஒரு நிறுவன அமைப்பு குழுவாகும். (Corporate Body). இதில் ஒரு தலைவரும், ஐந்து உறுப்பினர்களும் உள்ளனர். இவர்கள் மத்திய அரசால் நியமிக்கப்படுகின்றனர்.

பிணையங்கள் மாற்று வாரியத்தின் பணிகள் (Functions of Securities Exchange Board of India)

1. பங்குமாற்று நிலையங்கள் மற்றும் பிணையங்கள் அங்காடியின் வியாபார நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துதல்.
2. பங்குகளை பங்குதாரர்கள், துணை தரகர்கள், பங்குமாற்று முகவர்கள், வங்கியர், முதலீட்டு ஆலோசகர்கள் (Investment Adviser) மற்றும் பங்குச் சந்தையுடன் தொடர்புடைய இடைநிலையாளர்களை பதிவு செய்தல் அவர்களது பணிகளை ஒழுங்குபடுத்துதல்.
3. பரஸ்பர நிதி (Mutual Fund) போன்றவற்றின் முதலீட்டு திட்டங்களை பதிவு செய்தல் மற்றும் ஒழுங்குபடுத்துதல்.
4. தவறான மற்றும் நியாயமற்ற வர்த்தக நடவடிக்கையானவற்றைத் தவிர்த்தல்.

5. முதலீட்டாளர்களுக்கு முதலீட்டு கல்வியறிவு மற்றும் இடைநிலையாளர்களுக்கு பயிற்சி அளித்தல்.

6. பிணையங்களில் உட்புற வியாபாரத்தை தடுத்தல் (Insider Trading).

7. பங்குகளை பெருமளவு கையகப்படுத்துவதை ஒழுங்குபடுத்துதல்.

8. பங்குமாற்று நிலையத்தை தணிக்கை செய்தல். இடைநிலையாளர்களிடமிருந்து விபரங்களை கேட்டு ஆய்வுகளை மேற்கொள்ளுதல்.

9. பணிகளை மேற்கொள்வதற்காக கட்டணங்களை விதித்தல்.

10. மேற்கூறிய நோக்கங்களுக்காக ஆராய்ச்சிகளை நடத்துதல்.

11. பிற குறிப்பிடுகின்ற பணிகளை செய்தல்.

மேற்கூறிய பணிகளை மத்திய அரசு வெளியிடும் ஆணைகளுக்கு ஏற்ப இந்த வாரியம் மேற்கொள்ளப்படுகிறது.

இந்தியப் பிணையங்கள் மாற்றுவாரியம் எவ்வகையில் பிணையங்கள் அங்காடியை ஒழுங்குபடுத்துகின்றன?

பங்கு மாற்று நிலையங்களின் நடவடிக்கைகள் பல்வேறு வகைகளில் ஒழுங்குபடுத்தப்படுகின்றன. அவற்றில் முக்கிய நடவடிக்கைகளாகப் பின்வருவனவற்றை கூறலாம்.

1. நிதி அமைச்சகம்.
2. பங்குமாற்று நிலைய ஆளுகை வாரியம் (Governing Board of Stock Exchanges).
3. இந்தியப் பிணைபங்கள் பங்குமாற்று வாரியம் (Securities Exchange Board of India – SEBI).

இந்தியப் பிணையங்கள் பங்கு மாற்று வாரிய ஒழுங்கு நடவடிக்கைகள் (SEBI Regulations)

இந்தியாவில் பங்குமாற்று நிலையங்களின் செயல்பாட்டில் பல குறைபாடுகள் காணப்பட்டன. முதலீட்டாளர்கள் எண்ணிக்கை அதிகமாக பெருகியதால் நிறுவனங்கள் (Companies), தரகர்கள் (Brokers) வணிகத்துவ

வங்கியர் (Merchant Bankers), முதலீட்டு ஆலோசகர்கள் போன்றோர் பல்வேறு வகையான முறைகேடுகளில் ஈடுபட்டனர். குறிப்பாக பங்குச் சான்றிதழ் வழங்குவதில் தாமதம் விலை ஏற்றம், உள் வணிகம் (Insider Trading), பங்கு மாற்று நிலையத்தின் சட்டதிட்டங்களை மீறுதல், ஒதுக்கீட்டு கடிதங்களை அனுப்புவதில் தாமதம், போன்ற பல்வேறு குறைபாடுகள் காணப்பட்டன. இக்குறைபாடுகளை நீக்கி மூலதனச் சந்தையை ஒழுங்குபடுத்த இந்திய அரசு இந்தியப் பிணையங்கள் மாற்று வாரியத்தை 1988ல் அமைத்தது. இது 1992ல் சட்ட உருப்பெற்றது (Statutory Body).

புதிய வெளியீட்டு நடவடிக்கைகள் வணிகத்துவ வங்கிகளை ஒழுங்குபடுத்துதல், பரஸ்பர நிதிகளுக்கு (Mutual Funds) வழிகாட்டி செயல் நெறிகளை அளித்தல் மற்றும் அதனுடைய பணியை மேற்பார்வையிடுதல் போன்றவைகளை மேற்கொள்ள இந்தியப் பிணையங்கள் பங்குமாற்று வாரியத்திற்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. இதன்படி இந்தியப் பிணையங்கள் பங்குமாற்று வாரியம் அரசின் ஆலோசனையுடன் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

1. பங்குமாற்று நிலையங்களை ஆய்வு செய்வதற்கு திட்டங்கள் வகுத்து அதன்படி எல்லா பங்கு மாற்று நிலையங்களிலும் ஆய்வுகளை மேற்கொண்டுள்ளது. இந்தியப் பிணையங்கள் மாற்று வாரியம் அளிக்கும் அறிக்கைகளையும், பரிந்துரைகளையும் பங்குமாற்று நிலையங்கள் கவனத்தில் கொள்கின்றன.

2. பங்கு மாற்றுதரகர்கள் (Stock Brokers) மற்றும் துணைத் தரகர்கள் (Sub Brokers) பதிவு செய்வதற்கான செயல்முறையை இந்தியப் பிணையங்கள் மாற்று வாரியம் மேற்கொண்டுள்ளது. தரகர்கள் போதுமான மூலதனம் வைத்துள்ளார்களா ? (Capital Adeqacy) மற்றும் அவர்களுடைய அடித்தள வசதிகள் போதுமானதா ? என்பன கவனிக்கப்படுகின்றன.

3. பல்வேறு பரஸ்பர நிதி அமைப்புகளை ஆய்வு செய்து அதற்கான அறிக்கையை அளிக்கின்றது. இந்த அறிக்கையில் பரஸ்பர நிதிகள் செய்யும் தவறுகள் சுட்டிக்காட்டப்பட்டு சரி செய்யப்படுகின்றன.

4. புதிதாக மூலதனம் வெளியிடும் நிறுவனங்கள் அவர்களுடைய திட்டங்களின் உண்மை நிலைமையையும் (Material Facts) இடர்களையும்

(Risk) வெளிப்படுத்த வேண்டும். இந்தியப் பிணையங்கள் மாற்று வாரியம் இவற்றை கவனித்து அனுமதியளிக்கின்றது புதிய வெளியீடுகள் இதன் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட வேண்டும்.

5. வணிகத்துவ வங்கிகள் (Merchant Baking) இந்தியப் பிணையங்கள் மாற்று வாரியத்தின் சட்ட ரீதியான கட்டுபாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன. தற்போது வணிகத்துவ வங்கிகள் இந்தியப் பிணையங்கள் மாற்றுவாரியத்தால் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

6. இந்தியப் பிணையங்கள் மாற்று வாரிய சட்டத்தின் சரத்துகளின் கீழ் உட்புற வியாபாரம் (Insider Trading) ஒழுங்குப்படுத்தப்படுகின்றது. இந்த நடவடிக்கை பங்குமாற்று நிலையத்தின் மீது முதலீட்டாளர்களுக்கு நம்பிக்கை ஏற்பட வழிவகுக்கின்றது.

7. வெளிநாட்டு நிறுவன முதலீட்டாளர்கள் (Foreign Institutional Investors) இந்திய மூலதனச் சந்தையில் முதலீடு செய்ய இந்தியப் பிணையங்கள் மாற்று வாரியத்திடம் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

8. பங்குமாற்று நிலையத்தின் ஆளுகை அமைப்பை விரிவுப்படுத்துவதற்காக வழிகாட்டி நெறிகளை வெளியிட்டுள்ளது. பங்குமாற்று நிலையத்தின் ஆளுகை அமைப்பில் (Governing Body) தற்போது ஐந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களும், பொதுமக்களின் பிரதிநிதிகளாக மூன்று உறுப்பினர்களும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

9. முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலை மூலதனச் சந்தை (Primary and Secondary Capital Market) ஆலோசனைக் குழுவை அமைத்துள்ளன.

10. மூலதன வெளியீட்டுக் கட்டுப்பாட்டாளர் (CCI) வழிகாட்டி நெறிகள் மாற்றப்பட்டு இந்தியப் பிணையங்கள் மாற்று வாரியத்தின் வழிகாட்டி நெறிகள் புகுத்தப்பட்டுள்ளன.

இந்தியப் பிணையங்கள் மாற்று வாரியத்தின் மேற்கூறிய நடவடிக்கைகள் மூலம் மூலதனச் சந்தை வலுப்பெற்றுள்ளது. முதலீடு செய்யும் பொதுமக்களின் நலன் ஓரளவுக்கு பாதுகாக்கப்படுகின்றது.

மூலதனச் சந்தை நடவடிக்கையின் சமீபகாலப் போக்கு (Recent Trends in Capital Market Operations)

1951 ஆம் ஆண்டிற்கு பிறகு இந்திய மூலதனச் சந்தை பெருமளவு விரிவடைந்து வருகின்றது. குறிப்பாக சேமிப்பு மற்றும் முதலீட்டு அளவு அதிகரித்து வருகின்றது. மூலதனச் சந்தை வளர்ச்சி அடைந்ததற்கு கூட்டுப்பங்கு நிறுவனங்கள் வளர்ச்சி அடைந்ததை ஒரு அறிகுறியாக கூறலாம். 1951-ம் ஆண்டு சுமார் 28,500 பொது மற்றும் தனி வரையறுத்த நிறுவனங்கள் இருந்தன. இதன் செலுத்திய மூலதனம் ரூ.755 கோடியாகும். 1998ல் இந்நிறுவனங்களின் எண்ணிக்கை சுமார் 1,00,000க்கு மேல் அதிகரித்தது. இதன் செலுத்திய மூலதனம் ரூ.70,000 கோடியாக இருந்தது. முதலீட்டு வளர்ச்சி வீதம் குறிப்பிடத் தகுந்த அளவு பெருகியது. நிறுவனங்கள் முதலீட்டிற்காக வாங்கியக் கடன் தொகை ரூ.1,00,000 கோடியாகும்.

ஆயுள் காப்புறுதி நிறுவனம் வளர்ச்சி அடைந்தது. சேமிப்பு மற்றும் மூலதனச் சந்தையில் நிதி பெருகியதற்கு அறிகுறியாகும். வணிக வங்கிகளின் வைப்புகள் பெருகின. இவைகள் பெருகியதால் மூலதனச் சந்தை வளர்ச்சியடைந்தது. வணிக வங்கிகள், காப்புறுதி நிறுவனங்கள், பங்கு சந்தை தரகு நிறுவனங்கள் (Firms of Stock Brokers) ஒப்புறுதி பணியை (Under-Writing) மேற்கொண்டன. இத்துடன் ஆயுள் காப்புறுதி நிறுவனம் (LIC) இந்தியக் கடன் மற்றும் முதலீட்டுக் கழகம் (ICICI) இந்தியத் தொழில் நிதிக்கழகம் (IFCI) இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி (IDBI) போன்ற அமைப்புகளும் ஒப்புறுதிப்பணிகளை மேற்கொள்கின்றன.

வணிக வங்கிகளும் மூலதனச் சந்தைகளும் (Commercial Bank and Capital Markets)

வணிக வங்கிகள் மூலதனச் சந்தையின் ஒரு முக்கிய உறுப்பாகும். ஆனால் இதன் நடவடிக்கைகள் அரசு மற்றும் பிற பொறுப்புரிமை (Trustee) பிணையங்களை வாங்குவது மற்றும் விற்பதுடன் தொடர்புடையதாக உள்ளது. வங்கி நிதியில் சுமார் 30 சதவீதம் அரசின் பிணையங்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளன. சமீப காலங்களில் வங்கிகள், நிதி நிறுவனங்களில் பங்குகளையும், கடன் பத்திரங்களையும் வாங்குகின்றன. பங்குகள் மற்றும் கடன் பத்திரங்கள் மீதும் கடன் வழங்குகின்றன. பாரத ஸ்டேட் வங்கி, கனரா

வங்கி, இந்தியன் வங்கி, பாங்க் ஆப் இந்தியா போன்ற வணிக வங்கிகள் தொழிற்சாலைப் பிணையங்கள் மீது (Industrial Securities) முதலீடு செய்வதற்காக பெருமளவில் நிதி திரட்டுகின்றன.

மூலதனச் சந்தையும் சிறப்பு நிதி நிறுவனங்களும் (Special Financial Institutions and the Capital Markets)

இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு இந்திய அரசு பல்வேறு நிதி நிறுவனங்களை அமைத்தது. இந்தியத் தொழில் நிதிக்கழகம், மாநில நிதிக்கழகம், இந்தியத் தொழில் கடன் முதலீட்டுக் கழகம், இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி, யூனிட்டிரஸ்ட் போன்ற அமைப்புகள் நிறுவப்பட்டன. இவைகள் சேமிப்புகளைத் திரட்டி அதில் ஒரு பகுதியை மூலதனச் சந்தையில் முதலீடு செய்கின்றன. பழைய மற்றும் புதிய நிறுவனங்களின் பங்குகள் மற்றும் கடன் பத்திரங்களை வாங்குகின்றன. கடன் உதவி அளிக்கின்றன. புதிய வெளியீடுகளை ஒப்புறுதி செய்கின்றன. தற்போது தனியார் துறைக்கு அளித்த கடன்களை சமப்பங்குகளாக (Equity Capital) மாற்றிக் கொள்ளும் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

சமீப காலத்தில் இந்திய மூலதனச் சந்தை (Indian Capital Market in Recent Years)

மூலதன வெளியீட்டுக் கட்டுப்பாட்டாளர் புதிதாக மூலதனம் வெளியிடுவதற்கு (Capital Issues) அனுமதி அளித்துள்ளார். 1990ல் சுமார் 8,000 கோடி ரூபாய்க்கு பங்குகள் மற்றும் கடன் பத்திரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. மூலதனச் சந்தை சமீப காலத்தில் வளர்ச்சியை நோக்கிச் செல்கின்றன என்பதை இது காட்டுகின்றது.

நிறைகாப்புடைய பத்திரங்கள் (Gilt Edged Securities)

அரசு மற்றும் அரசுச் சார்ந்த (Semi-Government) பிணையங்கள் நிறைகாப்புடைய பிணையங்கள் எனப்படுகின்றன. இந்திய ரிசர்வ் வங்கியின் நிறைகாப்புடைய பிணையங்களுக்கான குறியீட்டு எண் 90.4 ஆக உள்ளது. இது முன்பைவிட குறைவாக உள்ளது. நிறைகாப்புடைய பிணையங்களின் குறியீட்டு எண் குறைவாக இருப்பதற்கான காரணங்களாவன.

1. குறுகிய கால வட்டி வீதம் அதிக அளவில் உள்ளது.

2. இந்தியப் பணச்சந்தையில் நிதிப்பற்றாக்குறை உள்ளது.

3. புதிய கடன்களுக்கு வட்டி வீதம் அதிகமாக உள்ளது.

தொழிற்சாலை பிணையங்கள் சந்தை (Industrial Securities Market)

தொழிற்சாலை பிணையங்கள் சந்தை 1974ல் கடுமையாக பாதிக்கப்பட்டது. இதற்குக் காரணம் லாப ஈவு பகிர்வில் பல தடைகள் விதிக்கப்பட்டன. குறுகிய கால வட்டி வீதம் மற்றும் வங்கியற்ற நிறுவனங்கள் வைப்புகளுக்கு அளித்த வட்டி அதிகரித்தது. பங்குகளுக்கான குறியீட்டு எண் 1974ல் 133ஆக இருந்தது. இக்குறியீட்டு எண் 1984ல் 203க்கு சென்றது. 1987–88ல் பங்குச் சந்தை வீழ்ச்சி அடைந்தது. ஆனால் கடந்த பல ஆண்டுகளாக பங்குச் சந்தை பூரிப்பு (Boom) நிலையை அடைந்து உள்ளது. உரிமங்கள் வழங்குவது தளர்த்தப்பட்டது. நிதி நடவடிக்கைகள் எளிமைப்படுத்தப்பட்டன. தனியார்த் துறைகளுக்கு வாய்ப்பு அதிகரித்தது. ஏற்றுமதி, இறக்குமதிக் கொள்கை நிறுவனங்களின் வியத்தகு சாதனை போன்றன பூரிப்பை ஏற்படுத்தின.

புதிய வெளியீடுகள் சந்தை (New Issues Market)

நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலிருந்து புதிய வெளியீடுகள் சந்தை மகிழ்ச்சி மிக்கதாக (Buoyant) ஆகியது. மூலதன வெளியீடுகளில் பொதுமக்களின் ஆர்வம் அதிகமாகியது. பொதுவரையறுத்த நிறுவனங்கள் பங்குகள் மற்றும் கடன் பத்திரங்கள் வெளியிட அனுமதி அளிக்கப்பட்டன. பொதுத்துறை நிறுவனங்களும் மூலதனச் சந்தையில் இருந்து கடன் பத்திரங்கள் மூலம் நிதி எழுப்பிக் கொள்ள அனுமதி கொடுக்கப்பட்டன.

பங்குசந்தை பூரிப்பு (Stock Market Boom)

டாக்டர் மன்மோகன் சிங் சமர்ப்பித்த வரவு செலவுத் திட்டம், நிதித்துறை, பங்கு மாற்று நிலையம், பரஸ்பர நிதி, அயல்நாட்டு முதலீடு வரிவிலக்குகள் போன்றவற்றிற்கான பல்வேறு நடவடிக்கைகளை அறிவித்தன. அத்துடன் தளர்வான தொழில் கொள்கை, ஏற்றுமதி, இறக்குமதி கொள்கை மாற்றங்கள்

மூலதனச் சந்தையை வளர்ச்சியடையச் செய்தன. நிதி அமைச்சர் அளித்த சலுகைகளைப் பயன்படுத்தி பங்குகளின் விலையை உயர்த்தினர். பலகோடி ரூபாய் பங்குச் சந்தையில் முதலீடு செய்யப்பட்டது. பங்குச் சந்தை தரகர்கள் பலர் குறிப்பாக ஹர்ஷத் மேத்தா வங்கியர் ரசீது (Banker Receipts - BR) என்ற கருவியைப் பயன்படுத்தி ஏறத்தாழ 8000 கோடி ரூபாய்க்கு மேல் பங்குச் சந்தையில் புகுத்தினார். இதன் காரணமாக பங்குச் சந்தையில் பங்குகளின் விலை அதிகரித்தன. இது பிணையங்களின் ஊழல் (Security Scam) என வர்ணிக்கப்பட்டது.

பங்குச்சந்தையில் ஏற்பட்ட விலை அதிகரிப்பை குறைக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இந்த நடவடிக்கைகள் பங்குகளின் விலை ஏற்றத்தை தடுக்க முடியவில்லை.

பங்குகளின் விலை ஏற்றத்திற்கு காரணம் அதில் நடந்த ஊழல் என்பது தெரியவந்தவுடன் பங்குகளின் விலை குறைய ஆரம்பித்தது. வங்கி அதிகாரிகள் மற்றும் பங்குச்சந்தை தரகர்களின் கூட்டு நடவடிக்கையால் இந்த ஊழல் ஏற்பட்டது. இந்திய ரிசர்வ் வங்கி மற்றும் நிதி அமைச்சகம் ஊழலுக்கு உண்மைக் காரணம் என்ன என்று கூற முடியவில்லை. ஊழலில் தொடர்புடையவர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இனி ஊழல் நடக்கா வண்ணம் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மூலதன வெளியீட்டுக் கட்டுப்பாட்டாளர் (CCI) பதவி ஒழிக்கப்பட்டது. பங்கு மாற்று நிலைய வாரியம் (Stock Exchange Board of India) (SEBI) அமைக்கப்பட்டுள்ளது. இந்த வாரியம் தற்போது பங்கு மாற்று நிலைய நடவடிக்கைகளை ஒழுங்குப்படுத்தி வருகின்றது.

நிதிச் சந்தையில் கிடைக்கும் நிதிச் சேவைகள் (Financial Services)

கடந்த பத்து ஆண்டுகளில் இந்திய மூலதனச் சந்தை குறிப்பிடத்தகுந்த அளவு வளர்ச்சிப் பெற்றுள்ளது. மூலதனச் சந்தை நடவடிக்கைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது மற்றும் விரிவடைந்துள்ளது. புதிய நிதி நிறுவனங்களான வணிகத்துவ வங்கிகள், பரஸ்பர நிதிகள், துணிகர முதலீட்டு நிறுவனங்கள் (Venture Capital) வளர்ச்சியடைந்துள்ளன. புதிய நிதி ஆவணங்களாக மாற்றக்கூடிய கடன் பத்திரங்கள், வணிகத்தாள்கள்

(Commercial Papers) தோன்றியுள்ளன. இவ்வாறு வளர்ந்து வரும் மூலதன மற்றும் பணச்சந்தைகளின் தேவையை சமாளிக்க நிதிச் சேவைகள் தேவைப்படுகின்றன. இந்நிதிச் சேவைகளை மேற்கொள்வதற்காக பல்வேறு அமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. இவைகளில் முக்கியமானவைகளாக பின்வருவனவற்றை கூறலாம்.

1. வணிகத்துவ வங்கிகள் (Merchant Banking)

வணிகத்துவ வங்கிகள் ஒரு வகையான நிதி நிறுவனங்கள் ஆகும். இவை வாடிக்கையாளரின் பிணையங்களை மேலாண்மை செய்கின்றது. முதலீடுகளை பாதுகாக்கின்றது. புதிய வெளியீடுகளை ஒப்புறுதி செய்கின்றது. நிறுவன வாடிக்கையாளர்களுக்கு (Corporate Client) நிதி எழுப்புவது தொடர்பான ஆலோசனைகளை வழங்குகின்றது. இந்தியாவில் வணிகத்துவ வங்கிகள் முதன்முதலில் கிரிண்ட்லேஸ் வங்கியில் (Grindlays Bank) தொடங்கப்பட்டது. அதன் பிறகு பாரத ஸ்டேட் வங்கியிலும் பிற வணிக வங்கிகளிலும் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது பல வங்கிகள் வணிகத்துவ வங்கி சேவையை மேற்கொண்டு உள்ளது.

2. பரஸ்பர நிதிகள் (Mutual Funds)

பரஸ்பர நிதிகள் புதிதாக மூலதன அமைப்பாக உருவாக்கப்பட்டுள்ளது. இந்திய யூனிட் டிரஸ்ட் 1964ல் முதன் முதலில் தோன்றியது. இந்த அமைப்பு பொது மக்களிடமிருந்து சேமிப்புகளைத் திரட்டி பங்கு மாற்று பிணையங்களில் முதலீடு செய்கின்றது. பரஸ்பர நிதி அமைப்புகள் முதலீட்டாளர்களின் ஆதரவைப் பெற்று நல்ல வளர்ச்சியடைந்து வருகின்றது. இந்திய யூனிட் டிரஸ்ட் பரஸ்பர நிதியை அமைத்துள்ளதுபோல் பல்வேறு வங்கிகளும் பரஸ்பர நிதிகளை அமைத்துள்ளது. இந்நிதி அமைப்புகள் ஏறத்தாழ ரூ.7,000 கோடியை நிதியாக திரட்டியுள்ளது. தற்போது தனியார் நிதி நிறுவனங்களும் பரஸ்பர நிதிகளை அமைக்க உரிமை தரப்பட்டுள்ளது. பரஸ்பர நிதி அமைப்புகள் நிதிச் சேவைகளை அளிக்கின்றன.

3. குத்தகை மற்றும் வாடகைக் கொள்முதல் நிறுவனங்கள் (Leasing and Hire Purchasing Companies)

சமீப காலங்களில் அதிக எண்ணிக்கையில் குத்தகையிடல் நிறுவனங்கள் தோன்றி உள்ளன. சிற்றளவு மற்றும் நடுத்தர நிறுவனங்கள்

எந்திரங்களை பெறுவதற்கான நிதிமுறையாக குத்தகையிடல் அமைந்துள்ளது. வாடகைக் கொள்முதல் என்பது ஒரு குறிப்பிட்ட வைப்பு (Deposit). செலுத்திய கடன் ஒரு குறிப்பிட்ட காலத் தவணையில் செலுத்தப்படுகின்றது. பணம் செலுத்திய முடிந்த பிறகு சொத்தின் மீதான பெயர் மாற்றப்படுகின்றது. வாடகைக் கொள்முதல் சேவையில் வணிக வங்கிகள் ஈடுபட்டு இருந்தபோதிலும் தனியார் நிறுவனங்களைப் போல இவைகளால் சேவை செய்ய முடியவில்லை.

4. வீட்டு வசதி நிதி (Housing Finance)

சமீப காலத்தில் தனியார் வீட்டு வசதி நிறுவனங்கள் பல அமைக்கப்பட்டுள்ளன. தேசிய வீட்டு வசதி வங்கி (National Housing Bank) இந்திய அரசால் அமைக்கப்பட்டுள்ளது. தேசிய வீட்டு வசதி வங்கி, வீட்டு வசதி நிதி நிறுவனங்களுக்கு மறு நிதி அளிக்கின்றது. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகம் (Housing Urban Development Finance Corporation) (HUDFC) போன்றன வீட்டு வசதிகளுக்கு நிதி அளிக்கின்றது. வீடு கட்ட நிதி அளிப்பது ஒரு முக்கிய சேவையாகும்.

5. துணிகர முதலீட்டு நிறுமங்கள் (Venture Capital Companies)

மூலதனச் சந்தையில் துணிகர முதலீட்டு நிதி ஒரு புதிய வகையாகும். தொழில் நுணுக்க தொழில் முனைவோர்கள் (Technocrat Entrepreneurs) தொழிலில் திறமையும் அனுபவமும் பெற்றிருக்கின்றனர். ஆனால் முதலீடு செய்ய போதிய மூலதனம் இல்லை. தொழில் திட்டத்தை தோற்றுவிக்க தேவையான பணம் இவர்களிடமில்லை. இதற்கு தேவைப்படும் மூலதனம் துணிகர மூலதனம் எனப்படுகின்றது. ஒரு புதிய தொழில் திட்டத்தை தோற்றுவிப்பதில் இடர்கள் அதிகம் உள்ளன. இந்த இடரை சமாளிக்க மூலதனம் தேவைப்படுகின்றது. இதுவே துணிகர மூலதனம் எனப்படுகின்றது. இத்துணிகர மூலதனத்தை அளிக்கும் நிறுவனம் தேவைப்படுகின்றது. 1988ல் இந்திய யூனிட் டிரஸ்டும், இந்தியத் தொழில் கடன் முதலீட்டுக் கழகமும் இணைந்து இந்தியத் தொழில் நுட்ப வளர்ச்சி மற்றும் தகவல் நிறுமம் (Technology Development and Information Company of India - TDICI) என்ற துணிகர முதலீடு நிறுவனத்தை முதன் முதலில் தோற்றுவித்தது. தற்போது

தனியார் துறையில் துணிகர முதலீட்டு நிறுவனம் செயல்பட்டு வருகின்றது. இந்நிறுவனங்கள் தொழிலைத் தோற்றுவிப்பதற்கான செயலை கடனாக அளிக்கும் சேவையைக் கொண்டுள்ளது.

6. உரிமைப்பேராள் (Factoring)

உரிமைப்பேராள் முறை என்பது ஒரு புதிய நிதிச் சேவையாகும். இதில் வணிக வங்கிகள் விற்பனைக்கு பின் ஏற்படும் கடன் தேவையை தொழிற்சாலைகளுக்கு அளிக்கின்றன. பொருட்களை விற்பனை செய்தவுடன் விற்பனைத் தொகை கிடைப்பதில்லை. விற்பனைக்கான உண்டியல்களைப் பெற்றுக் கொண்டு கடனை வசூலித்துத் தருகின்றது. வாடிக்கையாளருக்காக விற்பனைப் பேரேட்டை பராமரிக்கின்றது. இச்சேவைகள் உரிமைப் பேராளின் சேவைகள் ஆகும்.

7. கடன் வரிசைப்படுத்துதல் (Credit Rating)

கடன் பத்திரங்கள் பங்குத்தொகை, வைப்புகள், வணிகத்தாள் போன்ற பல்வேறு நிதி ஆவணங்கள் உள்ளன. இவைகளுக்கு கடன் வரிசை (Credit Rating) இடப்படுகின்றது. இவ்வகையான சேவை 1988 விருந்து மேற்கொள்ளப்படுகின்றது.

இந்திய கடன் வரிசை தகவல் சேவை வரையறுத்தது (The Credit Rating Information Services of India Limited - CRISIL) என்ற முகமை தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

இது போன்ற மூலதனச் சந்தைக்கு பல நிதிச் சேவைகள் வங்கிகளாலும் பல நிதி நிறுவனங்களாலும் அளிக்கப்படுகின்றன.

பாடம் - 8

தேசிய பங்கு மாற்று அங்காடி
(National Stock Exchange)

முன்னுரை

தேசிய பங்கு மார்க்கெட் (என்.எஸ்.இ) முதலீட்டாளர்களுக்கு சிறந்த சேவையை அளிக்கும் விதத்தில் தனது பணிகளை மேம்படுத்தி வருகிறது. தேசீய பங்கு மார்க்கெட் புதிய முதலீட்டாளர்களின் சந்தேகங்களை நீக்கும் விதத்தில் இங்கு தொகுத்து வெளியிடப்பட்டுள்ளது.

தற்போதைய பங்கு வர்த்தக நடவடிக்கைகள் குறித்து முதலீட்டாளர்களின் சந்தேகங்கள், அவற்றில் ஏற்படும் பிரச்சனைகள் போன்றவற்றை மனதில் கொண்டே, தேசிய பங்கு மார்க்கெட்டை உருவாக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. பம்பாய் மற்றும் முக்கிய நகரங்களில் முதலீட்டாளர்களுக்கு உள்ள வசதி வாய்ப்புகள் மற்ற நகரங்களில் உள்ள முதலீட்டாளர்களுக்கு கிடையாது. எனவே தான் இந்தியாவில் உள்ள அனைத்து முதலீட்டாளர்களும் சம அளவில் பலனடையும் விதத்தில் தேசீய பங்கு மார்க்கெட் உருவாக்கப்பட்டுள்ளது. எளிதில் பங்குகளை வாங்கவோ, விற்கவோ முடியும். முதலீட்டாளர்களின் நலன் பாதுகாக்கப்படும் வகையில் நாட்டின் எந்த மூலையிலும் உள்ள முதலீட்டாளர்களும் பம்பாயில் உள்ள முதலீட்டாளர்கள் நேரிடையாக பங்கு வர்த்தகம் செய்து கொள்ளும் விதத்தில் இந்த மார்க்கெட் அமைந்துள்ளது.

பங்குகளை வாங்கவோ, விற்கவோ அனைத்து முதலீட்டாளருக்கும் ஆகும் நேரம் ஒரே அளவுதான். மேலும் முதலீட்டாளர்கள் அளிக்கும் ஆர்டர்கள் ஒன்றாக கொடுக்கப்படும். அதன் பின் விலை மற்றும் நேரம் இவற்றின் அடிப்படையில் ஆர்டர்கள் பொருத்திப் பார்க்கப்படும். கம்ப்யூட்டரைப் பொறுத்த வகையில் நாட்டின் எந்த மூலையில் இருந்தாலும் முதலீட்டாளர்கள் ஒன்றுதான். எனவே, இடம் ஒரு பிரச்சனையே அல்ல.

மற்ற பங்குமார்கெட்டுகளைப் போல் தேசீய பங்கு மார்க்கெட்டில் பங்குகளின் பெயரை கூவி வியாபாரம் செய்வதில்லை. என்.எஸ்.ஈ,

உறுப்பினர்களின் கம்ப்யூட்டர்கள் அனைத்தும் தேசீய பங்கு மார்க்கெட்டின் முக்கிய கம்ப்யூட்டருடன் இணைக்கப்பட்டிருக்கும். செயற்கை கோள் உதவியுடன் முழுவதும் தானியங்கி முறையில் பங்கு வர்த்தகம் நடைபெறும். ஒவ்வொரு புரோக்கரின் அலுவலகமும் பங்குவர்த்தகம் நடைபெறும் இடம்தான். புரோக்கரின் அலுவலகத்திற்கு சென்று பங்குகளை வாங்கவோ, விற்கவோ முதலீட்டாளர்கள் ஆர்டர் தரலாம். அங்கு பங்கின் மார்க்கெட் விலையை கவனித்து ஆர்டர் நிறைவேற்றப் பட்டவுடன் பங்கு வர்த்தக மூலதன ஒப்பந்த ரசீதை பெற்றுக்கொள்ளலாம்.

என்.எஸ்.ஈ.யின் உறுப்பினர்கள், டீலர்கள், அங்கீகரிக்கப்பட்ட நபர்களை நியமித்துக் கொள்ள தேசீய பங்கு மார்க்கெட் அனுமதித்துள்ளது. இவர்களின் மூலம் சிறிய முதலீட்டாளர்கள் பங்கு வர்த்தகம் செய்யும் போது கவலைப்படத் தேவையில்லை. யார் மூலம் நாம் பங்கு வர்த்தகம் செய்தாலும் அதற்கானபொறுப்பை உறுப்பினர் ஏற்றுக் கொள்வர். பங்கு வர்த்தக ஒப்பந்த ரசீது கூட புரோக்கர்களிடமிருந்து தான் உங்களுக்கு வரும் ஏதாவது பிரச்சனை என்றால் நேரிடையாக அணுகலாம். சிறிய முதலீட்டாளர்களின் பிரச்சனைகளை களைய வேண்டியது என்.எஸ்.ஈ-யின் உறுப்பினருடைய பொறுப்பாகும். பங்கு வர்த்தகம் குறித்து கவலையே படவேண்டாம். முதலீட்டாளர் அனைத்து விதத்திலும் சரியான விலையில் பங்குகளை வாங்கவோ, விற்கவோ முடியும் விதத்தில் வர்த்தக நடவடிக்கை வடிவமைக்கப்பட்டுள்ளது. விலையை புரோக்கரால் மாற்ற முடியாது. விலை, நேரம் அடிப்படையில் பங்குகள் வர்த்தக பணியை மேற்கொள்வது கம்ப்யூட்டர் என்பதால் எந்த தவறும் நடக்காது.

உதாரணம்

ரிலையன்ஸ் நிறுவனத்தின் 100 பங்குகளை ரூ.285 விலையில் வாங்க நீங்கள் ஆர்டர் கொடுப்பதாக வைத்துக் கொள்வோம். மற்றொருவர் ரூ.290 விலையில் வாங்க விரும்புகிறார் என்றால் முதலில் ரூ.290 என்ற விலையுடன்தான் விற்பனை தொடர்பான ஆர்டர் பொருத்திப் பார்க்கப்படும். இப்போது இருவருமே ரூ.285 விலையில் வாங்க ஆர்டர் கொடுத்திருப்பதாக வைத்துக் கொள்வோம். இது போன்ற ஒரு சூழ்நிலையில் யார் முதலில் ஆர்டரை கொடுத்தார்களோ அவர்களுக்கு முதலில் இந்த விலையில் பங்குகள் கிடைக்கும்.

பங்குகளை வாங்க விரும்பும் முதலீட்டாளர் நிறுவனத்தின் பெயர் எந்த விலையில் எவ்வளவு பங்குகளை வாங்க விரும்புகிறார் என்ற விவரத்தை கம்ப்யூட்டரில் தந்து விட வேண்டும். அது வரையில் முதலீட்டாளர் குறிப்பிட்ட விலையில் யாரும் பங்குகளை விற்க ஆர்டர் தந்திராவிட்டால், தரும் வரை கம்ப்யூட்டரில் பதிவு செய்யப்பட்டு இருக்கும் பங்குகளின் விலையை செயற்கையாக ஏற்றவோ, இறக்கவோ முடியாது. ஏனெனில் பங்குகளை யாருக்கு விற்பது யாரிடம் இருந்து வாங்குவது என்பதை நாம் முடிவு செய்ய முடியாது. திடீரென பங்கின் விலை உயர்வதை என்.எஸ்.ஈ. அனுமதிக்காது.

ஒவ்வொரு ஆர்டரும் கம்ப்யூட்டருக்குள் செல்லும்போது தனித்தனி குறியீட்டு (Code) நம்பர் ஒதுக்கப்பட்டு விடும். எனவே முதலீட்டாளர்கள் தனக்கு கொடுக்கப்பட்ட எண்ணை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். பங்குகள் வாங்குதல், விற்பனை தொடர்பான அத்தாட்சி ரசீது (Confirmation slip) வழங்கப்படும் போது அதில் இடம் பெற்றிருக்கும் எண்ணுடன் ஒப்பிட்டு நாம் உறுதி செய்து கொள்ளலாம். இப்படிச் செய்யும் போது புரோக்கர் மீது தேவையற்ற சந்தேகங்கள் ஏற்படுவது தவிர்க்கப்பட்டு விடும். புரோக்கர் தரும் தகவல்களில் சந்தேகம் இருக்கும் போது நேரிடையாக என்.எஸ்.ஈ.யுடன் தொடர்பு கொண்டு விளக்கம் பெறலாம். இங்கு 7 ஆண்டுகள் வரை தகவல் விவரங்கள் பத்திரமாக பாதுகாக்கப்படுகின்றன. மொத்தத்தில் விலை பற்றிய முதலீட்டாளரின் சந்தேகத்தை தீர்ப்பது என்.எஸ்.ஈ.–யின் கடமை.

என்.எஸ்.ஈ.யில் வர்த்தகம் நடைபெறும் தொகையில் 2.5 சதவீதம் என்பது ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்டுவிட்ட ஒன்று. எந்த புரோக்கரும் இதற்கு மேல் வசூல் செய்ய முடியாது. மேலும் பங்கின் விலையும், புரோக்கர் கமிஷனும் தனித்தனியாக இடம் பெற்று இருக்கும்.

ஒவ்வொரு ஆர்டரும் கொடுக்கப்படும் நேரத்தைப் பொறுத்துத்தான் நிறைவேறும். ஒரு விநாடி நேரம் கூட ஆயிரமாகப் பிரிக்கப்பட்டு ஆர்டர்கள் கொடுக்கப்படும் நேரம் கணக்கிடப்படுகிறது. ஆர்டர்கள் கொடுக்கப்பட்டவுடன் அது முதலீட்டாளர்களுக்கும், புரோக்கர்களுக்கும் தெரிந்து விடும். அத்தாட்சி ரசீது நமக்கு வரும் போது அதில் ஆர்டர் நம்பரும், ஆர்டர் கொடுத்த நேரமும் அச்சிடப்பட்டிருக்கும். நாம் ஆர்டரில் மாற்றங்களை செய்ய விரும்பினால் அதையும் புதிய ஆர்டராகப் பதிவு செய்து அதற்கு தனியாக நம்பரும், நேரமும் தரப்படும். எனவே பிரச்சனை இல்லை.

முதலீட்டாளருக்கு முக்கியத்துவம்

என்.எஸ்.ஈ.யைப் பொறுத்தவரையில் சிறிய முதலீட்டாளர், பெரிய முதலீட்டாளர் என்ற வித்தியாசம் கிடையாது. உதாரணமாக நீங்கள் ஏ.சி.சி. நிறுவனப் பங்குகள் 100ஐ ரூ.350 என்ற விலையில் வாங்க விரும்பி ஆர்டர் கொடுத்திருப்பதாகக் கொள்வோம். ஒரு பெரிய நிதி நிறுவனம் 100 ஏ.சி.சி பங்குகளை ரூ.345 விலையில் வாங்க விரும்புவதாகக் கொள்வோம். இது போன்ற நிலையில் முதலில் உங்கள் ஆர்டருக்குத்தான் முக்கியத்துவம் தரப்பட்டு நிறைவேற்றப்படும்.

வர்த்தகத்தின் பங்குகள் மற்றும் பணம் பெறுதல்

என்.எஸ்.ஈ.-யில் புதன்கிழமை தொடங்கி அடுத்த செவ்வாயோடு தீர்வு (Settlement) சுழற்சி முடிகிறது. பங்கு வர்த்தகம் முடிவடைந்த நாளில் இருந்த 15 தினத்திற்குள் பணமோ, பங்குகளோ உறுப்பினருக்கு கிடைத்து விடும். அதன் பின் முதலீட்டாளர்கள் உடனே பெற்றுக் கொள்ளலாம். எவ்வித தாமதமும் ஏற்படாது. என்.எஸ்.ஈ. உறுப்பினர்கள் தங்களிடம் பணமோ, பங்குகளோ வந்தவுடன் 48 மணி நேரத்திற்குள் அவற்றை முதலீட்டாளரிடம் தந்துவிடவேண்டும் என்ற விதி முறையே உள்ளது.

இது வரை பல தீர்வுகள் முடிந்துவிட்டன. ஒன்று கூட ஒத்திப் போடப்படவில்லை. மற்றொன்றுடன் இணைக்கப்படவும் இல்லை. கிளியரிங் ஹவுஸ் மூலம் முறைப்படி நடவடிக்கைகள் எடுக்கப்படுவதால் பங்குகளை பெறுவதிலோ, பெறும் பங்குகளிலிருந்து பங்குகளை பெறுவதிலோ, பணத்தை பெறுவதிலோ தாமதமே எற்படாது.

தவறான பட்டுவாடா (Bad Deliveries)

விற்பனைக்கு வரும் பங்குகளை கிளியரிங் ஹவுஸ் முறைப்படி பரிசீலித்து கையெழுத்து மாறி இருந்தாலோ உடனடியாக புத்தக முடிப்புக் காலம் முடிந்த பின்பு பதிவு செய்ய அனுப்பாமல் விற்பனை செய்யப்பட்டு இருந்தாலோ உடனடியாக திரும்பி அனுப்பப்பட்டு விடும். 48 மணி நேரத்திற்குள் சம்பந்தப்பட்ட புரோக்கர் அதை தீர்வு செய்ய வேண்டும். அப்படி இல்லாவிட்டால், அந்தப் பங்குகள் உடனடியாக ஏலம் விடப்படும். எனவே இது போன்ற தவறுகள் ஏற்படுவது மிகக் குறைவு.

புரோக்கர் அப்படிச் செய்யும்போது தர வேண்டிய அளவிற்கு பங்குகள் ஏலத்தில் பெறப்பட்டு அது முதலீட்டாளர்களுக்கு அறிவிக்கப்பட்டு விடும். அப்படி ஏலத்தில் கிடைக்கவில்லை என்றால் வர்த்தகம் நடந்த தினத்தில் இருந்து தீர்வு தினம் வரையிலான கால கட்டத்தில் பங்கின் விலை என்று அதிகமோ அந்த விலையில் சரி செய்யப்படும்.

முதலீட்டாளர்களின் குறைகளைப் போக்கும் ஒரு பிரிவு என்.எஸ்.ஈ.யில் உள்ளது. இதன் மூலம் புரோக்கருக்கும், முதலீட்டாளர்களுக்கும் இடையில் உள்ள பிரச்சனைகள் சுமூகமாக தீர்த்து வைக்கப்படுகின்றன. அதே சமயம், புரோக்கருக்கும், முதலீட்டாளர்களுக்கும் இடையே ஏதேனும் கருத்து வேறுபாடு இருந்து பேச்சு வார்த்தைகள் மூலம் அது தீர்க்கப்படலாம் அல்லது தீர்க்கப்படாமல் போனால் அதை தீர்த்து வைக்க நடுவர் குழு உள்ளது. இக்குழு இப்பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் பிரச்சனை பற்றி என்.எஸ்.ஈ.க்கு எழுதினால் போதுமானது.

பங்குகளை என்.எஸ்.ஈ-யில் பட்டியலிடல்

ஒரு நிறுவனம் கீழ்க்கண்ட தகுதிகளை பெற்றிருந்தால் அந்நிறுவனப் பங்குகளை என்.எஸ்.ஈ.-யில் பட்டியலிடலாம். ஒரு நிறுவனத்தின் பங்கு மூலதனம் ரூ.10 கோடிக்கும் குறைவாக இருக்கக்கூடாது. அல்லது பங்கு மூலதனத்தின் மொத்த மார்க்கெட் மதிப்புத் தொகை ரூ.25 கோடிக்கும் அதிகமாக இருக்க வேண்டும். ஒரு நிறுவனம் அல்லது அந்த நிறுவனத்தை தொடங்கிய நிறுவனம் குறைந்த பட்சம் மூன்று ஆண்டுகள் செயல்பட்டு இருக்க வேண்டும் அல்லது நிறுவனர் துவக்கிய ஒரு பங்கு மார்க்கெட்டில் இந்தியாவின் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது ஒரு பங்கு மார்க்கெட்டில் குறைந்த பட்சம் மூன்று ஆண்டுகளுக்கு பட்டியலிடப்பட்டு இருக்க வேண்டும். சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் பங்குகள் ஏதாவது ஒரு அங்கீகரிக்கப்பட்ட ஒரு பங்கு மார்க்கெட்டில் மூன்று ஆண்டுகளுக்கு தொடர்ந்து பட்டியலிடப்பட்டிருக்க வேண்டும்.

பட்டுவாடா இல்லாத காலம் (Non-delivery period)

நிறுவனம் புத்தக முடிப்பு (Book closure) காலத்தை அறிவித்த பிறகு அந்த தேதியில் இருந்து 15 நாட்கள் பட்டுவாடா இல்லாத காலமாக

கடைபிடிக்கப்படுகின்றது. இந்தக் காலக் கட்டத்தில் முதலீட்டாளர்கள் நிறுவனத்திடம் பங்கு பத்திரங்களை அனுப்பி தங்கள் பெயரில் மாற்றிக் கொள்ளலாம்.

நிறுவனத்தின் பங்குகள் விற்பனை செய்யப்படும் போது டிவிடெண்ட்டின் முடிவு

ஒவ்வொரு பட்டுவாடாவின் போதும் டிவிடெண்ட் பெறத் தகுதியான பங்குகளின் பட்டியலை என்.எஸ்.ஈ. வெளியிடும். எவ்வளவு சதவீத டிவிடெண்ட் தகுதியான பத்திரங்களின் எண் விபரம் போன்றவையும் வெளியிடப்படும். இந்த விவரங்களை பங்கு புரோக்கர்கள் இடம் இருந்து என்.எஸ்.ஈ. பெறும்.

டிவிடெண்ட் பெறும் தகுதி பங்குகளை வாங்கும் நபருக்கு இருக்கும் பட்சத்தில் பங்குகளை விற்கும் முதலீட்டாளர் எவ்வளவு டிவிடெண்ட் பெற்றாரோ அதற்கான செக்கை புரோக்கரிடம் அளித்து விட வேண்டும்.

பிரச்சனைகள் வருவதைத் தடுக்க புரோக்கருடன் ஒப்பந்தம் செய்து கொள்ளல் :

புரோக்கர்கள் முதலீட்டாளருடன் ஒரு ஒப்பந்தம் செய்து கொள்வதன் மூலம் நல்லுறவை வைத்துக் கொள்ளலாம். இந்த ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்கள் வருமாறு :

1. புரோக்கர் நியமனம் பங்கு வர்த்தகம் தொடர்பான ஒரு விண்ணப்பத்தை முதலீட்டாளர் நிரப்ப வேண்டும்.
2. பங்கு வாங்குவது, விற்பது தொடர்பான ஆர்டர், அத்தாட்சி ரசீது, புரோக்கர் கமிஷன், முதலீட்டாளர் செலுத்தியுள்ள முன் பணம், பங்குகளையோ, பணத்தையோ அளிப்பது தொடர்பான விதிமுறைகள் இதில் இடம் பெற்றிருக்கும்.
3. அனைத்து விவரங்களும் அடங்கியுள்ள இது போன்ற ஒரு ஒப்பந்தம் பிரச்சனைகளை தவிர்க்க உதவும். எனினும் புரோக்கருடன் ஒப்பந்தம் செய்து கொள்ளும் முன்பாக விதிமுறைகளை முதலீட்டாளர்கள் நன்கு தெரிந்து கொள்ள வேண்டும்.

முதலீட்டாளர்களுடைய உரிமைகள் என்னென்ன என்பதையும் அவற்றை எப்படி செயல்படுத்துவது என்பதையும் தெரிந்து கொள்வோம். அது நம்

பணத்தின் பாதுகாப்பை உறுதி செய்யும். எனவே எப்போது, பங்கு வர்த்தகத்தில் ஈடுபட்டாலும்,

1. ஆர்டர் தரும் போது நமக்கு ஒதுக்கப்படும் எண்ணை கேட்டு பெற்றுக் கொள்ள வேண்டும்.
2. ஆர்டர் மற்றும் அத்தாட்சி ரசீதை பெற்றுக் கொள்ள வேண்டும்.
3. பங்கு வர்த்தகம் நடந்து முடிந்த 24 மணி நேரத்திற்குள் காண்ட்ராக்ட் நோட்டைப் பெற வேண்டும்.
4. இதில் பங்கின் விலையும், புரோக்கர் கமிஷனும் தனித்தனியாக இடம் பெற்று உள்ளதா என்பதை கவனிக்க வேண்டும்.
5. பண பட்டுவாடா (Payment) காலத்தை அடுத்து 48 மணி நேரத்திற்குள் பணத்தையோ, பங்குகளையோ புரோக்கரிடம் கேட்டுப் பெற வேண்டும்.
6. நாம் பெயர் பதிவுக்காக அனுப்பிய பங்குகள், கையெழுத்து போன்றவை சரியில்லை என்பது போன்ற பல காரணங்களால் நம்மிடமே திரும்பி வந்து விட்டால் அதை பெற்றுக் கொண்டு 48 மணி நேரத்திற்குள் சரி செய்ய வேண்டியது புரோக்கரின் கடமையாகும்.

அப்படி புரோக்கர் செய்து கொடுக்கவில்லை என்றால் அந்தப் பங்குகள் ஏலத்தில் விடப்படும். முதலீட்டாளர்கள் தங்களின் பாதுகாப்பை முன்னிட்டு இந்த விஷயங்களில் கவனமாக இருக்க வேண்டும்.

முதலீட்டாளர்கள் சில பொறுப்புகளையும் நிறைவேற்ற வேண்டி உள்ளது. எனவே, பங்குகளை வாங்கவோ, விற்கவோ செய்யும் போது,

1. புரோக்கரிடம் ஆர்டர் கொடுக்கும் போது பங்குகளை வாங்க வேண்டுமா அல்லது விற்க வேண்டுமா என்பதை தெளிவாகச் சொல்லி விட வேண்டும். எந்த நிறுவனப் பங்கை எந்த விலையில், எவ்வளவு வாங்க / விற்க விருப்பம் என்பதை தெளிவாகச் சொல்ல வேண்டும். சாதாரணப் பங்குகள், முன்னுரிமைப் பங்குகள், கடன் பத்திரங்கள் இவற்றில் எது உங்களுக்கு தேவை என்பதைத் தெளிவாக விளக்கிக் கூற வேண்டும்.
2. தேசிய பங்கு மார்க்கெட்டின் விதிமுறைகளை தெளிவாக படித்து தெரிந்து கொள்ள வேண்டும். அப்போது தான் விதிமுறைகளை கடைப்பிடிக்க எளிதாக இருக்கும்.

3. பங்குகளை விற்பனை செய்யும் போது பங்கு பத்திரங்களை நல்ல நிலையில் எந்தவித வில்லங்கமும் இல்லாமல் குறிப்பிட்ட காலக் கெடுவிற்குள் புரோக்கரிடம் அளித்து விட வேண்டும். அதேபோல் வாங்கிய பங்குகளுக்கு பணத்தை அளிப்பதையும் முன்னதாகவே செய்து விட வேண்டும்.

4. சில பங்குகளை வாங்குவதற்கு முன் புரோக்கர் பணம் கட்ட வேண்டி இருக்கும். அப்படி அவர் உங்களிடம் பணம் கேட்கும்போது உரிய நேரத்தில் பணத்தைக் கொடுத்து விட வேண்டும்.

5. கையெழுத்து மாறும் போதும், டிவிடெண்ட் வழங்க வேண்டிய நிலையிலும், அது பற்றி புரோக்கர் உங்களுக்குத் தெரியப்படுத்தும் போது அவருடன் ஒத்துழைக்க வேண்டும்.

சரியான முறையில் நடந்து கொள்ளாத புரோக்கர்களுக்கு அபராதம் உண்டு. எனவே,

1. புரோக்கர் உரிய நேரத்தில் பணத்தையோ, பங்கு பத்திரங்களையோ அளிக்க வேண்டும். முன் பணத்தை உரிய நேரத்தில் தர வேண்டும்.

2. பங்கு மாற்று ஒப்பந்தத்தில் உள்ள கையெழுத்து நிறுவனத்திடம் உள்ள ஆவணத்துடன் ஒத்துப் போகிறதா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

3. உங்களின் ஒத்துழைப்பு பங்கு வர்த்தகம் பிரச்சனையில்லாமல் நடக்க உதவி கரமாக இருக்கும்.

பாடம் - 9

புதிய பொருளாதாரக் கொள்கை
(NEW ECONOMIC POLICY)

முன்னுரை

நமது பொருளாதாரத்தின் குறிக்கோள்கள் என்ன என்பதில் பொருளாதார அறிஞர்கள், அரசியல் அறிஞர்கள் ஆகியோரிடையே ஒருமித்த கருத்து காணப்படவில்லை. எனவே, கடந்த கால அனுபவங்கள் பலவிதமான கோணங்களில் ஆராயப்படுகின்றன..

வளர்ச்சிப் பொருளாதாரத்தின் ஒரு அம்சம் அரசின் பங்கைப் பொறுத்துள்ளது. அரசும், தனியாரும் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதில் கருத்து வேற்றுமை காணப்படுகிறது. 1950லிருந்து 1970 வரை பொருளாதாரத்தில் அரசு ஒரு முக்கியமான பங்கை வகிக்க வேண்டும் மற்றும் சந்தை இழப்பீடுகளை அது நிவர்த்தி செய்ய வேண்டும் என்ற கருத்து நிலவியது. எனவேதான், அநேக வளரும் நாடுகள் திட்டமிடத் தொடங்கின. இருப்பினும் 50 ஆண்டு அனுபவத்தில் அரசு தோல்வியடையும் என்பது தெரிய வந்துள்ளது அரசு நடவடிக்கைகளினால் பொருளாதார இழப்பீடுகளும் தவறான முதலீடுகளும் நிகழ்ந்துள்ளன, தவறான முடிவுகளும் எடுக்கப்பட்டுள்ளன. கடந்த 50 ஆண்டு அனுபவத்திலிருந்து அரசும் தோல்வியடையலாம், சந்தையும் தோல்வியடையலாம் என்பதை நாம் அறிந்து கொண்டு உள்ளோம். எனவே அரசின் குறுக்கீடு பொருளாதார வளர்ச்சியில் தேவையா, இல்லையா என்பது பிரச்சனை அல்ல. அரசின் குறுக்கீட்டால் நமக்கு எந்த அளவு நன்மை கிடைக்கிறது என்பதைத் தான் நாம் கண்டு உணர வேண்டும். இந்த அனுபவத்தின் அடிப்படையில்தான் புதிய பொருளாதாரக் கொள்கை உருவாக்கப்பட்டுள்ளது.

தெரிநிலை திட்டமிடல்

ஜூலை 1991லிருந்து அறிமுகப்படுத்தப்பட்ட கொள்கை நடவடிக்கை-களும், மாற்றங்களுமே புதிய பொருளாதாரக் கொள்கையாகும். நல்ல நடவடிக்கைகளும் ஒன்றுக்கொன்று தொடர்புடையனவாகும்.

பொருளாதாரத்தின் மேம்பாடு என்பதுதான் அதனுடைய குறிக்கோளாகும். பலவிதமான அரசுக் கட்டுப்பாடுகள் தனியார் துறையிலும் போட்டியைக் குறைத்துள்ளது. போட்டிச் சூழலை உருவாக்கி பொருளாதாரத்தின் உற்பத்தித் திறன் மற்றும் திறமையை மேம்படுத்துவதே புதிய பொருளாதாரக் கொள்கையின் முக்கிய பணியாகும். தொழில் நிறுவனங்களின் நிறுவுதல் மற்றும் வளர்ச்சிக்கான தடைகளை அகற்றுவதன் மூலம்தான் இந்த நிறுவனங்கள் குறிக்கோளை அடைய விரும்புகின்றன. புதிய தொழிற் கொள்கை உள்நாட்டில் போட்டிச் சூழலை உருவாக்க முனைகிறது. அரசு புதிய தொழிற் கொள்கை உலகளாவிய போட்டியில் மேம்பாடு காண விளைகிறது. அரசுத் துறைக்கு ஒதுக்கப்பட்டிருந்த தொழில்களில் தனியாரையும் அனுமதிப்பதன் மூலம் தனியார் துறைக்கு அதிக பங்கு அளிக்கப்படுகிறது. இந்தத் துறைகளில் அரசின் கை மேலோங்கியிருப்பதாலும் கூட அரசுத்துறை, தனியார் துறையோடு போட்டியிட்டு வளர வேண்டியதாகின்றது. போட்டி மனப்பான்மையை உருவாக்கி அரசு மற்றும் தனியார் துறை நிறுவனங்களின் செயல்பாட்டில் மேம்பாடு அல்லது முன்னேற்றம் காண வேண்டும். புதிய பொருளாதாரக் கொள்கையில் அரசுத்துறையே இருக்காது. அரசுக்கு எந்தப் பங்கும் கிடையாது. பொருளாதாரத் துறையில் எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மொத்த முதலீட்டில் 452 சதவீதம் அரசுத்துறை முதலீடாகும். எரிசக்தி, போக்குவரத்து மற்றும் செய்தித் தொடர்பு போன்ற முக்கியமான அடிப்படை வசதித் துறைகளில் அரசுத் துறை முதலீடு அதிகமாகவே இருக்கும். இருப்பினும் அரசுத்துறை உண்மையிலேயே நல்ல முறையில் செயல்பட வேண்டுமானால், அதனுடைய உற்பத்தித் திறனை அதிகரித்து அதன் மூலம் இலாபம் சம்பாதிக்க வேண்டும். எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் அரசின் பங்கு மாற்றம் இடம் பெற்றிருக்கிறது. அது இந்தியாவில் தெரிநிலைத் திட்டமிடுதல் (Indicative Planning) முறை கையாளப்படும் என்று கூறுகிறது. உண்மையிலேயே இந்தியத் திட்டமிடுதல் தெரிநிலைத் திட்டமிடுதலாகவே இருந்திருக்கிறது. விவசாயத் துறைத் திட்டம் இதற்கு ஒரு எடுத்துக்காட்டாகும். விவசாயத்துறையில் உள்ள இலட்சக்கணக்கான உழவர்கள் தன்னிச்சையாக முடிவுகளை எடுக்கிறார்கள். இருப்பினும் உணவில் தன்னிறைவு என்ற குறிக்கோள் அறிவிக்கப்பட்டவுடன், உழவர்கள் அவர்களுக்குக் கேற்ற முடிவுகளை எடுத்து அதன் மூலம் குறியிலக்குகளை அடைவதற்குத்

தேவைப்படும் நிலையை உருவாக்க அரசு முயன்றது. இது அரசின் குறிக்கோளை அடைவதற்குத் தனியாருடைய நடவடிக்கையைத் தூண்டுவதற்கான வெற்றிக் கொள்கையாகும். இத்தகைய தெரிநிலைத் திட்டமிடுதல் எதிர் காலத்தில் மேலும் பரவலாக்கப்படும்.

அரசுத் துறை முதலீட்டுக் கொள்கை :

அரசுத் துறையின் மாறும் பங்கை உறுதிப்படுத்துவதற்காக, அரசுத் துறை முதலீட்டுக் கொள்கைகளை எட்டாவது திட்டம் கோடிட்டுக் காட்டுகிறது. அவையாவன :

1. குறித்த காலத்தில் தேவையான அளவு தனியார் முதலீடு கிடைக்காத முக்கியமான அடிப்படை கட்டமைப்பு துறைகளில் மட்டுமே அரசுத்துறை முதலீடு செய்ய வேண்டும்.
2. அரசுத்துறை செயல்படுகின்ற துறைகளில் பொது நலன் கிடைக்காத பட்சத்தில் அந்தத் துறைகளிலிருந்து அரசு விலகிட வேண்டும்.
3. உற்பத்தி செய்யப்பட்டு, விநியோகம் செய்யப்படுகின்ற பொருட்களும் சேவைகளும் சமுதாயத்தில் மிக ஏழ்மை நிலையில் உள்ளவர்களைச் சென்றடையவில்லை. அவர்களின் நலனைப் பாதுகாக்க வேண்டும் என்ற நிலையில் தான் அரசு நிறுவனங்கள் இயங்க வேண்டும் மற்ற இடங்களில் அரசு நிறுவனங்கள் சந்தைப் பொருளாதாரக் கொள்கையைக் கடைபிடிக்க வேண்டும்.

1991ம் ஆண்டின் இடையில் நாடும், பொருளாதாரமும் ஒரு பயங்கரமான சூழ்நிலையில் இருந்தது. அயல்நாட்டுச் செலுத்து நிலை மிக மோசமான நிலையில் இருந்தது. அந்நியச் செலாவணிக் கையிருப்பு மிகவும் குறைந்திருந்தது. எனவே நமது இறக்குமதிகளுக்கு அந்நியச் செலாவணி செலுத்த முடியாத நிலை உருவாகியிருந்ததும் மரபு நடவடிக்கைகளும் மரபு சாரா நடவடிக்கைகளும் உடனே எடுக்கப்பட வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது. உள்நாட்டு வளர்ச்சி 1985 முதல் 1990 வரை நன்றாகவே இருந்திருந்த போதிலும் நிதி நிலைமை மிகவும் மோசமாகியிருந்தது. வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையும் நிதிப் பற்றாக்குறையும் மிகவும் அதிகரித்துப் பண அளிப்பையும், வட்டிச் சுமையும் அதிகரித்திருந்தது. 1975க்கு மேற்பட்ட

காலத்தின் மொத்த உற்பத்தியில் 7.5 சதவீத அளவில் இருந்த நிதிப் பற்றாக்குறை 1991ல் 11 சதவீதத்திற்கு உயர்ந்திருந்தது. மைய அரசின் நிதிப்பற்றாக்குறை மட்டும் அதே காலத்தில் 6 சதவீதத்திலிருந்து 8.5 சதவீதத்திற்கு உயர்ந்திருந்தது. இதன் விளைவாக வட்டிக் கணக்கு மைய அரசின் வரவு செலவுத் திட்டத்தில் மொத்த உற்பத்தியில் 1980–81ம் ஆண்டில் 3 சதவீத அளவிலிருந்து 1990–91ல் 4 சதவீதத்திற்கு உயர்ந்து தனிப் பெரும் செலவினமாகக் காட்சியளித்தது. இவ்வாறாக நாடு 1990ம் ஆண்டுகளில் சமாளிக்க முடியாத அளவிலாக நிதிப்பற்றாக் குறையைச் சந்திக்க வேண்டியதாயிற்று.

அயல்நாட்டுச் செலுத்து நிலைச் சிக்கலைச் சமாளிப்பதற்காக மரபுக் கொள்கை நடவடிக்கைகளே மேற்கொள்ளப்பட்டன. அந்நியச் செலாவணி மாற்று விகிதம் சரி செய்யப்பட்டதைத் தவிர, பிற நடவடிக்கைகள் இறக்குமதிகளைக் குறைக்கும் நோக்கத்திலேயே எடுக்கப்பட்டன. இந்த நடவடிக்கைகள் எல்லாமே கடுமையான நடவடிக்கைகளே. பன்னாட்டு நிதி நிறுவனங்கள் தாராளமயான இறக்குமதிக் கொள்கைகளையே ஆதரிப்பன. ஆனால், நாம் எடுத்த நடவடிக்கைகள் அந்த நிறுவனங்களது கொள்கைக்கு எதிரிடையானதாக இருந்த போதிலும், அவை நமது நடவடிக்கைகளை ஆதரித்தன. நமது நடவடிக்கைகளின் விளைவாக 1991–92ல் நமது அயல்நாட்டு வர்த்தகப் பற்றாக்குறை பத்தாண்டு காலத்தில் இருந்ததை விடக் குறைவாகவே இருந்தது. 1991–92ல் மொத்த உற்பத்தியில் நிதிப் பற்றாக்குறையை 6.5 சதவீதத்திற்கும் அடுத்த மூன்றாண்டுகளில் அதை 3 முதல் 4 சதவீதத்திற்கும் குறைப்பதென்று நிர்ணயிக்கப்பட்டு அதற்கு நடவடிக்கைகளும் 1991ம் ஆண்டு பிப்ரவரியிலேயே மேற்கொள்ளப்பட்டன.

நடைமுறைக் கொள்கை :

1991ம் ஆண்டு ஜூலை மாதம் முதல் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டுள்ள கொள்கைகளை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். முதல் வகை நடவடிக்கைகள் நிலைக்கச் செய்யும் கொள்கை (Stabilisation Policy)யின் கீழ் அடங்கும். இரண்டாவது வகை நடவடிக்கைகள் மறு சீரமைப்புக் கொள்கை (Reform Policy)யின் கீழ் அடங்கும். நிலைக்கச் செய்யும் கொள்கைகள் தவறுகளைத் திருத்தி பொருளாதாரத்தை குறுகிய காலத்தில்

முறைப்படுத்துவதற்கானவையாகும். நடுத்தர காலத்தில் பொருளாதார வளர்ச்சியை துரிதப்படுத்துவதற்கான கொள்கைகளே மறுசீரமைப்புக் கொள்கைகளாகும். ஓரளவிற்காவது பொருளாதாரத்தை நிலைக்கச் செய்யாவிட்டால் மறு சீரமைப்புக் கொள்கைகள் வெற்றி பெற முடியாது. அதே போன்று மறுசீரமைப்பிற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். நிலைக்கச் செய்யும் நடவடிக்கைகளின் மூலம் மட்டுமே எதையும் சாதித்துவிட முடியாது தொழில் உரிமம் (Industrial Licensing) மற்றும் கட்டுப்பாடு (Regulation) அயல்நாட்டு வர்த்தகம் மற்றும் முதலீடு, நிதித்துறை போன்ற துறைகளில் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. தொழில் நிறுவனங்களில் தொடக்கம் மற்றும் விரிவாக்கத்திற்கான தடைகளை அகற்ற வேண்டும் என்பதைப் பொருளாதார அறிஞர்கள் பொதுவாக ஒப்புக் கொள்கிறார்கள். கடந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட தொழில் உரிமக் கொள்கைமதிப்பிழந்து விட்டது. மேலும் அந்தக் கொள்கையில் ஊழல், கால தாமதம், திறனமைக் குறைவு ஆகியவை பெருகியதோடு மட்டுமல்லாமல் குறிக்கோள்களை அடைவதற்கும் அவை பயன்படவில்லை.

தாராள இறக்குமதிக் கொள்கையை நடைமுறைப்படுத்தி ஏற்றுமதி ஊக்குவிப்பின் மூலம் ஏற்றுமதி இறக்குமதிகளுக்கிடையே சமன்பாட்டைக் கொண்டு வருவதுதான் அயல்நாட்டு வர்த்தகக் கொள்கையின் நோக்கமாகும். ஏற்றுமதி இறக்குமதி வரிகளைக் குறைப்பது மற்றொரு குறிக்கோளாகும். தாராளமயமாக்கப்பட்ட அயல் நாட்டு வர்த்தகம் மறுபடியும் 1990–91ல் ஏற்பட்ட நிலைக்கு கொண்டு போகாதா என்ற வினா எழுப்பப்படுகிறது. மூலதனப் பொருட்களின் தாராள இறக்குமதிதான் 1986ம் ஆண்டுகளின் கடைசிக் கட்டத்தில் எற்பட்ட வர்த்தகப் பற்றாக்குறைக்குக் காரணம் என்று கூறி விட முடியாது அவற்றோடு பெட்ரோலியப் பொருட்கள் மற்றும் பாதுகாப்பு சம்பந்தமான பொருட்களின் இறக்குமதியை இணைக்கும் நோக்கத்தில் தான் ஓரளவு ரூபாய் மாற்றுக் (Partial Convertibility of the Rupee) கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்டது வளரும் நாடுகளிலேயே அதிகமான இறக்குமதி வரிகள் உள்ள இந்தியாவில் அந்த வரிகளைப் படிப்படியாகக் குறைப்பதே நமது புதிய கொள்கையாகும். அயல்நாட்டு முதலீட்டுக் கொள்கையில், பெரும் மாறுதல்கள் நிகழவிருக்கின்றன. மூலதனம் பல நாடுகளிடையே பரவலாகச் செல்வது போல முதலீட்டின் மூலம் தொழில் நுணுக்கமும் பல

நாடுகளிக்கிடையே ஊடுறுவும் இந்தக் காலத்தில் நமது நாட்டிற்க்கு அந்நிய முதலீடு வரும் வழிகளை நாம் அடைத்து விடக்கூடாது. அந்நிய முதலீட்டுக்கு நாம் வழங்கியுள்ள சலுகைகள் பிற வளரும் நாடுகள் வழங்கியுள்ளதை விடக் குறைவானதே. அந்நிய முதலீடு தாராளமாக வரவேற்கப்பட்டால் அது நமது பொருளாதாரத்தைச் சீர்குலைத்து விடும் என்று அஞ்சப்படுகிறது. அப்படி ஒரு நிலை ஏற்படவிருக்கிறது என்று தெரிந்தால் நாம் அதற்குத் தகுந்த நடவடிக்கைகளை எடுத்தாக வேண்டும். கடைசியாக நிதித்துறையைப் பொறுத்த வரையில், கடந்த 15 ஆண்டுகளில் அதில் செயலாற்றல் குறைந்து உள்ளது. நிர்ணயிக்கப்பட்ட வட்டி வீத அமைப்பு (Administered Interest Rate Structure) வளைந்து கொடுக்காத தன்மையுடையதாகியுள்ளது. கடன் வட்டி வீதங்களில் ஊக்க உதவிகள் (Subsidies) வங்கிகளின் இலாபத்தைப் பாதித்துள்ளன. எனவே, வங்கிகள் நஷ்டங்களை ஈடு செய்ய முடியாத நிலையில் உள்ளன. இந்திய வங்கிகளின் மூலதனமும் பற்றாக்குறை நிலையிலேயே இருந்து வருகின்றது. ஆகவே வட்டி வீதத்தை அமைத்தல் மற்றும் நிர்வாகம் ஆகியவற்றில் வங்கிகளுக்கு சுயாட்சி வழங்குவதற்காக நிதித்துறைத் சீரமைப்பு தேவைப்படுகிறது.

ஏழ்மை ஒழிப்புத் திட்டம்

1991ம் ஆண்டு ஜூலை மாதத்திலிருந்து அறிமுகப்படுத்தப்பட்ட நடவடிக்கைகள் புதிய பொருளாதாரக் கொள்கை என்றழைக்கப்படுகிறது. ஆனால் அவை அரசின் மொத்தப் பொருளாதாரக் கொள்கை அல்ல. முழுப் பொருளாதாரக் கொள்கையில் இவை தவிர, வேறு பல கொள்கைகளும் உள்ளன. அவற்றில் ஏழ்மை ஒழிப்புத் திட்டங்கள் அடங்கும். மொத்தப் பொருளாதாரக் கொள்கையில் நான்கு திட்டங்கள் ஏழ்மை ஒழிப்புத் திட்டங்களாகும்.

1. விவசாயம் மக்களின் முக்கியத் தொழிலாக இருப்பதாலும் அதில் செய்யப்பட்டுள்ள முதலீடுகளும் விவசாய வளர்ச்சியும் ஏழ்மையை ஒழிக்க உதவும். விவசாயத் துறைகளும் வேகமாக வளர்ந்துள்ள மாநிலங்களில் ஏழ்மை குறைந்துள்ளது. எனவே விவசாயத்திற்கு ஒதுக்கப்படும் வள ஆதாரங்கள் ஒரு முக்கியமான அளவாகும்.

2. பொது விநியோகத்துறை, பற்றாக்குறை நிலைமைகளைச் சமாளிக்கவும் குறைந்த அளவு உணவளிக்கவும், மக்களின் குறைந்த அளவு தேவைகளைப் பூர்த்தி செய்யவும் பயன்பட்டிருக்கிறது.

3. கூடுதல் வேலைவாய்ப்புத் திட்டங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

4. ஏழ்மையைக் குறைப்பதில் கல்வி மற்றும் மருத்துவச் செலவுக்கு ஒரு முக்கியமான பங்கு உள்ளது.

எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் விவசாயத்துறை முதலீடு அதிகமாக உள்ளது. மைய அரசுத் திட்டத்தில், வரவு செலவுத் திட்டத்தின் மூலம் விவசாயத்திற்கு ஏழாவது திட்டத்திற்கான 8.3 சதவீத உதவியை விட அதிகமாக 10.5 சதவீத உதவி அளிக்கப்பட்டிருக்கிறது. பொது விநியோக முறை நன்கு செயல்படும் வண்ணம் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. அதற்காக பல ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன. ஏழைகளுக்கு மட்டுமே அத்தியாவசிய பொருட்களை விநியோகம் செய்யலாம் என்றும், ஏழைகளுக்குக் குறைந்த விலையிலும் மற்றவர்களுக்கு அதிக விலையிலும் பொருட்களை வழங்கலாம் என்றும், வருமானம் அதிகமாக உள்ளவர்களை பொது விநியோக முறைக்கு உட்படுத்தாமல் விட்டுவிடலாமென்றும் பல ஆலோசனைகள் கூறப்பட்டுள்ளன. எப்படியிருப்பினும் ஏழைகளுக்காக பொது விநியோக முறை நடைமுறையில் இருக்க வேண்டும் என்பது தான் நமது பொருளாதாரக் கொள்கையின் நோக்கமாகும். எட்டாவது ஐந்தாண்டுத் திட்டம் வேலை வாய்ப்புத் திட்டங்களுக்கும் ஏழ்மை ஒழிப்பு திட்டங்களுக்கும் அதிக வள ஆதாரங்களை ஒதுக்கியுள்ளது. கிராமப்புற வளர்ச்சிக்கான செலவு ஏழாவது திட்ட மொத்தச் செலவில் 5.01 சதவீதமாக இருந்தது. ஆனால் அது எட்டாவது திட்டத்தில் 7.93 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது. வள ஆதாரங்களை மட்டும் ஒதுக்கினால் போதாது. இந்தத் திட்டங்கள் எல்லாம் அவற்றின் குறிக்கோள்களை அடைவதற்கு பல அமைப்பு முறை மேம்பாடுகளைச் செய்ய வேண்டியுள்ளது. தவிர எட்டாவது திட்டத்தில் சமுதாய சேவைகளுக்கு மிக முக்கியமான இடமளிக்கப்பட்டுள்ளது. அதற்காக ஏழாவது திட்டத்தில் ஒதுக்கப்பட்ட 16.31 சதவீத வள ஆதாரங்கள் இத்திட்டத்தில் 18.20 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது. சமுதாய அடிப்படை வசதிகளை நாம் அதிகரிக்க வேண்டுமானால் அரசுத்துறை முதலீடு பிற துறைகளில் குறைக்கப்பட்டு இத்துறைக்கு மாற்றப்பட வேண்டும். எனவே ஏழைகளுக்குப் பயன் தரக்கூடிய

திட்டங்கள் குறைக்கப்படவில்லை. மாறாக, அத்திட்டங்களுக்கான ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

ஏழைகளுக்கு பாதிக்கக் கூடியவை ஏதேனும் புதிய பொருளாதார கொள்கையில் இருக்கின்றதா? வளர்ச்சி குறையும் போதும் விலைகள் ஏறும் போதும் ஏழைகள் பாதிப்பிற்குள்ளாகிறார்கள். 1991–92ன் குறைந்த வளாச்சி வீதமும், விலையேற்றமும் புதிய பொருளாதாரக் கொள்கையை நடைமுறைப்படுத்தியதால் ஏற்பட்ட விளைவுகள் என்று சொல்லப்படுகிறது. இது சரியான மதிப்பீடு அல்ல. 1991–92ல் விவசாய உற்பத்தி குறைந்தது. ஆனாலும் விவசாய உற்பத்தி அவ்வப்போது மழையின்மையால் பாதிக்கப்படுகிறது என்பது யாவரும் அறிந்ததே. அதே போன்று அந்த ஆண்டு தொழில் உற்பத்தியும் குறைந்தது. அதற்குக் காரணம் இறக்குமதிக் குறைப்பை, புதிய பொருளாதாரக் கொள்கை நடைமுறைப்படுத்தாதிருந்தாலும் இறக்குமதி குறைக்கப்பட்டிருக்கும்.

நிதிப் பற்றாக்குறையைச் சமாளிப்பதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் ஏழைகளைப் பாதித்ததா? ஓரளவு உர மான்யம், நிதிப் பற்றாக்குறையைச் சமாளிப்பதற்காகக் குறைக்கப்பட்டாலும் உணவு மான்யம் குறைக்கப்படவில்லை. பொது விநியோக முறையில் மாற்றம் செய்யப்பட்டு விலைகளை ஏற்றாமல் அல்லது குறைத்து, ஏழைகளுக்குப் பயன் கூடினால்தான் ஒழிப்பு அல்லது குறைப்பு நிகழ முடியும்.

தேசிய புதுப்பிக்கும் நிதி

இலாபம் இல்லாமல் நஷ்டத்தில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற அரசு நிறுவனங்களை நன்கு செயல்பட வைக்க வேண்டுமானால் ஆட்குறைப்பு செய்ய வேண்டியதாகலாம். ஆனால் அரசு இந்த நடவடிக்கையிலும் மெதுவாகத்தான் செயல்படுகிறது. எனவே தான் தேசிய புதுப்பிக்கும் நிதி (National Renewal Fund) என்ற அமைப்பைத் தொடங்கி வேலையிலிருந்து நீக்கப்பட்டவர்களுக்கு உதவித் தொகை தரலாமா அல்லது சரியாக நடைபெறாத தொழில் நிறுவனங்களை தொழிலாளர்களுக்கே விற்று விடலாமா என்று அரசு சிந்தித்துக் கொண்டிருக்கிறது. தொழில்கள் நவீன மயமாக்கப்படும் பொழுதும் தொழில் நுணுக்க அடிப்படையில் மேம்படுத்தப்படும் போதும் சில நிறுவனங்கள் மூடப்பட வேண்டிய நிலை ஏற்படலாம். ஜவுளித் தொழில் நகரங்களான அஹமதாபாத், கான்பூர் போன்ற இடங்களில் இத்தகைய நிலை

மிகப்பெரிய அளவில் உருவாகியுள்ளது. மேற்கூறப்பட்ட மாற்றங்கள் நிகழும் போது வேலையில் உள்ள தொழிலாளர்கள் பலர் வெளியேற்றப்பட்டதும் நவீன முறைப் பயிற்சி பெற்ற தொழிலாளர்களும், தொழில் நுணுக்கத்தில் தேர்ந்தவர்களும் சேர்த்துக் கொள்ளப்படுவது இயற்கை. ஆனாலும் வேலையிழந்தவர்களை அப்படியே விட்டுவிட முடியாது. அவர்களுக்கு உரிய இழப்பீட்டுத் தொகையை வழங்க வேண்டும் அல்லது பயிற்சியளித்து மறுபடியும் வேலையிலமர்த்த வேண்டும். இத்தகைய இழப்பீடு வழங்குதலுக்கும் மறுபடியும் வேலையிலமர்த்துவதற்கும் புதிய பொருளாதாரக் கொள்கையில் வழி வகை செய்யப்பட்டுள்ளது.

முடிவுரை

மறுசீரமைக்கப்பட்ட வளர்ச்சி 1990ம் ஆண்டுகளில் மூலதனச் செறிவு குறைவானதாகவும் வேலை வாய்ப்பை அதிகரிக்கக் கூடியதாகவும் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஏற்றுமதியை அதிகரித்து, உற்பத்தித் தொழில்களைப் பெருக்கியுள்ள அதிக அளவு தொழிலாளர்களைக் கொண்ட வளரும் நாடுகளின் அனுபவத்தின் அடிப்படையில் பார்க்கும்போது, நமது புதிய பொருளாதாரக் கொள்கையின் மூலம் அதிகமான அளவில் தொழிலாளர்க்கு உற்பத்தி நடவடிக்கைகளில் வேலை வாய்ப்பைப் பெருக்க முடியும் என்று நம்பலாம். மேலும் கட்டுப்பாடுகள் தளர்த்தப்படுவதினாலும், தாராளமயமாக்கும் கொள்கையினாலும் சிறு தொழில் வளர்ச்சி அதிகமாகும். எனவே வேலை வாய்ப்பும் அதிகமாகும். மறுசீரமைக்கப்பட்ட பொருளாதாரத்தில் கிராமப்புற விவசாயம் அல்லாத பிற துறைகள் விவசாயப் பொருட்களை பதப்படுத்தும் துறை, நகர்புற சிறு தொழில் துறை மற்றும் சேவைத் துறை போன்றவை வேலை வாய்ப்புகளை உருவாக்கக் கூடியவை. இந்த எல்லாத் துறைகளுமே வேகமாக வளர உள்ளன. தவிர புதிய பொருளாதாரக் கொள்கை உற்பத்தித் திறனையும் திறமையையும் உயர்த்துவதையே குறிக்கோளாக கொண்டு உள்ளது. சந்தைப் பொருளாதாரத்தில் அரசு மற்றும் தனியார் துறைகள் உற்பத்தி திறனை அதிகரிதித்து உற்பத்தியையும் அதிகரிக்கும். இருப்பினும் தாங்கும் சக்தி இல்லாதவர்கள் பாதிப்புக்குள்ளாகக் கூடாது. எனவே தான் ஏழ்மைக் குறைப்புத் திட்டங்கள் கைவிடப்படாமல் நல்ல முறையில் செயலாற்ற வகை செய்யப்பட்டுள்ளது. நிலை நிறுத்தும் கொள்கைகளும் மறு சீரமைப்புக் கொள்கைகளுடன் கடைசியில் துரிதவளர்ச்சியில் முடிய வேண்டும். அப்போதுதான் ஏழ்மையை ஒழிக்க முடியும்.

பாடம் - 10

புதிய தொழில் உரிமக் கொள்கை
NEW LICENSING POLICY - 1970

முன்னுரை

1970ம் ஆண்டு பிப்ரவரி மாதம் இந்திய அரசு தனது புதிய தொழில் உரிமைக் கொள்கையை அறிவித்தது. பொருளாதாரத்தில் முக்கியமான தொழில்கள் பட்டியல் ஒன்று இருத்தல் அவசியம் என்ற சுபிபர் தத் குழுவின் பரிந்துரையை அரசு ஏற்றது. 1956ம் ஆண்டு தொழிற் கொள்கையில் கூறப்பட்டுள்ள, 'ஏ' பிரிவின் தொழில்கள் போன்ற தொழில்களை அரசுத்துறைக்கென ஒதுக்கப்பட்டன.

1973ம் ஆண்டின் தொழிற் கொள்கை, தொழில் உரிமம் மற்றும் செயல்முறைகளில் மாற்றம் செய்தது. 1984ம் ஆண்டு பெரிய தொழிற்சாலைகளை முற்றுரிமைச் சட்டத்தின் பிடியிலிருந்து நீக்கும் நோக்கத்தோடு உரிமக் கொள்கையில் அதிரடி மாற்றங்கள் செய்யப்பட்டன. 1986ம் ஆண்டு ஜனவரி 30ந் தேதியன்று, மத்திய அரசால் நிர்ணயிக்கப்பட்ட பின் தங்கிய பகுதிகளில் செயல்பட்டுக் கொண்டிருக்கும் 23 பெரிய தொழில்களுக்கு உரிமம் வாங்கத் தேவையில்லை என்ற அரசு முடிவு செய்தது. 1988ம் ஆண்டு ஜுன் மாதம் 3ந் தேதி தொழில் உரிமக் கொள்கையை அரசு மேலும் தளர்த்தியது. ரூபாய் 50 கோடி வரை முதலீடு உள்ள தொழில்கள் மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட பின் தங்கிய பகுதிகளில் செயல்பட்டுக் கொண்டிருந்தால் உரிமம் பெறத் தேவையில்லை. கட்டாயமாக உரிமம் பெற வேண்டும் என்று அறிவிக்கப்பட்ட தொழில்களின் எண்ணிக்கை 56லிருந்து 26ஆக குறைக்கப்பட்டது. உரிமமற்ற தொழில் துறையில் 15 சதவீதத்திற்குப் பதிலாக 30 சதவீதம் வரை உள்ளீடுகளை (inputs) இறக்குமதி செய்யும் நிறுவனங்களும் சேர்க்கப்பட்டன.

தொழில் வளர்ச்சி

இந்திய அரசு 1950ம் ஆண்டிலிருந்து பொருளாதார வளர்ச்சிக்கான தொழில் மயமாக்கும் பணியைத் தொடர்ந்து செய்து வருகிறது. முதலாவது

ஐந்தாண்டுத் திட்டத்தில் தொழில் மயமாக்குவதற்காகப் பெரிய முயற்சி எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. மாறாக தொழில் மயமாதலை விரைவு படுத்துவதற்குத் தேவையான எரி சக்தி, பாசன வசதி போன்றவற்றை அதிகரிப்பதில் அக்கறை காட்டியது. இரண்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் தொழில் மயமாக்கும் கொள்கையை 1956ம் ஆண்டின் தொழிற் கொள்கையின் அடிப்படையில் அரசுத் துறையை விஸ்தரிப்பதன் மூலம் செயல்படுத்தப்பட்டது. ரூர்கேலா எஃகுத் தொழிற்சாலையை ஒரிஸ்ஸாவிலும், துர்காபூர் எஃகுத் தொழிற்சாலையை ேற்கு வங்காளத்திலும், பிலாய் எஃகுத் தொழிற்சாலையை துர்காபூரிலும் நிறுவுவதையே பெரிய பணியாக அமைந்தது. இரண்டாவது திட்ட காலத்தில் கனரக மற்றும் அடிப்படைத் தொழில்களில் மிக அதிகமாக முதலீடு செய்யப்பட்டது. விவசாயம், போக்குவரத்து, பேப்பர், சுரங்கம், ஜவுளி, சணல் சிமெண்ட், தேயிலை, சர்க்கரை, மாவு மற்றும் எண்ணெய் ஆலைகள் போன்றவற்றிற்குத் தேவையான இயந்திரங்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் வேகமாக வளர்ந்தன. கிராம மற்றும் சிறு தொழில்களிலும் கணிசமான முன்னேற்றம் காணப்பட்டது.

தொலைநோக்குத் திட்டத்தின் அடிப்படையில் விவசாயத்தோடு இணைந்த தொழில் வளர்ச்சி மூன்றாவது திட்ட காலத்தில் துவங்கியது. முதல் இரண்டு ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ஏற்படுத்தப்பட்ட வசதிகளின் அடிப்படையில் தொழில் துறை, எரி சக்தித்துறை மற்றும் போக்குவரத்துத் துறையின் வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதற்காகவும் வலுவுள்ளதாக ஆக்கவும் மூன்றாவது திட்ட காலத்தில் அதிகமாக முதலீடு செய்யப்பட்டது. மேலும் தொழில் மற்றும் நுணுக்க வளர்ச்சியைத் துரிதப்படுத்தவும் வழி வகை செய்யப்பட்டுள்ளது. தொழில் வளர்ச்சியில் அரசுத்துறைக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. நுகர் பொருட்களின் உற்பத்தியை கணிசமான அளவில் உயர்த்துவதற்கான பொறுப்பு தனியார் துறையிடம் ஒப்படைக்கப்பட்டது.

நான்காவது திட்ட காலத்தில், மூன்றாவது திட்ட காலத்தில் துவங்கப்பட்ட தொழில்களின் வளர்ச்சியைத் தொடரும் பொருட்டு முதலீடு செய்து முடிக்கப்பட்டது. ஐந்தாவது திட்ட காலத்தில் தற்சார்புடனும் சமூக நீதியை அனுசரித்தும் தொழில் வளர்ச்சி நடைபெறும் நோக்கத்தோடு திட்டங்கள் உருவாக்கப்பட்டன. ஆறாவது திட்ட காலத்தில் தற்சார்பு

நவீனமயமாக்கல் போன்ற குறிக்கோள்களுக்கேற்ப தொழில் வளர்ச்சி நடைபெற்றது. ஆறாவது திட்ட தொழில் வளர்ச்சி நடைமுறைத் திட்டத்தின் முக்கிய அம்சங்களாயின.

1. அதிகமான எரிசக்தியை உற்பத்தி செய்வதன் மூலம் அடிப்படை வசதிப் பற்றாக்குறையை நீக்குதல்.
2. ஜவுளி மற்றும் சர்க்கரை போன்ற துறைகளில் தொழில் நுணுக்கத்தை மேம்படுத்துவதையும் நவீனமயமாக்குவதையும் ஊக்குவித்தல்.
3. உள்நாட்டு உற்பத்தியில் ஏற்றுமதியை ஒரு இணைந்த பகுதியாக்குதல்.

ஏழாவது திட்ட காலத்தில் வளர்ச்சிக்கான அடிப்படை வசதிகளின் பற்றாக்குறையை நீக்குதல், தொழிற்கொள்கை தாராளமயமாக்கப்படுதல், முக்கியமான துறையின் துரித வளர்ச்சிக்கு ஊக்கமளித்தல் ஆகியவை வற்புறுத்தப்பட்டன.

தொழிற் துறை, நிதித்துறை, வணிகம், அயல் நாட்டு மூலதனம் ஆகிய துறைகளின் பல சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டதொரு புதிய சூழ்நிலையில் எட்டாவது ஐந்தாண்டுத் திட்டம் (1992–97) தொடங்கப்பட்டுள்ளது. இதன் பின்னணியில் குறியிலக்குகளை அடைவதில் அழுத்தம் இருப்பதாகத் தெரிகிறது. 1991ம் ஆண்டின் புதிய தொழிற் கொள்கையின் அடிப்படையில் அரசுத்துறை மற்றும் தனியார் துறையின் பங்கு பற்றிய ஆய்வு நடைபெற்று வருகிறது. திட்டமிடுதலின் தொடக்க காலத்தின் வளர்ச்சியில் அரசுத்துறைக்கு முதலிடமும் முக்கியமான பங்கும் தரப்பட்டது. எனவே இப்பொழுது தனியார் துறைக்கு அதிகமான இடம் ஒதுக்கப்பட வேண்டும். தொழில் வளர்ச்சியில் திறமை மற்றும் சந்தைப் போட்டி ஆகியவற்றின் அடிப்படையில் நோக்கும் பொழுது தனியார் துறைக்கு முக்கியத்துவம் தரப்பட வேண்டும் என்ற வாதம் சரியானதே. எனவே ஒப்பீட்டு நலன் (comparative advantage) எதில் அதிகமாக உள்ளதோ அந்தத் துறைகளில் எதிர்கால வளர்ச்சி அதிகமாக இருக்கும்.

தொழில் துறையில் பாதிப்பு (Industrial Sickness)

தொழில் வளர்ச்சியின் எதிர்மறையான வளர்ச்சியே தனியார் துறையிலும், பொதுத் துறையிலும் தோன்றுகின்ற நலிவடைந்துள்ள

தொழிற்சாலை என்பது ஒரு நிதி ஆண்டின் இறுதியில் அதனுடைய மொத்த மதிப்பிற்குச் சமமாகவோ அதற்கும் அதிகமாகவோ நஷ்டம் அடைந்திருக்கும் தொழிற்சாலையாகும். மேலும், அது நடப்பு ஆண்டிலும் கடந்த ஆண்டிலும் பண நஷ்டங்களை அடைந்திருக்கும்.

நலிவின் அளவு பரவலாகவும், அதிகமாகவும் இருக்கிறது. நலிவுற்ற தொழிற்சாலைகளுக்கு நிதி உதவி அளித்து வரும் வங்கிகளின் புள்ளி விவரத்தின்படி 1992ன் ஆண்டு மார்ச் மாதத்தில் 2.48 லட்சம் தொழிற்சாலைகள் நலிவுற்றிருந்தன. இவற்றில் ஏறத்தாழ 2.46 லட்சம் தொழிற்சாலைகள் சிறுதொழில் துறையைச் சார்ந்தவை. இந்தத் தொழிற் சாலைகளில் முடங்கிக் கிடக்கும் வங்கிக் கடன் ரூபாய் 11,530 கோடி. இது மொத்த தொழிற் கடனில் 17 சதவீதம் ஆகும். இந்தியப் பொருளாதாரத்தில் இந்த அளவிற்கு அதிகமான தொழிற்சாலைகள் நலிவுற்றிருப்பது என்பது மிகவும் வேதனைக்குரிய விஷயமாகும். மேலும் நிதிப்பற்றாக்குறை உள்ள நமது பொருளாதாரத்தில் இந்த அளவு நிதி முடங்கிக்கிடப்பதும் ஒரு பெரிய பிரச்சினையாகும்.

பரவலான, கடுமையான தொழில் நலிவிற்குப் பல காரணங்கள் உள்ளன. அவற்றில் சில, மிகவும் அதிகமான பாதுகாப்பு, சுலபமாகக் கிடைக்கும் நிதி உதவி, வலுவற்ற திறமையற்ற மேலாண்மை, மோசமான திட்டமிடுதல் ஆகும். இத்தகைய மோசமான நிலைமையைச் சமாளிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும்.

சிறு மற்றும் குடிசைத் தொழில்கள்

இத்தொழில்கள் பல முயற்சிகளில் ஈடுபட்டுள்ளன. இத்தொழிற் துறை எட்டு துறைகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அவை கதர், கிராமத் தொழில்கள், கைத்தறி, பட்டுத் தொழில், கயிறு கைவினைத் தொழில்கள், சிறு தொழில்கள் மற்றும் விசைத் தறியாகும். சிறுதொழில் என்பது அதன் முதலீட்டை வைத்து மதிப்பிடப்படுகிறது. ரூபாய் 60 லட்சத்திற்குக் குறைவாக முதலீடு உள்ள தொழிற் சாலைகள் எல்லாம் சிற தொழிற்சாலைகளின் முதலீடு ரூபாய் 5 லட்சத்திற்குக் குறைவாக இருக்கும்.

இந்தத் தொழில்கள் பொருளாதாரத்தில் முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளன. அதிக வேலை வாய்ப்புக்களை உருவாக்குவதில் இந்தத் துறை மிகப் பயனுடையது என்று கருதப்படுகிறது. அதே போன்று, அவற்றை

நிறுவுவதற்கும் நடத்திச் செல்வதற்கும் அதிக மூலதனம் தேவையில்லை. எனவே மூலதனம் குறைவாக உள்ள நாடுகளுக்கும் இந்தத் தொழில்கள் பொருத்தமானவையே, தவிர சமூக நீதியின் அடிப்படையில் பார்க்கும்போது எல்லோரும் சமமான வருமான பகிர்வு அளிக்கக் கூடியவையாகவும் அவை இருக்கின்றன. தவிர, பொருளாதார நடவடிக்கைகளைப் பன்முகப்படுத்த இந்த தொழில்கள் பயன்படுவதால் இவை முக்கியம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக நுகர் பொருள்களை உற்பத்தி செய்கின்ற துறை என்பதால் இந்தத் துறை வளர்ச்சியில் மிகவும் முக்கியமானதொரு பங்கு வகிக்கின்றது.

பொது மற்றும் தனியார் துறைகள்

உடைமை மற்றும் நடவடிக்கைகளின் அடிப்படையில் தொழிற்துறைகள் தனியார் மற்றும் பொதுத்துறை என்ற அடையாளம் காணப்படுகிறது.

பொதுத் துறையில் அடிப்படையிலான உடைமை என்பது தன் கட்டுப்பாட்டிற்குள் வரும் தொழில்களை முழுமையான அரசு தன் உடைமை ஆக்கிக் கொள்வதாகும். மாறாக, தனியார் துறையில் தொழில் நிறுவனங்கள் தனிமனிதர்களின் உடைமையாக இருக்கிறது. இந்த இரு வகை தொழில்கள் பெரும்பான்மையிலே இருந்தாலும், சில தொழில்களில் அரசின் உடைமை முழுமையாக இல்லாமலும், தனியார் உடைமையும் முழுமையாக இல்லாமலும் இருக்கின்றன. இத்தகைய தொழில்கள் கூட்டுத் துறைத் தொழில்களாகும். இவற்றில் தனியாரும் அரசும் உடைமையைப் பகிர்ந்து கொள்கின்றன. இருப்பினும் அரசின் உடைமை இவற்றில் சற்று அதிகமாக இருப்பதால் அவை பொது (Public) நிறுவனங்கள் என்றே அழைக்கப்படுகின்றன. இவை தவிர, பலவகையான பிற நிறுவனங்களும் பற்பல உடைமைகளின் அடிப்படையில் இயங்குகின்றன. எடுத்துக்காட்டாக, பல அமைச்சகங்களின் கட்டுப்பாட்டில் இரயில்வே போன்ற துறை சார்ந்த நிறுவனங்கள் (Departmental Enterprises) இயங்கி வருகின்றன. அதே போன்று பொதுக் கூட்டவைகள் (Public Corporations) துறை சாரா நிறுவனங்களாக இயங்கி வருகின்றன. அவை நாடாளுமன்றச் சட்டங்களின் மூலமாக நிறுவனங்கள் எனப்படுகின்றன. தனியார் துறையில் பொது வரம்புக்குட்பட்ட நிறுவனங்களும், தனியார் வரம்புக்குட்பட்ட நிறுவனங்களும் (Private Limited Companies) இயங்கி

வருகின்றன. இவை தவிர தொழில்கள் தனி நபர் தொழில்களாகவும் பங்குதாரர்களின் தொழில்களாகவும், கூட்டுறவு நிறுவனங்களாகவும் இயங்கி வருகின்றன.

நடவடிக்கைகளைக் பொறுத்த வரையில் ஒரு துறைக்கும் மற்றொரு துறைக்குமிடையே ஒற்றுமையே இல்லை என்று சொல்லி விட முடியாது. அதாவது ஒரு துறை பிறிதொரு துறையிலிருந்து முற்றிலும் மாறுபட்டதல்ல, இருந்த போதிலும் சுரங்கம், உற்பத்தித் தொழில், மின்சாரம், வங்கி போன்றவை பொதுத்துறையிலேயே மேலோங்கி நிற்கிறது. விவசாயம், உற்பத்தித் தொழில், கட்டுமானம், வர்த்தகம், உணவகங்கள், விடுதிகள் போன்றவற்றில் தனியார் துறையின் கை மேலோங்கியிருக்கிறது.

பொதுத்துறை நிறுவனங்கள் மிக அதிகமான மூலதனத்துடன் பல நடவடிக்கைகளில் வேகமாக வளர்ந்திருக்கின்றன. அவை இந்தியப் பொருளாதார வளர்ச்சிக்கு மிகவும் உதவியுள்ளன. ஆனாலும், தனியார் துறை ஒரு முக்கியமான துறை அல்ல என்று சொல்ல முடியாது. முக்கியமாக தொழில்கள் பொதுத்துறையில் இருந்த போதிலும் பிற துறைகளில் தனியார் துறையின் வளர்ச்சி அதிகமாகவே உள்ளது. புதிய தொழிற் கொள்கையின் மூலம் தனியார் துறை பொதுத் துறையை விட முக்கியமான துறையாக வளரவிருக்கிறது.

கூட்டுத்துறை

தத் குழு (Dutt Committee) (1969) என்று சொல்லபடுகின்ற தொழில் உரிமக் கொள்கை ஆய்வுக் குழுவானது, 1956ம் ஆண்டின் தொழிற் கொள்கையின்படி கூட்டுத்துறை என்பது பொதுத்துறை மற்றும் தனியார் துறை ஆகியவற்றின் கூட்டே ஆகும். பொது நிதி நிறுவனங்களின் கடன்களை பங்குகளை மாற்றுவதன் மூலம் பெரிய தனியார் நிறுவனங்களை கூட்டுத்துறை நிறுவனங்களாக மாற்ற வேண்டும் என்று முதன் முறையாகத் தத் (Dutt) குழு முன் மொழிந்தது. பெரிய தொழில் நிறுவனங்களில் பொருளாதார சக்தி குவிந்து விடாமல் தடுப்பதற்குக் கூட்டுத்துறை உதவும் என்ற நோக்கத்துடனும், பொதுத்துறைக்கு ஒரு முக்கியப்பங்கு தரப்பட வேண்டும் என்ற நோக்கத்துடனும் உருவாக்கப்பட்டதே கூட்டுத் துறையாகும்.

அரசுக்குக் கொடுக்கப்பட்ட தொழில் வளர்ச்சி பற்றிய நினைவுக் குறிப்பில் (Memorandum on Industrial Growth) ஜே.ஆர்.டி.டாடா அவர்கள் கூட்டுத் துறைக்கு ஒரு விளக்கம் அளித்துள்ளனர். அவரது கருத்துப்படி, கூட்டுத்துறை என்பது தனியார் துறை மற்றும் அரசுத்துறை ஆகியவற்றின் கூட்டு. அதில் அரசின் மூலதனப்பங்கு 26 சதவீதத்திற்கும் குறையாமல் இருக்கும். அன்றாட நிர்வாகம், போதுமான அளவிற்கு அரசு பங்கேற்கும் இயக்குநர் குழுவின் கையில் இருக்கும்.

தத் குழுவின் கூட்டுத்துறை பற்றிய கருத்து பொதுத்துறைக்குச் சாதகமாகவும் டாடாவின் கருத்து தனியார் துறைக்கு சாதகமாகவும் உள்ளது. கூட்டுத்துறையின் எல்லையும் (Scope) இயல் விளக்கமும் (rationale) என்ன ?

முதலாவதாக, பொருளாதாரச் சக்திக் குவிப்பதற்கும், வர்த்தக முறை கேடுகளுக்கும் எதிராகச் செயல்படுவதற்காகக் கூட்டுத் துறைக் குழுவினால் பரிந்துரைக்கப்பட்டது. மேலும் நியாயமான விலைகள் நிலவுவதற்கு அனைத்துப் பகுதிகளுக்கிடையே தொழில்கள் பரவலாக்கப்படுவதற்கும், எதிர்காலத் தொழில் நுணுக்கத்தை வளர்க்கக் கூடிய ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கும், ஏற்றுமதியைப் பெருக்குவதற்கும் கூட்டுத்துறையைப் பயன்படுத்திக் கொள்ளலாம். இவ்வாறாக, தேசியமயமாக்குவதற்குக் கூட்டுத்துறை ஒரு கருவியாகப் பயன்படலாம் என்று கருதப்படுகிறது.

இரண்டாவதாக, தனியார் துறையும் பொதுத் துறையும் சில வரையறைக்குட்பட்டவையாக உள்ளன. எனவேதான், இவை இரண்டினையும் இணைத்து கூட்டுத் துறை உருவாக்கப்பட்டது. டாடா நினைவுக் குறிப்பும் இத்தகைய இணைப்பையே கோருகிறது. பொதுத்துறைக்கு நிதி ஆதாரங்கள் அதிக அளவில் இருந்தும் அதன் பணி மற்றும் வளர்ச்சியை மகத்தானதாக அமையாத காரணத்தால் தனியார் துறையின் மேலாண்மை மற்றும் வளர்ச்சியை அரசு ஒப்பு கொண்டது. மாறாக தனியார் துறையில் உள்ள பெரிய தொழில் நிறுவனங்களின் மேலாண்மை உயர்ந்த அளவில் இருந்த போதிலும் அவை நிதி உதவிக்காக அரசுத்துறை நிதி நிறுவனங்களை எதிர் நோக்கியுள்ளன. எனவே, தனியார் துறையின் மேலாண்மையும் அரசுத் துறை நிதி ஆதாரங்களையும் பயன்படுத்தும் வகையில் கூட்டுத் துறையின் தேவை ஏற்படுகின்றது.

மூன்றாவதாக, தனியார் துறையில் 1965ம் ஆண்டிற்குப் பிறகு முதலீடு குறைந்து விட்டது. எனவே, நாட்டின் தொழில் வளர்ச்சி குறைந்தது. தனியார் முதலீடு, அடிப்படை மற்றும் இன்றியமையாத தொழில்களுக்கு அதிகமாகக் கிடைப்பதில்லை. அரசின் உதவி மற்றும் ஆதரவு, சிறிய மற்றும் நடுத்தரத் தொழில் முனைவோரை ஊக்குவிக்கக் கூடும். அதன் மூலம் வள ஆதாரங்களைத் திரட்டுவதிலும், இயந்திரங்கள் வாங்குவதிலும் உதவி செய்து நவீன வர்த்தகத்தின் நிச்சயமில்லாத போக்கைச் சமாளிக்க உதவும்.

நான்காவதாக, அரசின் தொழில் மயமாக்கும் நடைமுறையில் ஒரு பகுதியாகவும் கூட்டுத் துறையைக் கருதலாம். அரசு சமுதாய நோக்கில் தொழில்களைத் தேர்ந்தெடுத்து தனியாரை அவற்றில் சேர்த்துக் கொள்கிறது. இதனால் தனியார் வசமுள்ள அதிகப்படியான மூலதனம் சமுதாய நன்மைக்காக பயன்படுத்தப்படுகிறது.

ஐந்தாவதாக, தனி மனிதர்களின் சேமிப்பும், வியாபாரச் சேமிப்பும் அநேகமாகப் பகட்டுச் செலவுகளுக்குப் பயன்படுகிறது அல்லது தேங்கியிருக்கிறது. இந்தச் சேமிப்புகளைத் திரட்டுவதற்கு கூட்டுத்துறை மிகவும் பயன்படும். இத்தொழில்களில் அரசு 25 சதவீதத்திற்கும் அரசு நிதி நிறுவனங்கள் 25 சதவீதத்திற்கும் முதலீடு செய்யும் போது எஞ்சிய 50 சதவீத முதலீட்டைப் பொதுமக்களிடமிருந்து சுலபமாகப் பெறலாம்.

கடைசியாக, கடந்த சில ஆண்டுகளில் தனியார் துறை கணிசமாக முன்னேறியுள்ளது. பல புதிய நிறுவனங்கள் தோன்றியிருக்கின்றன. ஏற்கனவே உள்ள நிறுவனங்கள் விரிவாக்கப்பட்டிருக்கின்றன. இதன் மூலம் தொழில் சக்தி பெருகியிருக்கிறது. தொழில் அமைப்பில் மேம்பாடு காணப்படுகிறது. எனவே, கூட்டுத்துறை நிதி ஆதாரங்களைத் திரட்டப்பயன்படுவது போல, மனித வளத்தையும் திரட்ட பயன்படுத்தலாம்.

கூட்டுத் துறையில் உரிமையானது திட்டங்கள் அல்லது தொழில்கள் எவ்வாறு ஆரம்பிக்கப்படுகிறது என்பதைப் பொருத்து அமைகிறது. அரசின் மூலதனம் அதிகமாக இருப்பின் உரிமையில் அரசின் பங்கு அதிகமாக இருக்கலாம். அதே போன்று தனியார் மூலதனம் அல்லது மேலாண்மை அதிகமாக இருப்பின் தனியாரின் உரிமை அதிகமாக இருக்கலாம். தவிர இந்த உரிமை தொழில் நுட்பத்தை பொருத்தும், லாபத்தையும் பொருத்தும்கூட அமையலாம்.

கூட்டுத்துறையைப் பற்றி புள்ளி விவரங்கள் சரியாக கிடைக்காவிட்டாலும் இந்த துறையில் முயற்சி துவங்கப்பட்டிருக்கிறது என்று கூறலாம். இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி (Industrial Development Bank of India) உதவி பெற்ற 68 தொழில் நிறுவனங்களின் பங்குகளை ஆராய்ந்தால் அதில் 52 சதவீதம் அரசுத் துறையின் கையிலும் 42 சதவீதம் தனயார் வசம் இருப்பதும் தெரிய வருகிறது. வருடாந்திர தொழில்களின் மதிப்பீடு (Annual Survey of Industries, 1989-90) வெளியிட்ட 1989–90ம் ஆண்டிற்கான புள்ளி விவரங்களின் அடிப்படையில், வியாபாரத் துறையில் செய்யப்பட்ட மொத்த முதலீடான ரூபாய் 1,40,791 கோடியில் கூட்டுத்துறையின் பங்கு ரூபாய் 10,879 கோடியாகும். அதாவது 7.7 சதவீதமாகும். மொத்த வியாபாரத் துறை வேலை வாய்ப்பில் 7 சதவீத அளவிற்கு அதாவது 5.4 லட்சம் பேர்களுக்குக் கூட்டுத்துறை வேலை வாய்ப்பை அளித்துள்ளது.

பன்னாட்டு வியாபார அமைப்புகள் (Multinational Corporations) :

ஒரு வியாபார அமைப்பு பல நாடுகளில் செயல்லபட்டாலும் அதன் உற்பத்தி மற்றும் சேவை வசதிகள் தொடங்கப்பட்ட நாட்டிற்கு வெளியே இருந்தாலும் அது பன்னாட்டு அமைப்பு என்றழைக்கப்படும். அத்தகைய அமைப்புகள் உலக அளவிலான முடிவுகளை எடுக்கக் கூடியவையாகும்.

பன்னாட்டு வியாபார அமைப்புகளின் தோற்றத்தினாலும் வளர்ச்சியினாலும் முதலீடு மற்றும் உற்பத்தி உலகளாவியதாகியிருந்தது. எனவே, பன்னாட்டு வாணிபம் என்பது இத்தகைய அமைப்புகளிடையே நடைபெறும் வர்த்தகமாக மாறியுள்ளது. இதன் விளைவாகப் பொருளாதாரச் சக்தி குவிப்பு சில்லுரிமைகளும் (Oligopolies) அதிகரித்துள்ளன. உள் நாட்டளவில் முற்றுரிமை (Monopoly) மற்றும் பொருளாதாரச் சக்தி குவிப்பு (Concentration of economic power) உள்ளதைப் போல உலக அளவில் பன்னாட்டு முற்றுரிமையும் (International Monopoly) பொருளாதாரச் சக்தி குவிப்பும் பன்னாட்டு வர்த்தக அமைப்பில் ஒருங்கிணைந்து காணப்படுகிறது.

இவ்வமைப்பு, சிறிது காலத்திற்கு முன்பே தோன்றியது என்றாலும் பன்னாட்டு வர்த்தக அமைப்புகள் பல நாடுகளில் நிறுவப்பட்டுச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இத்தகைய அமைப்புகள் அநேகமாக எல்லா

வளர்ச்சியடைந்த நாடுகளிலும் காணப்படுகின்றன. இவற்றில் அமெரிக்கா முன்னணி வகிக்கிறது. இந்த அமைப்புகள் வளர்ச்சி குன்றிய நாடுகளிலும் உள்ளன. இந்த முயற்சியில் வளர்ச்சி குன்றிய நாடுகளும் சளைத்ததல்ல. ஆனால் வளர்ச்சி குன்றிய நாடுகளின் பன்னாட்டு வியாபார அமைப்புகள் பிற வளர்ச்சி குன்றிய நாடுகளில் தான் உள்ளன. இருப்பினும் வளர்ச்சி அடைந்த நாடுகளின் பன்னாட்டு வியாபார அமைப்புகள்பிற வளர்ச்சி குன்றிய நாடுகளில்தான் உள்ளன. இருப்பினும் வளர்ச்சி குன்றிய நாடுகளின் பன்னாட்டு வியாபார அமைப்புகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது வளர்ச்சி குன்றிய நாடுகளின் பன்னாட்டு வியாபார அமைப்புகள் மிகச் சிறியனவாகவே உள்ளன. எடுத்துக்காட்டாக, இந்தியாவின் பன்னாட்டு வியாபார அமைப்புகளின் மொத்த முதலீடு, வளர்ச்சியடைந்த நாடுகளின் பன்னாட்டு வியாபார அமைப்புகளில் ஒரு அமைப்பின் முதலீட்டுக்குச் சமமாக உள்ளது.

பன்னாட்டு வியாபார அமைப்புகளின் நடவடிக்கைகள் பலவாறாக உள்ளன. நேரடி முதலீட்டின் மூலமாக அவை, மூலதனம், தொழில் நுணுக்கம் ஆகியவற்றைப் பிற நாடுகளுக்கு அளிக்கிறது. தவிர, சுரங்கம் மற்றும் பெட்ரோலியத் துறைகளில் பல நாடுகளில் அவை உற்பத்தியில் இறங்கியிருக்கின்றன. மற்றும் உணவுத் துறையிலும் அவை ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றன. ஏற்றுமதிக்கான உற்பத்தியிலும் அவை ஈடுபட்டுயிருக்கின்றன. இந்தியாவில் பன்னாட்டு வியாபார அமைப்புகள், மருந்து வகைகள், மின்சார இயந்திரங்கள், இரசாயனங்கள், அலுமினியம், உலோகம் மற்றும் உலோகப் பொருட்கள், கனரகப் பொறியியல் பொருட்கள், நுகர்பொருட்கள் ஆகிய துறைகளில் உள்ளன.

இந்தப் பன்னாட்டு வியாபார அமைப்புகள், பல நன்மைகளைச் செய்கின்றன. முதலாவதாக, அவை மூலதனத்தை அளிக்கின்றன. வளர்ச்சிக் கட்டத்தின் முதல் படியில் உள்ள நிலையில் வளர்ச்சி குன்றிய நாடுகளுக்கு இது மிகவும் பயனுள்ளதாக அமைகிறது. குறிப்பாக பிற வகையில் மூலதனம் கிடைக்காத பட்சத்தில், இந்த அமைப்புகள் அளிக்கும் மூலதனம் மிகவும் முக்கியமானதாகிறது.

இரண்டாவதாக பிற வகைகளிலிருந்து குறிப்பாக அரசு மற்றும் பன்னாட்டு நிதி நிறுவனங்களிலிருந்து மூலதனம் கிடைக்கும் போது இந்த

அமைப்புகளிலிருந்து கிடைக்கும் தொழில் நுணுக்கம் பன்னாட்டு மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது. வளர்ச்சி குன்றிய நாடுகளின் தேவைப்படும் தொழில் நுணுக்கத்தை இந்த அமைப்புகள் வளரச் செய்கின்றன. பெட்ரோலியம், இரசாயணம் மற்றும் சுரங்கத்துறைகளில் மிகவும் நவீன தொழில் நுணுக்கங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இந்தத் தொழில் நுணுக்கம் பன்னாட்டு வியாபார அமைப்புகள் மூலம் வளர்ச்சி குன்றிய நாடுகளுக்குக் கிடைக்கின்றன. இவற்றை வளர்ச்சி குன்றிய நாடுகளிலேயே வளரச் செய்வதானாலும், வளர்ச்சியடைந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்து பயன்படுத்துவதாக இருந்தாலும் அதிக மூலதனமும் காலமும் தேவைப்படும். ஆனால், இந்த அமைப்புகள் காலம் மற்றும் மூலதனம் விஷயத்தைத் தவிர்த்து, தொழில் நுணுக்கத்தை வளர்ச்சி குன்றிய நாடுகளுக்கு அளிக்கின்றன. இதே போன்று ஒரு நாட்டில் பெட்ரோலியம் எந்த அளவில் கிடைக்கும் என்று தெரிந்து கொள்ளவும், இந்த அமைப்புகள் உதவுகின்றன.

மூன்றாவதாக, பன்னாட்டு வியாபார அமைப்புகள், வளர்ச்சி குன்றிய நாடுகளிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களுக்கான சந்தைச் சேவையையும் (Marketing Service) அளிக்கின்றது. ஒரு பொருளை ஏற்றுமதி செய்வதற்கு பன்னாட்டு சந்தையில் போட்டியிடும் தகுதி அந்தப் பொருளுக்கு இருக்க வேண்டும். இந்தத் தகுதி விளம்பரம், தகவல், சந்தை ஆராய்ச்சி, கிடங்கு வசதி, போக்குவரத்து, சிப்பம் கட்டுதல், இறக்குமதியாளர்களைக் கண்டுபிடித்தல் போன்ற வசதிகளுக்கு பன்னாட்டு வியாபார அமைப்புகளின் மூலம் கிடைக்கின்றன.

பன்னாட்டு வியாபார அமைப்புகளின் நன்மைகளைப் பார்க்கும் போது அவற்றின் தீய விளைவுகளையும் கருத்தில் கொள்ள வேண்டும். அவை சொந்த நாட்டிலும் வெளியேயும் இயங்குவதால் எந்த நாட்டிற்கும் நன்றியுடையதாக இல்லை. மேலும் அவை சில்லுரிமைகளாக (oligopolies) இருப்பதால் வெளிப்படையான, போக்குகளை நீக்குவதற்கு எது வேண்டுமானாலும் செய்யக்கூடிய திறன் படைத்தவையாகும். அவை உற்பத்தியாளர் மீதும் நுகர்வோர் மீதும் அவர்களது விருப்பு வெறுப்பை சுமத்தும் முறைகள் பல. அவை எதிர்காலச் சந்தைகளைத் தன் வசமாக்குகின்றன. போலி விளம்பரங்கள் மூலம் அவற்றின் பொருள்களைப் பிற பொருள்களினின்றும் வேறுபடுத்திக் காட்டுகின்றன. நுகர்வோர் விலையை ஏற்றுகின்றனர். விவசாயிகளின்

வருமானத்தை குறைக்கின்றனர். தங்களது லாபங்களை அதிகரித்து கொள்கின்றனர். அவற்றின் பொருள்களின் தரத்தையும் குறைக்கின்றனர்.

அயல்நாட்டுத் தொழிற்கூட்டமைப்புகள் (Foreign Collaboration)

கடந்த சில ஆண்டுகளாக அயல்நாட்டு மூலதனமும், உள்நாட்டு மூலதனமும் இணைந்து செயலாற்றுகின்றன. இத்தகைய அயல்நாட்டு மூலதனத்தை இந்தியா வரவேற்கிறது. அயல்நாட்டுத் தொடர் கூட்டமைப்புகள் மூன்று வகையாகப் பிரிக்கப்படுகின்றன. அயல்நாட்டு மற்றும் உள்நாட்டுத் தனியார் சேர்க்கை, அயல்நாட்டு நிறுவனங்களுடன் இந்திய அரசின் சேர்க்கை மற்றும் அயல்நாட்டு அரசுகளுடன் இந்திய அரசின் சேர்க்கை.

திட்ட காலத்தின் துவக்கத்தில் வெளிநாட்டு மூலதனத்தின் தேவையை வெளிநாட்டு மூலதனக் கொள்கையானது ஒப்புக் கொண்டது. எனினும் அதற்கு ஆதிக்கம் செலுத்துமளவிற்கு இடமளிக்கக் கூடாது என்ற கூறியது. அதற்கேற்ப அயல்நாட்டுத் தொழிற்கூட்டமைப்பு நமது நாட்டின் உற்பத்தி திறனை அதிகரிக்கவல்ல துறைகள் பின் தங்கியிருந்தால் அந்தத் துறைகளிலும் பிற முக்கியமான துறைகளிலும் அனுமதிக்கப்பட்டது. மொத்தத்தில் அயல்நாட்டுத் தொழிற்கூட்டமைப்புக் கொள்கை தேர்ந்தெடுக்கப்பட்டதும் கட்டுப்படுத்தப்பட்டதாகவும் இருந்தது. எனவே, 1961–70ல் 2475 அயல்நாட்டுத் தொழிற்கூட்டமைப்புகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. 1971–80ல் 3041 சேர்க்கைகளுக்கு இசைவளிக்கப்பட்டது. அதன் பின்புதான் அயல்நாட்டுத் தொழிற்கூட்டமைப்புக் கொள்கை தளர்த்தப்பட்டது. குறிப்பாக பெட்ரோலிய ஏற்றுமதி வளரும் நாடுகளின் முதலீட்டாளர்களுக்குச் சலுகைகள் வழங்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து 1983ல் தொழில் நுணுக்கக் கொள்கை அறிக்கை (Technology Policy Statement) வெளியிடப்பட்டது. தொழில் நுணுக்கத்தை இறக்குமதி செய்து பெறுவதும் அது நமது தேவைக்கும் வள ஆதாரங்களுக்கு பொருத்தமான புதிய நவீன தொழில் நுணுக்கம் தானா என்பதை உறுதி செய்வதும் இந்தக் கொள்கையின் நோக்கமாகும். இந்தக் கொள்கையின்படி உரிம விதிகளைத் தளர்த்தி பல கொள்கை நடவடிக்கைகள் அறிவிக்கப்பட்டன. இந்தத் தொழில் நுணுக்கக் கூட்டமைப்புகள் (Technical Collaboration) ஆதாயப்பங்கு (Royalty)

அல்லது மொத்தக் கட்டணத்தைச் செலுத்துதல் அல்லது இரண்டும் சேர்ந்த கட்டணம் என்ற அடிப்படையில் அனுமதிக்கப்பட்டன. இதனால் அந்நிய நேரடி முதலீடு (Foreign Direct Investment) மிகவும் அதிகரித்தது. அதன் விளைவாக, 1981–90ல் என்றுமில்லாத அளவிற்கு 7436 கூட்டமைப்புகளுக்கு இசைவளிக்கப்பட்டது. அவற்றின் மூலமாகக் கிடைத்த மொத்த முதலீடு ரூபாய் 1274 கோடியாகும்.

நாட்டு வாரியான அயல்நாட்டு தொழிற் கூட்டமைப்பில் ரூபாய் 322.7 கோடி முதலீட்டுடன் அமெரிக்கா முதலிடம் வகிக்கிறது. இது மொத்த அயல்நாட்டுத் தொழில் கூட்டமைப்பு ஒப்புதல்களில் நான்கில் ஒரு பங்கு ஆகும். அமெரிக்காவைத் தொடர்ந்து ஜெர்மனி, ஜப்பான், இங்கிலாந்து, இத்தாலி, பிரான்ஸ் மற்றும் சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகள் அங்கம் வகிக்கின்றன. தொழில் வாரியான அயல்நாட்டுத் தொழிற்கூட்டமைப்புகளில் மின்சாரம் மற்றும் மின்னணுத்துறை (Electricals and Electronics) மொத்த ஒப்புதல்களில் 22 சதவீதத்தைப் பெற்றிருக்கிறது. தொழிற்சாலை இயந்திரங்கள் (15.5 சதவீதங்கள்) அதனை தொடர்ந்து வருகிறது. மூன்றாவது இடத்தில் இரசாயனங்கள் உள்ளன.

அயல்நாட்டுத் தொழிற் கூட்டமைப்புக்களை அதிகமாக அனுமதிப்பதற்கு தளர்வுக் கொள்கை ஆதரவாளர்கள் அளிக்கும் முக்கிய விளக்கங்களாவன. கிழக்கிந்தியக் கம்பெனியின் காலம் முடிந்துவிட்டது. பன்னாட்டு வியாபார நிறுவனங்கள் மூலமான அயல்நாட்டு முதலீட்டில் இந்தியாவின் பங்கு சீனா, பிரேசில், மெக்சிகோ ஆகிய நாடுகளின் பங்கை விட மிகவும் குறைவானதே. மேலும், தொழில் நுணுக்கத்தின் உதவியால் தொழில் நுணுக்கப் பரிவர்த்தனையை மேற்கொள்ள முடியும்.

அண்மைக்காலப் போக்கு (Recent Trends)

1995–96 ஆம் ஆண்டிற்கான பொருளாதார ஆய்வு இந்தியா மிகவும் துரிதமாக இழந்த வளர்ச்சியைத் திரும்பப் பெற்றது என்று கூறுகிறது. 1951க்குப் பிறகு அடைந்த வளர்ச்சி முந்தைய ஆண்டுகளின் வளர்ச்சியாகும் என்று அது மேலும் கூறுகிறது. பொருளாதார வளர்ச்சி 1994–95ல் 93 சதவீதம் அளவிற்கு உயர்ந்து அது மேலும் 7 சதவீத அளவிற்கு 1995–96ல் அதிகரித்தது. இந்த வளர்ச்சிக்கு முக்கியமான காரணம் தொழில் மற்றும் கட்டுமானத் துறைகளில்

கண்ட 7 சதவீத வளர்ச்சியுமாகும். எட்டாவது திட்டத்தின் மூலம் முதல் நான்கு ஆண்டுகளின் சராசரிப் பொருளாதார வளர்ச்சி ஆண்டிற்கு 5.9 சதவீதமாகும். இது திட்டக்குறியிலக்கான 5.6 சதவீதத்தைக் காட்டிலும் அதிகமாகும்.

அரசு ஆதிக்கம் செலுத்துகின்ற முக்கியமான அடிப்படை கட்டமைப்புத் துறைகளில் பொருளாதார சீர்திருத்தம் (Economic Reform) குறைந்த வேகத்திலிருப்பதாலும், விவசாயத் துறையிலுள்ள தடைகள் மற்றும் பிரச்சனைகளாலும் பொருளாதார வளர்ச்சி பாதிக்கப்படும் நிலையில் உள்ளது. 1995–96ன் பிற்பகுதியிலும் 1996–97ன் முதல் இரண்டு மாதங்களிலும் மின்சார உற்பத்தியில் மந்தம் காணப்படுகிறது. அதே போன்று இரயில் போக்குவரத்து, சாலைப் போக்குவரத்து, துறைமுக வசதி ஆகியவற்றில் வளர்ச்சி குறைவாகவே காணப்படுகிறது. அந்தத் துறைகளில் பொருளாதாரச் சீர்திருத்தம் 12.4 சதவீதம் அளவிலும் நிலை நிறுத்தப்பட்டது. வளர்ச்சி சீராக 1994–95ல் 9.3 சதவீதம் அளவிலும், நிலைநிறுத்தப்பட்டது. மூலதனப் பொருட்கள் துறை 1994–95ல் 24.9 சதவீத அளவிலும் 1995–96ல் 20.4 சதவீத அளவிலும் வளர்ந்து தொழில் வளர்ச்சிக்கு அது ஒரு முக்கியமான காரணி என்ற நிலையை உறுதிப்படுத்தி கொண்டது. கடந்த இரண்டு ஆண்டுகளில் தொழில் வளர்ச்சி அதிகமாக இருந்ததோடு மட்டுமல்லாமல் பரவலாகவும் அமைந்து, 1994–95ல் கிடைத்த 9.3 சதவீத வளர்ச்சிக்கு காரணம். 9.7 சதவீத அளவில் வளர்ந்த உற்பத்தித்துறை, 8.5 சதவீத அளவில் வளர்ந்த மின்சார உற்பத்தி மற்றும் 7.3 சதவீத வளர்ச்சிக்கு காரணம். 9.7 சதவீத அளவில் வளர்ந்த உற்பத்தித் துறை 9.3 சதவீத வளர்ச்சிக்கு காரணம். உற்பத்தியில் மின்சார உற்பத்தி மற்றும் 7.3 சதவீதம் அளவில் வளர்ந்த சுரங்கத்துறை ஆகியவையே 1995–96ல் (ஏப்ரல்–பிப்ரவரி) 12.4 சதவீதம் அளவில் இருந்த மொத்த வளர்ச்சிக்கு 13.9 சதவீத உற்பத்தித் துறை வளர்ச்சி 8.3 சதவீத வளர்ச்சி மின்சார உற்பத்தி மற்றும் 7.4 சதவீத சுரங்கத்துறை வளர்ச்சியே காரணமாகும். உபயோக பொருட்களின் அடிப்படையில் பார்ப்போமானால், 1995–96ல் (பிப்ரவரி–ஏப்ரல்) மொத்த வளர்ச்சியானது, 20.4 சதவீத மூலதனப் பொருள் (Capital goods) உற்பத்தி, 12.9 சதவீத நுகர்பொருள் உற்பத்தி, 10.3 சதவீத இடைப்பொருள் உற்பத்தியில் இருந்து கிடைத்துள்ளது.

மிக முக்கியமான துறைகளின் (core sector) வளர்ச்சி 1994–95ல் திருப்திகரமாக இருந்தாலும் 1995–96ல் மின்சாரம், நிலக்கரி, எஃகு, சிமெண்ட்,

கச்சா எண்ணெய் மற்றும் பெட்ரோலியப் பொருட்களின் வளர்ச்சி 7.7 சதவீதமாக 1994–95ல் வளர்ச்சிக்கான 7.8 சதவீதத்தை விடக் குறைவாக இருந்தது. நிலக்கரி மற்றும் கச்சா எண்ணெய் உற்பத்தி 1995–96லும் 1996–97 (ஏப்ரல்–மே)லும் குறைந்தது. பொருளாதார சீர்த்திருத்தங்களினால் 1991க்குப் பிறகு அயல்நாட்டு வாணிபத்துறை வரவேற்கத்தக்கதும், குறிப்பிடத் தக்கதுமான வளர்ச்சி அடைந்துள்ளது. அதன் முக்கிய அம்சங்களாவன.

1. ஏற்றுமதி வளர்ச்சியில் வலுவான தொடர் மீட்பு.
2. இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்த அளவில் ஒப்பிட்டு நோக்கில் இறக்குமதியை விட அதிகமான ஏற்றுமதி வீதம்.
3. நடப்புக் கணக்கில் 1991ல் இருந்த 32 சதவீதத்திலிருந்து பற்றாக்குறை கணிசமாக குறைந்துள்ளது.
4. 1991–92ல் இருந்து அயல்நாட்டு நேரடி முதலீட்டில் தீவிர அதிகரிப்பு.
5. அந்நியச் செலாவணியின் கையிருப்பு மார்ச் 1991ல் இருந்த 202 கோடி டாலருக்கு அதிகரிப்பு.

இருந்தபோதிலும் 1995–96ல் ஏற்றுமதி வளர்ச்சி 21 சதவீத அளவில் நிலை பெற்றது. இறக்குமதி அதிகரிப்பினால் அயல்நாட்டு செலுத்து நிலையில் சிக்கல்கள் தோன்றின. 1996 ஏப்ரல்–மே மாதங்களில் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வளர்ச்சி சென்ற ஆண்டை விடக் குறைந்தது. சென்ற ஆண்டின் அளவிலிருந்து ஏற்றுமதி 14.4 சதவீதம் உயர்ந்தது. ஆனால் இறக்குமதி 23.4 சதவீதம் உயர்ந்தது. அயல்நாட்டு மூலதனத்தைப் பெறுவதில் தொழில்களுக்கு உதவும் வகையில் அயல்நாட்டுக் கடன்களைப் பெறுவதற்கான சில வழிகாட்டிகளை அரசு ஜுன் 1996ல் வெளியிட்டது. அதன்படி வளர்ச்சி நிதி நிறுவனங்கள், அடிப்படை வசதித் துறைகள் மற்றும் ஏற்றுமதியாளர்களுக்கு சலுகையுடன் கூடிய முன்னுரிமை தரப்பட்டது. மேலும், வெளிநாட்டு மூலதன மேம்பாட்டுக் கழகத்தை (Foreign Investment Promotion Board) சீரகைக்கப்பட்டு அயல்நாட்டு நேரடி முதலீடு சம்பந்தமான அரசின் கொள்கை விளக்கமும் தரப்பட்டது. தவிர வெளிநாட்டு மூலதன மேம்பாட்டுக் கழகத்தை (Foreign Investment Promotion Council) நிறுவுவதென்றும் முடிவெடுக்கப்பட்டது.

கடந்த ஐந்து ஆண்டுகளின் பொருளாதார சீர்திருத்தங்கள், உற்பத்தி மற்றும் வேலை வாய்ப்பில் வலுவான மீட்சியைத் தந்துள்ளன. அயல்நாட்டு வாணிபத்துறையே தொழில் துறை, நிதித்துறை, வரிகளின் அமைப்பு, மூலதனச் சந்தை ஆகியவற்றில் அதிகமான மாறுதல்களைச் செய்திருக்கின்றன. ஆனாலும் இன்னும் பற்பல சாதனைகளை நிகழ்த்த வேண்டியுள்ளது.

முடிவாக கடந்த இரண்டாண்டுகளின் துரித வளர்ச்சியை நிலை பெறச் செய்யவும் மேம்பாடடையச் செய்யவும் போதிய ஆற்றல் நாட்டில் உள்ளது. ஆனால் இந்த ஆற்றலை உண்மையாக்குவதற்கு தேவை சேமிப்பு மற்றும் முதலீட்டை அதிகரிப்பதற்கான கொள்கைகளையும் மிக முக்கியமான அடிப்படை வசதித் துறைகளில் முதலீடு மற்றும் உற்பத்தியை அதிகரிப்பதற்கான கொள்கைகளையும் ஒற்றுமையில் நிலையான மற்றும் வேகமான வளர்ச்சிக்கான கொள்கைகளையும் செயல்படுத்த வேண்டும்.

பாடம் - 11

தொழில் வள வங்கிகள்

தொழில் வளர்ச்சிக்குத் தேவைப்படும் நிதி வசதிகளைக் கால வரியாக பாகுபடுத்துவதுண்டு. ஒன்று நீண்ட கால நிதியம், அதாவது நிலையான சொத்துக்கள் நிலம், கட்டிடம், இயந்திரச் சாதனங்கள் போன்றன வாங்கத் தேவைப்படும் பண வசதி; மற்றொன்று குறுகிற கால நிதியம், அதவாது கச்சாப் பொருள் வாங்க, அவற்றை முடிவுற்ற பொருள்களாக மாற்ற, விற்பனை ஏற்பாடுகளை மேற்கொள்ள, அன்றாடச் செலவுகட்குத் தேவைப்படும் நடைமுறை முதல்.

முதலாக்கமும் தொழில் நிதியமும்

பொருளாதார வளர்ச்சிக்கு மிகவும் தேவைப்படும் முதல், இரண்டு வழிகளில் கிடைக்கலாம். ஒன்று உள்நாட்டில் ஏற்படும் முதலாக்கம் இரண்டாவது முதலை இறக்குமதி செய்வது. அதாவது வெளிநாடுகளிடமிருந்து பெறுவது, அயல்நாடுகளிலிருந்து முதல் இறக்குமதி செய்வது பலப்பல சூழ்நிலைகளையும் கொள்கைகளையும் பொறுத்தது: வளர்ச்சி பெறும் நாடுகளில் முதலாக்கம் நிகழ்வது மிகவும் குறைந்த அளவிலேயே இருக்கின்றது. இதற்குக் காரணம் மக்களின் சேமிப்புத் திறன் மிகக் குறைவாக இருப்பது, தேசிய வருமானம் மிகக் குறைவாக இருப்பதால் முதலீடு செய்வதில் ஊக்கம் ஏதுமிருப்பதில்லை. இதனால் சந்தையின் அளவும் சிறியதாக இருக்கின்றது. ஆக, மொத்தத்தில் முதலாக்கம் குறைந்து நிற்கின்றது.

இந்தியாவில் தொழில் நிலையங்கள் தமக்குத் தேவைப்படும் நீண்ட கால நிதியத்தைப் பல வழிகளில் பெறுகின்றனர். பங்கு முதல் வெளியீடு, கடனீட்டுப் பத்திரங்கள் வெளியீடு, இலாபத்தில் பெரும் பகுதியைத் தொழிலில் திரும்பவும் முதலீடு செய்தல், இயக்குநர்கள் தரும் கடன், வணிக வங்கிகள் தரும் கடன், தொழில் வள வங்கிகள் தரும் கடன் ஆகிய மூலங்களிலிருந்து நம் நாட்டில் தொழில் நிலையங்கள் கடன் பெறுகின்றன. இவையன்றி, குறிப்பிட்ட சில தொழில்களுக்கு அரசு மறைமுகமாக நிதி வசதியளிக்கின்றது. அயல் நாட்டு நிதி நிறுவனங்களும் பன்னாட்டு நிதி நிலையங்களும் சில தொழில்களுக்கு கடன் அளித்து வருகின்றன.

முதன் முதலில் 1822 ஆம் ஆண்டு பெல்ஜியத்தில், அந்நாட்டுத் தொழில்களுக்கு கடனளிக்கும் பொருட்டு தொழில் வள வங்கியொன்று நிறுவப்பெற்றது. பின்னர், 1852 ஆம் ஆண்டில் பிரான்சு நாட்டில் கடன் திரட்டர் என்ற நிறுவனம் ஏற்படுத்தப்பட்டது. ஜப்பான் தொழில் வங்கி 1902 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. பின்னர் ஜெர்மனி மற்றும் பல ஐரோப்பிய நாடுகளில் தொழில் வங்கிகள் நிறுவப்பெற்றன.

தொழில் வங்கிகள் தொழிலுக்கு நீண்ட காலக் கடன் மட்டும் தரும் நிறுவனம் என்று எண்ணுவது சரியல்ல. ஏனெனில், இவ்வங்கிகள் தொழில் நிறுவனங்களின் பங்குகள் மற்றும் கடனீட்டுப் பத்திரங்களை எடுத்துக் கொள்ள ஒப்புறுதி செய்கின்றன. பல தொழில் வங்கிகள் மேலும் சில பணிகளையும் மேற்கொள்ளுகின்றன. அவை புதுத் தொழில் நிலையங்களை உருவாக்குதல், தொழில் முயற்சியில் ஈடுபடுவோருக்கு நிருவாக அறிவுரை வழங்கல், சந்தை, முதலீடு ஆராய்ச்சி மேற்கொள்ளல், தொழில் நுட்ப பொருளாதார ஆய்வு நடத்தல் போன்றனவாகும்.

இந்தியாவில் தொழில் வள வங்கிகள் முதன் முதலில் தனியார் துறையில் 1917–23 ஆண்டுகளில் நிறுவப் பெற்றது. பல காரணங்களால் இது சரிவர செயற்படாமல் முடிவில் மூடப்பட்டுவிட்டன. நாடு விடுதலையடைந்த பின்பே தொழில் நிதிய நிறுவனம் ஒன்று சட்ட முறையாக நிறுவப்பெற்றது. அந்நிறுவனம் தான் இந்தியத் தொழில் நிதியக் கூட்டுரு.

நம்பிக்கை அல்லது பொறுப்புரிமை அலகுமுதலீட்டு நிறுவனம் (Unit Trust of India)

மேலாண்மை முகவர்களால் ஆரம்பிக்கப்பட்ட முதலீடு நிறுவனங்கள் அவர்களின் கட்டுப்பாட்டின் கீழுள்ள குறிப்பிட்ட நிறுவனக்குழுவின் நலனில் தான் அக்கரை காட்டின. சிறு முதலீடு செய்வோர்களின் பணத்தை தொழில் நிறுவனங்கள் நேர்மைப் பங்குகளின் முதலீடு செய்திட வழிகாட்டும் உண்மை முதலீடு பொறுப்புரிமை நிறுவனங்கள் இல்லை. இத்தகையமைப்பு ஒன்றை நிறுவி விடவேண்டும் என்று அரசு வெகுநாட்களாக எண்ணிக் கொண்டு இருந்தது. அதன் காரணமாகத் தான் இந்தியப் பொறுப்புரிமை அலகு முதலீட்டுச்சட்டம் 1963–ல் இயற்றப்பட்டது. 1964–ஆம் வருடம் பிப்ரவரி மாதம் முதல் நாளிலிருந்து இந்நிறுவனம் தன் பணியைத் துவக்கியது. அதே ஆண்டு

ஜூலை மாதம் முதல் தேதியிலிருந்து தன் முதலீடு அலகுகளைப் பொது மக்களுக்கு விற்கத் துவங்கியது.

இங்கிலாந்தில் உள்ள பொறுப்புரிமை முதலீட்டு நிறுவனம் எவ்வாறு இயங்கி வருகிறதோ அதன் அடிப்படையில் தான் நம் நாட்டு பொறுப்புரிமை அலகு முதலீட்டு நிறுவனமும் அமைக்கப்பட்டுள்ளது. இம்முதலீட்டு நிறுவனம் எண்ணிக்கையற்ற முதலீடு செய்வோர்களின் குறிப்பாக சிறு முதலீடு செய்வோர்களின் முதலீடுகளைப் பெற்று பெரிய முதலீடு செய்வோர்களின் முதலீடு பத்திரங்களில் முதலீடு செய்திடும் இடைநிலை நிறுவனமாகத் திகழ்கிறது. எனவே இதன் முக்கியக் குறிக்கோள் சிறிய பெரிய அளவுகளில் முதலீடு செய்திடும் இருவகையினருக்கும் நல்ல வருவாய் உள்ள முதலீடு வருவாய் பத்திரங்களை அளித்து நாட்டில் நிலையானத் தொழில் வளர்ச்சிக்கு உதவுகிறது. மேலும் நாட்டின் சேமிப்புகளை உற்பத்தி முதலீடுகளில் முதலீடு செய்திட உதவுகிறது. குறைந்த அளவு நட்ட அச்சத்தையும், நியாயமான வருவாயையும் இத்திட்டம் பெற்றுள்ளது. தனிப்பட்ட முதலீட்டாளர்களுக்கு நியாயமான வருவாயும் சிறந்த மேலாண்மையும் இது வழங்குகிறது.

முதல்

இந்தியப் பொறுப்புரிமை அலகு முதலீட்டு நிறுவனத்தின் ஆரம்ப முதல் ரூ.5 கோடியாகும். இதற்கு இந்திய ரிசர்வ் வங்கி ரூ.2.50 கோடியும், இந்திய ஆயுள் காப்பிட்டுக்கழகம் 0.75 கோடியும், இந்திய மாநில அரசு வங்கியும், அதன் கிளைகளும் ரூ.0.75 கோடியும், அட்டவணை வங்கிகள் இதர நிதியுதவி நிறுவனங்கள் 1.00 கோடியும் வழங்கியுள்ளன. 1976–ல் இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி ஏற்பட்டு விட்டதால் ரிசர்வ் வங்கி வகித்த அத்தனை பொறுப்புகளும் அதற்கு வழங்கப்பட்டுள்ளன. ஆரம்ப முதலை கொண்டு 6 சதவீத வருவாயைத் தரும் பலதரப்பட்ட முதலீடுப்பத்திரங்களைக் கொண்டு ஒரு முதலீட்டுத் துறையை இது துவங்கியது. இது பொறுப்புறுதி அலகுகளை பொது மக்களுக்கு விற்கிறது. இவ்வாறு விற்கப்படும் அலகுகளின் வருவாய் நிறுவன முதலாகி அது மறுபடியும் அரசின் பத்திரங்கள், தொழில் நிறுவனத்தின் பத்திரங்கள், முன்னுரிமை, நேர்மைப்பங்குகள் முதலியவற்றில் முதலீடு செய்யப்படுகிறது. இவ்வாறு நிறுவனம் ஒரு சம அளவு முதலீட்டுத் துறையைப் பெற்றுள்ளது.

மேலாண்மை

பொறுப்புரிமை நிறுவனத்தின் பொது நிர்வாகமும் மேலாண்மையும் பாதுகாவலர் அவை ஒன்றிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்திய ரிசர்வ் வங்கி அவையின் தலைவரை நியமிக்கிறது. வாணிகம், தொழில் போன்றவைகளில் ஈடுபட்ட சிறந்த அறிஞர்கள் நால்வரை ரிசர்வ் வங்கி பாதுகாவலர்களாக நியமிக்கிறது. இந்திய ஆயுள்காப்பீட்டுக்கழகம், இந்திய மாநில அரசு வங்கியும் தலா ஒரு பாதுகாவலரை நியமிக்கிறது. ஆரம்ப முதலை வழங்கிடும் நிறுவனங்களும் இரண்டு பாதுகாவலர்களைத் தேர்ந்தெடுக்கின்றன. கூடுதலாக ஒரு செயற்பாதுகாவலரை ரிசர்வ் வங்கி நியமிக்கிறது.

வாணிபக் கோட்பாடுகள், அலகுகளை வாங்கியுள்ளவர்களின் நலன், பொது மக்கள் நலன் போன்றவைகள் பற்றி ரிசர்வ் வங்கி அவ்வப்பொழுது தெரிவிக்கும் கோட்பாடுகளை மேலாண்மைச் செயல்படுத்த வேண்டும். 1976–ஆம் ஆண்டிற்கு முன்னர் பொறுப்புரிமை அலகு நிறுவனம் ரிசர்வ் வங்கியோடு உடன் பணியாற்றும் இணை நிறுவனமாக விளங்கியது. ஆனால் 1976–ஆம் ஆண்டு பொறுப்பு அலகுச் சட்டத்திருத்ததிற்குப் பின்னர் இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியின் இணை நிறுவனமாகியுள்ளது. ஆனால் இனிமேல் பாதுகாவலர் அவையின் தலைவரை மைய அரசு தான் நியமிக்கும். இதேபோல் செயற்பாதுகாவலரும் நியமிக்கப்படுவார்கள். ரிசர்வ் வங்கி நான்கு பேர்களுக்குப் பதிலாக ஒருவரைதான் பாதுகாவலராக நியமிக்கும். இனிமேல் இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி நான்கு பாதுகாவலரை நியமிக்கும். இதுவரை நிறுவனம் 10 பாதுகாவலர்களைப் பெற்றிருந்தது. இனிமேல் 11 பாதுகாவலர்களைப் பெற்றிருக்கும்.

முதலீடுத்திட்டம்

நிறுவனத்தின் முதலீடு திட்டம் முதலுக்கு பாதுகாப்பையும், முதல் பெருகும் வகையுள்ள நியாயமான வருவாயையும் கொண்டுள்ளது. அதுபற்றி நிறுவனப் பணிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. முதலாவதாக நிறுவனம் முதலீடு செய்யும் தொகை அதன் மொத்த முதலீட்டு நிதியில் 5 சதவீதம் அல்லது நிறுவனம் வெளியிட்டுள்ள பங்குத் தொகுதிகளின் மதிப்பில் 10 சதவீதம் இவற்றில் எது குறைவாக உள்ளதோ அதை முதலீடு செய்ய வேண்டும். தொழில் நிறுவனங்கள் வெளியிடும் ஆரம்பப் பங்கு வெளியீட்டில் அடுத்து புதிய

5 சதவீதத்திற்கு மேல் முதலீடு செய்யக்கூடாது. ஆண்டொன்றுக்கு 6 சதவீதம் வருவாய் வரும்படி நிலையான வருமானம் வரும் பங்குகளிலும், மாறிவரும் பங்குகளிலும் நிறுவனம் சமமாக முதலீடு செய்ய வேண்டும்.

வருமானப் பகிர்வு

மொத்த வருமானத்தையும் செலவையும் ஆரம்ப முதல் தற்சமயம் உள்ள அலகு முதல் அதாவது அலகு விற்பனையால் உயர்ந்திடும் அலகுகளின் முகமதிப்பு ஆகியவைகளிடையே ஒதுக்கப்படுகின்றன. நிறுவனக்கடனுக்குச் செலுத்தப்படும் வட்டி செலவுகளும் இதே போல் ஆரம்பமுதல் தற்சமயம் உள்ள அலகு முதல் ஆகியவைகளின் விகிதங்களில் பிரிக்கப்படுகின்றன. இதர செலவுகளைப் பொறுத்தமட்டில் மொத்த வருமானத்தில் 5 சதவீத அளவிற்கு அலகு முதலுக்கும், மீதியை ஆரம்ப முதலுக்கும் மாற்றிட வேண்டும். அலகு முதலுக்கு ஒதுக்கப்படும் மொத்த வருமானத்தில் 90 சதவீதம் அலகுதாரர்களுக்குப் பகிர்ந்து தர வேண்டும். அதாவது மீதமுள்ள பத்து சதவீதம் தான் மேற்கூறிய செலவுகளுக்காகச் செலவழிக்கப்பட வேண்டும். அலகு முதலீடு பற்றி மக்களிடையே பிரச்சாரம், விளம்பரம் செய்திட ஒரு குறிப்பட்ட அளவு செலவுகளை அரசு ஏற்கவேண்டும்.

வரிச்சலுகைகள்

நிறுவனம் தனது அலகைப் பெற்றுள்ளவர்களுக்காகப் பணத்தை முதலீடு செய்து நிதியின் நிகரவருவாயை அவர்களுக்குப் பகிர்ந்து தருவதால் அதன் வருமானத்திற்கு வருமான வரி, முதலினவரி போன்றவைகள் இல்லை. இன்னும் உபரிவரி போன்றவைகளும் செலுத்த வேண்டிய அவசியமில்லை. நிதிமூலத்தில் வரிகழிக்கபடாமல் பகர்வினையும் வட்டி வருமானத்தையும் அது பெற்றிடலாம். நிறுவனத்தில் இருந்து பெற்றிடும் வருவாய் ரூ. 3க்கு வரிவிலக்குண்டு. 1975–ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அலகுகளில் முதலீடு செய்யப் பட்ட வருமானத்திற்கு வருமானவரி, சொத்துவரி போன்றவைகள் செலுத்தப்பட வேண்டிய அவசியமில்லை. அதாவது நிறுவனத்திலிருந்து பெற்றிடும் வருவாயில் ரூ.35,000/–க்கும், நிறுவனத்தில் முதலீடு செய்திடும் தொகையில் ரூ.35,000/–க்கும் முறையே வருமான வரியும், சொத்து வரியும் இல்லை.

நம்பிக்கை ஒப்புறுதி நிறுவனம் கீழ்க்கண்ட நான்குச் சிறப்பியல்புகளைப் பெற்றுள்ளது. 1. உலகிலேயே பொதுத்துறையில் நிறுவப்பட்ட முதல் அலகு நம்பிக்கை ஒப்புறுதி நிறுவனம் இது தான். 2. ஒப்புறுதியாளர்களுக்கும், மேலாண்மைக்கும் இடையே பேதமில்லை. அதாவது மற்ற நிறுவங்களில் உள்ளது போல் தோன்றிடும் பிரிவு இல்லை. அதனால் பணிகளை இயக்குநர்களும், ஒப்புறுதியாளர்களும் இணைந்தே செய்கின்றனர். 3.உலகிலுள்ள மற்ற அலகு நம்பிக்கை ஒப்புறுதி நிறுவனங்களைப் போல் அல்லாமல் இது தன்னுடைய ஆரம்ப முதலை அலகுப் பெற்றுள்ளோர்–களிடமிருந்து மட்டும் பெறாமல் வங்கி போன்ற நிறுவனங்களிலிருந்துப் பெற்றுள்ளது. 4. தன்னிடம் முதலீடு செய்துள்ள முதலீட்டாளர்களுக்கு வேறுயாருக்கும் கிடைக்காத வரிச் சலுகைகளைத் தந்துள்ளது. இச்சலுகையை உலகிலுள்ள வேறு எந்த அலகு நம்பிக்கை ஒப்புறுதி நிறுவனமும் அளிக்கவில்லை.

திட்டங்கள்

1. அலகுத்திட்டம் 1964

1964–ம் ஆண்டு மே மாதம் இயக்குநர் அவை அலகுத் திட்டத்தை உருவாக்கியது. இத்திட்டத்தின்படி ரூ.10 முகமதிப்புடைய ரூ.10 மடங்குடைய அலகுகளை அன்றாடம் அறிவிக்கப்படும் விலையில் நிறுவனம் விற்றது. இதில் எவ்வளவு தொகை வேண்டுமானாலும் முதலீடு செய்திடலாம். விற்ற தேதியை எடுத்துக் கொள்ளாமல் எல்லா அலகுகளுக்கும் இலாபப்பகிர்வு பகிர்ந்தளிக்கப்பட்டது. அலகுகளைப் பிறருக்கு மாற்றித் தந்திடலாம். வழக்கமாக பாங்குகளை மாற்றித்தரும் தாள்களைப் பயன்படுத்தி இதனை மாற்றம் செய்யப்பட்டது. அவ்வப்பொழுது இத்திட்டம் மாற்றியமைக்கப்பட்டது.

2. மறுமுதலீட்டுத்திட்டம் 1965-66

இத்திட்டம் 1965–66–ல் வெளியிடப்பட்டது. இதன் மூலம் 1964–ம் ஆண்டுத் திட்டத்தில் வரும் வருவாயை சுலபமாக மறு முதலீடு செய்வோர்களுக்குக் கிடைத்துள்ளது. கூட்டுவட்டி வழங்கப்படுவதால் அலகுகளின் மதிப்பு தானாகவே பெருகுவது இத்திட்டத்தன் முக்கிய நன்மையாகும்.

3. அலகுத்திட்டம் 1971

கலப்புறுதி இணைந்த அலகுத்திட்டம் 1971–ல் வெளிவந்தது. இதில் திட்டத்தில் முதலீடு செய்வோர்கள் பத்தாண்டுகளுக்கு குறைந்தளவு ரூ.2,400/ம் உயர்ந்தளவு ரூ.3,000/–மும் முதலீடு செய்ய வேண்டும். இதில் ஒரு பகுதி ஆயுள்காப்பீட்டுக் கழகத்திற்குச் சந்தாத் தொகையாக செலுத்தப்படுகிறது. மீதி தொகை அலகுகளில் முதலீடு செய்யப்படுகிறது. அலகுகளில் மீது வரும் இலாப ஈவு தானாக மீண்டும் அலகுகளின் மறு முதலீடு செய்யப்படுகிறது. பத்தாண்டுகள் முடிந்த பின்னர் முதலீடு செய்வோர்களுக்கு மொத்த தொகைக்கு அலகுச் சான்றிதழ் வழங்கப்படும் அல்லது அவர்கள் விரும்பினால் இத்தொகை ரொக்கமாகக் கொடுக்கப்படும். முதலீடு செய்வோர் இறந்து விட்டால் அவரின் வாரிசுதாரருக்கு அது வரைச் செலுத்தப்பட்ட அலகுத் தொகையும் மொத்த தொகைக்கும் உள்ள வேறுபாட்டுத் தொகையும், செலுத்தப்படும் பின்னர் கூறிய தொகையை ஆயுள் காப்பீட்டு நிறுவனம் செலுத்துகிறது. இத்திட்டம் 18 முதல் 45 வயதுடையவர்களுக்கு நன்மைப் பயப்பதாகும். இதற்கு வழங்கப்படும் தொகை வழக்கமாக ஆயுள் காப்பீடு சந்தா தொகை எதிர்கால நலன் நிதிக்காகச் செலுத்தப்படும் தொகை ஆகியவைகளுக்குச் சமமாகக் கருதப்படுகிறது.

முதல் அலகுத்திட்டம் 1976

இத்திட்டம் 1–1–1976–ல் அமுலுக்கு வந்தது. அதாவது அத்திட்டத்தின் அலகுகள் மிகக்குறைந்த காலத்திற்கு அதாவது ஜனவரி முதல் ஏப்ரல் 1ஆம் தேதிவரை விற்கப்பட்டன. அதன் பின்னர் விற்பனை நிறுத்தப்பட்டுள்ளது. இக்குறுகிய காலத்தில் 17000 விண்ணப்பங்களின் மீது ரூ.7.5 கோடிமுக மதிப்புடைய அலகுகளை நிறுவனம் விற்றது. இத்திட்டத்தின் நோக்கம் அலகு பெற்றுள்ளோர்களின் முதல் வளர்ச்சியை நேர் முகப்பங்குகள், எளிதாக மாற்றக்கூடிய பத்திரங்கள், கடனீட்டுப் பத்திரங்கள் ஆகியவைகளில் முதலீடு செய்து பெருக்குவதாகும். ஐந்தாண்டுகளில் இம்முதலீடு இருமடங்காகப் பெருகியது. சுமாரான இலாப ஈவும் கிடைத்தது. ஆனால் அலகு பெற்றுள்ளோர்களின் நட்ட அச்சத்தைக் குறைக்கும் பொருட்டு 1981–ம் ஆண்டு ஜூன் மாதம் 30–ல் இத்திட்டம் கைவிடப்பட்டது. அலகுதாரர்களுக்கு மறுகொள்முதல் விலையில் அலகுகள் திரும்ப அளிக்கப்பட்டன.

அறக்கட்டளை, சமய பொறுப்புரிமை நிறுவனம், பகுதி செய்யப்பட்ட சங்கங்கள் ஆகியவைகளுக்கான அலகுதிட்டம் 1981

இத்திட்டம் 1981–ன் மேற்கூரிய நிறுவனங்களுக்காக மட்டும் துவக்கப்பட்டு குறைந்தளவு 12 சதவீத இலாபஈவு வழங்கி உத்தரவாதம் அளித்தது. வருவாய் அதிகமாக இருந்தால் 12 சதவீதத்திற்கு மேலும் இலாப ஈவு வழங்கப்படும். மேலும் அலகுகளில் செய்யப்பட்ட முதலீடுகளுக்கு ஆண்டு இலாப ஈவு வழங்கப்படும். மேலும் அலகுகளில் செய்யப்பட்ட முதலீடுகளுக்கு ஆண்டு இலாப ஈவு கிடைத்திட வாய்ப்புண்டு. முதல் மூன்றாண்டுகளுக்கு அலகுகளைத் திரும்பப் பெறமுடியாது. ஐந்தாண்டுகளுக்குப் பின்னர் தான் முதலீட்டைத் திரும்பப் பெறலாம்.

வருவாய் அலகுத்திட்டம் 1982 (Income Unit Scheme 1982)

இத்திட்டம் 1982–மே மாதம் முதல் தேதி அறிமுகப்படுத்தப்பட்டது. குறைந்த மத்தியதர வருவாயையுடைய அதாவது மாதாந்திர சம்பளம் பெற்றிடும் அலுவலர்களின் முதலீட்டு தேவையை கருத்தில் கொண்டு இத்திட்டம் கொண்டு வரப்பட்டன. இத்திட்டத்தில் விற்பனை மிகவும் குறுகிய காலத்திற்கு அதாவது மே, ஜூன் மாதங்களுக்கு மட்டும் அனுமதி அளிக்கப்பட்டது. இத்திட்டம் 5 ஆண்டுகளுக்கு மட்டும் தான் அமுலிலிருக்கும். ஐந்தாண்டுகளுக்குள் இலாபஈவு முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்டது. அதாவது முதலாண்டிற்கு 12 சதவீதமும், இரண்டாவது மூன்றாவது ஆண்டுகளுக்கு 12.5 சதவீதமும் நான்காவது, ஐந்தாவது ஆண்டுகளுக்கு 13 சதவீதமும் என அறிவிக்கப்பட்டது. மேலும் இலாப ஈவு அரையாண்டு அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ளது. எவருக்கும் வாய்ப்புக் கிடைக்க வேண்டிய உயர்ந்தளவு முதலீடு ரூ.1,000 என நிறுவனம் வரையறை செய்தது. அலகுகளின் முகமதிப்பு ரூ.100. இத்திட்டத்தில் மறுகொள் முதல் 1984 ஜூன் மாதத்திற்குப் பின்னர் செய்யப்பட்டது. இத்திட்டம் 1987 ஜூலை முதல் தேதி கைவிடப்படும்.

மாதாந்திர வருவாய் அலகுத்திட்டம் (Monthly Income Unit Scheme 1983)

இத்திட்டத்தில் முதலீடு செய்வோர் 1984 மார்ச் முதல் தேதி அறிமுகப்படுத்தப்பட்டு மார்ச், ஏப்ரல் ஆகிய இருமாதங்களுக்கு மட்டும்

அமுலில் இருந்தது. சமுதாய நலனைக் கருத்தில் கொண்டு வரப்பட்ட இத்திட்டம் 55 வயதிற்கு மேலுடையோர்களுக்கும், கைம்பெண்களுக்கும், உடல், மன ஊனமுள்ளவர்களுக்கு நன்மை பயத்தது. இத்திட்டத்தின் சிறப்பு அம்சம் என்னவென்றால் இத்திட்டகாலத்தில் 12 சதவீத இலாப ஈவு ஒவ்வொரு மாதமும் வழங்கப்படும். இத்திட்டத்தில் முதலீடு செய்யக்கூடிய குறைந்தளவு முதலீடு ரூ.5,000 அதிக அளவு பொதுமக்களின் இடையே நிரம்ப ஆதரவு ஏற்பட்டு 24,500 விண்ணப்பங்களின் பேரில் ரூ.49 கோடி முதலீடு செய்யப்பட்டது. 1983, 84ல் இத்திட்டம் மறுபடியும் புகுத்தப்பட்டது.

வளர்ச்சி மற்றும் வருவாய் அலகுத்திட்டம் (Growth and Income Unit Scheme 1983)

இத்திட்டத்தில் முதலீடு செய்வோர்களுக்கு ஆண்டொன்றுக்கு 10 சதவீத இலாப ஈவும் ஐந்தாண்டுகளில் நியாயமான முதலீடு பெருக்கமும் உறுதி செய்யப்படுகின்றன. குறைந்த அளவு முதலீடு பெருக்கமும் உறுதி செய்யப்படுகின்றன. குறைந்தளவு முதலீடு ரூ.3000மும் அதிக அளவு முதலீடு ரூ.5,000மும் ஆகும். இத்திட்டம் ஐந்தாண்டுகளுக்கு மட்டும் என்றிருந்தாலும் ஒவ்வொரு ஆண்டிலும் ஏப்ரல்–அக்டோபர் மாதங்களில் மறுகொள்முதல் செய்திடலாம். 1983மே ஜுன் ஆகிய இரண்டு மாதங்களில் இத்திட்டம் அமுவில் இருந்தபோது 14,700 விண்ணப்பங்களின் பேரில் ரூ.13.5கோடி திரட்டப்பட்டது.

முதல் இலாப அலகுத்திட்டம் (Capital Gains Unit Scheme 1983)

1961–ம் ஆண்டு வருமானவரிச் சட்டத்தின் கீழ் நீண்டகால முதல் இலாபத்திற்கு வரிவிலக்கு பெற்று முதலீடு செய்யும் வகையில் இத்திட்டத்தை நிறுவனம் 1985 டிசம்பர் மாதம் கொண்டு வந்தது. நீண்டகாலச் சொத்துக்களை மாற்றிடும் போது ஏற்படும் இலாபத்தைத் திட்டத்தில் முதலீடு செய்து வரிவிலக்குக் கோரிடலாம். ரூ.10 முகமதிப்புடைய 10ன் மடங்கான அலகுகள் உயர்ந்தளவு ரூ.500க் கு விற்கப்பட்டன. அலகுகளின் விலை அவ்வவ்பொழுது அறிவிக்கப்படும். விற்பனை நாளிலிருந்து மூன்றாண்டுகளுக்கு மறு கொள்முதல் இல்லை. 1987 ஜனவரியிலிருந்துதான் மறு கொள்முதல் உண்டு.

ஒவ்வொரு ஆண்டும் ஜூலை மாதம் இலாப ஈவு அளிக்கப்படும் அதன் அளவு இத்திட்டத்தில் ஈட்டப்படும் வருமானத்தைப் பொறுத்துள்ளது. இத்திட்டத்திற்கு ஆதரவு அதிகமிருந்தது.

நிறுவனத்தின் செயல்முறை

1964–ம் ஆண்டு முதல் 1975–ம் ஆண்டு வரை நிறுவனத்திட்டங்களின் முன்னேற்றம் இவ்வளவு திருப்திகரமாக இல்லை. ஆண்டொன்றுக்கு ரூ.25 கோடிக்கு மேல் முதலீடு வரவில்லை. 1975–76ம் ஆண்டிற்குப் பின்னர் முன்னேற்றம் அதிகம் ஏற்பட்டது. ஆண்டொன்றுக்கு ரூ.100 கோடிக்கு மேல் அலகுகள் விற்கப்பட்டன. அலகுகளின் விற்பனை 1982–83 ரூ.860 கோடிக்கு மேல் உயர்ந்துள்ளது. மொத்த வருமானமும் பாதுகாப்பு நிதியும் குறிப்பிட்ட அளவில் உயர்ந்துள்ளது முதலீடு செய்யப்படும் நிதியளவு ரூ.870 கோடியாக உயர்ந்து உள்ளது. 1975–76ல் அதன் அளவு ரூ.185 கோடியாக இருந்தது, 1964ம் ஆண்டுத் திட்டத்தின் கீழ்தான் அதிக அளவு அலகுகள் விற்கப்பட்டன. அடுத்து 1984ம் ஆண்டு மாத வருவாய் அலகுத்திட்டத்தின் கீழ் ரூ.40 கோடிக்கும் 1982ம் ஆண்டு அலகு திட்டத்தின் கீழ் ரூ.21 கோடிக்கும் அலகுகள் விற்கப்பட்டன.

நிறுவனத்தின் நிதி நிலை நிரந்தரத்தன்மை பாதுகாப்பு நிதி ஏற்படுத்தியதால் வலுவடைந்துள்ளது. 1982–83ல் ரூ.25 கோடியாக இருந்த காப்புநிதி, 1983–84ல் ரூ.50 கோடியாக உயர்ந்துள்ளது. ஏனைய ஒதுக்குகள் ரூ.101 கோடியிலிருந்து ரூ.151 கோடியாக உயர்ந்துள்ளது. நிறுவனத்தின் அனைத்து திட்டங்களின் மூலம் கிடைத்த வருமானம் 1982–83ல் ரூ.102 கோடியாக இருந்தது. ஆனால் அது 1983–84ல் ரூ.141 கோடியாக வளர்ந்துள்ளது.

முதலீடு

அதிக அளவு அலகுகளின் விற்பனைகளில் நிறுவனத்தின் வருவாய் அதிகரிக்கப்பட்டு பலத்திட்டங்களில் முதலீடு செய்யப்பட்டத்தொகை 1982–83ல் ரூ.780 கோடியாகும் அடுத்தாண்டில் மேலும் ரூ.368 கோடி அதிகரித்துள்ளது. 1983–ல் கூட்டுருத்துறையில் நிறுவனம் செய்த முதலீடு ரூ.708 கோடி 1981–ல் இம் முதலீடு ரூ.413 கோடியாகத்தான் இருந்தது. கம்பெனி கடனீட்டுப்

பத்திரத்தில் செய்த முதலீடு 1981–ல் 34 சதவீதமாக இருந்தது. 1983ல் 41 சதவீதமாகக் காட்டியுள்ளது. ஆனால், நேர்மைப் பங்கு, முன்னுரிமைப் பங்குகளில் செய்த முதலீடு குறைந்துள்ளது. ஜவுளி, பொறியியல், இரசாயனம், மருந்து போன்ற தொழில்களில் சராசரி 13.22 சதவீதம் முதலீடு 1982–83ல் செய்யப்பட்டுள்ளது. போக்குவரத்து கருவிகள், இரும்பு எஃகு மின்சார உற்பத்தி போன்ற தொழில்களில் 5 முதல் 8 சதவீதம் முதலீடு செய்யப்பட்டுள்ளது. சிமெண்டு காகிதப் பொருள் போன்ற தொழில்களில் 5 சதவீதம் முதலீடு செய்யப்பட்டுள்ளது. 1983ல் நிறுவனம் 745 நிறுமங்களில் முதலீடு செய்துள்ளது. இந்நிறுவனம் 661 கம்பெனியில் நேர்மைப் பங்குகளிலும், 164 கம்பெனிகளில் முன்னுரிமைப்பங்குகளிலும், 285 கம்பெனிகளில் கடனீட்டுப் பத்திரங்களிலும் முதலீடு செய்துள்ளது. நேரடி நிதியுதவியளிப்பதிலும் நிறுவனம் முன்நிற்கிறது.

நிறுவனம் பெற்றிடும் கடன் வைப்புகளை தன்னுடைய முதலீடுகளுக்குப் பயன்படுத்துகிறது. 1983–ல் அத்தகைய வைப்புகளின் அளவு ரூ.115 கோடி அலகுகளை 181 கம்பெனிகளில் நிறுவனம் முதலீடு செய்தது. சுருங்கச் சொன்னால் 1982–83ல் நிறுவனத்தின் முதலீடு நல்ல முறையில் இருந்தது. நல்ல முதலீட்டு முறை, வருவாய் விநியோகம், திரும்பப் பெறும் வருவாய் போன்றவைகள் தான் அதற்கு முக்கியகாரணமாகும். 1982–83ல் ஒட்டுமொத்தப் பெருக்கம் 35 சதவீதமாகும். அவ்வாண்டில் நேர்மை பங்குகள் மட்டும் 102 சதவீதம் உயர்ந்துள்ளது.

மதிப்பீடு

இந்திய அலகு நம்பிகையுறுதி நிறுவனத்தின் பணிநாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. ஆனால் அதில் கீழ்க்கண்ட குறைபாடுகள் உள்ளன.

1. நிறுவனம் தன் வருமானத்தில் 90 சதவீதத்தை அலகுதாரர்களுக்குப் பிரித்துக் கொடுத்துவிடுவதால் அதன் மறு முதலீட்டிற்கு குறைந்த நிதிதான் உள்ளது. அதாவது அதனுடைய வருவாயிலிருந்து அதன் நிதி வளத்தைப் பெருக்க முடியாது.

2. நிறுவனத்தின் செலவு விகிதமும் அதிகமாக உள்ளது. அதாவது அதன் மொத்த வருமானத்தில் அதன் செலவு 12 சதவீதம் உள்ளது. இது

இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளில் உள்ள செலவு விகிதத்தைவிட அதிகமானது.

3. நிறுவனத்தின விற்பனை மறுகொள்முதல் போன்றவைகளில் 60 சதவீதம் சென்னை, பம்பாய், கல்கத்தா, டில்லி போன்ற பெரிய நகரங்களில் மட்டுமே நிகழ்கின்றன. அவ்வாறில்லாமல் நாட்டில் பலபாகங்களிலும் அவைகள் நிகழும்படி இருக்க வேண்டும்.

4. நிறுவனத்தின் விலைக்கோட்பாடு திட்டத்திலும் மாறுதல் தேவை. அலகுகள் சமநிலையில் அதாவது முகமதிப்பில் விற்கப்படும்போது மட்டும் தான் அலகுகளின் விற்பனைக் கூடியுள்ளது. அதாவது முதலீடு செய்வோர்கள் அலகுகளை முனைம விலையில் வாங்கிட தயாராக இல்லை. விலைக்கோட்பாடுத்திட்டத்தை மாற்றியமைத்திட அதிக அளவு முதலீடு செய்வோர்களைக் கவரவேண்டும். மேலும் அலகுகளின் விலைகளில் சில சலுகைகள் காட்ட வேண்டும்.

5. முதலீடு செய்வோர்கள் நிறுவனத்தின் முதலீடுப் பெருக்கத்தின் பலனை அடையவில்லை எனக் கூறப்படுகிறது. அதாவது அப்பெருக்க வருவாய் முதலீடு செய்வோர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுவதில்லை.

6. நிறுவனத்தில் முதலீடு செய்யும் அலகுதாரர்களுக்கு அதன் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் பங்கு பெறும் உரிமையில்லை.

நிறுவனம் நல்லமுறையில் பணியாற்றிட வேண்டுமானால் மேற்கூறிய குறைபாடுகளைப் போக்க வேண்டும். மேற்கூறிய சில குறைபாடுகள் இருந்தாலும் நிறுவனம் சிறுசேமிப்பு முதலீடு செய்வோர்களுக்கு மிகவும் பயன் உடையதாக இருக்கிறது. ஆனால் நம் நாட்டு புனர் அமைப்புத் திட்டங்களுக்கு வேண்டிய நிதியினை இச்சிறுசேமிப்புத்துறை தந்திட நீண்ட காலம் பொறுத்திருக்க வேண்டும். மேலும் உலகிலுள்ள மற்ற அலகு நம்பிக்கையுறுதி நிறுவனங்களைப் போல் நம் நிறுவனம் அவ்வளவு வெற்றிப்பெறவில்லை.

ஆயுள் காப்பீட்டுக் கழகம்
(Life Insurance Corporation of India)

முன்னுரை

ஆயுள் காப்பீட்டுத் தொழில் நாட்டுடைமையாக்கப்பட்ட 1956-ம் ஆண்டில் ஆயுள் காப்பீட்டு சட்டத்தின் கீழ் இந்திய ஆயுள் காப்பீட்டுக்கழகம் நிறுவப்பட்டது. 1956-ம் ஆண்டு செப்டம்பர் முதல் தேதி 243 காப்பீடு நிறுவனங்களின் வியாபாரத்தை இது எடுத்துக் கொண்டது. நகரங்களிலும், கிராமப்புறங்களிலும் ஆயுள் காப்பீட்டு வியாபாரத்தைப் பிரபலப்படுத்தியது. மக்களின் சேமிப்பை நல்ல முறையில் ஒன்று திரட்டுவது காப்பீடு ஆவணதாரர்களின் நலனைப் பாதுகாத்தல், அவர்களுக்கு நல்லமுறையில் சேவை செய்தல் போன்றவைகள் நிறுவனத்தின் முக்கியக் குறிக்கோளாகும். காப்பீட்டு வியாபாரத்தை நாட்டில் நடத்துவதில் ஒரு புதிய சகாப்தத்தை ஏற்படுத்தி, மத்திய, கீழ்த்தர மக்களிடமிருந்தும் அவர்களின் சேமிப்பைத் திரட்டி ஒரு பயனுள்ளப் பணியை இது செய்துவருகிறது. தன்னிடமுள்ள அதிக அளவு நிதி வசதியினால் முதலீட்டுச் சந்தையிலும் பங்கு கொண்டு தொழில்கள் வளர உதவி செய்து வருகிறது.

முதல்

நிறுவனத்தின் செலுத்தப்பட்ட முதல் ரூ.50 கோடி. ஆயுள் காப்பீட்டு கழகம் 1982-83ல் திரட்டிய சேமிப்பு ரூ.1000 கோடி, அதன் வளரும் நிதி ரூ. 8632 கோடி அது செய்துள்ள வியாபாரத்தின் மதிப்பு ரூ.11,554 கோடி.

நிதியுதவியின் தன்மை

பொதுத்துறை நிறுவனங்கள், பொது நிறுவனங்கள் ஆகியவைகளின் பங்கு, பத்திரம் ஆகியவைகளில் முதலீடு செய்து அவைகளுக்கு நிதியுதவியளிக்க கழகத்திற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. தனியார் நிறுவனங்களில் அது முதலீடு செய்வதில்லை. காப்பீட்டு கழகம் நிறுவனங்களின் முன்னுரிமைப் பங்கு, நேர்மை பங்கு, கடனீட்டுப் பத்திரங்கள்

ஆகியவைகளில் முதலீடு செய்கிறது. காப்பீட்டு கழகம் பாங்குகளுக்கும், கடனீட்டுப்பத்திரங்களுக்கும் ஒப்புறுதி வழங்குகிறது. ஆனால் பின்னால் செலுத்தப்படும் கடன்களுக்கு உத்திரவாதம் அளிப்பதில்லை.

நிதியுதவித் திட்டம்

இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம் முக்கியமான ஒரு முதலீட்டு நிறுவனமாகும். எனவே அதன் நிதியுதவி திட்டம் நல்லமுறையில் தீட்டப்படவேண்டும். பணத்திற்குப் பாதுகாப்பு தரவேண்டி பலவகையில் முதலீடு செய்யவேண்டிய அவசியம் போன்றவைகளைக் கருத்தில் கொள்ள வேண்டும். வாணிகக் கோட்பாடுகளைக் காப்பீட்டுக் கழகம் கருத்தில் கொண்டு அதேசமயம் தன் திட்ட ஆவணதாரர்களின் நலனையும் கருத்தில் கொண்டு இத்திட்டம் தீட்டப்பட வேண்டும். மேலும் நாட்டு நலனையும் அது கருத்தில் கொள்ள வேண்டும். முதலீடுத் திட்டம் தீட்டும் போது கீழ்க்கண்ட கருத்துகளை காப்பீட்டுக் கழகம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

1. காப்பீட்டுக் கழகம் செய்யும் முதலீடு திட்டம் ஆவணதாரர்களுக்கு அதிக அளவு நலனைத் தரும் படியாக இருக்க வேண்டும். ஆனால் அதே சமயத்தில் நாட்டு நலனையும் மறந்திடக் கூடாது.
2. பலவகைப்பட்ட தொழில்கள், பிரதேசங்கள் பாங்குகள் போன்றவைகளில் பரவலாக முதலீடு செய்யப்பட வேண்டும்.
3. காப்பீட்டுக் கழகம் ஒரு முதலீடு செய்பவராக மட்டும் தான் பணியாற்ற வேண்டும். தற்காலிக விலை மாறுதலால் பயனுடையும் ஊகவணிகர், பங்குத்தரகர்கள் போல் செயல்படக்கூடாது.
4. காப்பீட்டுக் கழகம் தன்னுடைய முதலீட்டுத்துறையை அடிக்கப் பரிசீலித்து செய்ய வேண்டிய மாற்றங்களைச் செய்ய வேண்டும்.
5. பாங்குகளுக்கும் ஒப்புறுதி அளிக்கும் போது கவனமுடன் நன்கு விசாரித்து செயல்பட வேண்டும்.
6. தான் முதலீடு செய்துள்ள நிறுவனங்களின் மேலாண்மையிலும் கட்டுப்பாட்டிலும் கழகம் கவனமாக செயல்பட வேண்டும்.

7. இறுதியாகக் காப்பீட்டுக் கழகத்தின் நிதியுதவித்திட்டம் 1956–ம் ஆண்டின் ஆயுள் காப்பீட்டுச் சட்டத்தின் பிரிவு 6(1)ன் விதிமுறைகளுக்கு உட்பட்டு இருக்க வேண்டும்.

1983–ஆம் ஆண்டில் .பொதுத்துறையில் ரூ.5923 கோடியும், கூட்டுறவுத்துறையில் ரூ.8.5 கோடியும் தனியார் துறையில் ரூ.820 கோடியும் கழகம் முதலீடு செய்திருந்தது. அதே ஆண்டில் பெரிய அளவுக் குழு நிறுவனங்களில் ரூ.374 கோடியும், தனிப் பெரிய நிறுவனங்களில் ரூ.79 கோடியும், 1969–ம் ஆண்டு முற்றுரிமைத் தடை வணிகச் செயல்பாடு சட்டம் பிரிவு 26–ன் கீழுள்ள நிறுவனங்களில் ரூ.460 கோடியும், பொதுத்துறையில் ரூ.196 கோடியும், முதலீடு செய்தது.

தொழில்களுக்கு நிதியுதவி

மேற்கூறியபடி காப்பீட்டுக் கழகம் பொதுத்துறை நிறுவனங்களுக்கும், பொது நிறுவனங்களுக்கும் நிதியுதவி வழங்கும் வகையில் அவைகளின் பங்குகளை வாங்குகின்றது. பங்குகளை ஒப்புறுதி செய்கிறது மேலும் அவைகளுக்கு நிபந்தனைக்கடன்களையும் வழங்குகிறது. மாநில அளவில், நாட்டளவில் உள்ள எல்லா நிதியுதவி நிறுவனங்களின் பங்குகளையும், கடனீட்டுப் பத்திரங்களையும் கழகம் வாங்கும் வகையில். எல்லாத் தொழில்களுக்கும் நேரடியாக இல்லாவிட்டிலும் ஒரு விதத்தில் மறைமுகமாக நிதியுதவி வழங்குகிறது என்றால் அது மிகையில்லை. காப்பீட்டுக் கழகமே ஒருநிதியுதவி முதலீட்டு நிறுவனமாகத் திகழ்வதால் இது ஒப்புறுதித் தொழில் மற்றும் ஒரு முற்றுரிமைப் பெற்று தன்னிகர் இல்லா நிறுவனமாக விளங்குகின்றது. மொத்த நிதியுதவியில் 10 சதவீதத்தையும், ஒப்புறுதியில் 35 சதவீதத்தையும் காப்பீட்டுக் கழகம் செய்து வருகின்றது.

தொழில் வாரியான நிதியுதவி

காப்பீட்டுக் கழகத்தின் நிதியுதவியை பெற்றத் தொழில்களில் பொறியியல் துறை முன்னிற்கிறது. அதன் பின்னர் பருத்தி நெசவாலைத் தொழிலுக்கும், இரும்பு எஃகுத் தொழிலும், மின்சாரத் தொழிலும் வரிசை கிரமமாக வருகின்றன. சர்க்கரை, சிமெண்டு தொழில்களும் கணிசமான நிதியுதவியைக் கழகத்திடமிருந்து பெறுகின்றன. சாயம், இரசாயணம் போன்ற

தொழில்களும் பெருமளவில் நிதியுதவிப் பெறுகின்றன. சனல், சுரங்கத் தொழில்களின் நிதியுதவிக் கொஞ்சம் குறைந்து காணப்படுகிறது.

மாநில வாரியான நிதியுதவி

காப்பீட்டுக் கழகத்தின் மொத்த முதலீட்டுத் தொகையில் 70 சதவீதத்திற்கு மேலானத் தொகை தொழில் துறையில் முன்னேற்றம் காணும் மாநிலங்களான மகாராஷ்டிரா, குஜராத், தமிழ்நாடு, மேற்கு வங்காளம் போன்றவைகளில் உள்ள தொழில் நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்டுள்ளன. மொத்த முதலீட்டில், 28.6 சதவீதம் பெற்று மேற்கு வங்காளம் முதன்மையாகவும் 28.3 சதவீதம் பெற்று மகாராஷ்டிரா அடுத்தும் விளங்குகின்றன. மீதமுள்ள முதலீடு 15 மாநிலங்களிலும், மத்திய ஆட்சிக்கு உள்பட்ட பிரதேசங்களிலும் பரவலாக உள்ளது. ஏழுமாநிலங்கள் மிகவும் குறைவாக முதலீட்டைப் பெற்றுள்ளன. ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், உத்திரப்பிரதேசம் போன்ற மாநிலங்கள் மிகவும் சொற்பமான நிதியுதவியைப் பெற்றுள்ளன. ஆனால் பீகார் மாநிலம் மட்டும் 12 சதவீதத்திற்கு மேலான நிதி உதவியை பெற்றுள்ளது.

மதிப்பீடு :

மேற்கூறிய விவரங்களிலிருந்து ஆயுள் காப்பீட்டுக் கழகம் தன் சட்டத்தில் சொல்லியபடி அரசினர் – பொதுத்துறைப் பங்குகளில் முதலீடு செய்து நாட்டின் சமூக பொருளாதார நோக்கங்களுக்குப் பணிபுரிந்து வருவது நன்றாக விளங்குகிறது. இருப்பினும் தனது முக்கால் பங்கு முதலீட்டை மேற்கூறிய துறைகளிலேயே முதலீடு செய்வது திட்ட வணத்தாரர்களின் நலனுக்கு அவ்வளவாக நன்மை பயப்பதாக இல்லை. கழகம் தன் முதலீட்டின் பெரும் பகுதியை தனியார் துறையில், குறிப்பாக கூட்டுரு துறையில் முதலீடு செய்திட வேண்டும். அவ்வாறு செய்தால் அத்துறையின் நிதிப் பிரச்சனைகளுக்கு தீர்வு காணுவது மட்டுமல்லாமல் நிறைய வருவாயும் கிட்டும். கழகம் முதலீடு, பாதுகாப்பு – நிரந்தர வருவாய் போன்றவைகளுக்குப் பலவகைகளில் தன் முதலீடு திட்டத்தை மாற்றி அமைக்க வேண்டும். அதாவது பலவகையான சொத்துக்கள், பலவகை தொழில் நிறுவனங்கள், பல பிரதேசங்களிலுள்ள தொழில்கள் போன்றவகைகளில் தன் முதலீட்டைப் பரவலாகச் செய்திட வேண்டும்.

இந்திய தொழில் நிதி நிறுவனம் (Industrial Finance Corporation of India)

தொழில்களுக்கு நீண்ட கால நிதியுதவியளிக்கும் பொருட்டு பாராளுமன்றத்தில் சிறப்புச் சட்டம் இயற்றப்பட்டு 1948–ம் ஆண்டு ஜுலை மாதம் முதல் தேதி இந்நிறுவனம் அமைக்கப்பட்டது. நாட்டு விடுதலைக்குபின் அமைக்கப்பட்ட நிதியுதவி நிறுவனங்களில், இது தான் முதலில் அமைக்கப்பட்ட நிறுவனம் ஆகும். தொழில் நிறுவனங்களுக்கு வங்கி நிதியுதவி கிடைக்காத போதும் வங்கிகள் வெளிநாட்டு நிதிதிரட்ட முடியாத போதும் உதவி செய்வதே இதன் முக்கிய குறிக்கோளாகும். இச்சட்டத்தின் படி தொழில் நிறுவனம் என்பது ஒருவரையறுக்கப்பட்ட பொது (அ) கூட்டு (அ) தனியார் நிறுவனமாக இருக்கலாம். சரக்குகளின் உற்பத்தி, பாதுகாப்பு, பதனிடுதல், கப்பல் கட்டுதல், சுரங்கம், உணவகம், மினசார உற்பத்தி, இதரவிசை உற்பத்தி போன்றவைகளில் ஈடுபட்டுள்ள கூட்டுறவுச் சங்கமும் தொழில் நிறுவனமாகும். தயாரிப்பில் ஈடுபடாத நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், தனி வியாபாரிகள் போன்றவர்களுக்கு நிறுவனம் நிதியுதவி செய்திடாது. ஆனால் 1970–ம் ஆண்டிலிருந்து அரசு தொழில் நிறுவனங்களுக்கு நிறுவனம் நிதியுதவி அளித்து வருகிறது.

நிதியுதவி

ரூ.25 லட்சம் அல்லது அதற்கு மேல் கடன் கேட்டுவரும் வேண்டுகோளை நிறுவனம் கவனிக்கிறது. இந்நிறுவனத்தின் நிதியுதவி கீழ்க்கண்ட விதங்களில் அமைந்துள்ளது.

1. 25 ஆண்டுகளில் திரும்பச் செலுத்தப்படும் நிறுவனங்களின் கடன்களுக்கும், கடனீட்டுப் பத்திரங்களுக்கும், இது உத்திரவாதம் அளிக்கிறது. மேலும் தொழில் நிறுவனங்கள் அட்டவணை வங்கிகள் அல்லது மாநில கூட்டுறவு வங்கிகளில் இருந்துப் பெற்றிடும் கடன்களுக்கும் உத்திரவாதம் அளிக்கிறது.
2. 25 ஆண்டுகளில் திரும்பச் செலுத்தப்படும் கடன்களை அளிப்பதும் அல்லது தொழில் நிறுவனங்களின் கடனீட்டுப் பத்திரங்களை வாங்குவதும், நிறுவனத்தின் முக்கிய செயலாகும். அத்தகைய

கடன்களையும், கடனீட்டுப் பத்திரங்களையும் நிறுவனம் நேர்மைப் பங்குகளாக மாற்றிடலாம்.

3. தொழில் நிறுவனங்களின் பங்குகள், பத்திரங்கள், கடனீட்டுப் பத்திரங்கள் ஆகியவைகளை நிறுவனம் ஒப்புறுதி செய்கிறது.

4. கடன் பெறத் தகுதி வாய்ந்த நிறுவனங்களின் பங்குகளை நிறுவனம் நேரடியாகவே கூட வாங்கிடலாம்.

5. முதலினச் சரக்குகளை இறக்குமதி செய்வோர்களின் தள்ளி வைக்கப்பட்ட செலுத்தல்களுக்கும் கழகம் உத்திரவாதம் அளிக்கிறது. நம்நாட்டில் உற்பத்திச் செய்யப்படும் முதலினச் சரக்குகளுக்குச் செலுத்தப்படும் செலுத்தல்களுக்கும் கழகம் உத்திரவாதம் அளிக்கிறது மைய அரசின் முன் அனுமதி பெற்று அயல்நாட்டு வங்கிகள் அல்லது நிதியுதவிக் கழகங்கள் ஆகியவைகளிலிருந்துப் பெற்றிடும் கடன்களுக்கும் கழகம் உத்திரவாதம் அளிக்கின்றது.

6. தொழில் நிறுவனங்களுக்கு மைய அரசு, உலக வங்கி போன்றவைகள் அளித்துள்ள கடன்களுக்கு முகவராக இந்நிறுவனம் விளங்குகிறது.

கடன் அளவு

தொழில் நிறுவனங்களுக்கு இந்நிதி நிறுவனம் அளித்திடும் கடன் அளவு ரூபாய் ஒரு கோடி அல்லது நிறுவனத்தில் செலுத்தப்பட்ட மூலதனத்தில் 10 சதவீதமாகும். தகுந்தப் பிணையம் பெற்று உயர்ந்தப்பட்சம் 15 ஆண்டுகளுக்குக் கடன் தரப்படுகிறது. இந்நிறுவனம் ஒப்புறுதி செய்தப்பங்குகளை ஏழு ஆண்டுகளுக்குள் மீட்கப்பட வேண்டும். புதிய தொழிற்சாலைகளைத் துவக்குதல், ஏற்கனவே உள்ள நிறுவனங்களைப் பெருக்குதல், நவீனப்படுத்துதல், புதுப்பித்தல் போன்றவைகளுக்கு நிறுவனம் கடன் வழங்குகிறது. வட்டி விகிதம் 5½ சதவீதத்திலிருந்து 7 சதவீதம் வரை உண்டு. அசலையும் வட்டியையும் குறிப்பிட்ட காலத்தில் செலுத்தினால் ½ சதவீதம் தள்ளுபடி உண்டு. அயல் நாட்டுப் பணத்தில் தரப்படும் கடன்களுக்கு வட்டி 8¼ சதவீதம் வசூலிக்கப்படுகிறது. இங்கும் ½ சதவீதம் தள்ளுப்படி உண்டு. ஆனால், 1/2 சதவீதம் இதரக் கட்டணங்களுக்காக வசூலிக்கப்படும். வட்டி வாங்கப்பட்ட கடன் தொகை மீதும் நிறுவனக் கடன்தொகை மீதும் தான் வட்டி

வசூலிக்கப்படுகிறது. வழங்கப்பட்டக் கடன் மீது ஒரு சதவீதம் பொறுப்பு செலவிற்காகப் பணம் எடுத்துக் கொள்ளப்படுகிறது.

நிதிமூலம்

இந்நிதி நிறுவனத்தின் வெளியிடப்பட்ட பங்குமுதல் ரூ.10 கோடி ஆகும். அது ரூ.500 மதிப்புள்ள 20,000 பங்குகளைக் கொண்டது. இதில் 500 சதவீதத்தை இந்திய தொழில் அபிவிருத்தி வங்கியும், மீதியை அட்டவணை வங்கிகள், கூட்டுறவு சங்கங்கள், ஆயுள் காப்பீட்டு கழகம், இதர காப்பீட்டு நிறுவனங்கள் பெற்றுள்ளன. மேலும் ரிசர்வ் வங்கி, மத்திய அரசு, இந்திய தொழில் வளர்ச்சி வங்கி, அயல் நாட்டு முகவர்கள் ஆகியவர்களிடமிருந்து இந்நிதி நிறுவனம் கடன் வாங்கிடும் தன்னுடைய நடைமுறை முதலை அதிகரிக்கும் பொருட்டு நிறுவனம் அவ்வப்பொழுது பங்குகளையும் பத்திரங்களையும் வெளியிட்டு தன்னுடைய நடைமுறை முதலின் தேவையைத் தீர்த்துக் கொள்கிறது. பத்திரங்களின் அசல் வட்டி போன்றவைகளைத் திரும்பச் செலுத்துவதற்கு மைய அரசு உத்திரவாதம் அளிக்கிறது.

செயல்முறை

கடந்த 38 ஆண்டுகளாக இந்நிதி நிறுவனம் 1705 தொழில் திட்டங்களுக்கு ரூ.1818 கோடி நிதியுதவியளித்துள்ளது. இவ்வுதவியில் 65 சதவீதம் புதிய நிறுவனங்கள் நிறுவவும், மீதியுள்ள 35 சதவீதம் ஏற்கனவேயுள்ள நிறுவனங்களைப் பெருக்கிடவும், நவீன மயமாக்கிடவும் பயன்படுத்தப் பட்டுள்ளது. தொழில் நிறுவனத்திட்டங்களின் மொத்த செலவு ரூ.14 4747 கோடியாகும். இவைகளுக்கு அளிக்கப்பட்ட கடன் ரூ. 1346 கோடியாகும். இது அங்கீகரிக்கப்பட்டக் கடனின் 74 சதவீதமாகும். 1983 ஜுன் மாத இறுதியில் வழங்கப்பட்ட கடனின் நிலுவை ரூ.865 கோடியாகும். துறைவாரியாகப் பார்க்கும் போது கூட்டுறவுத் துறையில் உள்ள 136 நிறுவனங்களுக்கும் கூட்டுத் துறையில் 136 நிறுவனங்களுக்கும், பொதுத் துறையில் 105 நிறுவனங்களுக்கும், தனியார் துறையில் 935 நிறுவனங்களுக்கும் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளன. சதவீதத்தில் சொல்ல வேண்டுமானால் கூட்டுறவுத்துறைக்கு 13 சதவீதம், கூட்டுத்துறைக்கு 12 சதவீதம், பொதுத்துறைக்கு 12 சதவீதமும், தனியார் துறைக்கு 12 சதவீதமும் நிதியுதவி

தரப்பட்டுள்ளது. அனுமதி வழங்கப்பட்ட 1818 கோடியில் 78 சதவீதம் ரூபாய் கடனாகவும் ஒப்புறுதியாகவும் 4 சதவீதம் நேரடியாக கடனாகவும் தரப்படுகின்றன. 1983 ஜூன் மாதம் இறுதிவரை கடன்தொகை மகராஷ்டிராவிற்கு 16 சதவீதமும், குஜராத்திற்கு 11 சதவீதமும், உத்திர பிரதேசத்திற்கு 10 சதவீதமும், தமிழ் நாட்டிற்கு 9 சதவீதமும், ஆந்திரபிரதேசத்திற்கு 8 சதவீதமும், கர்நாடாகவிற்கு 8 சதவீதமும், மீதியுள்ள 37 சதவீதம் மற்ற மாநிலங்களுக்கும் பிரித்து வழங்கப்பட்டது.

கூட்டுறவு சங்கங்களுக்கு நிறுவனம் வழங்கிய நிதியுதவி மிகவும் பாராட்டக்கூடிய அதுவும் சிறப்பாக அத்துறையில் உள்ள சர்க்கரை ஆலைகளுக்கு மிகவும் நிதியுதவியளித்துள்ளது. 1983ம் வருடம் ஜூன் மாதம் முடிய தொழில் கூட்டுறவுகளுக்கு மட்டும் நிறுவனம் 236 திட்டங்களுக்கு ரூ.247 கோடியளித்துள்ளது.

மதிப்பீடு

இந்நிதி நிறுவனத்தின் செயல்முறைகளைப் பலர் விமர்சனம் செய்கின்றனர். அவைகளின் முக்கியமான விமர்சனங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

1. கடன் வழங்குவதில் பாரபட்சமும், வேண்டியவர்களுக்கு உதவுவதும் இந்நிறுவனத்தின் செயலாகும்.
2. அரசுக் கட்டுப்பாடு இல்லாத நிலையில் இந்நிறுவனம் ஒரு பெரிய தொழில் மோசடி செய்துதீயவழியில் கொள்ளை லாபம் சம்பாதித்திட முயல்கிறது.
3. பின் தங்கிய மாநிலங்களில் தொழில்களை அபிவிருத்தி செய்திட இந்நிதி நிறுவனம் தவறியுள்ளது.
4. பெரிய அளவு தொழில்களுக்கு மட்டும் உதவி செய்து விட்டு நடுத்தர சிறிய அளவு தொழில்களைப் புறக்கணித்து விட்டது.
5. ஐந்தாண்டு திட்டத்தில் கூறப்பட்டுள்ள தொழில்களை எடுத்து ஏனைய தொழில்களுக்குக் இந்நிறுவனம் கடன் தருகிறது.
6. நிதியுதவி பெற்ற நிறுவனங்களைக் இந்நிதி நிறுவனம் மேற்பார்வையிடவில்லை அதனால் அவைகள் உற்பத்தியையும், உற்பத்தி திறணையும் அதிகரிக்கவில்லை.

7. நிறைய இலாபம் சம்பாதிக்கும் நிறுவனங்களுக்கும் வேறு கடன் வசதி பெறும் வாய்ப்புள்ள நிறுவனங்களுக்கு இந்நிதி நிறுவனம் நிதியுதவியளிக்கின்றது.

இத்தகைய குறைபாடுகளிலிருந்தாலும் இந்நிதி நிறுவனத்தின் நிதியுதவியால் வேலை வாய்ப்பு அதிகரிப்பும், புதிய தொழில் நிறுவன தோற்றமும், முதலீடு செய்வோர்களின் வகைகளின் அதிகரிப்பும், உற்பத்தி ரகங்களின் விஸ்தரிப்பும், பிரதேச வேறுபாட்டை குறைத்திடும் நிலையும் ஏற்பட்டுள்ளன.

முன்னேற்றத்திற்கான ஆலோசனைகள்

பொதுத்துறை நிறுவனங்களின் குழு (1963–69) இந்நிதி நிறுவனம் தன் செயல்முறைகளில் அபிவிருத்தியைக் காட்ட கீழ்க்கண்ட ஆலோசனைகளைக் கூறியுள்ளது.

1. இந்நிறுவனம் கடனுதவி தரும் முறைகளை அவ்வப்பொழுது மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டும். அதை விளம்பரப்படுத்த வேண்டும்.
2. கடன் விண்ணப்பங்களை மதிப்பீடு செய்து சரிபார்க்கும் முறையை துரிதப்படுத்த வேண்டும். தேவையற்ற நடவடிக்கைகளை விட்டு விட வேண்டும்.
3. தொழிலில் பின்தங்கிய பகுதிகளிலிருந்து வரும் விண்ணப்பங்களுக்கு ஆதரவு அளிக்க வேண்டும்.
4. தொழில் வளர்ச்சியில் பின் தங்கியப் பகுதிகளில் தொழில் நுட்ப ஆலோசனைகளை வழங்கிட ஆவண செய்யவேண்டும்.
5. நிதியுதவியளிப்பதில் பெரிய, மத்தியதர, சிறு நிறுவனங்களுக்கு சம வாய்ப்பு அளிக்க வேண்டும்.
6. கடன் கோரி வரும் விண்ணப்பங்களைத் தரப்படுத்த வேண்டும்.
7. ஒரு நிறுவனத்தின் ஆய்வு (விசாரணை) முடிவை மற்ற நிறுவனங்களுக்கும் தெரிவித்தால் வேலை பளுக் குறையும்.
8. கடன்களைத் திரும்ப வசூல் செய்வதற்குரிய நேரத்தில் சரியான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

9. இந்நிறுவனத்தை இந்திய தொழில் வளர்ச்சி வங்கியோடு இணைத்திட வேண்டும்.

மாநிலத் தொழில் நிதியுதவிக் கழகங்கள் (State Finance Corporations)

நாடு விடுதலையடைந்த பின்னர் இந்திய அரசு மாநிலங்களில் சிறிய மத்திய தர தொழில் வளர்ச்சிக்கான நிதியுதவி அளிக்க வேண்டும் என்ற அவசியத்தை உணர்ந்தது. 1948–ம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்தியத் தொழில் நிதியுதிவிக் கழகம் பெரிய அளவுத் தொழில்களுக்குத்தான் நிதியுதவியளித்தது. எனவே சிறிய–மத்தியதரத் தொழில்களுக்கு நிதியுதவியளிக்க வேண்டும் என்று மாநில அரசுகள் ரிசர்வ் வங்கியின் ஒப்புதலோடு 1951–ம் ஆண்டில் மாநில தொழில் நிதியுதவி கழகச் சட்டத்தைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த அதே ஆண்டு செப்டம்பரில் சட்டம் நிறைவேற்றப்பட்டு, 1952–ம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் அமுலுக்கு வந்தது. இச்சட்டத்தின் படி மாநில அரசுகள் தத்தம் மாநிலங்களில் உள்ள சிறிய, நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு நிதியுதவியளித்து வருகின்றன.

நிதிமூலம்

இக்கழகங்களின் முதல் அமைப்பு குறைந்தளவு ரூ.50 இலட்சம் ; உயர்ந்தளவு ரூ.5 கோடி பங்குமுதல் சமமதிப்புடையப் பங்குகளாக மாநில அரசுகளால் பிரிக்கப்படுகிறது. இக்கழகங்களின் பங்குகளை மாநில அரசு, ரிசர்வ் வங்கி, அட்டவணை வங்கிகள், கூட்டுறவு வங்கிகள், காப்பீட்டு நிறுவனங்கள், ஏனைய நிதியுதவிக்கழகங்கள், பொதுமக்கள் ஆகியோர்கள் வாங்குகின்றனர். அசல்–பங்காதாயம் போன்றவைகளின் செலுத்தல்களுக்கு மாநில அரசு உத்தரவாதம் அளிக்கிறது. ஆண்டு பங்காதய விகிதத்தை மத்திய அரசின் இசைப்போடு மாநில அரசு நிர்ணயிக்கிறது. உயர்ந்தளவு பங்காதாயவிகிதம் 5 சதவீதமாகும்.

பங்கு முதலைத் தவிர கழகம் பத்திரங்களையும், கடனீட்டுப் பத்திரங்களையும் வெளியிட்டு போதுமான நிதியினைப் பெறுகிறது. இத்தகைய கடன்கள் கழகத்தின் செலுத்தப் பட்ட முதல் காப்புநிதியின் தொகையின் 10 மடங்குகளுக்கு மேல் இருக்கக்கூடாது. ஐந்தாண்டுகளுக்குத் திரும்பச்

செலுத்தக் கூடிய பொதுமக்கள் வைப்புகளைக் கழகம் ஏற்கலாம். ஆனால் அத்தகைய வைப்புகளின் மதிப்பு கழகத்தின் செலுத்தப்பட்ட முதலுக்குமேல் இருக்கக் கூடாது. அரசுப் பத்திரங்களைக் காப்புக் கழகம் ரிசர்வ் வங்கியிலிருந்து கடனாகப் பெற்றிடலாம்.

மேலாண்மை :

ஒரு மாநில தொழில் நிதியுதவிக் கழகம் 10 இயக்குநர்கள் கொண்ட அவையால் நிர்வகிக்கப்படுகிறது. மேலாண்மை இயக்குநரை மைய அரசு நியமிக்கிறது. மாநில அரசு 3 இயக்குநர்களையும், ரிசர்வ் வங்கி ஒரு இயக்குநரையும், இந்தியத் தொழில் நிதியுதவிக் கழகம் ஒரு இயக்குநரையும் நியமிக்கின்றன. மீதியுள்ள நான்கு இயக்குநர்களை வங்கிகள், கூட்டுறவு வங்கிகள், ஏனைய நிதியுதவிக் கழகங்கள் நியமிக்கின்றன. முடிவு எடுப்பதில் இயக்குநர் அவைக்கு உதவி செய்திட கழகம் ஒரு அறிவுரைக் குழுவைப் பெற்றுள்ளது. பெரிய கோட்பாட்டுத் திட்டங்களை மாநில அரசு தீர்மானிக்கிறது. இக்கழகங்களை மேற்பார்வையிடும் அதிகாரம் ரிசர்வ் வங்கிக்கு உண்டு. கழகங்களின் ஆண்டு கூட்டங்களை நடத்திடவும் இதற்கு உரிமையுண்டு அரசு, வங்கிகள், கூட்டுறவு வங்கிகள் போன்றவைகளோடு கழகத்தின் பணியை ஒருங்கிணைப்பு செய்திடவும் இதற்கு அதிகாரமுண்டு.

பணிகள்

20 ஆண்டுகளுக்குள் செலுத்தப்படும் கடன்களை தொழில் நிறுவனங்கள் வாங்கியிருந்தால் அவைகளுக்கு கழகம் உத்திரவாதமளிக்கிறது. நிறுவனங்கள் வெளியிடும் பங்குகள், பத்திரங்கள் கடனீட்டுப் பத்திரங்கள் போன்றவைகளுக்கு கழகம் ஒப்புறுதியளிக்கிறது. நிறுமங்கள் வெளியிடும். கடனீட்டுப் பத்திரங்களையும் கழகம் வாங்குகிறது. 20 ஆண்டுகளுக்கு திரும்பச் செலுத்தப்படும் கடன்களைக் கழகம் வழங்குகிறது. அட்டவணை வங்கிகள், கூட்டுறவு வங்கிகள் போன்றவைகளிடமிருந்து தொழில் நிறுவனங்கள் வாங்கியுள்ளக் கடன்களுக்கு கழகம் உத்தரவாதம் அளிக்கிறது. 18 மாதங்களுக்குள் திரும்பச் செலுத்தப்படும் கடன்களைக் கழகம் ரிசர்வ் வங்கியிடமிருந்து பெறுகிறது. வரையறுக்கப்பட்ட நிறுவனங்களுக்கும், கூட்டுறவுகளுக்கும் கழகம் வழங்கிடும் கடன் அளவு ரூ.10 இலட்சத்திலிருந்து ரூ.20 இலட்சத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளது. தொழில் நிறுவன இலக்கணத்தில்

உணவு, விடுதி, போக்குவரத்து, தொழிற்பண்ணைகள் போன்றவைகள் சேர்க்கப்பட்டுள்ளன.

செயல்முறை

1983–ம் ஆண்டு மார்ச்சு மாதம் முடிய 1951–ம் ஆண்டின் மாநில தொழில் நிதியுதவி சட்டத்தின் கீழுள்ள 18 கழகங்களில் 17 கழகங்கள் நிறுவப்பட்டுள்ளது. 1949--லிருந்து நிறுவனச் சட்டத்தின் கீழ் சென்னையில் உள்ள தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகம் லிமிடெட் பணிபுரிந்து வருகிறது. 1979–80ல் இக்கழகங்கள் அனுமதித்த கடன்களின் அளவு ரூ.264 கோடியாக இருந்தது. 1982–83ல் ரூ.637 கோடியாக உயர்ந்துள்ளது. வழங்கப் பட்ட கடனும் ரூ.185 கோடியிலிருந்து ரூ.406 கோடியாக உயர்ந்தது. வசூலாக வேண்டியக் கடன் பாக்கி ரூ.761 கோடியிலிருந்து ரூ.1503 கோடியாகி உள்ளது. இக்கழகங்களின் பணிகள் பொதுவாக உயர்ந்திருந்தாலும் தனிப்பட்ட முறையில் வேறுபடுகின்றன. இவ்வசதியைப் பெறும் தொழிலதிபர்களின் செயல்களைப் பொறுத்து கழகங்களின் பணிகள் அமைகின்றன. கழகங்களின் நிபந்தனைக் கடன்கள் கடந்த ஐந்து ஆண்டுகளாக உயர்ந்துள்ளன. இவைகளின் அனுமதிக்கப்பட்ட கடன்கள் 28 சதவீதம் அதிகரித்துள்ளன. நடுத்தர தொழில் நிறுவனங்களின் நடுத்தரக் கடன்களை கழகங்கள் தருவதில் ஒரு சாதனை புரிந்துள்ளன. தொழில் வளர்ச்சி, நவீன தொழில் வசதிகள், தொழில் துவங்கிட ஆர்வம் போன்றவைகளை தத்தம் மாநிலங்களில் கழகங்கள் வளர்த்துள்ளன. உணவு பதனிடுதல், போக்குவரத்து, இரசாயணம், துணியாலை, உலோகப் பொருள்கள், இயந்திரம், போக்குரவுக்கருவிகள் போன்றவைகளில் ஈடுபட்டுள்ள தொழில் நிறுவனங்கள் மிகவும் பயனடைந்து உள்ளன.

பிரச்சனைகள்

சிறிய மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்குக்கடன் வழங்குவதில் கழகங்கள் நல்லதொரு பெயர் எடுக்க முடியவில்லை, காரணம் கீழ்கண்ட பிரச்சனையாகும்.

1. அதிக அளவு நிறுவனங்களுக்கு கடனைத் திரும்பச் செலுத்தவில்லை அதாவது கடன் நிலுவை அதிகமாகியுள்ளது. எனவே, நிதிப்புழகத்தில் தடையேற்ப்பட்டுள்ளது.

2. கடன் பெற்ற அநேக நிறுவனங்கள் கணக்கியலின் கோட்பாடுகளையும் செயல்முறைகளையும் பின்பற்றவில்லை. அநேக நிறுவனங்களில் நிறுவனத்தின் கணக்கிற்கும், தனிப்பட்டோர் கணக்கிற்கும் வேறுபாடில்லாமல் இருப்பதால் செலவுகள் மீது கட்டுபாடு செலுத்திட அவசியம் ஏற்படுகிறது.

3. நிறுவனம் போதுமானப் பிணையங்கள் தராததால், இக்கழகங்கள் அதிக அளவு நிதியுதவி செய்திட முடியாது.

4. நிறுவனங்களில் காணப்படும் தனியார் செல்வாக்கினால், இக்கழகங்களுக்கு உத்திரவாதம் அளிக்க முன் வருவதில்லை.

5. கடன்களை வசூலிக்க இக்கழகங்கள் சில சட்ட திட்டங்களைக் கையாள வேண்டியுள்ளன. கடன் பெறும் நிறுவனங்கள் இவைகளை அறியாமல் சில பிரச்சனைகளை உண்டாக்குகின்றன.

6. கழகங்களில் தன்னிறைவு உள்ள அமைப்பு இல்லை. மேலும் பயிற்சி பெற்ற அதிகாரிகளும், அலுவலர்களும் இல்லை. எனவே திட்டம் தீட்டுவதிலும், அதைச் செயல்படுத்துவதிலும் தொடர்ச்சியில்லை.

7. தொழில் நிறுவனங்களுக்கு அறிவுரை வழங்கிட பயிற்சி பெற்ற அலுவலர்கள் கழகங்களில் அமர்த்தப்படுவது இல்லை. இதற்கான நிரந்தரமான அலுவலர்களை அமர்த்தினால் செலவு அதிகமாகிறது. தற்காலிகமானவர்களை அமர்த்தினால் அவர்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருப்பதில்லை.

8. வளர்ச்சிக்கு வாய்ப்புள்ள பின்தங்கியப் பகுதிகளில் ஆய்வு அளவெடுக்கப் போதுமான முயற்சியும், ஏற்பாடும், கழகங்கள் பெற்றிருப்பதில்லை.

9. கடன் பெற்றிடும் நிறுவனங்கள் அவர்களின் உற்பத்தியளவு, வளர்ச்சி திட்டம், போன்றவைகளைப் பற்றிய முழு விவரங்களைத் தருவதில்லை. எனவே, அவைகளின் உண்மையானச் செலுத்தும் திறனை அறிந்திடக் கழகங்கள் பெற்றிருப்பதில்லை.

10. கழகங்களுக்கும், வாணிக வங்கிகளுக்கும் இடையே கூட்டுறவு ஏற்படுவதற்குப் பதிலாகப் போட்டி ஏற்பட்டு இவைகள் ஒரே விதமான

நடவடிக்கைகளைச் செய்து வருகின்றன மேலும் போட்டியினால் பலப் பிரச்சனைகள் எழுகின்றன.

11. நீண்ட கால கடனுக்கும், குறுகிய கால கடனுக்கும், ஒரே விதமான விதிமுறைகள் இருக்கின்றன. இக்கோட்பாடு சிறு தொழில்களுக்குப் பாதகமாக உள்ளது.

நடவடிக்கைகள்

கழகங்களின் செயல்முறைகளை அபிவிருத்தி செய்திட, கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

1. மாநில கழகங்களின் பணிகளை ரிசர்வ் வங்கி மேற்பார்வையிடுகிறது.
2. சில மாநிலங்களில் சிறு தொழில்களுக்கு நிதியுதவியளித்திட இவைகள் அம்மாநிலங்களின் முகவர்களாக பணியாற்றுகின்றன.
3. இந்திய அரசு வங்கிகளின் கிளைகள் இக்கழகங்களின் முகவர்களாகப் பல இடங்களில் பணியாற்றுகின்றன.
4. குறிப்பிடப்பட்ட கடனுதவி நிறுவனங்களின் பட்டியலில் இக்கழகங்கள் சேர்க்கப்பட்டு கடன் உத்திரவாதத்திட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது.
5. இந்திய தொழில் மேம்பாட்டு வங்கி இக்கழங்களுக்கு மறு நிதியுதவி வசதிகளை விஸ்தரித்துள்ளது.

மேம்பாட்டுக்கான ஆலோசனைகள்

1. கடுமையானச் சட்ட திட்டங்களைக் கையாளுவதை விடுத்து கடன் கோரியவர்களின் நேர்மை, நாணயம் இவைகளைப் பார்த்து நிதியுதவி வழங்கிட வேண்டும்.
2. தங்களின் கருத்துக்களையும், பட்டறிவுகளையும் பரிமாறிக் கொள்ள கழங்களின் பிரநிதிகள் அடிக்கடிக் கூடிப் பேசிட மாநாடு அல்லது கருத்தரங்கு போன்றவைகள் கூட்டப்பட வேண்டும். மற்றவர்கள் பெற்ற நன்மையை இக்கழகங்கள் பெற வேண்டும்.
3. நடுத்தர, சிறிய தொழில்களுக்கு பளுவாக இல்லாமலிருக்கும் கடனை திரும்பச் செலுத்தும் திட்டம் அமைய வேண்டும்.

4. கடன்களுக்கு உத்திரவாதம் அளிக்கும் போது சிறுதொழில்களுக்கும் நிறையச் சலுகை அளிக்க வேண்டும்.

5. கழகங்கள் போதுமான இலாபம் திரட்டும் வரையில் இலாப ஈவு தருவதை நிறுத்தி வைக்க வேண்டும்.

6. கழகங்கள் தங்கள் நிதி வசதியைப் பெருக்கிக் கொள்ளும் பொருட்டு மாநில அரசுகள் அவைகளுக்கு வட்டியில்லாக் கடனுதவி செய்ய வேண்டும்.

7. தேவையற்ற முறைகளை அகற்ற வேண்டும்.

பாடம்-13

மாநில தொழில் மேம்பாடு மற்றும் முதலீட்டுக்கழகங்கள்

அநேக மாநிலங்கள் தங்கள் பிரதேசங்களில் தொழில்கள் வளர நிதியுதவி செய்திட இக்கழகங்களை அமைத்துள்ளன. 1960ம் ஆண்டில் பீகாரும், ஆந்திரப்பிரதேசமும், முதன் முதலில் இவைகளை அமைத்தன. உத்திரபிரதேசமும், கேரளா ஆகிய மாநிலங்களில் 1961ஆம் ஆண்டிலும் மகாராஷ்டிரா, குஜராத், ஒரிஸ்ஸா மாநிலங்களில் 1962லும், தமிழ்நாடு, மத்தியப்பிரதேசம் ஆகியவைகளில் 1965லும், பஞ்சாபில் 1969லும், இவைகள் அமைக்கப்பட்டன. பின் தங்கியப் பகுதிகளில் காணப்படும் தொழில் துவக்கத் திறமை, இயற்கைச் செல்வ வளம் ஆகியவைகளைப் பற்றிய பலவித தொழில்களைத் துவக்குவதுதான் இவைகளின் முக்கிய நோக்கமாகும். மகாராஷ்டிரா, குஜராத் ஆகிய மாநிலங்களில் தொழில் முதலீட்டுக் கழகங்களும் மேம்பாட்டுக் கழகங்களும் உள்ளன.

நிறுவன அமைப்பு

அந்தந்த மாநில அரசுகளால் நியமிக்கப்பட்ட இயக்குநர் அவையின் கையில் நிர்வாகம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அநேகமாக இந்நிறுவனங்கள் அனைத்தும் மாநில அரசுகளுக்கு சொந்தமானவை. சட்டரீதியாகத் தகுதி கருதி சில கழகங்கள் சிறப்புத் தகுதியுள்ளக் கழகங்களாகவும் பொது அல்லது தனியார் நிறுவனங்களாகவும் நிறுவப்பட்டுள்ளன.

முதல் அமைப்பு

அந்தந்த மாநிலங்கள் இவைகளுக்குத் தேவையான முதல்களை அளித்துள்ளன. தேவைப் பட்டால் நிறுவனம் கடனீட்டுப் பத்திரங்கள், பொது வைப்புகள் போன்றவைகள் வெளியிட்டு நிதி தேவை பூர்த்தி செய்யப்படுகிறது.

பணிகள்

இக்கூட்டுருகள் நிதியுதவி அளிப்பதுடன் தொழில் நிறுவனம் அமைத்தல், மேலாண்மை போன்றவைகளையும் கவனித்துக் கொள்கின்றன.

தொழில்கள் துவங்கிட வேண்டிய தொழில் மனைகளையும், தொழில் கூடங்களையும் அளிக்கின்றன. மேலும் திட்டங்கள் நிறை வேற்றப்படும் போது தேவையான தொழில் நுட்ப ஆலோசனைகளையும் வழங்கியும் உதவுகின்றன. தொழில் நிறுவனங்களுக்கு நேரடியாக முதலீடு செய்தல், கடன் வழங்குதல், உத்தரவாதமளித்தல், வெளியிடப்படும் பங்குகளுக்கு ஒப்புறுதிச் செய்தல் போன்ற பல வகைகளில் இக்கழகங்கள் உதவி செய்து வருகின்றன.

நிதிமூல வளம்

1971ம் ஆண்டு இறுதியில் இவைகளின் மொத்த நிதிமூலவளங்கள் ரூ.12,521 இலட்சங்கள் இவைகளில் 44.3 சதவீதம் செலுத்தப்பட்ட முதலாகவும், 5.2 சதவீதம் காப்பும் மிகுதியாகவும், 42.3 சதவீதம் கடனாகவும் இருந்தன. மாநில அரசுகளின் பங்கு 61.9 சதவீதத்திலிருந்து 68 சதவீதம் வரையிருந்தது.

நடவடிக்கைகள்

கீழ்க்கண்ட அட்டவணை இக்கழகங்கள் செய்திட்ட நிதியுதவியினைக் காட்டுகின்றது.

ஆண்டு	கடனுதவி அனுமதித்தது (ரூ. கோடியில்)	பயன்படுத்தியது (ரூ. கோடியில்)
1970 – 71	19.3	11.1
1974 – 75	33.5	26.7
1975 – 76	37.0	26.4
1976 – 77	47.8	29.8
1977 – 78	85.8	43.7
1978 – 79	98.3	60.1
1979 – 80	157.7	85.3
1981 – 82	299.6	191.1
1982 – 83	296.8	208

இக் கழகங்களால் உதவி பெறப்பட்ட தொழில்களாவன : –

உணவு, துணியாலை, காகிதம், இரசாயனம், உரம், சிமெண்டு, மின்பொறிகள், சேவைத் தொழில்கள் போன்றவைகள் சில இக்கழகங்களின் தொழில் பேட்டைகளை மேம்பாடடையச் செய்துள்ளன. அவைகளின் நிரப்பு விகிதம் 73 சதவிகிதம் ஆகும்.

இக்கழகங்கள் கூட்டுத்துறைக் கோட்பாட்டின் கீழ் பல திட்டங்களை நிறைவேற்றியுள்ளன. சமீபத்தியப் புள்ளி விவரப்படி இவைகள் கூட்டுத்துறையில் 176 தொழில் திட்டங்களைத் தீட்டி அவைகளுக்காக ரூ.1228 கோடி செலவழித்துள்ளன. கழகங்களின் பங்கு இதில் ரூ.86 கோடியாகும். மேலும் 187 தொழில் திட்டங்களை ரூ.1267 கோடி செலவில் செய்திடத் திட்டமிட்டுள்ளன.

ஐதராபாத் மாநாடு

நாடெங்கும் உள்ள இக் கழகங்களின் பொதுப் பிரச்சனைகளை ஆராய 1967–ம் ஆண்டில் ஐதராபாத்தில் ஒரு மாநாடு கூட்டப்பட்டது. அம்மாநாட்டில் கீழ்க்கண்ட பிரச்சனைகள் எழுப்பப்பட்டு விவாதிக்கப்பட்டன.

1. கழகங்களின் நடவடிக்கைகள் அல்லது செயல்முறைகள் எவ்வாறிருக்க வேண்டும் என்று விவாதிக்கப்பட்டது. மாறும் சூழல்களுக்கு ஏற்ப கழகங்கள் தங்கள் கோட்பாட்டு திட்டங்களை மாற்றியமைக்க வேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்டது. அப்பொழுது தான் மாநிலங்கள் முழுவதும் நல்ல தொழில் மேம்பாட்டை நிலை நிறுத்தக் கழகங்கள் தொண்டு ஆற்ற முடியும்.
2. மாநில அரசு தொழில் மேம்பாட்டு நிறுவனங்கள் மாநில அரசு நிதியுதவிக் கழகங்கள் ஆகியவைகள் கூட கூட்டுறவு, ஒருங்கிணைப்பு இருக்க வேண்டுமென மாநாடு கருதியது.
3. இந்தியத் தொழில் மேம்பாட்டுப் பகுதிகளின் பணிகள் மாநில அரசு தொழில் மேம்பாட்டுக் கழகங்களுக்கும் விஸ்தரிக்க வேண்டுமென மாநாடு பரிந்துரை வழங்கியது.
4. தொழில் மேம்பாட்டு வங்கி அளித்திடும் மறு நிதியுதவி, மேம்பாட்டுக் கழகங்களுக்கு மாற்றப்பட வேண்டும் என மாநாடு உணர்ந்தது.
5. கூடுமானவரை இக்கழகங்கள் இலாபம் ஈட்டக்கூடிய வணிக நிறுவனங்களாகச் செயல் பட வேண்டும் என்றும் மாநாடு கருதியது.

மேலும் கடன் கொடுத்த ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னர் கடனைத் திரும்பச் செலுத்தும் பணி ஆரம்பமாக வேண்டும் என்றும் மாநாடு கருத்து தெரிவித்தது.

6. பங்குதாரர்களின் முன் அனுமதியின்றி கடன் தொகைகளைப் பங்கு முதலாக மாற்றிடும் அதிகாரம் கழகங்களுக்கு அளிக்கப் பட வேண்டும்.

7. கழகங்களின் விதிகளையும், செயல் முறைகளையும் தரப்படுத்திட வாய்ப்பு அதிகம் உள்ளது. இக்கழகத்தின் செயல்முறைகளை இணைத்துக் காட்டும் வகையில் ஒரு இதழ் வெளியிட வேண்டும் எனவும் மாநாடு கருத்து தெரிவித்தது.

செய்ய வேண்டியப் பணிகளும் சவால்களும்

கழகங்கள் இதுவரை செய்துள்ளப் பணிகளை விட இன்னும் செய்ய வேண்டியப் பணிகள் எவ்வளவோ உள்ளன. இக்கழகங்களின் அமைப்பு முறைகளை ஒழுங்குப்படுத்தி வலுப்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது. இயக்குநர் அவையில் தொழில் திறம் படைத்தவர்களும், நிபுணர்களும் இடம் பெற வேண்டும். மேலாண்மை இயக்குநர்களுக்கு நீண்டப் பதவிக்காலம் தரப்பட வேண்டும், மேலாண்மை தேர்வு அடிப்படையில் இக்கழங்களுக்கு மறு நிதியுதவி வசதிகள் வழங்கப்பட வேண்டும். 1975ம் ஆண்டில் மைய அரசு மாநில அரசுகளை இக்கழகங்கள் தோற்றுவிக்கும் நிறுவனங்களில் முதலீடு செய்ய வேண்டாமென வேண்டிக் கொண்டது. இதனால் கழகங்களின் வளர்ச்சி ஏற்பட வெகு காலமாகும் என நம்பப்படுகிறது.

இக்கழங்களில் நிதி ஒழுங்கின்மைக் காணப்படுகிறது. சரக்கிருப்புகளின் சரியான மதிப்பீடு இருக்க வேண்டும் அதிக அளவு ரொக்க இருப்புகள் நீண்ட காலத்திற்கு இருக்கக் கூடாது. இக்கழகங்களின் விவகார எல்லைக்குள் மாநில எல்லைக்கும் நிதியுதவி கழகங்களின் தொழில் நிறுவனங்களைத் தோற்றுவிக்கும் பணி எல்லாவிதமான அதாவது சிறிய, நடுத்தர, பெரிய அளவு நிறுவனங்களுக்கும் நீட்டிக்க வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட தொழில் திட்டங்களின் தொழில் நுட்பங்களைச் சேகரிக்க வேண்டிய தொழில் நிறுவனங்களின் அமைப்பு முறைகளை வலுப்படுத்தவும், மேலாண்மையில் உதவி செய்திடவும் இக்கழகங்கள் முன் வர வேண்டும்.

இந்தியத் தொழிற்கடன் மற்றும் முதலீட்டுக் கூட்டுரு
(Industrial Credit and Investment Corporation of India - ICICI)

இக் கூட்டுரு 1955ம் ஆண்டு ஜனவரி முதல் நாள் பதிவு செய்யப்பட்டது. உலக வங்கியும், அமெரிக்க ஐக்கிய நாடும் இந்தியாவும் சேர்ந்து பிராங்க்ளின் (Franklin) குழுவின் பரிந்துரையால் இது நிறுவப்பட்டது. இக்குழு 1954–ல் இந்தியாவிற்கு வந்தது. தனியார்த்துறையில் உள்ள சிறிய நடுத்தரத் தொழில்களின் மேம்பாட்டிற்காக இங்கிலாந்தில் உள்ள தொழில் நிதியுதவிக் கழகத்தைப் போல் ஒரு கழகம் அமைக்க வேண்டுமென்று பரிந்துரை செய்தது. அதன்படி இக்கழகம் 1956–ம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக இது பதிவு செய்யப்பட்டது.

குறிக்கோள்கள்

இக்கழகத்தின் முக்கியக் குறிக்கோள் தனியார் துறையில் நிறுவனங்களை நிறுவி விரிவுடையச் செய்தல், நவீனப்படுத்துதல் போன்றவைகளாகும். அத்தகைய நிறுவனங்களில் தனியார் முதலீட்டை ஊக்குவித்தல் போன்றவைகளும் கழகத்தின் முக்கிய நோக்கமாகும். கீழ்க்கண்ட முறைகளில் மேற் சொல்லியக் குறிக்கோளை நிறைவேற்றுகிறது.

1. கழகம் நீண்ட கால, குறுகியகாலக் கடன்களை வழங்குகிறது. நேரடியான முறையில் பங்கேற்கிறது.
2. பங்குகள் கடனீட்டுப் பத்திரங்கள் போன்றவைகளின் வெளியீட்டை ஆதரித்து ஒப்புறுதி செய்கிறது.
3. ஏனைய தனியார் துறைகளிலிருந்து வரும் கடன்களுக்கு உத்தரவாதம் அளிக்கிறது.
4. முதலீடுகளை வேகமாக இயங்கச் செய்து மறு முதலீட்டிற்கான நிதியை அளிக்கிறது.
5. தொழில் நிறுவனங்களுக்கு மேலாண்மை, தொழில் நுட்பம், நிர்வாகம் முதலியவைகளில் அறிவுரை வழங்குகிறது.
6. வங்கிகள் மாநில தொழில் நிதியுதவிக் கழகங்களின் உதவியுடன் தனி வியாபாரம், கூட்டு வாணிகம் போன்றவைகளுக்கு அயல்நாட்டுப் பணத்தில் கடன் வழங்குகிறது. தொழில் கருவிகள், இயந்திரம் போன்றவைகளை இறக்குமதி செய்திட இக்கடன் பெரிதும் உதவுகிறது.

இவ்வாறு கழகம் தொழில் நிறுவனங்களின் முக்கியத் திட்டங்களாக திட்டமிடவும் நிறைவேற்றவும் நிதியுதவியளிப்பது மட்டுமல்லாமல் நிதியைக் கொடுத்தும் பங்கேற்கிறது. தனியார் துறையில் உள்ள வரையறுக்கப்பட்ட எந்த நிறுவனமும் கழகத்திடமிருந்து நிதியுதவிப் பெற்றிடலாம். தற்பொழுது கூட்டுத்துறையின் திட்டங்களுக்கும் கழகம் நிதியுதவியளிக்கிறது.

நிதி மூலவளம்

கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட முதல் ரூ.25 கோடிகளாகும். ஆரம்ப முதல் ரூ.17.5 கோடியாகும். 12.5 கோடி ரூபாயிலும் (பங்கு முதல் ரூ.5 கோடி, ரூ.7.5 கோடி, அரசுக்கடன்) உலக வங்கியின் முதல் கடனான 10 மில்லியன் அயல் நாட்டுப் பணத்திலும் உள்ளது. 1983–ம் வருஷம் மார்ச் மாத இறுதியில் கழகத்தில் செலுத்தப்பட்ட முதல் ரூ.27 கோடியாகும். காப்பும் மிகுதியும் ரூ.57 கோடி, கழகம் வாங்கியுள்ள கடன்கள் ரூ.1.122 கோடி. இதில் அயல் நாட்டுப் பணக்கடன் 32 சதவீதம் (ரூ.359 கோடியாகும்) கடன் பத்திரங்கள் 54 சதவீதம். இந்தியத் தொழில் மேம்பாட்டு வங்கியும் அரசும் அளித்துள்ள கடன் 14 சதவீதம்.

நடவடிக்கைகள்

கடந்த இருபதாண்டுகளில் கழகத்தின் அனுமதித்தக் கடன் ரூ.2,327 கோடியாகும். இதில் ரூ.1,017 கோடி அயல்நாட்டு பணத்திலும், மீதியுள்ளவை நம் நாட்டுப் பணத்திலும் தரப்பட்டுள்ளன. அளிக்கப்பட்ட கடன்கள் ரூ.1,703 கோடியாகும். இவைகளில் ரூ.832 கோடி (49 சதவீதம்) அயல்நாட்டுப் பணத்தில் வழங்கப்பட்டது. கழகம் வழங்கிய நிதியுதவியின் 86 சதவீதம் தனியார் துறைக்கும், 9 சதவீதம் கூட்டுத்துறைக்கும், 3 சதவீதம் கூட்டுறவு துறைக்கும், 2 சதவீதம் பொதுத் துறைக்கும் போய் சேர்ந்துள்ளது. தொழில்களை நவீனப்படுத்துவதற்காக நிறைய நிதியுதவி செய்துள்ளது. நாட்டின் மேற்கு, தெற்கு மாநிலங்களுக்குத்தான் கழகம் 7 சதவீத அளவிற்கு நிதியுதவி அளித்துள்ளது. பின் தங்கிய மாநிலங்களுக்கு தனிச் சலுகையிடப்பட்டுள்ளது.

மேலாண்மை

கழகத்தின் மேலாண்மையை 11 இயக்குநர்கள் கொண்ட அவை கவனித்துக் கொள்கிறது. இவ்வியக்குநர்களில் எழுவர் இந்தியர்கள், இரண்டு ஆங்கிலேயர்கள், ஒருவர் அமெரிக்கர், பதினோராவது இயக்குநர் மைய

அரசால் நியமிக்கப்படுகிறார். முழுநேரத் தலைவர் ஒருவரையும் பொது மேலாளர் ஒருவரையும் கழகம் பெற்றுள்ளது.

1. நம் நாட்டில் உள்ள ஒப்புறுதி நிறுவனங்களுக்கெல்லாம் இக்கழகம் முன்னோடியாக உள்ளது. மற்ற நிறுவனங்களோடு இணைந்து கூட்டு ஒப்புறுதி செய்திடும் வசதியை ஏற்படுத்த இது காரணமாக உள்ளது. முறையான அமைப்பு இல்லாமல் இவ்வாறு இணைந்த ஒப்புறுதி வசதியைக் கழகம் செய்து வருகிறது.
2. தனியார் துறையில் உள்ள தொழிலதிபர்களுக்கு அயல் நாட்டுப் பணத்தில் கடன் வசதி செய்து வருகிறது.
3. தனியார் அயல்நாட்டு முதலை ஊக்குவிக்கும் பொருட்டு முதலீடு மையத்தை நிறுவிட கழகம் பெரிதும் உதவியுள்ளது.
4. இது அயல் நாட்டினர்களோடு நிரம்பத் தொடர்பு கொண்டுள்ளது. அதாவது உலக வங்கி, அயல்நாட்டு வங்கிகள், முதலீடு வங்கிகள் போன்றவைகளோடு தொடர்பு உள்ளதால் அதிக அளவு அந்நியச் செலவாணியை பெற்றிட ஏற்பாடு செய்யப்படுகிறது.

மொத்தத்தில் பார்க்கும் பொழுது கழகத்தின் கடந்தகால தேவையை எண்ணிடும்போது கழகம் நல்லதொரு பணியைச் செய்து வருகிறது என்பதில் ஐயமில்லை.

இந்தியத் தொழில் மேம்பாட்டு உதவி

இவ்வங்கி 1964ம் ஆண்டு ஜுலை மாதத்தில் நிறுவப்பட்டது. இவ்வங்கியின் தோற்றம் தொழில் நிதித்துறையில் ஒரு முக்கியமான திருப்பம் ஆகும். ஏனைய நிதியுதவிக் கழகங்களில் ஏற்பட்டுள்ளக் குறைபாடுகளைப் போக்கவும், அவைகளில் உள்ள இடைவெளியை நிரப்பவும், வளர்ந்து வரும் தொழில்களுக்கு நிதியுதவியளிப்பதற்கும் இவ்வங்கி நிறுவப்பட்டது. ஏற்கனவே இயங்கிக் கொண்டிருக்கும் நிதி நிறுவனங்களுக்கு வேண்டும்போது நிதியினைத் தரும் ஒருநிதி தேக்கமாக இவ்வங்கித் திகழ்கிறது. மேலும் எங்கும் முயன்றும் கடன் கிடைக்க வில்லையென்றால் அத்தகைய நிறுவனங்களுக்கு இறுதியாகக் கடன் தருகிறது. இவ்வங்கி இதன் நடவடிக்கைகளுக்கு இவ்விதக் கட்டுப்பாடில்லையென்றும் பொதுத்துறை மற்றும் தனியார்

துறையிலுள்ள எல்லா நிறுவனங்களுக்கும் இதனால் கடன் வசதி தரமுடிகிறது. மாறும் சூழல்களுக்கேற்ப இதன் நடவடிக்கைகள் மாறுபடுவதால் முக்கியத் தொழில் நிறுவனங்களுக்கு அவைகளின் வளர்ச்சிக்காக நிதியுதவி செய்கிற நிலையில் உள்ளது.

நிதிமூலவளம்

பரந்த அல்லது நிறைய நடவடிக்கைகளை இது கொண்டிருப்பதால் இதன் முதலும் பெருமளவில் உள்ளது. இதனுடைய அனுமதித்த முதல் ரூ.50 கோடியாகும். மைய அரசின் அனுமதியுடன் இதை ரூ.100 கோடிக்கு உயர்த்திக் கொள்ளலாம். இதனுடைய செலுத்தப்பட்ட முதல் ரூ. 10 கோடியை ரிசர்வ் வங்கி செலுத்தியது. 1967ல் இது 20 கோடியானது. 1970ம் ஆண்டு வரை அதே அளவில் இருந்தது. தொடக்கத்தில் மைய அரசு ரூ.10 கோடி வட்டியில்லாதக் கடனாக வழங்கியது. அதை 13 ஆண்டுகளில் 15 தவணைகளில் திரும்பச் செலுத்த வேண்டும்.

கீழ்க்கண்ட அட்டவணை வங்கியின் நிதிமூலவளத்தை 1964–ஆம் ஆண்டிலிருந்து 1983–ம் ஆண்டு ஜூலை வரை காட்டியுள்ளது.

		(கோடியில் ரூ)	%
1.	செலுத்தப்பட்ட முதல் அதிகரிப்பு	255	3
2.	இந்திய அரசிடமிருந்து வாங்கியக் கடன்	468	5
3.	ரிசர்வ் வங்கியடமிருந்து பெற்றக் கடன்	2275	24
4.	இதரக்கடன்கள்	109	1
5.	உபரிக்கட்டணத்திற்குப் பதிலாகக் கம்பெனியிடமிருந்து பெற்ற வைப்புகள்	50	1
6.	கடனுதவியைத் திரும்பப் பெற்றது	3078	32
7.	முதலீடு விற்பனை	50	–
8.	இதர வகைகள்	1012	11
9.	பத்திரங்கள் வெளியீடு மூலம் கடன்	2237	23
	மொத்தம்	9514	100

அரசின் அனுமதியோடு வங்கி அயல்நாட்டுப் பணத்தையும் அயல்நாட்டு வங்கிகளிடமிருந்து பெற்றிடலாம். அரசு அல்லது அரசில்லாத நிறுவனங்களிடமிருந்து வெகுமதிகள், நன்கொடை போன்றவைகளைப் பெற்று வங்கி தன் நிதி நிலைமையை உயர்த்திக் கொள்ளலாம். வங்கியின் இலாபம் வருமானம் போன்றவைகளுக்கு வருமானவரி, உச்சவரி போன்றவைகளைச் செலுத்த வேண்டிய அவசியமில்லை. பிணையப்பத்திரங்கள், கடன் பத்திரங்கள் போன்றவைகளை வெளியிடலாம். 12 மாதங்களுக்கு குறையாத வைப்புகளைப் பொதுமக்களிடமிருந்து பெற்றிடலாம்.

மேலாண்மை

இதன் மேலாண்மை ரிசர்வ் வங்கியின் மத்திய இயக்குநர்களை அமர்த்தும் இயக்குநர் அவையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதன் ஆளுநரும் முறையே வங்கியின் தலைவராகவும், துணை தலைவராகவும் பணியாற்றுகின்றனர். சுருங்கச் சொன்னால் இது ரிசர்வ் வங்கியின் துணை நிறுவனமாக விளங்குகிறது.

பணிகள்

வங்கி, வணிகம், மேம்பாடு, மறுமுதலீடு போன்ற எல்லா பணிகளையும் இது செய்து வருகிறது. இந்த நடவடிக்கைகளைச் செய்து முடிக்க கீழ்க்கண்டப் பணிகளை வங்கி செய்கிறது.

1. கடன் வழங்குதல் : தொழில் நிதியுதவிக்கழகம் மாநில தொழில் நிதியுதவிக் கழகங்கள் போன்றவைகளுக்கு கொடுத்துள்ள 3 முதல் 25 ஆண்டுகளுக்குள் திரும்பச் செலுத்தப்பட வேண்டியக் கடன்களுக்கு மறு நிதியுதவியளித்தல். அட்டவணை வங்கிகள், மாநிலக்கூட்டுறவு வங்கிகள் போன்றவைகளின் 3 முதல் 10 ஆண்டுக்கடன், 6 மாதம் முதல் 10 ஆண்டுக்கடன் போன்றவைகளைத் திரும்பச் செலுத்த மறுநிதியுதவியளித்தல்.
2. தொழில் நிறுவனங்களின் மாற்றுச்சீட்டுகளையும், உறுதி மொழிச்சீட்டு ஆகியவைகளை ஏற்றல், வட்டம் செய்தல் அல்லது மறுவட்டம் செய்தல்.
3. தொழில் நிதியுதவிக் கழகம், மாநில தொழில் நிதியுதவி கழகங்கள் ஆகியவைகளின் பங்குகள் பிணையப் பத்திரங்கள் அல்லது கடனீட்டுப் பத்திரங்கள் போன்றவைகளில் முதலீடு செய்தல்.

4. தொழில் நிறுவனங்களின் பங்குகள், கடனீட்டுப் பத்திரங்கள் ஆகியவைகளில் முதலீடு செய்தல், அல்லது அவைகளுக்கு ஒப்புறுதியளித்தல் இவ்வாறு செய்திடும் போது வங்கி தன்னிடமுள்ளக் கடன் பத்திரங்களைச் சாதாரணப் பங்குகளாக மாற்றிடலாம்.

5. தொழில் நிறுவனங்கள் பொதுச்சந்தையில் வாங்கியுள்ளக் கடன்களுக்கு உத்தரவாதம் அளித்தல்.

6. தொழில் நிறுவனங்களால் தள்ளிப்போடப்பட்டச் செலுத்துதல்களுக்கு ஒப்புறுதியளித்தல்.

7. அனைத்து நிதியுதவிக்கழகங்கள், அட்டவணை வங்கிகள், கூட்டுறவு வங்கிகள் ஆகியவைகளின் கடன்களுக்கும் உத்தரவாதமளித்தல்.

8. மேற்கூறிய நிறுவனங்களின் கடமைகளுக்கு ஈடு செய்ய ஒப்புறுதியளித்தல்.

9. தொழில்நிறுவனம், தனிநபர் போன்றோர்களுக்கு தொழில் முன்னேற்றத்தில் உதவி செய்தல், மேலாண்மைக்கு உதவுதல், விரிவுப்படுத்துவதற்கும், நவீனப்படுத்துவதற்கும், தொழில் நுட்பம் மற்றும் நிர்வாக உதவிகளைச் செய்தல்.

10. முதலீடுகளுக்கு விற்பனை ஏற்பாடு செய்தல், மதிப்பீடு செய்வதற்கு அளவிடுதல், ஆய்வு செய்தல் போன்றவைகளுக்கு ஒப்புறுதியளித்தல்.

11. தொழில் நிறுவனங்களிடையேயுள்ள இடைவெளியை சரிகட்ட தொழில் நிலையங்களை நிறுவிடத் திட்டமிடல் அவைகளின் மேம்பாட்டைக் கவனித்தல்.

12. தொழில் நிறுவனங்களின் பணியைச் செய்வதற்கு தேவையான துணை நிறுவனங்களை ஏற்படுத்தி அவைகளை நடத்திச் செல்லல்.

13. ரிசர்வ் வங்கியின் பரிந்துரையின்படி மத்திய அரசு அனுமதியுடன் எல்லாத் தொழிலையும் செய்தல்.

நடவடிக்கைகள்

1964–ம் ஆண்டு ஜுன் மாதத்திலிருந்து 1983ம் ஆண்டு ஜுன் மாதம் முடிய வங்கிச் செய்தியிட்ட துறைவாரியான நிதியுதவியினைக் கீழ்க்கண்ட அட்டவணைக் காட்டுகிறது.

வ. எண்	விவரம்	அனுமதித்தக் கடன் ரூ. (ரூ கோடியில்)	விநியோகித்தக் கடன் ரூ. (ரூ கோடியில்)	பாக்கி ரூ. (ரூ கோடியில்)
1.	நேரடி நிதியுதவி	3382	2313	2099
2.	தொழில் கடன்களுக்கு மறுநிதியுதவி	4356	3029	1770
3.	மாற்றுச்சீட்டை மறுவட்டம் செய்தல்	2176	1657	937
4.	நிதியுதவிக் கழகங்களின் பங்கு பத்திரங்களின் முதலீடு	383	380	277
5.	ஆரம்பமுதல் உதவி	19	9	9
	மொத்தம்	10,316	7,388	5,092

வங்கித்துறைவாரியான செய்திட்ட நிதியுதவியைக் கீழ்க்கண்ட அட்டவணைக் காட்டுகிறது.

விவரம்	1979 – 80	80 – 81	81 – 82	82 – 83
		(ரூ. கோடியில்)		
அனுமதித்தக் கடன்	1220	1561	1742	2184
விநியோகிக்கப்பட்ட கடன்	802	1066	1340	1581
நிலுவை	2281	2063	4019	5092
நிதியுதவி				
1. சிறுதொழில்	–	–	–	–
2. பின்தங்கியப்பகுதி	570	711	645	802
3. முன்னுரிமைத் தடை வணிகப் பழக்கமுள்ள கம்பெனிகள்	152	182	151	191

இவ்வாறு வங்கி நிதியுதவி நிறுவனங்களுக்கு வழிகாட்டியாகவும், தேவை ஏற்படுத்தி உதவுவதாகவும் விளங்குகிறது. பின்தங்கியப் பகுதிகளில் வளர்ச்சிக்காக மிகவும் பாடுபடுகிறது. புதியதாக அல்லது சிறியதாகத் தொழில் துவங்குவோரை ஊக்குவிக்கிறது. சென்னை, பம்பாய், கல்கத்தா, புதுடில்லி போன்ற நகரங்களின் பிராந்தியச் செயலகங்கள் திறக்கப்பட்டு அப்பகுதிகளின் தேவையைப் பூர்த்தி செய்கிறது. மறுமுதலீடு துறையிலும் வங்கிச் சிறந்து விளங்குகிறது. வங்கி, பொதுத்துறை, நிதியுதவிக்கழகங்க்ள் போன்றவைகளுக்கு உதவிட, ஒட்டு மொத்தமானப் பல திட்டங்கள் வங்கியிடம் உள்ளன.

மாற்றியமைக்கப்பட்ட இந்திய தொழில் மேம்பாட்டு வங்கி

ரிசர்வ் வங்கிக்கு முழுவதும் சொந்தமான துணை நிறுவ்னமான இவ்வங்கி இருந்தது. ஆனால் 1976ம் வருடம் பிப்ரவரி மாதம் 16ந் தேதியிலிருந்து தனியாகப் பிரிக்கப்பட்டு ஒரு தனி நிறுவனமாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இதற்காக பொது நிதியுதவி நிறுவன திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இப்பொழுது இந்தியத் தொழில் நிதியுதவிக் கழகம், ஆயுள் காப்பீட்டுக் கழகம், இந்திய அலகுப் பொறுப்புரிமை நிறுவனம், மாநில தொழில் நிதியுதவிக்கழகங்கள், தொழில் சீரமைப்புக் கூட்டுரு இந்திய தொழில் முதலீடு கடன் கழகம் ஆகியவைகள் இதன் கீழ் இயங்குகின்றன. மத்திய அரசு ரூ.50 கோடியை ரொக்கமாகத் தந்து உள்ளது. ரிசர்வ் வங்கி, அலகு பொறுப்புரிமை நிறுவனம், மாநில தொழில் நிதியுதவி கழகங்களில் வைத்துள்ள முதல்களையும் இதற்கு மாற்றிவிட்டது. தற்பொழுது வங்கியின் இயக்குநர் அவையின் தலைவரும், மேலாண்மை இயக்குநரும் மைய அரசால் நியமிக்கப் படுகின்றனர். இவர்களைத் தவிர வங்கியால் நியமிக்கப்படும் ரிசர்வ் வங்கியின் துணை ஆளுநர் ஒருவரும், மைய அரசால் நியமிக்கப்பட்ட 20க்கு மேற்படாத இயக்குநர்களும் இருக்கின்றனர்.

மதிப்பீடு

எல்லா நிதியுதவிக் கழகங்களின் உச்ச அமைப்பாக இவ்வங்கி காணப்படுவதால் இதன் பொறுப்புகள் பலமடங்காகியுள்ளன. ஏனைய நிறுவனங்களின் பணிகளை இது ஒருங்கிணைக்கிறது. தொழில் துறையில்

எந்த எந்த நிறுவனங்கள் நிதியுதவிக்குத் தகுதி வாய்ந்ததாகவும் நிதியுதவியை நாடுவதாகவும் உள்ளதோ அவைகளைக் கண்டுபிடித்து உதவி புரிய வேண்டும். திட்டமிட்ட மேம்பாட்டின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் விதத்தில் தொழில் நிதியுதவியின் அமைப்புகள் காணப்பட வேண்டும். இதுவரை வங்கியாற்றியுள்ளப் பணிகளை வைத்துப் பார்க்கும் போது மேற்கூறிய பாதைகளில் அல்லது நெறிகளில் கணிசமான முன்னேற்றம் கண்டுள்ளது.

இந்திய தொழில் சீரமைப்புக் கூட்டுரு

இக்கூட்டுரு வரையறுக்கப்பட்ட பொது நிறுவனமாக நிறுவப் பட்டது. இதன் தலைமையகம் கல்கத்தாவிலுள்ளது. மைய அரசும், ரிசர்வ் வங்கியும் இணைந்து எடுத்த முயற்சியால் இந்நிறுவனம் அமைக்கப்பட்டது.

குறிக்கோள்கள்

நலிந்த தொழில் நிறுவனங்களைப் புதுப்பிக்கவும், மூடும் நிலையில் உள்ள நிறுவனங்களுக்குப் புத்துணர்வு அளிக்கவும் முக்கியமாக இக்கழகம் தோற்று விக்கப்பட்டது. தீர்க்கப்படாத அரசியல் – பொருளாதார நிலைமைகள் தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்கு பாதகமானவை. திருப்தியில்லாத தொழிலாளர்கள், அடிக்கடி நிகழும் வேலை நிறுத்தம், தவறான மேலாண்மை மூலப் பொருள்களின் பற்றாக்குறை போன்றவைகள் தொழில் நிறுவனங்களின் வளர்ச்சியைப் பாதிக்கின்றன. அவைகளின் அழிவு வேலையில்லாத் திண்டாட்டத்தையும் உற்பத்தி நடவடிக்கைகளின் முடிவையும் ஏற்படுத்தும் மேற்கூறியவைகளுக்கு தொழில் நிறுவனங்கள் இலக்காகாமலிருக்க அவ்வழி வகைகளிலிருந்து பாதுகாக்க இக்கழகம் அமைக்கப்பட்டது. நலிவடைந்த நிறுவனங்கள் மேலாண்மை, நிதி, தொழில் நுட்பம் ஆகியவைகளை மாற்றியமைத்து அவைகளை மீண்டும் இயங்கச் செய்வது தான் கழகத்தின் முக்கியக் குறிக்கோளாகும்.

முதல்

ரூ. 25 கோடி அனுமதிக்கப்பட்ட முதலுடன் கழகம் பதிவு செய்யப்பட்டது. அதில் ரூ.10 கோடியை இந்திய தொழில் மேம்பாட்டு வங்கி, இந்தியத் தொழில் நிதியுதவிக் கழகம், காப்பீட்டு கழகம், இந்திய அரசு வங்கி, வணிக வங்கிகள் போன்றவைகள் வழங்கியது. செலுத்தப்பட்ட முதல் ரூ.5 கோடியாகும். மைய

அரசு ரூ.10 கோடி வட்டியில்லாதக் கடனாக வழங்கி உள்ளது. கடனீட்டு பத்திரங்களை வெளியிடுவது மூலமும் ரிசர்வ் வங்கி தொழில் மேம்பாட்டு வங்கி போன்றவைகளிலிருந்து கடன் வாங்குவது மூலமும் கழகம் தன் நிதி மூலத்தைப் பெருக்கிக் கொள்கிறது.

மேலாண்மை

நிதியுதவிக் கழகங்கள், வங்கிகள், ஆயுள் காப்பீட்டுக்கழகம், தொழில் மேம்பாட்டு அமைச்சரகம் ஆகியவைகளின் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு இயக்குநர் அவை மேலாண்மையை கவனித்துக் கொள்கிறது. சில இயக்குநர்களை உள்ளடக்கிய செயற்குழு ஒன்று கழகம் வழங்கும் நிதியுதவி நிறுவனங்களின் சீரமைப்புக்குப் பயன்படுகிறதா என்றும் ஏனைய பணிகளையும் கவனித்துக் கொள்கிறது. ஒரு தனி நிறுவனத்தின் சீரமைப்பிற்கு இக்குழு ரூ.50 லட்சம் வழங்கிடலாம். ஆனால் மொத்த சீரமைப்பு உதவிநிதி ஒரே சமயத்தில் ரூ.50 கோடிக்கு மேல் போகக் கூடாது. இக்குழு மாதம் ஒரு தடவைக் கூடும், தேவைப்பட்டால் அதற்கு முன்னரே கூடும். கழகத்தின் அன்றாட நடவடிக்கைகளை மேலாண்மை இயக்குநர் பொதுமேலாளர் ஒருவர் உதவியுடன் கவனித்துக் கொள்கிறார்.

நிதியுதவி வகைகள்

இக்கழகம் கூட்டுறவு நிறுவனங்கள், கூட்டு வாணிகம், தனி வணிகர் பொறுப்பு வரையறுக்கப்பட்ட நிறுவனங்கள் ஆகியவைகளுக்கு நிதியுதவியளிக்கிறது. தொழில் நிறுவனங்களுக்கு எளியக் கடன் வழங்குகிறது. அவைகளின் கடன்களுக்கு உத்தரவாதம் அளிக்கிறது. தவணைக்கடன் செலுத்துவதற்குக் கால தாமதச் சலுகைத் தருகிறது.

இக்கழகம் வழங்கிடும் நிபந்தனைக் கடன்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு வட்டி 8½ சதவீதமாகும். சிறுதொழில் நிறுவனங்களுக்கு 7½ சதவீதம் பின்தங்கியப் பகுதியில் உள்ள நிறுவனங்களுக்கு 7 சதவீதமும் வட்டி வசூலிக்கிறது. கடன்களுக்கு அளிக்கும் உத்தரவாதத்திற்காக ஒரு சதவீதம் கட்டணம் பெறுகிறது. கழகத்தின் கடனைத் திருப்பி செலுத்துவதற்கு கடுமையான நிலையான நிபந்தனை ஒன்றுமில்லை ஒவ்வொரு கடனின்

தன்மைப் பொறுத்து அதைத் திருப்பி செலுத்தும் காலம் வேறுபடுகிறது. பொதுவாக 4 முதல் 12 ஆண்டுகள் வரை அது நீடிக்கும்.

சுருங்கக்கூறின் நலிந்த – சீரழிந்த தொழில் நிறுவனங்களுக்கு சலுகைக் கடனும் உத்தரவாதமும் தந்து அவைகளுக்கு புது வாழ்வு எளிதாக ஏற்பட தொழிலாளரின் சமூக உறவு, உற்பத்திப் பொருள், அதன் விலை போன்ற வாணிகக் கோட்பாடுகளைத் தீட்டுதல், மாற்றுதல் ஏற்படுத்த வேண்டும் என்று அறிவுரைக் கூறுகிறது. ஒரு குறிப்பிட்ட நிறுவனம் சீரமைப்பிறகுத் தகுதியுடையது தானா என்று பார்த்து தான் நிதியுதவியை கழகம் அளிக்கும். இதை மதிப்பிட கழகம் தொழில் நுட்பம் நிதியியல் வல்லுநர்களை கழகம் கலந்தாலோசித்து தீர்த்து வைக்கிறது. சீரமைப்பிற்கென்று ஒரு குறிப்பிட்ட வரைமுறையில்லை. ஒவ்வொரு நிறுவனத்தின் கடந்தகாலக் குறைபாடுகளின் தன்மையை எடுத்துக் கொண்டு சீரமைப்புப் பணித் துவங்கப்படுகிறது. எனவே சீரமைப்பு இந்நிறுவனத்தின் உண்மையான நடவடிக்கைகளின் அடிப்படையிலும் நிதியுதவி வழங்கிடப் பின்னர் தொடரும் செயல்களின் அடிப்படையிலும் உள்ளது. பின் தொடர் செயல்கள் மிக்க கவனமுடனும், திட்டத்திடனும் ஆற்றப்பட வேண்டும் கழகம் கீழ்க்கண்டக் கட்டுப்பாடு நடவடிக்கைகளை கையாள்கிறது.

1. பாங்குகளின் மாற்றம் – பொதுவாக கழகம் நிறுவனங்களின் 51 சதவீதப் பங்கினை தன் பெயருக்கு மாற்றும் படி வேண்டுகிறது.
2. உதவி பெறும் நிறுவனத்தின் இயக்குநர் அவையில் தன் இயக்குநர்களை நியமிக்கிறது.
3. முக்கிய மேலாண்மை அதிகாரிகளைக் கழகம் நியமிக்கிறது.
4. கொள்முதல் விற்பனைக் குழுக்களில் அதன் அலுவலர்களை நியமிக்கிறது.
5. நிறுவனங்களின் முன்னேற்ற அறிக்கையை அவ்வப்பொழுது வேண்டுகிறது.
6. தொழில் நிலையங்களை அடிக்கடி பார்வையிடுகிறது.
7. உதவி பெறும் நிறுவனங்களின் செயல்முறையை அடிக்கடி மதிப்பீடு அல்லது விமர்சனம் செய்கிறது.

செயல்முறை

கழகம் தன்னுடைய நடவடிக்கைகளை 1971–ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் துவக்கியது. தொழிலாளரிடையே அமைதியின்மை, அரசியல் குழப்பம், மேலாண்மையில் அக்கரையின்மை, வேலையில்லா திண்டாட்டம் போன்றவைகளால் நலிவடைந்த தொழில் சூழல் நிலவிய மேற்கு வங்காளத்தில் தான் கழகம் தன்னுடைய முதல் நடவடிக்கைகளை ஆரம்பித்தது. பொருளாதார மந்தத்தால் நலிவடைந்த பொறியியல் நிறுவனங்களின் சீரமைப்பிற்கு கழகம் மிகவும் பாடுபட்டது. 1973ம் ஆண்டில் இதன் நடவடிக்கைகள் டில்லி, ஆந்திரா, மகாராஷ்டிரா, கேரளா போன்ற இடங்களுக்கு விஸ்தரிக்கப்பட்டன. தொழில் (மேம்பாடு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் 1961ன் கீழ் அரசு எடுத்துள்ள தொழில் நிறுவனங்களோடு இணைந்தும் இது செயல்பட்டது.

1983–ம் ஆண்டில் கழகம் 89 தொழில் நிறுவனங்களுக்கு, உதவி செய்தது. அவைகளுக்கு அனுமதித்தக் கடன் ரூ.58 கோடியில் வழங்கப்பட்டக் கடன் ரூ.36 கோடி. இதுவரை கழகம் அனுமதித்தக் கடன் ரூ.201 கோடி; வழங்கிய கடன் ரூ. 177 கோடி.

தற்சமயம் கழகம் தன்னுடைய நடவடிக்கைகளைப் பெருக்கிக் கொண்டு உள்ளது. மறு அமைப்புத் தொடர்பான துணைச் சேவைகள், ஆலோசனை வழங்குதல், வியாபாரிகளுக்கு நிதியுதவியளித்தல், கருவிகளைக் குத்தகைக்கு அல்லது வாடகைக்குத் தருதல் போன்ற பணிகளையும் கழகம் செய்து வருகிறது. நலிவடைந்த நிறுவனங்களின் உண்மையான மதிப்பினை வங்கிகளுக்கும், நிதியுதவிக்கழகங்களுக்கும் குறிப்பிட்டு ஆலோசனை வழங்குகிறது தொழில் நிறுவணங்களின் ஒருங்கிணைப்பு, ஈர்ப்பு, மறு அமைப்பு போன்றவைகள் ஏற்பட வியாபார வங்கி செய்திடும் சேவையை கழகம் செய்கிறது. தன்னுடைய வாடகைக் கொள்முதல் திட்டத்தின் நீட்டிப்பாகக் கருவிகளை வாடகைக்கு விடும் குத்தகைப் பணியையும் கழகம் செய்து வருகிறது.

சிறு தொழில் வளர்ச்சி கழகங்கள்

சிறு தொழில் ஒவ்வொரு நாட்டிலும் உள்ளன. முன்னேறிய நாடுகளிலும் காணப்படுகின்றன. நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும்

அவை மிகவும் உதவுகின்றன. இவைகளின் வளர்ச்சிக்காக நாட்டில் இரண்டு வகையான நிதியுதவி கழகங்களின் நிதியுதவியளித்து வருகின்றன ஒன்று தேசிய சிறு தொழில் வளர்ச்சிக் கழகம், மற்றொன்று மாநில சிறு தொழில் வளர்ச்சி கழகம்.

தேசிய சிறுதொழில் கழகம்

இது 1955ம் ஆண்டு இந்திய அரசால் நிறுவப்பட்டது. இது ஒரு வரையறுக்கப்பட்ட தனி நிறுவனம். மைய அரசிற்கு முழுவதும் சொந்தமானது. இது ஆரம்பத்தில் நிதியுதவி செய்யவில்லை. ஆனால் வாடகைக் கொள்முதல் திட்டத்தின் இயந்திரங்களை அளிப்பதற்கு ஏற்பாடு செய்திடும் சிறுதொழில் நிறுவனங்கள் வாங்கியுள்ளக் கடனுக்கு இது உத்தரவாதமளிக்கிறது. அவைகளின் பங்குகளுக்கு ஒப்புறுதியளித்திடும். அரசினர் சரக்குக் கிடங்கு கொள்முதல் முகவை ஆகிய இடங்களிலிருந்து ஆணையை பெற்றிட உதவுகிறது. தொழிலாளர்களுக்குப் பயிற்சி அரிதான மூலப் பொருள் விநியோகம், மாதிரி அமைத்தல், நிறுவனம் உற்பத்தி செய்யும் பொருள்களுக்குச் சந்தை ஏற்படுத்தி தருதல், ஏற்றுமதி செய்தல போன்றவைகளுக்குக் கழகம் உதவுகிறது. அயல் நாடுகளில் தொழில் நிறுவனங்கள் ஏற்படுத்திட ஆலோசனையும் வழங்குகிறது. கழகம் தனக்கு வேண்டிய நிதியினை இந்திய அரசியிடமிருந்துப் பெற்றுக் கொள்கிறது. அயல் நாடுகளிலிருந்தும், வங்கிகளிடமிருந்தும் கடன் வாங்கிக் கொள்கிறது.

நாடு முழுவதும் உள்ள சிறு தொழிலதிபர்களுக்கு வேண்டிய இயந்திர சாதனங்களை வாடகை கொள்முதல் முறையில் அளிக்கிறது. 1982–83ல் ரூ.11 கோடிக்கு இயந்திரங்களை இத்திட்டத்தின் கீழ் அளித்துள்ளது. இது வரை மொத்தம் ரூ.139 கோடி பெறுமான இயந்திரங்களை இத்திட்டத்தில் கொடுத்துள்ளது. வாடகை கொள்முதல் வாங்கிச் சென்றவர்கள் தர வேண்டிய பாக்கி ரூ.17 கோடியாகும். அதே போல் அரசினர் கொள்முதல் முகமைகளிலிருந்து ஒப்பந்தங்களைச் சிறு தொழில் நிறுவனங்களுக்கு இது ஏற்படுத்துகிறது. இவ்வகையில் 1983–ம் ஆண்டில் 24,000 சிறு தொழில் நிறுவனங்கள் அரசினர் கொள்முதல் முகவர்களான டி.ஜீ.எஸ் & டி என்பவர்களிடமிருந்து ரூ.932 கோடிக்கு ஒப்பந்தமும், இரயில்வே, அஞ்சல், தந்தி துறைகளிலிருந்து ரூ.93 கோடிக்கு ஒப்பந்தமும் வாங்கி தந்துள்ளது.

புதியத் தொழில் கோட்பாட்டின் கீழ் ஒரு மத்திய சந்தை அமைப்பாகப் பணியாற்றும் பொருள்களைச் சந்தையிடும் திட்டங்களிலும், மூலப் பொருள் வழங்கிடும் வழிமுறைகளிலும் கழகம் ஏராளமாக சிறு தொழில் நிறுவனங்களுக்கு உதவியுள்ளது. உற்பத்திப் பொருள்களை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதிலும் பெரிதும் உதவி வருகிறது.

மாநில சிறு தொழில் வளர்ச்சிக் கழகங்கள்

மாநில அளவில் சிறு தொழில்களின் தோற்றத்திற்கும், நிதியுதவிக்கும் இக்கழகங்கள் ஆற்றும் பணியைச் சிறப்பாகக் கூறிடலாம். 1955–ல் தேசிய சிறுதொழில் கழகம் தோன்றியதற்குப் பின்னர் இக்கழகம் நிறுவப்பட்டன. நிறுமச் சட்டத்தின் கீழ் இவைகள் தோற்றுவிக்கப்பட்டதால் பல்வகை செயல்களைச் செய்திட பணிநெகிழ்வு அல்லது மாறும் தன்மை இவைகளுக்குண்டு. தற்சமயம் 18 மாநிலங்களிலும் 3 மத்திய அரசு ஆட்சிக்கு உற்பட்ட பிரதேசங்களிலும் இவைகள் உள்ளன.

இக்கழகங்களின் நடவடிக்கைகளாவன :

1. மூலப்பொருள்களைப் பெற்று வழங்குதல்.
2. வாடகைக் கொள்முதல் அடிப்படையில் இயந்திர சாதனங்களை வழங்குதல்.
3. மாநில அரசு சார்பாக ஆரம்ப முதலளிக்கும் திட்டத்தை நிறைவேற்றல்.
4. தொழில் நிலையங்களை ஏற்படுத்தி நிர்வகித்தல்.
5. உற்பத்தி நிறுவனங்களின் மேலாண்மையைக் கவனித்தல்.
6. தொழில் நுட்ப ஆலோசனை அமைப்பு நிறுவுதல்.
7. சந்தையிடு செயல்களைச் செய்தல்.

மேற்கூறிய நடவடிக்கைகளைச் சுருக்கமாக சந்தையிடுதல் நிதியுதவி, மேம்பாடு என்ற மூன்று தலைப்பின் கீழ் கூறலாம்.

வாடகைக் கொள்முதல் முறையை தற்சமயம் சில மாநில கழகங்கள் விட்டுவிட்டன. காரணம் போதிய நிதிவசதி இல்லாதது தான். சில கழகங்கள் தாங்களே தொழிற்சாலைகளைத் துவக்கி நடத்திக் கொண்டு வருகின்றன. உதாரணமாக குஜராத் மாநில சிறு தொழில்கள் வளர்ச்சிக் கழகம் ஒரு

ஸ்கூட்டர் உற்பத்திச் செய்யும் தொழிற்சாலையை நடத்துகிறது. ஓரிசா மாநிலம் கழகம் டி.வி. உற்பத்தியில் ஈடுபட்டுள்ளது. சில மாநில கழகங்கள் நலிவடைந்த அல்லது பிரச்சனைகளுடைய சிறு தொழில் நிறுவனங்களை தாங்களே ஏற்று நடத்துகின்றன. மூடப்பட்டுள்ள நிறுவனங்களைத் திறந்து அவைகளுக்குப்புணர் வாழ்வு தருகின்றன.

இக்கழகங்களின் முக்கிய செயல் நவீன உள்ளமைப்பு வசதிகளைத் தொழிலதிபர்களுக்குச் செய்து தருவதாகும். புதிய தொழில்களைத் துவக்கிட உள்ளூர் தொழிலதிபர்களை ஊக்குவித்தல், தெரியப்படுத்தல் போன்றப் பொறுப்புகளை இவைகளே எடுத்துக் கொண்டுள்ளன. தொழிலில் பின் தங்கிய மாவட்டங்களில் பல தொழில் பேட்டைகளை உண்டாக்கி அபிவிருத்திச் செய்துள்ளன. அவைகளுக்குத் தொழிற்கூடம், கிடங்கு வசதி, பொது உற்பத்திவசதி போன்றவைகளை அளித்துள்ளன. எனினும் சிறு தொழில்கள் வளர்ச்சிக்கு இவைகள் ஆற்ற வேண்டிய பணிகள் எவ்வளவோ உள்ளன.

பாடம் - 14

தேசிய தொழில் வளர்ச்சிக் கழகம் (NATIONAL INDUSTRIAL DEVELOPMENT COPORATION - NIDC)

இக்கழகம் 1984ஆம் ஆண்டு நாட்டின் பொருளாதார வளாச்சிக்கு வகை செய்யும் நோக்குடன் கனரகத் தொழில் வளர்ச்சிக்குத் தேவையான நிதியுதவி அளிக்கத் துவங்கப்பட்டது.

நோக்கம்

பொருளாதார வளர்ச்சிக்கு வகை செய்யும் பொருட்டு, நாட்டைத் தொழில் மயமாக்கச் சில பெரிய கனரகத் தொழில்களைத் துவங்க உதவுதல். இதுவரை இங்கு தயாரிக்காது வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருளை நம் நாட்டிலேயே தயாரிக்க வைப்பது.

பணிகள்

1. தொழிற்சாலை அமைப்பு பற்றிய அறிவுரைகளைத் தொழில் நிறுவனத்திற்கு அளித்தல்.
2. புதிய தொழிற்சாலைகளை உருவாக்கும் திட்டத்தை வகுத்துத் தருதல்.
3. உற்பத்தியை அதிகரிக்கப் பல புதிய வழிகளையும், உத்திகளையும் பற்றிய திட்டத்தைக் கூறுகிறது.
4. ஏற்கனவே உள்ள நிறுவனத்தை மேலும் முன்னேறச் செய்ய அதற்குத் தேவையான நவீனமயமாக்குதல், சீரமைத்தல், இயந்திரமயமாக்குதல் முதலியன.

நிர்வாகம்

இதன் தலைவர் வணிகத்துறை அமைச்சராவார். இதறகு ஒரு உதவித்தலைவரும், நிர்வாக இயக்குநரும் உள்ளனர். இவர்களுடன் நிர்வாக உறுப்பினர்கள் 15 பேரும் இருந்து இக்கழகத்தின் மேலாண்மையைக் கவனிக்கின்றனர்.

முன்னேற்றம்

முற்றிலும் இறக்குமதியையே நம்பி இருந்த பொருள்கள் சிலவற்றை இதன் உதவியால் நம் நாட்டிலேயே தயாரிக்க வகை செய்யப்பட்டது. குறிப்பாக வெளிநாட்டில் இறக்குமதி செய்து வந்த புகைப்பட பிலிம்கள் தற்பொழுது இதன் உதவியால் நம் நாட்டிலேயே தயாரிக்கப்படுகின்றன.

தேசிய சிறுதொழில் கழகம்
(Nationa Small Industries Corporation - NSIC)

சிறு தொழில்களுக்கு நிதியுதவி செய்யும் பொருட்டு 1955ஆம் ஆண்டு அரசுக் கம்பெனியாகத் துவக்கப்பட்டது.

நோக்கங்கள்

1. சிறு தொழில்களுக்கு நிதிவசதி அளித்தல்.
2. அவைகளுக்கு தொழில் நுட்ப ஆலோசனைகளை அளிப்பது.
3. சிறு தொழில் உற்பத்தியாளர் பொருள்களை விற்பனை செய்யும் முகமாகப் பெரிய தொழில்களுக்குத் தேவையான உதிரிப் பாகங்களைச் சிறு தொழில் உற்பத்தியாளரிடமிருந்து கிடைக்க வகை செய்தல்.
4. அரசுக்கு வேண்டிய பொருள்களைச் சிறு தொழில் உற்பத்தியாளரிடம் வாங்கி அரசுக்கு அளிப்பது.

மூலதனம்

இதன் மூலதனம் மத்திய அரசு அளித்துள்ள ரூ.10 லட்சமாகும். மற்றும் தேவைப்படும் காலத்தில் கடனாகவும் மானியமாகவும் அளிக்கிறது.

பயன்கள்

பின் தங்கிய பகுதிகள் தொழில் மையமாக இது உதவியது. புதிய தொழில் துவங்குபவருக்கும், அதிபர்களுக்கும் பயிற்சி அளித்தது. இதன் படி 1967 வரை 3600 பேர் பயனடைந்துள்ளனர். இதன் மூலம் ரூ.29 கோடி, 7425 தொழில்களுக்குக் கடனாக அளிக்கப்பட்டுள்ளது. சிறு தொழில் வளர்ச்சியைக் காக்கவும், அதன் உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்யவும் நிரந்தர மற்றும் தற்காலிகச் சந்தை, கண்காட்சி முதலியன நிறுவி, சிறு தொழில்கள் முன்னேற வகை செய்தது.

வேளாண்மை மறு நிதி வளர்ச்சிக் கழகம்
(Agricultural Refinance & Development Corporation - ARDC)

வேளாண்மையோடு அதனுடன் தொடர்புடைய துறைகளான கால்நடை, பால் பண்ணை, கோழிப்பண்ணை போன்றவற்றின் வளர்ச்சிக்கு இடைக்கால நீண்ட காலக்கடன் முதலியவற்றை வழங்கும் நோக்கில் 1963 ஜூலை 1இல் வேளாண்மை மறு நிதி வளர்ச்சிக் கழகத்தை (Agricultural Refinance Corporation) நிறுவினர். இதனுடைய பணிகள் விரிவாக நடைபெறும் வகையில் இதனை 1975 நவம்பர் 15 முதல் வேளாண்மை மறு நிதி வளர்ச்சிக்கழகம் என்று மாற்றியுள்ளனர்.

நோக்கம்

மத்திய நில வள வங்கிகளோ, மேல் மட்டக் கூட்டுறவு வங்கிகளோ கடன் தர முடியாத வேளாண்மை வளர்ச்சித் திட்டங்களுக்குக் கடன் தருவது இக்கழகத்தின் நோக்கமாகும். இந்தக் கழகத்திலிருந்து நிலத்தைத் திருத்தவும், பயன்படுத்தவும், முந்திரி, ஏலக்காய், திராட்சை, பாக்கு, தென்னை போன்ற சில சிறப்புப் பயிர்களைப் பயிரிடலாம். வேளாண்மையை எந்திரமயமாக்கவும் இது போன்றவற்றிற்காகவும் கடன் பெறலாம். மத்திய நிலவள வங்கிகள், மாநிலக் கூட்டுறவு வங்கிகள், வணிக வங்கிகள், கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவை இக்கழகத்திடமிருந்து மறுநிதி வாய்ப்பினைப் பெறலாம்.

மூலதனம்

இதனுடைய அனுமதிக்கப் பெற்ற மூலதனம் 25 கோடியாகும். ரூ.10,000 மதிப்புள்ள 25,000 பங்குகளாகப் பிரித்துள்ளனர். முதலில் 5 கோடி ரூபாய் மதிப்பிலுள்ள 5000 பங்குகளை வெளியிட்டனர். ரிசர்வ் வங்கி 2,500 பங்குகளைப் பெற்றது. மாநிலக் கூட்டுறவு வங்கிகளும், மத்திய நிலவள வங்கிகளும், வணிக வங்கிகளும் ஆயுள் காப்பீட்டுக் கழகமும் மீதிப் பங்குகளைப் பெற்றன. இக்கழகத்தின் பங்குகளுக்கு மைய அரசு காப்புறுதி வழங்கியுள்ளது.

நிர்வாகம்

நிர்வாக இயக்குநர் உட்பட 9 பேரைக் கொண்ட இயக்குநர்கள் குழு நிர்வாகத்தைக் கவனிக்கும். ரிசர்வ் வங்கியின் வேளாண்மைக் கடன் துறைக்குப் பொறுப்பான துணை ஆளுநர் இக்கழகத்தின் தலைவராக இருப்பர். மத்திய அரசின் சார்பில் மூன்றுபேரும் ரிசர்வ் வங்கி, மத்திய நிலவள வங்கிகள், மாநிலக் கூட்டுறவு வங்கிகள், வணிக வங்கிகள், ஆயுள் காப்பீட்டுக் கழகம் முதலீட்டு நிறுவனங்கள் ஆகியவற்றின் சார்பில் ஒவ்வொருவரும் இயக்குநர் குழுவில் இடம் பெறுகின்றனர்.

முன்னேற்றம்

இக்கழகம் 1974–75இல் 106.4 கோடி ரூபாய் மறுநிதி வழங்கி இருந்தது. இது 1975–76இல் 171.2 கோடி ரூபாயாக கூடியுள்ளது. இக்கழகம் தோன்றியது முதல் 1976 ஜுன் வரை மறுநிதியாக 594.2 கோடி ரூபாய் வழங்கியுள்ளது.

1975–76இல் இக்கழகம் 909 திட்டங்களுக்கு 269.9 கோடி ரூபாய் கடன் அனுமதித்திருக்கின்றது. சிறுநீர்ப் பாசனத் திட்டம் பல்வேறு வகையான திட்டங்களுக்குக் கடன் வழங்கியுள்ளது. 1977–78இல் பயன்படுத்திய கடன் தொகை 234 கோடி ரூபாயாகவும், 1978–79இல் ரூ.285 கோடியாகவும் உயர்ந்தது.

மறுநிதிக் கழகத்திலிருந்து 1975–76இல் மிகுதியாகக் கடன் பெற்ற மாநிலம் உத்திரப் பிரதேசம். இம்மாநிலம் 26 கோடி ரூபாய் கடன் பெற்றிருந்தது. அடுத்து மஹாராஷ்டிரம் 22.5 கோடி ரூபாயும், கர்நாடகமும், மத்திய பிரதேசமும் 19 கோடி ரூபாய் வீதமும் கடன் பெற்றிருந்தன.

மாநிலங்களுக்கிடையில் கடன்கொடுப்பதிலுள்ள ஏற்றத்தாழ்வைச் சுட்டிக் காட்டுகின்றனர்.வேளாண்மை மறுநிதி வளர்ச்சி கழகம் புதிய திட்டங்களோடு செயல்படுகின்றது.

வட்டாரக் கிராமிய வங்கிகள் (Regional Rural Banks - RRB)

1976 வட்டாரக் கிராமிய வங்கிகளின் சட்டப்படி 1976இல் 19 வட்டாரக் கிராமிய வங்கிகளை அமைத்துள்ளார்கள். 20 அம்சத்திட்டத்தின் கீழ் கிராம

மக்களுக்கு கடன் உதவி அளிக்க இத்தகைய சிறப்பு வங்கிகளைத் தொடங்கினர்.

நோக்கம்

கிராமங்களிலுள்ள சிறிய இறுதி நிலை விவசாயிகள், வேளாண்மைக் கூலிகள், கைத் தொழில் வினைஞர்கள், சிறு தொழில் முனைவோருக்குக் கடன் அளிப்பதே இதன் நோக்கமாகும். ஒவ்வொரு வட்டாரக் கிராமிய வங்கியும் அரசு குறிப்பிடுகின்ற எல்லைக்குள் செயல்படும். தேவையானால் கிளைகளை அமைத்துக் கொள்ளலாம்.

மூலதனம்

ஒவ்வொரு வட்டாரக் கிராமிய வங்கியின் அனுமதிக்கப்பட்ட முதல் ஒரு கோடி ரூபாய். இதில் 25 இலட்சம் ரூபாய் வெளியிட்ட முதலாக இருக்கும். இவற்றில் 50 சதவீதத்தை மத்திய அரசும், 15 சதவீதத்தைத் தொடர்புடைய மாநில அரசும், 35 சதவீதத்தை நிறுவும் வங்கியும் அளிக்கின்றன.

நிர்வாகம்

இதனுடைய நிர்வாகம் 9 உறுப்பினர்களைக் கொண்ட இயக்குநர் குழுவிடம் இருக்கும். இதனுடைய தலைவரை இந்திய அரசு நியமிக்கிறது. ரிசர்வ் வங்கியின் ஆலோசனைப்படி அரசு கொடுக்கும் ஆணைகளின் படியே இக்கழகத்தை நிர்வகிக்க வேண்டும்.

பணிகள்

இது பொதுவாக வங்கிப் பணிகளை மேற் கொள்ளலாம். குறிப்பாக இந்த வங்கி சிறு, இறுதி நிலை விவசாயிகள், வேளாண்மைக் கூலிகள், பலவகைக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றுக்கும் தொழில் வினைஞர்கள், வாணிபம், தொழிலில் ஈடுபட்டோர் ஆகியோருக்கும் கடன் தரலாம்.

குறுகிய காலத்தில் 19 வட்டாரக் கிராமிய வங்கிகளும் 112 கிளைகளை அமைத்துள்ளன, இவை 12 கோடி ரூபாய் வைப்புகளைப் பெற்றிருப்பதும் 15 கோடி ரூபாய் கடன் கொடுத்திருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

பன்னாட்டுப் புனரமைப்பு வளர்ச்சி வங்கி
(International Bank for Reconstruction and Development-IBRD)

உலக வங்கி

ஏழ்மை எங்கே இருந்தாலும் அஃது எங்கணும் உள்ள செழிப்புக்கு ஆபத்தாக விளையும் என்ற கொள்கையைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டதே உலக வங்கியாகும். அதாவது இன்றைய உலகின் பொருளாதாரத் துறையில் காணப்படும் பெரிய சீர்கேடு செல்வ நாடுகளுக்கும், ஏழை நாடுகளுக்கும் இடையே காணப்படும் பொருளாதார இடைவெளியாகும். இடைவெளியை நீக்காவிடில் உலகின் பல பகுதிகளில் தவிர்க்க முடியாத சிக்கல்கள் ஏற்படும். இவ்விடைவெளியை நிரப்பவே வளர்ச்சி அடைந்த நாடுகள், வளர்ச்சி குன்றிய நாடுகளுக்கு உலக வங்கி மூலம் உதவி புரிந்து வருகின்றன. 1944ஆம் ஆண்டு அமெரிக்காவிலுள்ள பிரிட்டன் உட்ஸ் நகரில் 45 நாடுகளின் பிரதிநிதிகள் கூடிய மாநாட்டு முடிவுப்படி இவ்வங்கி உருவாக்கப்பட்டது. 1946ஆம் ஆண்டு ஜுன் மாதம் வாஷிங்டனில் இவ்வங்கி செயலாற்றி வந்தது. இந்த வங்கியில் அங்கம் வகிக்க முதல் தகுதி ஐ. நா. சபையில் அங்கம் வகித்தலாகும்.

நோக்கம்

அ. இரண்டாம் உலகப் போரில் பாதிக்கப்பட்ட நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்கு உதவி செய்தல்.

ஆ. இதில் உறுப்பினராய் உள்ள நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்திற்குத் தேவையான நிதி வசதிகளை அளித்தல்.

இ. தனியார் மூலதனம் கிடைக்காத நாடுகளுக்குத் தம் நிதியாகவோ அல்லது பிற நாடுகளில் கடன் வாங்கியோ அளித்து அந்நாட்டின் உற்பத்தியைப் பெருக்குதல்.

ஈ. அறிவுரைகள், ஆலோசனைகள் மற்றும் தொழில் நுட்ப உதவிகளைச் செய்வது.

உ. பன்னாட்டு வாணிபத்தில் சமன்பாட்டு நிலையில் வளர்ச்சி ஏற்படவும், வெளி நாட்டுச் செலாவணியில் சம நிலை தோன்றவும் வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பது.

நிர்வாகம்

இவ்வங்கி ஒரு குழுவால் நிர்வகிக்கப்படுகிறது. இக்குழுவின் கூட்டம் ஆண்டிற்கொரு முறை நடைபெறுகிறது. இக்குழுவில் உறுப்பினர் நாடுகள் ஒவ்வொன்றும் ஓர் ஆளுநரையும், ஒரு மாற்று ஆளுநரையும் நியமிக்கும். அன்றாட அலுவல்களைக் கவனிக்கும் பொருட்டு 20 நபர் கொண்ட இயக்குநர் செயற்குழு உள்ளது. இதன் தலைவர் இயக்குநர் செயற்குழுவால் தேர்ந்தெடுக்கப்படுவர். இப்பொழுது அமெரிக்காவைச் சேர்ந்த பிளாஸ்டன் என்பவர் இதன் தலைவராக இருக்கிறார். இது தவிர ஆளுநர் குழுவில் 10 பேர் இருப்பர். இவர்கள் ஆண்டுக்கு ஒரு முறை கூடி இதற்குத் தேவையான ஆலோசனைகளையும் பரிந்துரைகளையும் வழங்குவார்கள். இந்த வங்கி வழங்கும் கடன் 5 வகைப்படும் அவையாவன :

1. சொந்த நிதியிலிருந்து கடன் வழங்குதல்.
2. உறுப்பு நாட்டிடமிருந்து கடன் பெற்று மற்ற நாட்டிற்குக் கடன் அளித்தல்.
3. கடன் பெற விரும்பும் நாட்டிற்குப் பிற நாடுகளிடமிருந்து கடன் கொடுக்கத் தக்க சூழ்நிலையை ஏற்படுத்துதல்.
4. கடன் உத்திரவாதம் அளித்தல்.
5. வளர்ச்சி குன்றிய நாடுகளில் உள்ள தனியார் துறை நிறுவனங்களுக்குக் கடன் வழங்குவதற்கென உறுப்பு நாடுகளில் நிறுவப்படும் நிறுவனங்கள் வரியாகக் கடன் அளித்தல்.

கடன் நிதி

உலக வங்கி தனது நிதியைக் கீழ்க்கண்ட 3 வழிகளில் பெறுகின்றது.

1. வங்கியின் மூலதனம், 1972இல் 26608 மில்லியன் டாலராகும்.
2. இவ்வங்கி உலக நாடுகளிடமிருந்து கடன் பெறுதல்.
3. இவ்வங்கியின் லாபத்தையும் இது கடன் தருவதற்குப் பயன்படுத்துகின்றது.

வங்கியின் கடன் கொள்கை

1. 10 ஆண்டிற்க்கு மேற்பட்ட காலத்திற்குக் கடன் அளிப்பது.

2. உறுப்பு நாடுகளுக்கு மட்டும் கடன் அளிப்பது.

3. கடன் வாங்கும் நாட்டின் திரும்பச் செலுத்தும் திறனை மதிப்பிடல்

4. திட்டத்தினது அந்நியச் செலாவணியின் ஒரு பகுதியை ஈடுகட்டவே கடன் வழங்குதல்.

5. வங்கிக் கடன் எந்த் நாட்டில் செலவு செய்ய வேண்டுமென்ற எத்தகைய கட்டுப்பாட்டையும் விதிக்காது.

6. வளர்ச்சிக்கான திட்டங்களுக்கு மட்டுமே கடன் வழங்குதல்.

நன்மைகள்

இது இரண்டாம் உலகப் போரினால் பாதிக்கப்பட்ட ஐரோப்பிய நாடுகளுக்குப் பெருமளவில் கடன் வழங்கி அந்நாடுகளிலுள்ள பொருளாதார வளர்ச்சிக்கு உதவியது. 1948க்குப் பின் பின்தங்கிய நாடுகளின் முன்னேற்றத்திற்காக இந்த வங்கி உதவி செய்ய முன் வந்து அதன் படி மின்சார உற்பத்தி, கிராமப்புற வளர்ச்சி மற்றும் விவாசய வளர்ச்சி போக்குவரத்து வளர்ச்சி மற்றும் தகவல் தொடர்பு போன்ற வசதிகள் குன்றிய நாட்டில் இவற்றின் வளர்ச்சிக்கு உதவி அந்நாட்டை மேம்பாடு அடைய வகை செய்கிறது.

குறைபாடுகள்

1. உறுப்பினர்நாடுகளின் தேவைக்கு ஏற்ற அளவுக்கு இந்த வங்கியிடம் நிதி வசதி இல்லை.

2. இந்த வங்கி கடன் வழங்குவதில் சில பாரபட்சங்கள் காட்டியது.

3. தேவைக் காலத்தில் இதனிடம் சில நிதி உதவி உடனே கிடைப்பதில்லை.

4. தனியார் இவ்வங்கியிடம் கடன் பெற முடியாத அளவுக்கு இதன் கட்டுப்பாடும், சட்டதிட்டமும் உள்ளது.

5. கல்வி மற்றம் பொதுச் சுகாதார வளர்ச்சிக்கு இந்த வங்கி உதவுவதில்லை.

6. உலக வங்கி அளிக்கும் கடன்களுக்கு வட்டி வீதம் அதிகமாக உள்ளது.

ஆசிய வளர்ச்சி வங்கி (Asian Development Bank - ADB)

இவ்வங்கி டிசம்பர் 1966ஆம் ஆண்டு முதல் மணிலாவைத் தலைமையகமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

நோக்கம்

1. ஆசிய நாடுகளிடையே சமாதானத்தையும், கூட்டுறவையும் வலுப்படுத்த பொருளாதார மேம்பாட்டுக்கு வழி வகுப்பது.
2. வளர்ச்சித் திட்டத்திற்குத் தேவையான மூலதனத்தைத் தனியார் மற்றும் பொதுத்துறை வாயிலாகத் திரட்டுவது.
3. வளர்ந்து வரும் ஆசிய நாடுகளின் வளர்ச்சிக்கு உதவுவது.
4. இவ்வங்கியில் உறுப்பினர்களான ஆசிய நாடுகளுக்குத் தொழில் நுட்ப ஆலோசனைகளை அளிப்பது.
5. உறுப்பினர் நாடுகளின் பொருளாதாரங்களை ஒன்றுக்கொன்று துணையாக்கி வெளிநாட்டு வாணிபத்தை வளர்ப்பது.

மூலதனம்

இவ்வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் 2985.71 மில்லியன் டாலர். இம் மூலதனத்தை ஆசிய நாடுகள் அல்லாத பிற நாடுகளும் அளித்துள்ளன. இதற்கு மூலதனம் அளிப்பதில் அமெரிக்கா முதலிடம் வகிக்கிறது.

இவ்வங்கியின் பணிகள்

இவ்வங்கி குறுகிய கால கடன்களே அளிக்கிறது. இவை விவசாயம், மின்சாரம் தொழில் திட்டங்களுக்கும், வளர்ச்சி வங்கிகளுக்கும் கடன் வழங்குகிறது. மேலும் நேரடிக் கடன் அளித்தல், மூலதன அங்காடிகள் மூலம் நிரப்பிய நிதியைக் கடன்களாகத் தருவது, பங்கு மூலதனங்களில் முதலீடு செய்வது, உறுப்பினர் நாடுகள் பெறும் கடன்களுக்கு உத்திரவாதம் அளித்தல் ஆகியன.

இவ்வங்கியில் ஆசிய நாட்டைச் சார்ந்தவர்களும், சாராதவர்களும் உறுப்பினர்களாக இருக்கின்றனர். இதில் ஆசிய நாட்டைச் சாராதவர்கள் வட்டாரத்தில் இல்லாத உறுப்பினர் என்றும், ஆசிய நாட்டில் உள்ளவர்கள்

வட்டார உறுப்பினர் என்றும் இரு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளனர். இவ்வங்கியில் வட்டாரத்தில் அல்லாதவர் அளித்த மூலதனம் தான் அதிகம். அதிலும் குறிப்பாக அமெரிக்கா அளித்த மூலதனம் தான் அதிகம். மேலும், இந்த வங்கி 1974இல் ஆசிய வளர்ச்சி நிதி ஒன்றையும் துவக்கியுள்ளது. பொதுவாக இந்த வங்கி போதுமான நிதி வசதி அற்றதாகவே உள்ளது.

நோக்கம் :

1. சர்வதேசப் பணக் கூட்டுறவு வளர்ச்சிக்கு நிலையான ஒரு நிறுவனத்தை உருவாக்குதல்.
2. உலக நாடுகளிடையே உற்பத்தி மற்றும் வேலை வாய்ப்பைப் பெருக்குதல்.
3. நாணய மாற்று எளிதாக நடைபெறச் செய்தல்.
4. அந்நியச் செலாவணிக் கட்டுப்பாடுகளை நீக்கி பன்னாட்டு வாணிபத்துக்கு உதவுதல்.
5. உறுப்பு நாடுகளுக்கு நிதி வசதி அளித்தல்.
6. உறுப்பு நாடுகளுக்கு ஏற்படும் சர்வதேசச் செலுத்து நிதியைச் சமநிலை அடைய உதவுதல்.

மூலதனம் :

இந்நிறுவனம் தனக்குத் தேவையான மூலதனத்தை இதில் உறுப்பினராய் உள்ள நாடுகளிலிருந்து பெற்றது. இதனால் இதனிடம் தங்கமும், டாலரும் அதிகளவு இருப்பு உள்ளது. தற்சமயம் 21 மில்லியன் டாலர் இதன் மூலதனமாக உள்ளது.

பணிகள்

1. தேவைப்படும் நாடுகளுக்குக் கடன் அளிப்பது.
2. நாட்டுக்கு நாடு ஏற்படும் பரிமாற்றங்களால் ஏற்படும் வித்தியாசத்தைச் சரிசெய்யத் தேவையான நிதியைத் தற்காலிகமாகக் கொடுத்து உதவுதல்.
3. நாணய மாற்று வீதங்கள் நாட்டுக்கு நாடு வேறுபாடின்றி நிலையாக இருக்க உதவுதல்.

4. ஏற்றுமதி இறக்குமதியால் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளால் பாதிக்கப்படும் நாடுகளுக்கு நீண்ட கால, குறுகிய கால மற்றும் மத்திய காலக் கடன் அளித்தல்.

5. வட்டி வீதம் குறைவாக வசூளிப்பது.

6. ஏற்றுமதி செய்வதால் வரவேண்டிய தொகைக்குண்டான கால தாமதத்தைச் சரிகட்ட ஈடுகட்டும் நிதி வசதிகள் என்ற திட்டத்தின் மூலம் ஏற்றுமதியாளர்களின் தொல்லைகள் நீங்க வழிவகுத்தது.

7. பன்னாட்டு ரொக்கத் தன்மையைப் பெருக்கும் நோக்கில் இந்நிறுவனம், 1967, இல் சிறப்பு எடுப்பு உரிமைத் திட்டம் கொண்டு வந்தது.

பாடம் - 15

இந்தியாவில் பொருளாதார வளர்ச்சிக்கான திட்டங்கள்

1934 ஆம் ஆண்டு வெளியிடப் பெற்ற "இந்தியாவிற்கான திட்டமிட்ட பொருளாதாரம் (Planned Economy of India) என்னும் தன்னுடைய நூலில், கீர்த்தி பெற்ற அறிஞராகிய சர். விஸ்வேரைய்யா திட்டமிடுதலின் தேவையை அறிவுறுத்தினார். 1937ம் ஆண்டு இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி, ஜவஹர்லால் நேரு தலைமையில் தேசியத் திட்டக் கமிட்டியை அமைத்தது. 1943–ல் பம்பாயின் முதன்மையான தொழிலதிபர்கள் எட்டுப்பேர்கள் சேர்ந்து 'பம்பாய் திட்டத்தை (Bombay Plan) வெளியிட்டனர். அதே சமயத்திலேயே எம்.என்.ரே என்பவரின் மக்களுக்கான திட்டம்' (Plan for the people) வெளியிடப் பெற்றது. இந்திய அரசு 1944–ல் திட்ட வளர்ச்சித் துறையை ஏற்படுத்தியது. எனினும், இந்தியா விடுதலை அடையும் வரை திட்டமிடுதலில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை.

1950 ஆம் ஆண்டு இந்திய அரசு, பண்டித ஜவஹர்லால் நேருவின் தலைமையில் இந்தியத் திட்டக் குழுவை அமைத்தது. அதன் பிறகு வளர்ச்சிக்கான திட்டங்களை அரசு செயல்படுத்தத் தொடங்கியது.

முதல் ஐந்தாண்டுத் திட்டம் (1951 - 1956)

வேளாண்மை, போக்குவரத்து, மின்சார உற்பத்தி ஆகியவற்றின் மேம்பாட்டைப் பெறுவதன் மூலம் இத்திட்டம் பொருளாதாரத்தை வலுப்படுத்தக் கருதியது. உயரும் விலைகளை நிலைப்படுத்துவது, மூலப் பொருள்களின் பற்றாக்குறையை தவிர்ப்பது, அவசியமான நுகர் பொருள்களின் உற்பத்தியைப் பெருக்குவது, வாழ வகையற்றவர்களுக்குப் புனர் வாழ்வளிப்பது போன்றவை திட்டத்தின் முக்கிய நோக்கங்களாக இருந்தன. இரண்டாவது உலகப்போரினாலும், இந்தியாவிலிருந்து பாகிஸ்தான் பிரிந்தமையாலும் பொருளாதாரத்தில் ஏற்பட்ட சீர்குலைவுகளைச் சீரமைக்கவும் கருதப்பட்டது. திட்டக் காலத்தில் தேசிய வருமானத்தை 11 சதவீதம் அதிகரிப்பது, வேலை வாய்ப்புகளைப் பெருக்குவது போன்றவையும் பிற நோக்கங்களாக அமைந்தன.

திட்டச் செலவீடு

முதல் திட்டத்தில் பொதுத் துறையில் செலவிட ரூ–2,000 கோடி ஒதுக்கப்பட்டது. பிறகு அது ரூ.2.356 கோடியாக உயர்த்தப்பட்டாலும், உண்மையில் செலவிடப்பட்டது, ரூ. 1,960 கோடியே ஆகும். வேளாண்மைத் துறையின் மேம்பாட்டிற்கு முதல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. அதன் மேம்பாட்டிற்கு உதவக் கூடிய மின்சாரம், நீர்ப்பாசனம் போன்ற வசதிகளும் பெருக்கப்பட்டன. சமுதாய வளர்ச்சித் திட்டத்தாலும் வேளாண்மைத் துறை பயனடைந்தது. இவற்றிற்காக ரூ.861 கோடி (மொத்தச் செலவீட்டில் 44 சதவீதம்) ஒதுக்கப்பட்டது. இரண்டாவது முக்கியத்துவம் பெற்றவை போக்குவரத்து–தகவல் தொடர்பு வசதிகளாகும். மொத்த ஒதுக்கீட்டில் இதற்கான செலவு 27 சதவீதம் ஆகும். கல்வி, ஆரோக்கியம், வீட்டு வசதி ஆகியவற்றிற்காக 22 சதவீதம், பெரிய தொழில்களின் வளர்ச்சிக்காக 5.8 சதவீதம், சிறு தொழில்களின் முன்னேற்றத்திற்காக 2.1சதவீதம் செலவிடப் பட்டது.

பொருளாதார வளர்ச்சிக்குத் திட்டமிடுதல் சாதனைகள்

பின்பு நிறைவேற்றப்பட்ட திட்டங்களுக்கு முன்மாதிரியாக அமைந்தது முதல் ஐந்தாண்டுத் திட்டமேயாகும். தட்ப – வெப்ப நிலைகள் சாதகமாக இருந்தமையால் வேளாண்மை உற்பத்தி சிறப்பாகப் பெருகியது. வெளிநாட்டு வாணிக நிலையும் சாதகமாகவே இருந்தது. இத்திட்டக் காலத்தில் தேசிய வருமானம் 18 சதவீதம் கூடியது. இதன் மூலம் சமுதாய வளர்ச்சித் திட்டமும் (Community Develoment Programme), தேசிய விரிவாக்கப் பணியும் (National Extension |Service) கைக் கொள்ளப்பட்டமை குறிப்பிடத் தக்கதாகும்.

முதல் திட்டக் காலத்தில் முதலீட்டு வீதம் தேசிய வருமானத்தின் 5 சதவீதத்திலிருந்து 7.3 சதவீதமாக உயர்ந்தது; தலா வருமானம் 11 சதவீதம் அதிகரித்தது; வேளாண்மை உற்பத்தி 19 சதவீதம் கூடியது. திட்டம் முடிவடையும் போது, கூட்டுறவு இயக்கத்தின் நன்மைகள் 25 சதவீத கிராம மக்களுக்குக் கிடைத்தன. உணவுப் பற்றாக்குறை குறைக்கப்பட்டது. விலைகள் 13 சதவீதம் குறைந்தன. பருத்தி உற்பத்தியில் 45 சதவீதம் கூடியது குறிப்பிடத்தக்கதாகும்.

சமூக நீதியை நிலைநாட்ட ஜமீன்தாரி முறை ஒழிக்கப்பட்டுக் குத்தகைச் சீர்திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன. 1961 – 62 ல் அயல்நாட்டுச் செலுத்து

நிலையில் பற்றாக்குறை ரூ.162.6 கோடியாக இருந்தது. ஏற்றுமதிப் பெருக்கத்தினால், 1955–56ல் அயல்நாட்டுச் செலுத்து நிலை இருப்பில் ரூ. 6.7 கோடி உபரி தோன்றியது.

மதிப்பீடு

முதல் திட்டத்தை நிறைவேற்றுவதில் சில குறைபாடுகள் அமைந்திருந்தன. எல்லாத் துறைகளிலும் சிறப்பான வளர்ச்சி ஏற்படவில்லை. வேலை வாய்ப்புகள் அதிகரிக்கவில்லை. நிலச் சீர்திருத்தங்களைச் செய்வதில் பல குறைகள் இருந்தன. சில குறைபாடுகள் இருந்தாலும் முதல் திட்டத்தைப் பல காரணங்களால் வெற்றிகரமான திட்டம் என்றே கருதவேண்டும். வேளாண்மை, சிறு தொழில்கள் ஆகியவற்றிற்கான கடன் வசதிகள் பெருகின. பிற்பட்ட வகுப்பினரின் முன்னேற்றத்திற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன. அரசின் பல துறைகளிலும் நிர்வாகத் திறமை வளர்ந்தது, முதல் திட்டம் பொருளாதாரத்தில் இயக்க நிலையான போக்கை ஏற்படுத்தியது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் (1956-61)

முதல் திட்டத்தைக் கொண்டு கிடைத்த வெற்றி, நாட்டைத் தொழில் மயமாக்க வேண்டுமென்ற இலட்சியமான நோக்கத்தைத் தோற்றுவித்தது. இத்திட்டக் காலத்தில் தான் சமதர்ம சமுதாயத்தை (Socialistic pattern of Society) அமைக்கும் கொள்கையை அரசு ஏற்றது. பல பெரிய எஃகுத் தொழிற்சாலைகள் பொதுத்துறையில் அமைக்கப்பட்டன. இத்திட்டம் தொழில் துறை வளர்ச்சிக்கான திட்டமாக இருந்தது.

இரண்டாவது திட்டத்தின் நோக்கங்கள் கீழ்வருமாறு அமைந்திருந்தன :–

1. அடிப்படைத் தொழில்களுக்கும், பேரளவுத் தொழில்களுக்கும் முக்கியத்துவம் அளித்து நாட்டைத் தொழில் மயமாக்குவது.
2. நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த தேசிய வருமானத்தைக் கணிசமான அளவுக்குப் பெருக்குவது.
3. வேலை வாய்ப்புகளை அதிகரிப்பது.
4. செல்வத்திலும் வருமானப் பங்கீட்டிலும் உள்ள ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பது.

திட்டச் செலவீடு

இரண்டாவது திட்டத்திற்கான மொத்தச் செலவீடு ரூ.7,200 கோடியாகும். இதில் பொதுத்துறைக்கு ரூ.4,800 கோடியும் தனியார் துறைக்கு ரூ. 2,400 கோடியும் ஒதுக்கப்பட்டது. பின்பு அந்நியச் செலாவணிப் பற்றாக்குறையால் பொதுத்துறை முதலீடு ரூ.4,572 கோடியாகக் குறைக்கப்பட்டது. புதிய வரிகளின் விதிப்பு, அயல்நாட்டு உதவி பற்றாக்குறை நிதியாக்கம் (Deficit financing) ஆகியவற்றின் மூலம் அரசு நிதி வசதியைப் பெருக்கக் கருதியது.

முதல் திட்டத்தை விட இரண்டாவது திட்டத்தில் எல்லாத் துறைகளிலும் முதலீட்டின் அளவு கூடியது. தொழில்துறை வளர்ச்சிக்குத் தலையாய முக்கியத்துவம் வழங்கப்பட்டது. அடிப்படைத் தொழில்கள், பேரளவுத் தொழில்கள், சிறு தொழில்கள் ஆகியவற்றிற்கான முதலீடு மொத்த முதலீட்டில் 24 சதவீதமாக இருந்தது. போக்குவரத்து தகவல் தொடர்பு வசதிகளுக்கு 29 சதவீதம், மின்சாரம் – நீர்ப்பாசனம் ஆகியவற்றிற்கு 18 சதவீதம், வேளாண்மை வளர்ச்சிக்கு 12 சதவீதம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

சாதனைகள்

இரண்டாவது திட்ட காலத்தில் தேசீய வருமானம் 20 சதவீதம் அதிகரித்தது. நிர்ணயிக்கப்பட்ட இலக்கு 25 சதவீதம் ஆகும். நீண்ட காலத்தில் பலன் அளிக்கக்கூடிய துறைகளில் அதிக முதலீடு செய்யப்பட்டது. மூலதனச் செறிவுள்ள தொழில்களின் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் தரப்பட்டது. மக்கள் தொகைப் பெருக்கம் 10.3 சதவீதம் ஆக இருந்ததால் தலை வருமானம் 8 சதவீதம் மட்டுமே கூடியது.

பல முக்கியமான துறைகளிலும் உற்பத்தி கணிசமான அளவுக்கு அதிகரித்தது. எடுத்துக்காட்டாக, உணவுத் தாணியங்களின் உற்பத்தி 65.8 மில்லியன் டன்னிலிருந்து 76.0 மில்லியன் டன்னாகவும், கரும்பு உற்பத்தி 6 மில்லியன் டன்னிலிருந்து 8 மில்லியன் டன்னாகவும், எண்ணெய் வித்துக்களின் உற்பத்தி 5.6 மில்லியன் டன்னிலிருந்து 7.1 மில்லியன் டன்னாகவும், பருத்தி உற்பத்தி 4 மில்லியன் பேல்களிலிருந்து 5.1 மில்லியன் பேல்களாகவும் உயர்ந்தன. நீர்ப்பாசன வசதி பெற்ற நிலப்பரப்பு 56.2 மில்லியன் ஏக்கரிலிருந்து 70 மில்லியன் ஏக்கராகக் கூடியது.

தொழில்துறை உற்பத்தி ஆண்டொன்றுக்கு 7 சதவீதம் அதிகரித்தது. பிலாய், துர்க்காபூர், ரூர்கேலா ஆகிய இடங்களில் பொதுத்துறையின் கீழ் இரும்பு–எஃகு உருக்கு ஆலைகள் அமைக்கப்பட்டன.

இரயில், சாலை, கப்பல், விமானப் போக்குவரத்துகள் விரிவாக்கப் பெற்றன. சமூக நலப்பணிகள் அதிகரிக்கப்பட்டன.

இராசாயன – பொறியியல் தொழில்கள் மற்றும் சிறு தொழில்களின் வளர்ச்சியிலும் கவனம் செலுத்தப்பட்டது. சிமெண்ட், நிலக்கரி, அலுமினியம் ஆகியவற்றின் உற்பத்தி கூடியதோடு கார்கள், சைக்கிள்கள், சர்க்கரை, பருத்தித் துணிகள் போன்ற நுகர் பொருள்களின் உற்பத்தியும் குறிப்பிடத்தக்க அளவுக்கு உயர்ந்தது.

இரண்டாவது திட்டக் காலத்தில் 80 மில்லியன் பேர்களுக்குப் புதிதாக வேலை வாய்ப்புக் கிடைக்குமென இலக்கிடப் பெற்றது. ஆனால் வேலை வாய்ப்பைப் பெற்றவர்கள் 65 மில்லியன் பேர்கள் மட்டுமேயாகும்.

மதிப்பீடு

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் விரைவான பொருளாதார வளர்ச்சியைப் பெறுவதற்குத் தேவையான 'உள்ளமைப்பு' (Infrastructure) வசதிகள் பெருகின. 1950– 51ல் 1.3 மில்லியன் டன்னாக இருந்த எஃகு உற்பத்தி 1960 – 61ல் 2.6 மில்லியன் டன்னாக உயர்ந்தது. இத்திட்டத்தின் தொடக்கத்திலிருந்தே பல வகையான சிக்கல்கள் உருவெடுத்தன. அவை,

1. அந்நியச் செலாவணிப் பற்றாக்குறை.
2. வேளாண்மைகளிலும், தொழில் துறைகளிலும் எதிர்பார்த்த அளவுக்கு உற்பத்தி பெருகாமை:
3. பண வீக்கத்தால் பொருள்களின் விலை உயர்வு.
4. கடன்கள் மற்றும் சிறுசேமிப்புகளின் அளவு குறைவு.
5. போதுமான அளவிற்கு நிதி வசதிகள் பெருகாமை.
6. திட்டச் செலவுகளின் அதிகரிப்பு.

இத்திட்டத்தில் வேளாண்மை வளர்ச்சியில் அதிகக் கவனம் செலுத்தப்படாமையால் தான் பல பிரச்சினைகள் உருவாயின என்று பலர்

கருதுகின்றனர். இரண்டாவது திட்டம் வெற்றிப் பெறாமைக்குக் குறைந்த மழைப் பொழிவும் முக்கியக் காரணமாகும்.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம்

இந்தியப் பொருளாதாரத்தைச் சுயமாக வளரும் தன்மை கொண்டதாக மாற்ற வேண்டுமென்று இத்திட்டம் கருதியது. உணவுத் தானியங்களின் உற்பத்தியில் தன்னிறைவு பெறுவது, பிற வேளாண்மைப் பொருள்களின் உற்பத்தியைக் கூட்டுவது, ஆதாரத் தொழில்களை விரிவுபடுத்துவது, தேசிய வருமானத்தை ஆண்டொன்றுக்கு 5 சதவீதம் அதிகரிப்பது, வருமானத்திலும் செல்வப் பங்கீட்டிலும் உள்ள ஏற்றத் தாழ்வுகளைக் குறைப்பது, ஏற்றுமதியைப் பெருக்குவது, மனித வளத்தை முழுமையாகப் பயன்படுத்துவது, வேலை வாய்ப்புக்களை உயர்த்துவது ஆகியவை இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாக அமைந்தன.

திட்டச் செலவீடு

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மொத்த ஒதுக்கீடு ரூ. 10,400 கோடியாகும். அதில் பொதுத்துறைக்காக ரூ. 6,300 கோடியும், தனியார் துறைக்காக ரூ. 4,100 கோடியும் ஒதுக்கப்பட்டது. இரண்டாவது திட்டம் அளித்த படிப்பினையால் மூன்றாவது திட்டம் வேளாண்மை வளர்ச்சிக்கே முதல் முக்கியத்துவத்தைத் தந்தது. மொத்த நிதிச் செலவீட்டில் வேளாண்மை, நீர்ப்பாசனம், மின்சார உற்பத்தி ஆகியவற்றிற்கு 36 சதவீதமும் போக்குவரத்து-தகவல் வசதிகளுக்கு 20 சதவீதமும் ஒதுக்கீடு செய்யப்பெற்றது.

சாதனைகள்

இத்திட்டத்தின் முதல் நான்கு ஆண்டுகளில் ஓரளவுக்குப் பல துறைகளின் வளர்ச்சியும் அமைந்திருந்தது. 1965–66ல் இந்திய–பாகிஸ்தான் போரினால் பொருளாதார வளர்ச்சி பெரிதும் பாதிக்கப்பட்டது. 1962–ல் சீனர்களின் ஊடுருவலாலும் பாதுகாப்புச் செலவு உயர்ந்தது.

உணவு உற்பத்தியை ஆண்டொன்றுக்கு 5.4 சதவீதம் கூட்ட வேண்டுமெனக் கருதப்பட்டது. ஆனால், முதல் நான்கு ஆண்டுகளுக்குமான சராசரி உற்பத்தி உயர்வு 2.8 சதவீதமாக மட்டுமே அமைந்தது.

தொழில் துறையின் வளர்ச்சி இலக்கிடப்பட்ட அளவுக்குக் குறைவாகவே இருந்தாலும் சர்க்கரை, சிமிண்ட், நெசவு மற்றும் பொறியியல் தொழில்களின் உற்பத்தித் திறன் கூடியது செயற்கை இழைத் துணிகளின் நெசவும் அதிக அளவில் மேற்கொள்ளப்பட்டது. மின்சார உற்பத்தி எதிர்பார்த்த அளவுக்கு அதிகரிக்கவில்லை. இருப்புப் பாதைகளின் நீளம் 7,800 கிலோ மீட்டரிலிருந்து 9,600 கிலோ மீட்டராக நீட்டிக்கப் பெற்றது. தார் சாலைகளில் நீளம் 2,35,000 கிலோ மீட்டரிலிருந்து 2,84,000 கிலோ மீட்டராகக் கூடியது.

கல்வி, பொது ஆரோக்கியம், மருத்துவ உதவி போன்ற சமுதாயப் பணிகள் கணிசமாகப் பெருகின.

மதிப்பீடு

மூன்றாவது திட்டம் சிறப்பான வெற்றியைப் பெறவில்லை. என்பதைத் திட்டக் குழுவே ஏற்றுக் கொண்டுள்ளது. இத்திட்டக் காலத்தில் உணவுப் பிரச்சனை தீவிரமடைந்து விட்டது. எனவே அயலகச் செலாவணிப் பற்றாக்குறை மிகுந்தது. நெசவுத் தொழில், சர்க்கரைத் தொழில் போன்றவை மூலப்பொருள் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டன. பொருளாதார வளர்ச்சி குறைந்த வேகத்திலேயே அமைந்தது. பண வீக்கத்தாலும், உற்பத்திக் குறைவாலும், பண வருமானப் பெருக்கமும் காரணமாக விலைகளின் உயர்வுக்கு காரணமாக அமைந்தன. வேலை வாய்ப்புகளும் குறைந்த அளவுக்கே பெருகின்.

ஆண்டுத் திட்டங்கள்

இரண்டாவது, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டங்களின் தோல்வியாலும் பிற காரணங்களாலும் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தை அரசு மூன்று ஆண்டுகளுக்குத் தள்ளி வைத்தது. இதன் காரணமாக மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிவடைந்த பிறகு, மூன்றாண்டுக் காலத்திற்கு வருடாந்திர திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன.

முதல் ஆண்டுத் திட்டம் (1966-67)

முதல் ஆண்டுத் திட்டத்திற்காக ரூ. 2,081 கோடி நிதி ஒதுக்கம் செய்யக் கருதப்பட்டது. எனினும், 1966–67ஆம் ஆண்டுத் திட்டத்திற்கான மொத்தச்

செலவு ரூ. 2,221 கோடியாக அமைந்தது. 1965–66ஆம் ஆண்டைப் போலவே, 1966–67 ஆம் ஆண்டிலும் வேளாண்மை உற்பத்திக்குப் பாதகமான பருவச் சூழ்நிலை அமைந்திருந்தது. இத்திட்ட ஆண்டில் உணவு உற்பத்தி 97 மில்லியன் டன்னாக மட்டுமே இருந்தது. இதனால் வேளாண்மைப் பொருள்களின் விலைகள் உயர்ந்தன. அந்நியச் செலாவணிப் பற்றாக்குறை ஏற்பட்டமையால் ரூபாயின் மதிப்புக் குறைக்கப்பட்டது. இது மேலும் விலைகள் உயர்வதற்குக் காரணமானது.

இரண்டாவது ஆண்டுத்திட்டம் (1967-68)

இத்திட்டத்திற்கான மொத்தச் செலவீடு ரூ.2,246 கோடியாகும். முதல் ஆண்டுத் திட்டத்தைப் போலவே, இத்திட்டத்திலும் வேளாண்மை வளர்ச்சிக்கே முக்கியத்துவம் அளிக்கப் பெற்றது. சமூகப் பணிகளுக்கு குறைவான நிதியே ஒதுக்கப் பெற்றது. சாதகமான பருவச் சூழ்நிலையினால், உணவுத் தானியங்களின் உற்பத்தி 95 மில்லியன் டன்னாக உயர்ந்தது. தேசிய வருமானத்தில் 12 சதவீத உயர்வு ஏற்படுமெனத் திட்டமிடப்பட்டது. எனினும், தேசிய வருமானம் 9 சதவீதம் மட்டுமே அதிகரித்தது. ஏற்றுமதி மதிப்பின் இலக்களவு ரூ. 1,276 கோடியாகும். ஆனால், உண்மையான ஏற்றுமதி மதிப்பு ரூ.1,197 கோடியாக அமைந்தது.

மூன்றாவது ஆண்டுத் திட்டம் (1968-69)

இத்திட்டத்திற்கு ரூ.2,337 கோடி நிதி ஒதுக்கீட்டாக நிர்ணயிக்கப்பட்டது. உணவுத் தானியங்களின் உற்பத்திப் பெருக்கத்தால், அவற்றின் விலைகள் சிறிது குறைந்தன. வெளிநாட்டு வாணிகமும் வளர்ச்சியடைந்தது. 1968–69ல் ஏற்றுமதி 17.5 சதவீதம் உயர்ந்தது. ஆயினும், இறக்குமதிகள் குறைக்கப்பட்டன.

பொதுவாக ஆண்டுத் திட்டங்களால் பொருளாதாரத்தில் நல்ல விளைவுகளே தோன்றின. அவை வீழ்ச்சியடைந்த இந்தியப் பொருளாதாரத்தை ஓரளவு மீட்சியடையச் செய்தன.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் (1969-1974)

இத்திட்டம் 1966ஆம் ஆண்டிலேயே தொடங்கப்பட்டு இருக்க வேண்டும். திட்டமிடுதலில் கண்ட தோல்வியால் தான் இதை மேற்கொள்வதற்கு கால

தாமதம் ஏற்பட்டது. இவ்வாறு சிலர் கருதுகின்றனர். திட்டமிடுதலைத் தள்ளி வைப்பது தவிர்க்க முடியாதது என்று வேறு சிலர் குறிப்பிடுகின்றனர்.

திட்டச் செலவீடு

மே 18, 1970ம் ஆண்டு அன்று பாராளுமன்றத்தில் அளிக்கப்பட்ட நான்காவது திட்ட ஆவணத்தின் படி, திட்டத்திற்கான மொத்தச் செலவீடு ரூ.21,882 கோடியாகும். அதில் பொதுத்துறைக்கு ரூ.15,902 கோடியும், தனியார் துறைக்கு ரூ. 8,900 கோடியும் ஒதுக்கப் பெற்றது.

பொதுத் துறைக்கான ரூ. 15,902 கோடிப் பணத்தில் வேளாண்மைக்கும் அதைச் சார்ந்த துறைகளுக்கும் 17.2 சதவீதமும், நீர்ப்பாசனமும்–வெள்ளத் தடுப்பிற்கு 15.4 சதவீதமும், தொழில் துறை–சுரங்கத் தொழிலுக்கு 21 சதவீதமும், போக்குவரத்து–தகவல் தொடர்பு வசதிகளுக்கு 20.4 சதவீதமும் ஒதுக்கீடுகள் செய்யப்பட்டன. செலவீட்டுத் தொகைகள் மூன்றாவது திட்டத்தைப் போன்று இரண்டு மடங்குக்கும் அதிகமாக அமைந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

நோக்கங்கள்

'உறுதிப்பாட்டோடு வளர்ச்சியைப் பெறுவது', 'தன்னைத் தானே சார்ந்திருக்கும் நிலையைப் பொருளாத்ரத்தில் ஏற்படுத்துவது' ஆகியவை நான்காவது திட்டத்தின் இலட்சியக் குறிக்கோள்களாக இருந்தன. இத்திட்டத்தின் பிற நோக்கங்களாவன:

1. 1980–81ம் ஆண்டு வரை ஆண்டொன்றுக்கு 6 சதவீத வளர்ச்சியைப் பெறுவது.
2. உணவுத் தானியங்கள் மற்றும் அவசியப் பொருள்களின் விலை மட்டத்தை நிலைப் படுத்துவது.
3. வேளாண்மை உற்பத்தியை ஆண்டொன்றுக்குச் சுமார் 5 சதவீதம் உயர்த்துவது.
4. வளர்ச்சிப் பணிகளில் கிராம மக்களைப் பங்கு பெற செய்து, அவற்றின் நன்மைகளை அவர்கள் பெறுமாறு செய்வது.

5. பி.எல். 480 திட்டத்தின் கீழ்ப் பெறப்படும் உணவுத் தானியங்களின் இறக்குமதியை நிறுத்துவது;

6. விரைவான பொருளாதார முன்னேற்றத்தின் மூலம் வருமான ஏற்றத் தாழ்வுகளைக் குறைப்பது;

7. வட்டார வளர்ச்சி நிலைகளில் உள்ள சரிசமனற்ற தன்மையை நீக்குவது;

8. கூட்டுறவுத் துறையில் வேளாண்மைக் கூட்டுறவுகள், நுகர்வோர் கூட்டுறவுகள் ஆகியவற்றை வளர்ப்பது.

9. ஏற்றுமதியை ஆண்டொன்றுக்கு 7 சதவீதமாகப் பெருக்கி உணவல்லாத பிற பொருள்களின் இறக்குமதியை ஆண்டொன்றுக்கு 5 சதவீதமாகக் குறைப்பது.

நிதியாக்க முறைகள்

நான்காவது திட்டத்தின் பொதுத்துறை முதலீட்டிற்கான நிதி வசதி கீழ்வரும் முக்கியமான ஆறு வழிகளில் பெறப்பட்டது.

பொருளாதார வளர்ச்சிக்குத் திட்டமிடுதல் :

1. நடப்பு வரி வருவாயின்உபரி இருப்பு.
2. பொதுத்துறை நிறுவனங்களின் நிகர இலாபம்.
3. வருங்கால ஷேமநிதிகளில் (Provident Funds) இருந்து கடன்.
4. புதிய வரி விதிப்பு.
5. வெளிநாட்டு உதவி.
6. பற்றாக்குறை நிதியாக்கம்.

வளர்ச்சி முறை

நீர்ப்பாசன வசதிகள் உள்ள இடங்களில் வேளாண்மை வளர்ச்சிக்காக அதிக முதலீடுகள் செய்யப்பட்டன. தொழில் வளர்ச்சிக் கொள்கை, கனரக-ஆதாரத் தொழில்களின் முன்னேற்றத்திற்காக முக்கியத்துவம் தந்தது. இத் திட்டக் காலத்தில் ரூ.110 கோடி முதலீட்டில் தமிழ் நாட்டில் சேலத்திலும், கர்னாடகத்தில் ஹோஸ்பெட்டிலும், ஆந்திரப் பிரதேசத்தில்

விசாகப்பட்டினத்திலும் மூன்று இரும்பு–எஃகு உருக்காலைகள் அமைக்க இருப்பதாக ஏப்ரல் 17, 1970 அன்று பிரதம மந்திரி அறிவித்தார்.

இத்திட்டத்தில் வேளாண்மை உற்பத்தியிலும், வெளிநாட்டு உதவியைப் பெறுவதிலும் இருந்த உறுதியற்ற நிலையை நீக்கக் கருதப்பட்டது. வருமானத்திலுள்ள ஏற்றத் தாழ்வுகளைக் குறைக்கும் வகையில் வரி விதிப்பு முறை அமைந்தது. நான்காவது திட்டக் காலத்தில் தேசிய வருமானம் ஆண்டொன்றுக்கு 5.5 சதவீதமும், தலா வருமானம் ஆண்டொன்றுக்கு 8 சதவீதமும் உயருமென மதிப்பிடப் பெற்றது.

மதிப்பீடு

நான்காவது திட்டத்தின் முதல் மூன்று ஆண்டுகளில் மொத்த நிதி ஒதுக்கீடாகிய ரூ. 15, 902 கோடியில் 50.1 சதவீதம் (ரூ. 7, 930) கோடி செலவிடப்பட்டது. அந்த ஆண்டுகளில் தேசிய வருமான வளர்ச்சி குறியிலக்கிற்குக் குறைவாகவே இருந்தது. எனினும், முதல் இரண்டு ஆண்டுகளில் வேளாண்மை உற்பத்தியின் அளவு எதிர்பார்த்ததைவிட உயர்வாக அமைந்தது. ஆனால், 1971–72ல் வேளாண்மை உற்பத்தி 3.8 சதவீதம் குறைந்தது. இதைப்போன்றே உணவுத் தானியங்களின் உற்பத்தி வீதம் முதல் இரண்டு ஆண்டுகளிலும் ஆண்டொன்றுக்கு 5.5 சதவீதத்தை விட அதிகமாக இருந்தாலும், மூன்றாவது ஆண்டில் உற்பத்தி தாழ்வடைந்தது.

பல துறைகளிலும் உற்பத்தியானது குறியளவுகளை எட்டவில்லை. இதற்கான நான்கு முக்கியக் காரணங்களாவன :

1. இந்திய–பாகிஸ்தான் போர்.
2. பங்களாதேஷ் அகதிகளின் வருகை.
3. வெளிநாட்டு உதவியைப் பெறுவதில் இருந்த உறுதியற்ற நிலை.
4. இயற்கைப் பருவச் சூழ்நிலைகள் வேளாண்மை உற்பத்திக்குச் சாதகமாக அமையாதவை.

இவ்விதமான பல சிக்கல்கள் 1971–72ஆம் ஆண்டில் உருவாயின. இச்சிக்கல்களை அரசு திறமையாகச் சமாளித்து. நிதி வசதிகள் அதிக வரி விதிப்பின் மூலம் பெருகின. இத்திட்டம் முடிவடையும் போது, வேளாண்மை

உற்பத்தி சிறப்பாக உயர்ந்திருந்தது. எனினும், தொழில் துறை வளர்ச்சி திருப்திகரமாக அமையவில்லை. நான்காவது திட்டத்தின் சராசரி வளர்ச்சி 5.7 சதவீதத்திற்கும் குறைவாகவே இருந்தது.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம் (1974-1979)

நான்கு ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றிய பிறகும், இந்திய மக்கள் தொகையில் பெருமளவினர் வறுமையிலேயே உழல்வதைத் திட்டக் குழுவே குறிப்பிட்டுள்ளது. இதனால், வறுமையோடு போரிட புதிய முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. நாட்டிலிருந்து வறுமையை விரட்டுவதற்கு மக்களுடைய சிந்தனையிலும், செயற்பாட்டிலும் புரட்சி தேவை என்று பிரதம மந்திரி கூறியுள்ளார்.

திட்டச் செலவீடு

இத் திட்டத்தின் மொத்த நிதி ஒதுக்கீடு நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் நிதி செலவீட்டைப் போன்று இரு மடங்குகளும் அதிகமாக உயர்த்தப்பட்டுள்ளது. திட்டத்திற்கான மொத்த நிதி வசதி ரூ.51.165 கோடியாக அமையுமென மதிப்பிடப்பட்டிருக்கிறது. ,அதில் பொதுத் துறைக்கான நிதி ஒதுக்கீடு ரூ.35,595 கோடியாக அமையும். இத் தொகையில் வேளாண்மைக்காக ரூ. 7,000 கோடியும், தொழில்துறைத் சுரங்கத் தொழிலுக்காக ரூ.7,700 கோடியும், மின்சார உற்பத்திக்காக ரூ. 5,700 கோடியும், போக்குவரத்து-தகவல் தொடர்பு வசதிகளுக்காக ரூ. 6, 850 கோடியும், கல்விக்காக ரூ.2,260 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டது. அது தவிர நகர்ப்புற மேம்பாடு-குடிநீர் அளிப்புக்காக ரூ. 1,100 கோடியும் ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன. கட்டுமானப்பணி, வாணிகம், தானியச் சேமிப்புக் கிடங்குகள், வீட்டுவசதி, வங்கி காப்பீட்டு வசதிகள் பொது நிர்வாகம், விஞ்ஞான ஆராய்ச்சி, சுகாதாரத்திட்டம், குடும்ப நலத்திட்டம் சத்துணவுத் திட்டம், மக்கள் நலத் திட்டம் போன்றவற்றிற்கும் நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

நோக்கங்கள்

ஐந்தாவது திட்டம் பின்வரும் முக்கிய நோக்கங்களைக் கொண்டுள்ளது. அவையாவன :

1. வறுமையையும், வேலையின்மையையும் எதிர்த்துப் போரிடுதல்.
2. பொருள்களின் உற்பத்தியை உச்சநிலைக்குப் பெருக்குதல்.
3. கல்வி, ஆரோக்கியம், மருத்துவம், குடிநீர், சத்துணவு, வீட்டுவசதி போன்ற சமூக நலப் பணிகளை மேம்படுத்துதல்.
4. வறியவர்களுக்குச் சாதகமான உற்பத்திச் சாதனங்களைப் பங்கிடுதல்.
5. தீவிர முறையில் நிலச் சீர்திருத்தங்களைச் செயல்படுத்துதல்.
6. ஆடம்பர நுகர்வைக் கட்டுப்படுத்துதல்.
7. தொழில் துறையில் அமைதியைக் காத்தல்.
8. அவசியப் பொருள்களின் விலைகளை நிலைப்படுத்துதல்.
9. சமூக நீதியோடு வளர்ச்சியைப் பெறுதல்.
10. பொருளாதாரத்தைத் தன்னைச் சார்ந்து தானே வளரும் நிலைக்கு மாற்றுதல்.

இத்திட்டம் ஆண்டொன்றுக்கு 5.5 சதவீத வளர்ச்சியைப் பெறக் கருதியுள்ளது. வெளிநாட்டு உதவியைப் பெறுவதன் அளவு குறைக்கப்படும். தற்பொழுது இந்தியாவில் 220 மில்லியன் மக்கள் வறுமைக் கோட்டிற்குக் (Poverty line) கீழ் வாழ்கின்றனர். அவர்களுடைய சராசரி மாத வருமானம் 25 ரூபாய்க்கும் குறைவானதாகும். வேலையின்மை, குறை வேலையுடைமை (Under Employment) ஆகியவற்றைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை அரசு செயல்படுத்தி வருகிறது. வேளாண்மையில் தேவைக்கு அதிகமான உழைப்பாளர்கள் ஈடுபட்டுள்ளனர். அதைக் குறைக்கச் சிறுதொழில்கள், குடிசைத் தொழில்கள் ஆகியவற்றின் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருக்கிறது.

பின்வரும் வழிகளில் வேலை வாய்ப்புகளைக் பெருக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. (1) சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் (2) நில வளப் பாதுகாப்பு (3) கால் நடை வளர்ப்பு (4) காடுகள், மீன் வளம் ஆகியவற்றின் மேம்பாடு (5) விற்பனைக் கிடங்கு வசதிகளின் பெருக்கம் (6) சிறு தொழில்களின் முன்னேற்றம் (7) சாலைப் போக்குவரத்தின் வளர்ச்சி. ஐந்தாவது திட்டம் 1978–79 ஆம் ஆண்டுக்குப் பிறகு வெளி நாட்டு உதவியைப் பெறுவதற்கான தேவை இராது எனக் கருதுகிறது.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டம் (1978-83)

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டமானது ஒரு வருடம் குறைக்கப்பட்டு நான்கு வருடங்களிலேயே முடிவுற்றது. இதைத் தொடர்ந்து ஏப்ரல் 1ஆம் தேதி 1978ஆம் ஆண்டு ஆறாவது ஐந்தாண்டுத் திட்டம் தொடங்கப்பட்டது. திட்டத்தின் மொத்தக் கணக்கு ரூ.1,16,240 கோடியாகும். மேலும் 4.7 சதவீதம் வளர்ச்சி வீதத்தை அடைய வேண்டும் என்றும் திட்டமிடப்பட்டது. ரூ.69,380 கோடியானது பொதுத் துறைக்கு ஒதுக்கப்பட்டது.

நீண்டகாலத் தொலைநோக்குத் திட்டத்தினை நோக்கும் பொழுது மாதிரி வரைவு ஆறாவது ஐந்தாண்டுத் திட்டமானது, பத்து ஆண்டுகள் நிறைவேற்றி முடிக்க வேண்டிய சில நோக்கங்களைப் கொண்டுள்ளது. அவை யாவன:

1. வேலையில்லாத் திண்டாட்டத்தைத ஒழிப்பது.
2. மிகவும் வறுமையில் வாடும் மக்களின் வாழ்க்கைத் தரத்தினை கணிசமான அளவு உயர்த்துவது.
3. குறைந்த வருமானத்தைப் பெறும் வகுப்பினரின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வது உதாரணமாக குடிநீர், இளைஞர் கல்வி, ஆரம்பக் கல்வி, சுகாதாரம், கிராமத்தில் பாதைகள் அமைத்தல், நிலமற்றோருக்கு வீட்டுவசதி அளித்தல், நகரப் புறங்களில் வாழும் சேரி மக்களுக்கு வேண்டிய வசதிகளை அளித்தல் ஆகியவை இவற்றில் அடங்கும். மேலும் அதிக அளவு வளர்ச்சி வீதத்தினை அடையச் செய்ய வேண்டம் என்பதும், வருமானம், சொத்து பகிர்வு ஆகியவற்றில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகளை நீக்கி நாட்டினைச் சுயசார்பு நிலையை எய்தும் படி முன்னேற்றமடையச் செய்ய வேண்டும் என்பதும் இத்திட்டத்தின் பிற நோக்கங்களாகும்.

பல்வேறு வகைப்பட்ட துறைகளுக்கு ஒதுக்கப்பட்ட செலவினை உற்று நோக்கும் பொழுது, கீழ்க்கண்ட உண்மையை அறிந்து கொள்ளலாம்.

1. அதிக அளவு வேலை வாய்ப்பின்மையும், விவசாயம், குடிசைத் தொழில், சிறுதொழில், நீர்ப்பாசனம், உரம், மின்சக்தி போன்ற துறைகளில் ஈடுபட்டிருக்கும் மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தக் கூடிய துறைகளுக்கும் அதிக அளவு சலுகைகள் அளிக்கப்பட்டுள்ளது.

2. தொலைபேசி, விஞ்ஞானம், தொழில்நுட்பம், வீட்டு வாரியம், சுகாதாரம், குடும்ப நலலக் கல்வி, சமுதாயக்கல்வி, மற்றும் சத்துணவு போன்ற கிராம ஏழை மக்களுக்கும் நகர்ப்புற மக்களுக்கும் உதவக்கூடிய திட்டங்களுக்கு சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.

3. தொழில் நுட்பம் மற்றும் மூலதனம் ஆகிய இரு துறைகளிலும் சுயசார்பினை (self reliance) அடைதல் வேண்டும் என்ற திட்டத்தின் நோக்கமும் கருத்தில் கொள்ளப்பட்டது.

திட்டத்திற்கான நிதி ஆதாரங்களும் செலவும்

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மொத்தச் செலவு மதிப்பீடு ரூ.1,16,240 கோடிகளாகும். இதில் பொதுத்துறைக்கு மொத்தத் திட்டச் செலவில் ரூ.59,380 கோடி அல்லது 59.7 சதவீதம் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்ட காலத்தில் பல்வேறு துறைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள வள ஆதாரங்களின் அட்டவணை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான வள ஆதாரங்கள் (1978-83)

வ. எண்	துறை	ரூபாய் கோடிகளில் அளவு	சதவீதம்
1.	பொதுத் துறையின் சேமிப்பு	27.444	23.61
2.	நிதி நிறுவனங்களின் சேமிப்பு	1.973	1.69
3.	தனியார் கார்ப்பரேட் சேமிப்பு	9.074	7.81
4.	உள்நாட்டுச் சேமிப்பு	62.364	53.65
5.	எ) வெளிநாட்டு உதவியிலிருந்து கிடைத்த தொகை	3.955	3.40
	பி) இந்தியச் செலாவணி இருப்பு	1.180	1.02
6.	பட்ஜெட் அளிப்பு	10.250	8.82
	மொத்தம்	1,16.240	100.00

பொதுத் துறையின் மூலதனமாக ரூ.69.38 கோடியானது கீழ்க்கண்ட வழிகளில் நிதி உதவி செய்யப்பட்டுள்ளது.

எ) கூடுதலான வள ஆதாரங்களை இடப்பெயர்ச்சி செய்வதன் மூலமாக

பி) பொதுத்துறை நிறுவனங்களின் பங்கு

சி) அங்காடிகளில் பெற்ற கடன் (Market Borrowings)

டி) பற்றாக்குறை நிதியாக்கம்

பொதுத்துறை மூலதனத்திற்கான வள ஆதாரங்கள்

வ. எண்		(ரூபாய் கோடிகளில்)
1.	மத்திய மாநில அரசாங்கங்கள் 1977–78ஆம் ஆண்டு வரிவிதிப்பு வீதத்தின்படி அளித்த தொகை	12.889
2.	பொதுத்துறை நிறுவனங்களின் மொத்த உபரி (Gross surplus) 1977–78ஆம் ஆண்டு வரிவிதிப்பு வீதத்தின்படி அளித்தது மற்றும் சுங்கவரி (tariff) மற்றும் பிற	10.296
3.	மத்திய அரசாங்கம் கூடுதல் வள ஆதாரங்களை இடப் பெயர்ச்சி செய்ததன் மூலமாகக் கிடைத்த தொகை	9.000
4.	மாநில அரசாங்கங்கள் கூடுதல் வள ஆதாரங்களை இடப்பெயர்ச்சி செய்ததன் மூலமாகக் கிடைத்த தொகை	4.000
5.	அங்காடிகளின் கடனும், பொதுத்துறை நிறுவனங்களின் அளிப்பும்	15.986
6.	சிறுசேமிப்பு	3.150
7.	மத்திய மாநில அரசுகளின் பிராவிடன்ட் பண்ட் (Provident Fund)	2.953
8.	நிதி நிறுவனங்களின் காலக்கடன்கள்	1.299
9.	பிற மூலதன வரவுகள்	.460
10.	வெளிநாட்டு உதவி	5.954
11.	அந்நியச் செலாவணியின் பேரில் பெற்ற கடன்கள்	1.180
12.	அடைக்கப்படாத இடைவெளி (uncovered gap)	2.226
	மொத்தம்	69.380

ஆறாம் ஐந்தாண்டுத் திட்ட மதிப்பீடு :

ஆறாம் ஐந்தாண்டுத் திட்டம், இதற்கு முந்தி நடைபெற்ற ஏனைய திட்டங்களிலிருந்து எந்த அளவிலும் மாற்றம் அடையவில்லை. ஆறாம் ஐந்தாண்டுத் திட்டமானது, ஏனைய திட்டங்களிலிருந்து மாறுபட்டு முதன் முறையாக சமுதாய நலத் திட்டங்களில் அக்கறை காட்டத் தொடங்கியது. வேலை வாய்ப்பு, வறுமை ஒழிப்புக் காலம் (Life Expectancy) நுகர்ச்சி சேமிப்பு, முதலீடு ஆகிய துறைகளில் கவனம் செலுத்தப்பட்டது.

ஆறாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தி ஆண்டுக்கு 5.2 சதவீதமாக தீர்மானிக்கப்பட்டது. வறுமை ஒழிப்பிற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. நுகர்வுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்ட நிலையில் வறுமைக் கோட்டு சதவீதத்தை 48.44 சதவீதத்திலிருந்து 1984–85 ஆம் ஆண்டுகளில் 38.95 சதவீதமாகக் குறைக்கச் செய்யும் வகையில் இத்திட்டம் அமைந்துள்ளது.

வேளாண்மை உற்பத்தியில் காணப்பட்ட ஏற்றத்தாழ்வுகளின் காரணமாக மொத்த உள் நாட்டு உற்பத்தி (Gross Domestic Product) பாதிப்புக்கு உள்ளாக்கியது. 1982–83 ஆம் ஆண்டுகளில் தோன்றிய வறட்சியின் காரணமாக தேசிய வருமான வளர்ச்சி வீதமானது 2 சதவீதமாக காணப்பட்டது.

வேலைவாய்ப்பு மற்றும் வேலையில்லா நிலை போன்ற இரண்டு பிரச்சனைகளும் இத்திட்டத்தில் மிகவும் கவனமாகக் கையாளப்பட்டன. வேலை வாய்ப்பின் உயர்ந்த "தரம்மிகுந்த நபர் வருடம்" கணக்கிடப்பட்டது. (Standard Person Year) 273 நாட்கள் ஓர் ஆண்டில் வேலை வாய்ப்பைப் பெறும் எந்த நபரும் இத்திட்டத்தின் கீழ் அடங்குவர்.

ஆறாம் திட்ட காலத்தில் மொத்த வேலை வாய்ப்பு 1979–80இல் 151.11 மில்லியன் "தரம்மிகு நபர் வருடம்" (Standard Person Year) 1984–85 ஆம் ஆண்டுகளில் 85.39 மில்லியன் தரம் மிகு நபர் வருடமானது 185.39 மில்லியன்களாகக் கூடும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

ஆறாம் திட்டத்தின் சாதனைகள் :

1974–75 ஆம் ஆண்டுகளிலிருந்தே இந்தியா விரைவான உயர்வளர்ச்சிப் பாதையினை நோக்கியே செல்ல ஆரம்பித்தது. ஆறாம் ஐந்தாண்டுத் திட்டம்

வளர்ச்சி, நவீன மயமாக்கல், சமுதாய நீதி ஆகியவற்றைக் கணக்கில் கொண்டு வளர்ச்சியை நோக்கிச் செல்ல ஆரம்பித்தது. ஆறாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் ஆரம்ப காலத்தில் வறுமைக் கோட்டு நிலையில் 48சதவீத மக்கள் இருந்தனர். 1984–85 ஆம் ஆண்டு இது 37 சதவீதமாகக் குறைந்தது.

ஆறாம் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் 1979ஆண்டு வறட்சி நிலையும், இறக்குமதி செய்யப்பட்ட எண்ணெய் விலை அதிகமாகவும் இருந்தது. இந்நிலையினை மாற்ற ஆறாம் திட்டத்தில் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஆறாம் திட்டத்திற்கு 5.2 சதவீத வளர்ச்சி வீதம் தீர்மானிக்கப்பட்டது.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டம் (1985-90)

நோக்கங்கள்

1985 ஆம் ஆண்டு தேசிய வளர்ச்சிக் கழகம் (National Development Council) தயாரித்தளித்த மாதிரிப் படிவம் ஏழாம் ஐந்தாண்டுத் திட்டமாகும் திட்டத்தின் தொடக்க காலங்களிலிருந்தே திட்டம் வலியுறுத்தி வந்த சமுதாய நலன், தன்னிறைவு, சமத்துவம், பொருளாதார, சமுதாய ஏற்றத்தாழ்வுகளை நீக்குதல் ஆகிய அடித்தளத்தின் மேலேயே ஏழாவது ஐந்தாண்டுத் திட்டமும் கட்டப்பட்டது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டம் உணவு, வேலை, உற்பத்தித் திறன் (food, employment and productivity) ஆகிய மூன்று முக்கிய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டது.

வறுமை ஒழிப்பு மற்றும் வேலை வாய்ப்பு

1. 1977–78 மற்றும் 1983–84ஆம் ஆண்டுகளுக்கு இடையில் தேசிய மாதிரிக் கணக்கெடுப்பு (National Sample Survey) கணக்கீட்டின் படி 38 மில்லியன் வறுமைக் கோட்டின் கீழ் இருக்கிறார்கள் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

2. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் போது வறுமைக் கோட்டடின் கீழ் உள்ள மக்கள் 1984 ஆம் ஆண்டுக் கணக்கின் படி 273 மில்லியன் என்ற எண்ணிக்கையிலிருந்து 211 மில்லியன் மக்களாகக் குறைவர் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இதற்குக் காரணம் கிராமப்புறங்களில் வறுமையை ஒழிக்க ஆரம்பிக்கப்பட்டுள்ள (National Rural Development

programme-NRDP) தேசிய கிராமப்புற வளர்ச்சித் திட்டம் (NRDP) மற்றும் (IRDP-Integrated Rural development Programme) அல்லது ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டங்கள் (Rural Landless Employment Guarantee Programme - RLEGP) மற்றும் கிராம நில மற்ற தொழிலாளர்களின் வேலை உறுதித் திட்டங்களின் போன்ற திட்டங்கள் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வேலை வாய்ப்பு வசதியைச் செய்து தர ஆரம்பிக்கப்பட்டுள்ள திட்டங்களாகும்.

ஏழாவது திட்டத்தில் வேலை வாய்ப்பு 40 மில்லியன் மக்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு வேலை வாய்ப்பு வழங்கும் வகையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. 2.6 சதவீத உழைப்பாளர் உயர்வுக்கு ஈடு கொடுக்கும் வகையில் வேலை வாய்ப்பானது ஆண்டுக்கு 4 சதவீதமாக உயரும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், ஏழாவது திட்டத்தில் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் போது தொடங்கப்பட்ட கிராமிய வளர்ச்சித் திட்டம் (IRDP) மற்றும் (NREP, RLEGP) போன்ற திட்டங்கள் தொடரப்பட்டு, நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இதன் மூலம் 2458 மில்லியன் மனித சக்தி நாட்கள் (Mandays) மேலும் கூடுதலாக 9.04 மில்லியன் கிராமப் புற மக்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கும் நிலையில் உள்ளது. இதைப் போன்றே நகரப்புறங்களில் வாழும் சேரி மக்களும் நன்மை அடையும் வண்ணம் ஏழாம் ஐந்தாண்டுத் திட்டம் திட்டங்களைத் தீட்டியுள்ளது.

ஏ) நகர்ப்புற வறுமையை நீக்க பெண்களுக்கும், இளைஞர்களுக்கும் வேலை வாய்ப்பு.

பி) குறைந்த ஊதியத்தை ஏற்கனவே பெற்று வரும் நபர்களின் கூலியை மேலும் உயர்த்துதல்.

சி) நகர்ப்புற ஏழைகளின் அடிப்படை வசதிகளாக கல்வி, சுகாதாரம், உடல் நலம், தூய்மையான குடிநீர் ஆகியவற்றை வழங்குதல் ஆகியவை.

ஏழாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் முக்கிய நோக்கமும் உற்பத்தியைப் பெருக்கக் கூடிய வேலை வாய்ப்பை அதிகரித்தல் ஆகும். மேலும் உணவு, உற்பத்தி, தாவர எண்ணெய் சர்க்கரை, துணி, சமையல் எரி பொருள், வீட்டுவசதி போன்றவற்றை அதிகரித்தலே முக்கியத்துவம் பெற்றுள்ளது.

ஏழாவது திட்டத்தின் முதலீடு வளர்ச்சி வீதம்

1984–85ம் ஆண்டு விலைகளில் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மொத்த முதலீடு ரூ. 1.80,000 கோடிகளாகும். இதில் பொதுத்துறை முதலீடு ரூ. 1,54,218 கோடிகளாகும். மேலும் தனியார் துறையின் முதலீடு ரூ.1,68,148 கோடிகளாகும். பொதுத்துறையையும் தனியார் துறையையும் மொத்தமாக நோக்கும் பொழுது ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் தனியார் துறை மூலதனத்தின் விகிதம் 48 : 52 என்ற விகிதத்தில் அமைந்துள்ளது.

ஏழாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் முதலீடுகள் (1985-90)

		ரூ. கோடிகள்	(1984–85) விலைகளில் மொத்தத்தின் சதவீதம்
எ)	பொதுத்துறை ஒதுக்கீடு	1,80,000	
பி)	நடைமுறை ஒதுக்கீடு	25,782	
சி)	பொதுத்துறை முதலீடு (a-p)	1,54,218	47.8
டி)	தனியார் துறை முதலீடு	1,68,148	52.2
ஈ)	மொத்த முதலீடு (c+d)	3,22,366	100.00

Source Economic Survey, 1989-90.

மேலே குறிப்பிட்டுள்ள நடவடிக்கைகளின் மூலம் GDP அல்லது மொத்த உள்நாட்டு உற்பத்தி 1984–85ம் ஆண்டு இருந்த 24.5 சதவீத அளவிலிருந்து உயர்ந்தது. 1989–90 ஆம் ஆண்டுகளில் 25.9 சதவீதமாக உயரும் என எதிர்பார்க்கப்பட்டது. அதைப் போன்றே 1984–85ஆம் ஆண்டு சேமிப்பும் 23.3 சதவீதத்திலிருந்து 1989–90 இல் 24.5 சதவீதமாக உயரும் என எதிர்பார்க்கப்பட்டது.

தொழிற்துறை

இத்திட்டத்தில் தொழிற்துறை சில முக்கிய அம்சங்களை கொண்டிருந்தது. அவையாவன :

1. மின்சாரம் போன்ற அடிப்படை வசதிகளுக்கு முக்கியத்துவம் அளித்தல்.

2. அசையாச் சொத்துக்களை நவீனப்படுத்தல் மற்றும் பாதுகாத்தல்.

3. தொழில் நுட்பத்தை மேலும் மேம்படுத்துதல்.

4. உற்பத்தியில் மேம்பாடு.

5. உற்பத்திச் செலவு குறைப்பு.

6. புதிய உற்பத்தியைக் கடைப்பிடித்தல்.

ஏழாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் நிதியளவு

ஆறாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் போது சேமிப்பு வீதம் 23 சதவீதமாக இருந்தது. அதை உயர்ந்த ஏழாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் குறியிடப்பட்ட குறியிலக்கு 1989–90 ஆம் ஆண்டுகளில் 24.3 சதவீதமாகும். இது இரண்டு அடிப்படைகளின் பேரில் நிர்ணயிக்கப்பட்டது. (அ) இல்லத்துறையின் சேமிப்பினை 20.5 சதவீதமாக எதிர்பார்த்தல் (ஆ) பொதுத்துறையின் சேமிப்பினை 1989–90 ஆம் ஆண்டுகளில் 29.1 சதவீத நிலையிலிருந்து 32.4 சதவீதமாக உயர்த்துதல்.

ஏழாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் மொத்த உள்நாட்டுச் சேமிப்பு ரூ.3,02,366 கோடிகளாகும் ரூ. 20,000 கோடி அயல் நாட்டு மூலதனமும் இந்தியாவிற்குக் கிட்டும் என எதிர்பார்க்கப்பட்டது. இவையிரண்டும் சேர்ந்தால் கிட்டும் நிதியின் அளவு ரூ.3,22,266 கோடிகள் என எதிர்பார்க்கப்பட்து.

பொதுத்துறையின் முதலீட்டில் அதாவது ரூ.1,54,218 கோடிகளில் 32 சதவீதம் சேமிப்பிலிருந்தும் 56 சதவீதம் தனியார் சேமிப்பிலிருந்தும் கிட்டும் என எதிர்ப்பார்க்கப்பட்டது.

ஏழாம் திட்டத்தின் திறனாய்வு

ஏழாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் நிதி அமைப்புக்கள் எந்தவிதமான விலைக்குறைப்பு நடவடிக்கை பற்றி குறிப்பிடவிலை. ஏழாம் திட்டத்தின் முதல் நான்கு ஆண்டுகளில் விலைக் குறியீட்டு எண் 41 சதவீதம் உயர்ந்தது. மேலும் வரவு–செலவுத் திட்டத்தில் ஏழாம் திட்டத்தில் தோன்றிய பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு 3 விதமான தீர்வுகள் உள்ளன. அவையாவன.

1. பேரளவில் அங்காடிக் கடன்களைப் பெறுதல்.

2. பெரிய அளவில் பற்றாக்குறை நிதியாக்கத்தினை அமைத்தல்.

3. கூடுதல் வள ஆதாரங்களின் ஒதுக்கீட்டை மேற்கொள்ளல் ஆகியவை

முடிவாக, ஏழாம் ஐந்தாண்டுத் திட்டம் 1984–85 மற்றும் 1989–90 ஆகிய ஆண்டுகளில் அல்லது நிகர தேசிய உற்பத்தியில் 5.5 சதவீத கூடுதல் உயர்வினை அடையும் படி தீர்மானிக்கப்பட்டது.

வேளாண்மையைப் பொறுத்த வரையில் நீர்ப்பாசனப் பற்றாக்குறை காரணமாக வேளாண் உற்பத்தி எதிர்பார்க்கப்பட்ட நிலையில் இல்லை அல்லது பசுமைப் புரட்சித் திட்டத்தின் மூலமாக ஏழாவது திட்டத்தில் 65 மில்லியன் ஹெக்டேர் நிலப்பரப்பு நவீன சாகுபடிக்கு உட்படுத்தப்படும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது.

தொழில்துறை உற்பத்தியைப் பொறுத்த வரையில் 8.3 சதவீத வளர்ச்சி வீத நிலையில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கு, திட்ட முடிவில் 8.1 சதவீத வளர்ச்சியையே அடைந்திருந்தது. வனஸ்பதி, கச்சாஎண்ணெ போன்ற பொருட்களின் உற்பத்தி சீரிய வீழ்ச்சி நிலையிலேயே இருந்தது. இரும்புத் தாது, சணல் உற்பத்தி, சிமெண்ட், மின்சார மோட்டார்கள் வியாபாரத்திற்கான வாகனங்கள் போன்ற பொருட்களின் உற்பத்தி மிகவும் குறைவான உற்பத்தி நிலையில் இருந்தது.

அயல்நாட்டு செலுத்து நிலையில் இத்திட்ட காலத்தில் திருப்திகரமான நிலையில் இல்லை. வாணிகத்தில் பற்றாக்குறை மொத்தத்தில் ரூ. 54,204 கோடிகளாகவும் சராசரி ரூ. 10,840 கோடிகளாகவும் ஆண்டிற்கு இருந்தது.

1985–87 ஆம் ஆண்டு அயல் நாட்டுச் செலுத்து நிலையில் விழுந்த துண்டு ரூ.3568 கோடிகளிலிருந்து ரூ.2589 கோடியாக குறைந்தது.

எட்டாவது திட்டத்தின் அளவு (1990-95)

இத்திட்டம், சராசரி ஆண்டு வளர்ச்சி விகிதம் உள்நாட்டு உற்பத்தியில் 5.6 சதவீதம் ஆக அமைய வேண்டுமென எதிர்நோக்குகிறது. இந்த வளர்ச்சி விகிதத்துக்கு கடந்த டிசம்பரில் அவை ஒப்புதல் அளித்துள்ளது. இதற்கான மொத்த முதலீடு ரூ. 7,98,000 கோடிகள் ஆகும். இதில் பெரும்பகுதி உள்நாட்டு

வளங்களிலிருந்து பெறப்பட்டுள்ளது. இதில் பொதுத்துறை மதிப்பீடு முதலீடு ரூ.3,61,000 கோடிகளாகவும், இதர முதலீடுகள் ரூ. 4,34,100 கோடிகளாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மாநிலங்களின் திட்ட அளவு ரூ. 1,79,985 கோடிகள் என மதிப்பிடப்பட்டுள்ளது. பொதுத்துறைத் திட்டத்திலான மாநிலங்களின் பங்கில் காணப்படும் வீழ்ச்சிப் போக்கு இந்தத் திட்டத்தில் மாற்றப்பட வேண்டும். ஏழாவது திட்டத்தில் பெறப்பட்ட பங்கான 39 சதவீதக்கு எதிராக, இம்முறை பங்களிப்பு 41 சதவீதம் அமைய வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இத்திட்டம், வேளாண்மை மற்றும் இதர சார்புடைய துறைகளுக்கு முதவீடு மாற்றப்பட வேண்டுமென விழைகிறது. உணவுப் பாதுகாப்பு நிலையைப் பராமரிப்பதிலும், வேலை வாய்ப்பை உருவாக்குவதிலும், வேளாண்மை வளர்ச்சி உயிர் நாடியாய் விளங்கினாலும் கடந்த ஆண்டுகளில் வேளாண்மையிலான முதலீட்டில் வீழ்ச்சி ஏற்பட்டு வந்துள்ளது. வருங்கால வளர்ச்சிக்கான அடித்தளங்களை வலுப்படுத்துவதற்காக அடிப்படைக் கட்டமைப்புத் துறைக்கு உரிய பங்கு கிடைக்குமாறு செய்ய வேண்டுமென்பதை வலியுறுத்தி தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தனியார் துறைக்கு எப்பொழுதையும் விட அதிகமான பங்கு பல பொருளாதார நடவடிக்கைகளில் மின்சாரம், தகவல் தொடர்புகள், எண்ணெய் மற்றும் நிலக்கரி, பெட்ரோல் இரசாயணம், கன மூதலீட்டுப் பொருட்கள் தொழிலகங்கள் மற்றும் ஒருமுகப்படுத்தப்பட்ட வணிகச் சேவைகள் போன்றவை – வழங்கப்பட உள்ளது. நான் இந்தத் தருணத்தில் தனியார் துறை எழுச்சி பெற்று, இந்தப் பொருளாதாரத் துறைகளின் வளர்ச்சிக்குப் பெரிதும் பங்காற்றும் என எதிர்பார்க்கின்றேன்.

எனவே, திட்டமிட்ட அளவு முதலீடுகளைப் பெறுதல் மற்றும் திட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுதல் ஆகியவற்றுக்கு நன்கு உருவாக்கப்பட்டுள்ள பேரியல் பொருளாதாரக் கொள்கைகளும், தொடர்புடைய எல்லோரின்தரப்பிலான – மத்திய மற்றும் மாநில அரசுகளின் பொது மற்றும் தனியார் நிறுவனங்கள் மற்றும் நிதி நிறுவனங்கள் மேம்பட்ட நிதிநிலை ஒழுங்குணர்வும் தேவைப்படுகின்றன. இந்தத் திட்டம் நம் நாட்டின் வளர்ச்சிக்கான திட்டம். எனவே இதை வெற்றிகரமாகச் செயல்படுத்துவது நம் அனைவருடைய கூட்டுப் பொறுப்பாகும்.

பாடம் - 16

கூட்டுறவு வங்கியும் தொழிற் வளர்ச்சியும்

தொழிற் கூட்டுறவு வங்கிகள்

நம் நாட்டில் இங்கும் அங்குமாகச் சில தொழிற் கூட்டுறவு வங்கிகள் செயற்பட்டு வருகின்றன. பணந்திரட்டித் தம் உறுப்பினர்களான தொழிற் கூட்டுறவு நிலையங்கட்கு நீண்ட, மத்திய, குறுகிய காலக் கடன்களை வழங்குவதே இவ்வங்கிகளின் நோக்கமாகும்.

தொழிற் கூட்டுறவு சங்கங்களுக்கு இயந்திரம், தளவாடங்கள், கருவிகள் வாங்கவும், பட்டறை கட்டவும், தொழிற் கூடத்திற்கு இடம் வாங்கவும், நீண்ட கால, மத்திய காலக் கடன் தேவைப்படுகின்றது. கச்சாப் பொருள் வாங்கவும் , கூலி கொடுக்கவும், உற்பத்தியான பொருள்களை விற்கும் வரை வைத்திருக்கவும், பிற செலவுகட்கும் குறுகிய காலக் கடன் இச்சங்கங்களுக்குத் தேவைப்படுகின்றது. அரசு, கதர், கிராமத் தொழில் குழு, அகில இந்திய கைத்தறி குழு, அனைத்திந்தியக் கைவினைக் குழு, மத்தியப் பட்டுக் குழு மாநில நிதியக் கூட்டுரு, மத்தியக் கூட்டுறவு வங்கி, இந்திய ஸ்டேட் வங்கி, இந்திய ரிசர்வு வங்கி போன்ற நிலையங்களும் இவற்றின் தேவைகளை ஓரளவுக்கு நிறைவேற்றுகின்றன. எனினும், சிதறிக்கிடக்கும் சிறு தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் மேற்கண்ட நிலையங்களை யணுகி, கடன் வசதி பெறுவது அவ்வளவு எளிதன்று. எனவே, தொழிற் கூட்டுறவுகளுக்கு மட்டும் நிதி வசதியளிக்கும் பொருட்டுச் சில மாநிலங்களில் தொழிற் கூட்டுறவு வங்கிகள் நிறுவப் பெற்றன. இவை அவசியம் தானா ? மாநிலக் கூட்டுறவு வங்கியும், மத்திய வங்கிகளும் தொழிற் கூட்டுறவுகளுக்கும் நிதி வசதியளித்தால் போதுமே. இவற்றிற்குத் தனியொரு அமைப்புத் தேவையற்றதே எனப் பலப்பல வாதங்களும், எதிர்வாதங்களும் இன்றும் இருந்து வருகின்றன. வங்கித் துறையில் இக்கூட்டுறவு வங்கிகளின் நிலையை மட்டுமே நாம் காண்போம்.

முன்னர் கூறியது போன்று தொழில் கூட்டுறவு வங்கி, குடிசைத் தொழில், கிராமத் தொழில், சிற்றளவுத் தொழில் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள தம் உறுப்பினர் சங்கங்களுக்கு நிதியுதவி செய்வதும், கைவினைஞர், தொழிலாளரிடையே சிக்கனம், தன்னுதவி, ஒருவருக்கொருவர் உதவி என்ற பண்புகளை வளர்ப்பதும் தனது முக்கிய நோக்கமாகக் கொண்டு செயற்படுகின்றது. வைப்புகளைத் திரட்டியும், அரசு, இந்திய ஸ்டேட் வங்கி. மாநில நிதியக் கூட்டுரு போன்ற பல நிறுவனங்களிடமிருந்து கடன் பெற்றும் தமக்குத் தேவைப்படும் முதலைப் பெறுகின்றன.

கடனுக்குப் பிணையமாக உறுப்பினர் பொறுப்புறுதி, உறுப்பினரின் அசையாச் சொத்தை அடமானம் செய்து வாங்குதல், இயக்குநர் அவையினரின் தனி நபர் பொறுப்புறுதி போன்ற ஏற்பாடுகளைத் தொழிற் கூட்டுறவு வங்கி செய்து கொள்ளுகிறது.

இந்தியாவில் 1971ஜுன் இறுதியில் மாநில அளவில் 4 தொழிற் கூட்டுறவு வங்கிகளும், மத்திய (மாவட்ட) அளவில் 45 வங்கிகளும் செயற்பட்டு வந்தன. மைசூரில் ஒரு மாநில வங்கியும் 25 மத்திய வங்கிகளும், ராஜஸ்தானில் 2 மாநில வங்கிகளும், தமிழ் நாட்டில் ஒரு மாநில வங்கியும், குஜராத்தில் 2 மத்திய வங்கிகளும், மகாராஷ்டிரத்தில் ஒரு மத்திய வங்கியும், பஞ்சாப் மாநிலத்தில் ஒரு மத்திய வங்கியும் செயற்பட்டு வந்தன. மாநில வங்கியும், கூட்டுறவுச் சங்கங்கள் 824–ம் தனி நபர்கள் 265 பேரும், மத்திய வங்கிகளில், 3, 103 சங்கங்களும் 21, 120 தனி நபர்களும் உறுப்பினராக இருந்தனர். மாநில வங்கிகள் நான்கும் ரூ.1.60 கோடி முதலும், ரூ.1.23 கோடி வைப்புக்களும், நடைமுறை முதல் ரூ. 5.63 கோடியும் கொண்டிருந்தன. அதே நாளில் (1971 ஜுன் 30) மத்திய வங்கிகள் 45–ம் முதல் ரூ.1.86 கோடியும், வைப்புக்கள் ரூ. 5.34 கோடியும், மொத்த நடைமுறை முதல் ரூ 13.06 கோடியும் கொண்டிருந்தன. இவை உறுப்பினர்களுக்கு ரொக்கக் கடன், மேல்வரைப்பற்றும் கடன் என்ற மூன்று வகைக் கடன்களை அளித்து வந்தன.

மாநிலத் தொழிற் கூட்டுறவு 1971 ஜுன் இறுதியில் ரொக்கக் கடன், மேல் வரைப் பற்று என்ற தலைப்பில் ரூ.2.77 கோடியும், கடன்கள் என்ற தலைப்பில் ரூ.0.43 கோடியும், கடனாக அளித்திருந்தன. மத்திய வங்கிகள் இதே நாளில் முடிவுற்ற கணக்கின்படி ரூ.37.48 கோடி ரொக்கக் கடன், மேல்வரைப்பற்றும், ரூ.2.56 கோடி கடனும் கொடுத்திருந்தன.

இதுகாறும் பல்வகைக் கூட்டுறவு வங்கிகள், அவற்றின் அமைப்பு, செயல்முறை முதலியவைகளைப் பற்றிக் கண்டோம். பொதுவாக, கூட்டுறவு நிலையங்களின் செயல்முறையில் பல குறைபாடுகள் இருக்கின்றன. பல நற்குணங்களும் இருக்கின்றன. அவ்வப்போது நியமிக்கப் பட்ட குழுக்கள் இவற்றை ஆராய்ந்து தம் பரிந்துரையை வழங்கியுள்ளன. இப்பரிந்துரைகளின் பேரில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, கூட்டுறவு இயக்கம் உறுதி பெற்று வளமுற வளரப் பற்பல திட்டங்களும் நடைமுறைகளும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன.

கூட்டுறவு இயக்கத்தில் முக்கியத் திருப்பங்கள்

அனைத்திந்திய கிராமக் கடன் விசாரணைக் குழுவின் அறிக்கை (Report of the committee of direction of the All India Rural Credit Survey) இந்தியக் கூட்டுறவு இயக்கத்தின் ஒரு முக்கியத் திருப்பத்திற்குக் காரணமாக அமைந்தது. 1954–ல் வெளியான இவ்வறிக்கை விவசாயிகளின் கடன் தேவைகளில் 31% மட்டுமே கூட்டுறவுச் சங்கங்களால் தரப்படுகின்றது. என்ற உண்மையை உலகறியச் செய்தது. அக்காலத்தில் சென்னை, பம்பாய் மாநிலங்கள் தவிர, பிற மாநிலங்களில் கூட்டுறவு இயக்கம் நன்கு வேரூன்றவில்லை. கடன்கள் வழங்குவதில் மிகவும் காலதாமதம் காணப்பட்டது. நீண்ட காலக் கடன், கடன் நோக்கத்தையும், திருப்பிச் செலுத்தும் திறனையும் கருத்தில் கொள்ளாது, ஒரே வகையான தவணைக் காலத்திற்கே கொடுக்கப்பட்டது. பழங்கடன்களை அடைக்கவே இக்கடன்கள் பயன்படுத்தப்பட்டன.

கடன் வழங்கும் வங்கிகள் விற்பனைச் சங்கங்களுடன் பின்னிப் பிணைந்து செயற்படுதலின் இன்றியமையாமையை விசாரணைக் குழுவின் அறிக்கை வற்புறுத்தியது. கடன் வாங்கி விளைவிக்கும் பயிரை நல்ல விலைக்கு விற்கத் தக்க ஏற்பாடு இல்லாத காரணத்தால் பயனைப் பெற முடியவில்லை. அது மட்டுமல்ல. விவசாயி நிரந்தரக் கடனாளியாக இருக்கும் நிலையும் காணப்பட்டது. கிராமச் சமுதாயம், வங்கிமுறை, வியாபார ஏற்பாடு முதலியவற்றிடையே நெருங்கிய ஒரு பிணைப்பில்லாத காரணத்தால் கிராமப் பொருளாதாரம் நலிந்த நிலையிலிருந்தது. இக்குறைகளை அகற்ற கீழ்க்காணும் பரிந்துரைகளைக் குழு தந்தது.

கூட்டுறவுகளின் மூலதன அடித்தளத்தை வலுப்படுத்த அரசு மூலதனம் அளித்து உதவ வேண்டும். கூட்டுறவுச் சங்கங்கள் திறம்படத் தொழில் நடத்த, அவற்றின் அளவு சரியான முறையில் அமைதல் அவசியம். பெரிய அளவு பிரதம விவசாயச் சங்கங்கள் உருவாக்கப்படுதல் அவசியம். உற்பத்தி நோக்கத்திற்கு மட்டுமே கடன் தரப்படுதல் வேண்டும். குறிப்பிட்ட பருவத்தில் விளைவிக்கப்படும் பயிருக்கு வேண்டிய செலவுகட்கு மட்டுமே கடன் தரப்பட வேண்டுமேயன்றி, சொத்து வேண்டிய அளவுக்கு இருக்கிறது என்ற அடிப்படையில் கடன் வழங்கப் படலாகாது. இந்திய ரிசர்வு வங்கி, கணிசமான அளவிற்குக் குறுகிய மத்திய காலக் கடன்கள் வழங்கி, கூட்டுறவு இயக்கத்திற்கு உதவ வேண்டும். கூட்டுறவு கடனுடன் தொடர்புற்ற விற்பனை, பதப்படுத்தல் போன்ற நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். கிடங்குகள் கட்டுவதற்கும், கூட்டுறவு வளர்ச்சிக்கும், அனைத்திந்திய அளவிலும், மாநில அளவிலும் முயற்சிகள் அரசினால் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். வணிக வங்கித் துறை, உற்ற இணைந்து செயற்படும் நிலையமாகவும் இருக்கும் பொருட்டு அரசு தொடர்புற்ற ஒரு வங்கி நிறுவப்படுதல் அவசியம். இம்பீரியல் வங்கியைப் பிற அரசு தொடர்புற்ற வங்கிகளுடன் இணைத்து, இந்திய ஸ்டேட் வங்கி உருவாக்கப் படலாம் என்றும் பரிந்துரைத்தது. நாட்டளவிலும் மாநில அளவிலும், கூட்டுறவு நிலையங்கள் அளவிலும் பற்பல நிதிகள் குறிப்பிட்ட நோக்கங்களுக்கு ஏற்படுத்தப்பட வேண்டுமெனப் பரிந்துரைக்கப்பட்டது.

மேற்கண்ட பரிந்துரைகள் எந்த அளவுக்கு செயற்படுத்தப்பட்டன; எதிர்பார்த்த விளைவுகள் ஏற்பட்டனவா; விவசாய முன்னேற்றத்திற்கு மேலும் என்ன ஏற்பாடுகள் தேவை என்ற செய்திகளை விசாரிக்க, 1966–ல் அகில இந்திய கிராமியக் கடன் மறு ஆய்வுக் குழு ரிசர்வு வங்கியால் அமைக்கப்பட்டது. இக்குழு 1969–ல் தன் அறிக்கையை வெளியிட்டது. இவ்வறிக்கையின் முக்கியப் பரிந்துரைகளைக் காண்போம்.

அனைத்திந்திய கிராமக் கடன் மறு ஆய்வுக்குழு அறிக்கை (வெங்கடப்பையா குழு) 1969

கூட்டுறவுக் கடன் வழங்கும் அமைப்பு நலிந்த நிலையிலிருக்கும் மாநிலங்களில் விவசாயக் கடன் கூட்டுருக்கள் அமைக்கப்படலாம். அதே

நேரத்தில் அங்குள்ள கூட்டுறவுக் கடனளிப்பு அமைப்பை வலுப்படுத்த முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

மாநிலக் கூட்டுறவு வங்கி கூட்டுறவுக் கடனளிப்புத் துறையிலுள்ள குறைபாடுகளைக் களைவதில் பெரும் பங்கு ஏற்க வேண்டும். அதுதவிர, மாநில அரசு, மாநிலக் கூட்டுறவு வங்கி, நன்கு இயங்காத வங்கிகள் (மத்திய) ஆகியவற்றுக்கு மூலதனத்திற்குப் பணம் வழங்க வேண்டும். தேவைப்பட்டால், இயக்கமேதுமில்லாத மத்திய வங்கிகள் உள்ள இடங்களில் மாநில வங்கி கிளைக்களைத் திறந்து, நல்ல நிலையிலுள்ள சங்கங்களுக்குக் கடன் வழங்கலாம். இதே போன்று, உறங்கிக் கிடக்கும் அல்லது கலைப்பு நடவடிக்கைகளின் நடுவிலிருக்கும் கிராமச் சங்கங்களின் எல்லையில் மத்திய வங்கிகளின் கிளைகள் வழியாக விவசாயிகளுக்கு நேரடியாகக் கடன் வழங்கப்படலாம். இந் நடவடிக்கைகள் அனைத்தும் தற்காலிகமாகவே மேற்கொள்ளப்படலாம்.

கடனளிப்புப் பின் தங்கிய நிலையிலுள்ள இடங்களிலுள்ள கூட்டுறவு மாநில, மத்திய வங்கிகளைத் தக்க முறையில் நிருவாகம் செய்து அவற்றைச் சீர்மை நிலைக்குக் கொண்டு வரப் பல நிலைகளில் அலுவலர்களை அமைத்து, பரிந்துரையில் கண்டவாறு அதைச் செயல் படுத்த வேண்டும்.

மாவட்டத்திற்கு ஒரு மத்திய வங்கி என்ற ஏற்பாடு ஒப்புக் கொள்ளப்பட்டது. ஆனால், ஒரு கோடி ரூபாய்க்கு மேல் கடனளித்துள்ள வங்கிகள் தொடர்ந்து இருந்து வரலாம்.

தன்னிறைவு பெற்ற சங்கங்களை விரைவில் அமைத்து முடிக்க வேண்டும். விவசாயி எளிதில் சென்று நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் சங்கம் மூன்று அல்லது நான்கு மைலுக்கு மிகாத தொலையில் அமைந்திருக்க வேண்டும். ஒரு சங்கத்தின் செயல் எல்லையின் மக்கள் தொகை மூவாயிரத்திற்கு மிகாமலிருக்க வேண்டும் என்ற நிபந்தனை தேவைப்பட்ட இடங்களில் தளர்த்தப்படலாம். பிரதம சங்கங்கள் வெறும் கடனளிக்கும் பணியில் மட்டும் ஈடுபடாது, வைப்புக்களைத் திரட்டல், பிற வங்கிப் பணிகள் ஆகியவற்றிலும் ஈடுபடவேண்டும். எல்லா விவசாயக் கடன் சங்கங்களையும் பொறுப்பு வரையறுத்த சங்கங்களாக் மாற்றியமைக்க வேண்டும். கடன் சாா்பற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளும் சங்கங்களுக்கு

அரசு பங்கு மூலதனம் வழங்கலாம். மேலும், சங்கங்களுக்கு நிருவாக மானியத் தொகை வழங்கி, முழு நேரச் செயலரை நியமிக்க வகை செய்யலாம்.

பயிர்க்கடன் திட்டத்தை தீவிரமாக அமுல் படுத்த வேண்டும். முழுமையாக அமுல் படுத்த வேண்டும். உறுப்பினர்களின் நில உரிமை பற்றிய சான்றுகள் தாமதமில்லாது கிடைக்கத் தக்க ஏற்பாடு வருவாய்த்துறை அலுவலர் செய்து தர வேண்டும். தொழில் நுட்பம் தெரிந்த குழுவினர் ஏக்கருக்கு இன்ன பயிருக்கு இவ்வளவு கடன் தரப்படவேண்டும் என்று நிர்ணயிக்க வேண்டும். முன் போல் களப்பணியாளர் கூட்டம் கூட்டி இதை நிருனயிக்க வேண்டியதில்லை. கடனில் ஒரு பகுதி ரொக்கமும், மறுபகுதி உள்ளீடு (Input)களாகிய உரம், விதை, பூச்சிக்கொல்லி மருந்து போன்ற இனமாக (kind)வும் இருக்க வேண்டும்.

சிறிய விவசாயிகளுக்கு முழு அளவுப் பயிர்க்கடனும், நடுத்தர விவசாயிகளுக்கு முழு அளவில் ஒரு குறிப்பிட்ட பகுதி மட்டும் கடனும், பெரும் விவசாயிகளுக்கு இன்னும் குறைவான அளவுக் கடனும் கொடுத்தல் வேண்டும். பெரும் விவசாயிகளுக்கு முடிந்தவரை தம் பணத்தைப் பயிர் செலவுக்குப் பயன்படுத்தப்பட ஊக்குவிக்க வேண்டும், சிறிய கடன்களுக்குக் குறைவான வட்டி விகிதமும், பெரிய கடன்களுக்கு மிகுதியான வட்டி விகிதமும் வசூலிப்பதைச் சங்கங்கள் மேற்கொள்ளலாம்.

பயிரின் பருவத்தையொட்டிக் கடனளிப்பது உற்பத்திக் கடனின் உயிர்நாடி போன்ற கொள்கையாகும். பலவிதப் பயிர்களை விளைவிக்கும் விவசாயிகளுக்கு ரொக்கக்கடன் வசதிகளை அளிக்கலாம். பயிரை இலாபகரமாக விற்கும் வசதியைக் கருத்தில் கொண்டு தவணைத் தேதியை நிர்ணயிக்க வேண்டும். குறுகிய கால உற்பத்திக் கடனுக்கு நிலத்தை அடைமானம் செய்து தரக் கோரக் கூடாது. இங்ஙனம் செய்து விவசாயி நீண்டக் காலக் கடன் பெறுவதைத் தடுக்கும். விவசாயி தரும் எந்தப் பிணையமும் ஏற்றுக் கொள்வதற்குச் சங்கத்திற்கு தடையேதும் விதிக்கப்படலாகாது.

கடன் பெறும் விதிமுறைகள் மாற்றியமைக்கப்பட வேண்டும். கடனை எவ்வளவு துரிதமாக வழங்க முடியுமோ, அதற்கான வழிமுறைகளை மேற்கொள்ள வேண்டும். விவசாயிகள் தனித்தனி விண்ணப்பம் செய்து, கடன் பெறுவதைக் கைவிட்டு, சங்கத்தில் கடன் பெறுபவர்கள் அனைவருக்கும்

சேர்ந்து ஒரு விண்ணப்பம் தயாரித்து, அதை உரியநேரத்தில் மத்திய வங்கிக்கு அனுப்பி, அது வங்கியின் அனுமதி கிடைத்ததும் பணத்தைப் பெற்று, விவசாயிகளுக்கு வழங்க வேண்டும். பணத்தை விரைவாகப் பட்டுவாடா செய்யும் பொருட்டு, கூட்டுறவு வங்கிகள் கிளைகளைத் திறக்கவேண்டும். விவசாயிகளுக்குக் கடன் அட்டை ஒன்று அளித்து, அதில் விவசாயிகளுக்குத் தரப்படும் எல்லா வகைக் கடன்களையும் மறு பதிவு செய்து தரவேண்டும் என்ற கருத்து இன்றைய நிலையில் எளிதாகச் செயற்படுத்த முடியாது.

கூட்டுறவுச் சங்கங்கள் அளிக்கும் கடன்களைத் தவனை கடந்து செல்லாதிருக்க, கடன் பெறுபவர்களுக்கும், விரிவாக்க அலுவலர்களுக்கும், நிருவாக அலுவலர்களுக்கும், அரசியல் தலைவர்களுக்கும் தக்க கல்வி புகட்ட வேண்டும். தவணைத் தேதிக்குப் பல நாட்களுக்கு முன்னரே கடனைத் திருப்பிப் பெறும் முயற்சிகளில் ஈடுபட வேண்டும். கடனைத் திருப்பிச் செலுத்தாதவர்களுக்கு எக்காரணங் கொண்டும் மேலும் கடனளிக்கக் கூடாது. பயிர் விளையாக் காரணத்தினால் கடனை அடைக்கத் தவறும் விவசாயிகளுக்குக் குறுகியக் காலக் கடனை மத்திய காலக் கடனாக மாற்றித் தரலாம். அல்லது விதி முறைகளுக்குட்பட்டு, காலம் நீட்டித்துத் தரலாம்.

சிறு விவசாயிகள் வளர்ச்சி முகமை (Small Farmers Development Agency) என்ற புதியதோர் அமைப்பை நிறுவி சிறு விவசாயிகள் நலனைச் சிறப்பாகக் கவனிக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். விவசாய உள்ளீடுகள், நீர்ப்பாசனம், இயந்திரங்கள் முதலிய சிறு விவசாயிகளுக்குக் கிடைக்கத்தக்கத் திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும். சிறு விவசாயிகளுக்குக் கூடுதலாக அளிக்கப்படும் கடன்கள் திருப்பிச் செலுத்தாமற் போனால், ஏற்படக் கூடிய வட்டியின் நட்டத்தை ஈடுசெய்ய இம் முகமை குறிப்பிட்ட விகிதங்களில் தனி நட்ட நிதி (Special risk fund) ஒன்றுக்குப் பணம் ஒதுக்கிவரும்.

வணிக வங்கிகள் விவசாயிகளுக்கு நேரடியாகக் கடன் கொடுக்க வேண்டும். உயர் விளைச்சல் ரகங்களைப் பயிரிடுவோருக்கு முதலில் இக்கடன் வசதியைக் கொடுக்கலாம். படிப்படியாகப் எல்லா வகை விவசாயிகளுக்கும் இந்த வசதி தரப்பட வேண்டும். நேரடிக்கடன் மட்டுமல்லாது மறைமுகமாகவும் விவசாய மேம்பாட்டுக்கு வணிக வங்கிகள் கடன் தர வேண்டும். உரம் வாங்க, விநியோகிக்க, இருப்பு வைக்க, விளைபொருள்களைப் பதப்படுத்த, விவசாய

தளவாடங்கள் வாடகைக்கு அளிக்க, போன்ற பல பணிகளுக்கும் வணிக வங்கிகள் கடன் தர வேண்டும். ரிசர்வு வங்கி, வணிக வங்கிகள் அளிக்கும் விவசாயக் கடன்களுக்கு மறு நிதி வசதிகளை அளிக்க வேண்டும். வணிக வங்கிகளும், கூட்டுறவு வங்கிகளும் விவசாயக் கடனளிக்கும் செயலில் ஒருங்கிணைந்து செயற்படுதல் மிகவும் இன்றியமையாதது.

கூட்டுறவு வங்கிகள் வைப்புக் காப்பீட்டுத் (Deposit Insurance) திட்டத்தின் நன்மைகளைப் பெற, மாநிலங்கள் தத்தம் கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தைத் திருத்தி அமைக்கப்பட வேண்டும்.

விவசாய மறு நிதிக் கூட்டுரு, தன் நடவடிக்கைகளைப் பெருக்க வேண்டும். உலக வங்கி போன்ற அனைத்துலக நிறுவணங்களிடம் கடன் பெற்று, டிராக்டர்கள், குழாய்க்கிணறு தோண்டக் கருவிகள், மீன்வள, பால்வள மேம்பாட்டுத் திட்டங்களுக்குக் கருவிகள் வாங்க ஏற்பாடு செய்யலாம். கூட்டுருத் தொழில் நுட்ப வல்லுநர்களைக் கொண்டு திட்டங்களை ஆய்வு செய்து, அறிவுரை வழங்கலாம்.

கிராமிய மின்சாரக் கூட்டுரு ஒன்றை நிறுவி, விவசாய வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்கும் மின் விசையை கிராமங்களுக்கு விரைவாக அளிக்க வேண்டும். பம்புச் செட்டுகள் அமைத்து, நீர்ப்பாசன வசதியை உண்டாக்க இத்திட்டம் பயனளிப்பதுடன், சிற்றளவுக் கிராமத் தொழில்கள், ஆறுகளிலிருந்து இறைவைப் பாசனம், வீட்டு விளக்கு, கரும்பு, புகையிலை, தேயிலை போன்ற பயிர்களின் வளர்ச்சிக்கும் நீர்ப்பாசனம் போன்ற தேவைக்கும் மின் வசதி பேருதவியாக அமையும். விவசாயம் மறு நிதிக் கூட்டுரு ஒப்புதல் அளித்த திட்டங்களை நிறைவேற்ற, அத் திட்டங்கள் அமைந்துள்ள இடங்களில் மின் வசதி கிடைக்க மின்சாரக் கூட்டுரு முதலில் முயலும்.

இதுகாறும் கூறப்பட்ட பரிந்துரைகளைத் தக்கபடி செயற்படுத்த, நல்ல பயிற்சி பெற்ற பணியரும் அலுவலரும் தேவை. கூட்டுறவு இயக்கத் தலைவர்களும் பயிற்சி பெற வேண்டும். இதற்குக் கூட்டுறவுப் பயிற்சி நிலையங்களுய், ரிசர்வ் வங்கியும், கூட்டுறவு வங்கிகளும் ஒன்று கூடிக் கருத்தரங்குகளும், புத்தொளிப் பயிற்சி முகாம்களும், குறுகிய காலப் பயிற்சி வகுப்புகளும், நடத்த ஏற்பாடு செய்வது நல்லது. வணிக வங்கிகளின் பணியரும், அலுவலரும் தாம் மேற்கொள்ளும் புதிய விவசாயக் கடன் திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றத் தக்க பயிற்சி பெற வேண்டும்.

பாடம் - 17

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்

சென்னை மாகாண அரசாங்கம் மாநில அளவில் நிதிநிறுவனத்தை தொடங்கி தொழிற்துறையில் வளம் பெற நினைத்தது. அதன் விளைவாக சென்னை தொழில் முதலீட்டுக் கழகம், கம்பெனிகள் சட்டப்படி 26.5.1949 ஆம் ஆண்டு பொது வங்கி கம்பெனியாக உருவாக்கப்பட்டது. இந்த நிறுவனம் மற்ற மாகாணங்களுக்கு ஒரு முன்னோடியாக செயல்பட்டது. பிறகு 1951–ல் மாநில நிதிக்கழகங்கள் சட்டப்படி மாற்றம் செய்யப்பட்டது. 1969–ஆம் ஆண்டு சென்னை மாகாணம் என்ற பெயரை "தமிழ்நாடு" என்று அரசு மாற்றியதால் இந்நிறுவனத்தின் பெயரையும் 'தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்' என்று மாற்றம் செய்யப்பட்டது.

முக்கியக் குறிக்கோள்கள்

இக்கழகத்தின் முக்கிய குறிக்கோள்களான தொழில் வளர்ச்சியும், தொழில் முனைவோர் விரிவாக்கமும் இம்மாநிலத்தில் விரிந்து செயல்பட வைப்பதாகும். நீண்டகால கடன்களை வழங்கி பெரிய தொழிற்சாலை முதல் சிறுதொழில் வரை ஊக்குவிப்பதாகும். இக்கழகம் வழக்கமாக செயல்படுத்தும் சிறிய மற்றும் நடுத்தர தொழில்களுக்கல்லாமல் சாதனங்களுக்கான மறுநிதியுதவி, தரக்கட்டுப்பாட்டுச் சாதனங்கள், போக்குவரத்து வாகனங்களை இயக்குபவர்கள், உணவு மற்றும் தங்கும் விடுதிகள், மருத்துவமனைகள் மற்றும் தனியார் மருத்துவமனைகள் பதிவு பெற்ற மருத்துவர்கள் போன்ற திட்டங்களை செயல்படுத்துகிறது. ஆதி திராவிடர், பழங்குடியினர், உடல் ஊனமுற்றோர், பெண் தொழில் முனைவோர், முன்னாள் இராணுவத்தினர் போன்றவர்களுக்கு பல்வகை சலுகைகள் கொண்ட சிறப்புத் திட்டங்கள் செயல்படுத்துவது இதன் முக்கிய குறிக்கோளாகும்.

நிர்வாகம்

இக்கழகத்தின் நிர்வாகம் இயக்குநர்கள் குழுவிடம் நிலை நிறுத்தப்பட்டுள்ளது. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநராக இருவரையும், 11 இயக்குநர்களையும் கொண்ட குழுவாக செயல்படுகிறது. தலைமை

அலுவலகத்தில் முதன்மை அலுவலர்கள் பலரைக் கொண்டு நிர்வாகப் பணியைச் செயல்படுத்துகிறது.

வரைபடம்



இக்குழுவானது இயக்குநர்கள் குழு கூட்டங்களையம், செயற்குழு கூட்டங்களையும், கடன் தொகை செலுத்தத் தவறியமை குறித்து ஆய்வு குழு கூட்டங்களையும் அவ்வப்போது நடத்தி நிர்வாகத்தினை செயல்பட வைக்கிறது.

மூலதனம்

இக்கழகத்தின் மூலதனமானது ஏறத்தாழ ரூ.400 கோடியாகும். இவைகள் பல்வேறு இனங்களான சொந்த மூலதனம், செயல்பாட்டு வருமானம், கடனிலிருந்து பெறப்பட்டவை மற்றும் இந்திய தொழில் வளர்ச்சி வங்கியிடம் மறுநிதி பெற்றவை போன்றவையாகும். அதோடு மட்டுமல்லாமல் மாநில அரசு மற்றும் இந்திய தொழில் வளர்ச்சி வங்கியிடம், இந்திய ரிசர்வ் வங்கியிடம் அவ்வப்பொழுது கடன்களையும் பொறுத்து நிதி ஆதாரங்கள் ஏற்படுத்தப்படுகின்றன.

புதிய மண்டல / கிளை அலுவலகங்கள்

தமிழகத்தில் மாறிவரும் பொருளாதார நிலைமைக்கேற்ப புதிய தொழில் துவங்குபவர்களை ஊக்குவிப்பதற்கும் மற்றும் தற்பொழுது உள்ள தொழிற்கூடங்களை விரைவாக விரிவுபடுத்துவதற்கும் இக்கழகம் சேலம் மற்றும் செங்கல்பட்டில் மண்டல அலுவலகங்களைத் துவக்கியுள்ளது. மேலும் கோயம்புத்தூர் (கிழக்கு), நாமக்கல்லிலும் புதிய கிளை அலுவலகங்களை

துவக்கியுள்ளது. இக்கழகம் 31 கிளை அலுவலகங்களுடன் 7 மண்டல அலுவலகங்களுடன் இயங்கி வருகின்றது.

இக்கழகத்திற்கு திருவாளர்கள் 'சதர்ன் பிரிக்ஸ் ஒர்க்ஸ்' நிறுவனம் துணை நிறுவனமாக செயல்பட்டு வருகின்றது.

செயல்பாடுகள்

சிறு தொழில்களுக்கான உதவித்தொகை அளிப்பதில் முதலிடம் வகிக்கிறது. அனுமதிக்கப்பட்ட மொத்த தொகையில் 86 சதவீதம் வரை கடன் வழங்கி வருகின்றது. மொத்த கடன் அனுமதி பெற்ற நிறுவனங்களின் எண்ணிக்கையில் சிறுதொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை 90 சதவீதத்திற்கும் அதிகமாகும்.

பொருளாதாரத்தில் பின்தங்கிய ஆதி திராவிடர் பிரிவைச் சேர்ந்த தொழில் முனைவோர்க்கு தாட்கொ (THADCO) நிறுவனம் முன் வைப்பு பணம் மற்றும் மானியம் அளிக்கும் புதுத்திட்டத்தை அறிமுகப்படுத்தி உள்ளது. இக்கழகம் கடந்த ஆண்டுகளில் கடை பிடிக்கப்பட்டு வருவது போல் பல்வேறு தொழில்களை முனைவோர்களுக்கான தனித்தனிதிட்ட உதவிகள் அளித்து வருகிறது. இதில் கைவினைஞர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் உடல் ஊனமுற்றவர்கள், பழங்குடியினர்கள், பெண் தொழில் முனைவோர்கள் மற்றும் முன்னாள் இராணுவத்தினர் முதலியோருக்கு தொடர்ந்து முன்னுரிமை அளித்து வருகிறது.

மானிய உதவித் திட்டங்கள்

மாநில மானியத் திட்டத்தின் கீழ் பல நிறுவனங்களுக்கு பல கோடி ரூபாய்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

விற்பனை வரிச் சலுகைகள்

இக்கழகத்தின் வாயிலாக கடனுதவி பெற்ற நிறுவனங்களுக்கு விற்பனை வரி / தள்ளுபடி தொகை செலுத்துவதை தள்ளி வைத்தல் போன்ற சலுகைகள் பெற "தகுதிச் சான்றிதழ்" வழங்க அதிகாரம் அளிக்கப்பட்டு பல கோடி ரூபாய்க்கு சான்றிதழ்கள் வழங்குகிறது.

தொழில் வாரியான நிதியுதவி

தொழில் வாரியான நிதியுதவி மூலம் போக்குவரத்து பிரிவு, துணிகள், உணவு, இரசாயணம், காகிதம் மற்றும் காகிதத் தொழில்கள், உலோகப் பொருட்கள், தோல் மற்றும் அனைத்து வகையானவற்றிற்கும் அதிக அளவில் கடன் வழங்கப்பட்டுள்ளது.

புதிய தொழில் வாய்ப்புகள்

இக்கழகம் மாறிவரும் பொருளாதார நிலைமைக்கு ஏற்ப குத்தகை நிதி உதவி (Leasing business) மற்றும் முனைப்பு ஈட்டுத் தொகை திட்டம் (Venture capital) என்ற புதுத்திட்டங்களின் மூலம் நிதியுதவி அளித்து, கழகத்தின் செயல்பாடுகளை விரிவாக்க முனைந்துள்ளது.

வேலை வாய்ப்புகள்

இக்கழகத்திடமிருந்து நிதியுதவி பெற்ற நிறுவனங்கள் மூலம் ஏறத்தாழ 1,00,000/ நபர்களுக்கு வேலை வாய்ப்பு கிட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த காலத்தில் இக்கழகத்தின் நிதி உதவியால் 87,160 நபர்களுக்கு வேலை வாய்ப்பு கிட்டியது.

நலிவுற்ற தொழிலுக்கு அளித்தல் :

இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியின் நலிந்த தொழில் பிரிவுகளுக்குப் புத்துயிர் அளிக்கும் திட்டத்தின் கீழ் இக்கழகம் 40 தொழில் பிரிவுகளுக்கு பல கோடி ரூபாய்க்கு புத்துயிர் நிதியுதவி அளித்துள்ளது.

புதிய கண்காணிப்பு முறை

இக்கழகத்தில் நிதி உதவி பெற்ற நிறுவனங்கள் தங்கள் திட்டத்தை சரியான முறையில் செயல்படுத்தவும், அவர்களது நடைமுறைகளை மேம்படுத்தவும், கழகத்தின் வசூலை பெருக்கவும் புதிய கண்காணிப்பு முறையை 1994 – முதல் அறிமுகப்படுத்தி உள்ளது. கிளை அலுவலகங்களின் அலுவல்களை "கடன் நிர்வாக அலுவலர்" (LAO) என்று மாற்றம் செய்யப்பட்டு இவர்களுக்கு நிதியுதவி அளிக்கப்பட்ட நிறுவனங்களின் பிரதிநிதி போல செயல்பட உத்தரவு இடப்பட்டுள்ளது. ஒவ்வொரு அலுவலரும் தனக்கு

குறிப்பிட்டு அளிக்கப்பட்டுள்ள தொழில் நிறுவனங்களை மாதம் ஒரு முறையாவது தொடர்பு கொள்ள வேண்டும். இப்பணி ஒரு தொடர்ச்சியான பணியாகும். மேலும் அவர்கள் அத்தொழில் நிறுவனங்களில் திட்டத்தை செயல்படுத்துதல் மற்றும் காலக்கடன்விநியோகித்தல், முன்னேற்றம், அதை சரிவர பயன்படுத்துதல், நிலுவைத் தொகையை வசூலித்தல் போன்ற வேலைகளையும் மேற்கொள்கின்றனர்.

மறுநிதியுதவி

இக்கழகத்தின் முக்கியமான நிதி ஆதாரம், இந்திய சிறுதொழில் வளர்ச்சி வங்கி, இந்திய தொழில் வளர்ச்சி வங்கி ஆகியவற்றிலிருந்து கிடைக்கும் மறுநிதியுதவித் தொகையாகும். மறுநிதிக்தொகை நிலுவையானது ஏறத்தாழ ரூபாய் 500 கோடியாகும்.

பத்திரங்கள்

இக்கழகம் அவ்வப்போது பத்திரங்களை வெளியிட்டு நிதி திரட்டி வருகிறது. தேசிய மயமாக்கப்பட்ட மற்றும் வணிக வங்கிகள், இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம் ஆதரவில் பல முதலீடுகள் முழுமையாக செலுத்தப்பட்டுள்ளன. இதுவரை நிலுவையாகவுள்ள பத்திரங்களின் மதிப்பு சுமார் ரூ. 500 கோடியாகும்.

வைப்பீடுகள்

இக்கழக வைப்பீடுகள் பல நிலைகளில் ஈடுசெய்யப்பட்டுள்ளது. இதுவரை உள்ள வைப்பீடு ரூ.1 கோடியாகும்.

கணிப்பொறி மையமாக்குதல் :

இக்கழகம் முக்கிய துறைகளான நிதிக்கணக்கு, கடன் கணக்கு, நிர்வாகத்தகவல் முறை ஆகிய பிரிவுகளுக்க கணிப்பொறி மையத்தை அறிமுகப்படுத்துவதில் முன்னேற்றம் கண்டுள்ளது. இதன் அடிப்படையில் சென்னை மற்றும் மாவட்ட அளவிலான கிளை அலுவலகங்களின் பணிகள் கணிப்பொறி மயமாக்கப்பட்டுள்ளன.

பணியாளர் பயிற்சிப் பிரிவு

உள்ளிருப்புப் பயிற்சிப் பிரிவு

அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பயனடையும்படி பலவிதமான பயிற்சிகளை அளித்துள்ளது. இக்கழகம் மொத்தம் 9 பயிற்சித் திட்டங்களை உருவாக்கி செயல்படுத்தி உள்ளது. அதில் புதிதாக நியமிக்கப்பட்ட முதுநிலை கணிப்பொறி அலவலர்களுக்கும், தனிச் செயலாளர் மற்றும் சுருக்கெழுத்தாளர்களுக்கும் பயிற்சி அளித்துள்ளது. பயிற்சிகளின் கடன் வழங்கும் முறையையும், கணிப்பொறி துணைத் தொடர்களையும், சட்ட ஆலோசனைகளையும் திட்ட ஆய்வுகளையும், நலிவுற்ற தொழில் பிரிவினருக்கு புத்துயிர் அளிக்கும் முறைகளையும் பயிற்சியில் சொல்லித் தரப்படுகிறது. இக்கழகம் பல பணியாளர்களை வெளிப்பயிற்சித் திட்டக் கருத்தரங்கங்களில் கலந்து கொள்ள அனுமதித்துள்ளது.

தொழில் முனைவோர் மேம்பாட்டு நிகழ்ச்சி

சென்னை, கோவை, மதுரை, திருச்சி மற்றும் நெல்லை மற்றும் அதன் சுற்றுப் புறங்களிலுள்ள இக்கழகத்தால் நிதியுதவி பெற்ற தொழில் முனைவோர்கள் பயன்படும் வண்ணம் இட்காட் (ITCOT) மற்றும் தொழில் முனைவோர் நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளது.

பாடம் - 18

கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு
(KHADI AND VILLAGE INDUSTRIES COMMISSION)

முன்னுரை

கிராமப்புற வளர்ச்சிக்கு கதர் தொழில் துறையானது பல வழிகளில் உதவி செய்து கிராமப்புற வேலையின்மையை முடிவுக்கு கொண்டுவர செயல்பட்டுக் கொண்டுள்ளது. இந்நோக்கத்தையே தேசப் பிதா மகாத்மா காந்தி அவர்கள் தன் வாழ்நாள் முழுவதும் வலியுறுத்தியும், கடைபிடித்தும் வந்தார். மகாத்மாவின் வழிகாட்டுதலால் கதர் தொழில் துறையின் தொடக்கம் 1922 லிருந்து நம் நாட்டில் செயல்பட்டு வருகின்றது. 1925ம் ஆண்டில் அகில இந்திய நூல்நூற்போர் அமைப்பு (All India Spinners Association) தொடங்கப் பெற்று கையினால் நூல் நூற்கவும், துணிகள் நெய்யவும் மேற்கொள்ளப்பட்டது. அதன்பிறகு 1935 ஆம் ஆண்டு அகில இந்திய கிராமத் தொழில்கள் அமைப்பு (All India Village Industries Association) அமைக்கப் பெற்று பல்வேறு கிராமத் தொழில்களை நெல்–அரிசி ஆலை, பனஞ்சார், கையினால் செய்யப்படும் காகிதம் மற்றும் தேனீ வளர்த்தல் போன்ற தொழில்களை நிறுவஉதவி செய்தது. 1951–ம் ஆண்டு சர்வ சேவை அமைப்பு (Sarvaseva Sangh) ஒருங்கிணைந்த கிராமப்புறத் தொழில்களை திட்டமிடவும், வளர்ச்சியடையுவும், அகில இந்திய கிராமத் தொழில்கள் அமைப்பை தன்னகத்தே எடுத்துக் கொண்டது. அதன் பிறகு தான் இந்திய அரசானது பொதுவான கொள்கைகளை ஏற்படுத்தி இக்கிராமத் தொழில்களை வளர்ச்சியடையச் செய்தது.

கதர் கிராமத் தொழில் ஆணைக்குழுவானது 1957ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் கதர் மற்றும் கிராமத் தொழில்கள் சட்டம், 1956ன் படி அமைக்கப்பட்டது. எனவே கதர் கிராமத் தொழில் ஆணையம் நாடாளுமன்ற சட்டப்படி ஒரு சட்ட அமைப்பாக மாறியது. இதனிடம் திட்டமிடல், அமைத்தல் மற்றும் பல்வேறு நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்தி பொறுப்புகளை ஒப்படைத்தது. அதன் அடிப்படையில் முதலாவதாக 24 கிராமத் தொழில்கள் சேர்க்கப்பட்டன.

1957ஆம் ஆண்டு முதல் அகிய இந்திய கதர் மற்றும் கிராமத் தொழில்கள் அவையின் (All India Khadi and Village Industries Board) அனைத்து வேலைகளையும் தன்னகத்தே எடுத்துக் கொண்டது.

சுய தொழில் கடனுதவித் திட்டங்கள் :

சுய தொழில் தொடங்குவதற்கு, தேசிய சிறுதொழில் சேவைக் கழகம், சிறுதொழில் சேவைக்கழகம் உள்ளிட்ட பல்வேறு அரசு நிறுவனங்கள் அளிக்கும் உதவிகள் குறித்து முன்னர் விளக்கியிருந்தோம். இப்பாடத்தில் கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு (KVIC) சிறு தொழில்களுக்கு அளிக்கும் விளிம்புத் தொகைத் திட்டம் குறித்து விளக்கப்படுகிறது.

கிராமப் புறங்களில் வேலை வாய்ப்பைப் பெருக்குவதற்காகத் தொடங்கப்பட்டது விளிம்புத் தொகைத் திட்டம் (Margin Money Scheme). 15.10.1996 முதல் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் தனிப்பட்ட நபருக்கு ரூ.10 இலட்சம் வரையிலும் கடனுதவி அளிக்கப்படுகிறது. பதிவுபெற்ற தொழிற் சங்கங்களுக்கு அல்லது கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ.25 இலட்சம் வரையிலும் கடனுதவி அளிக்கப்படுகிறது.

இக்கடனுதவிகள் அனைத்தும் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் அளிக்கப்படுகிறது.

பிற கடனுதவித் திட்டங்களைப் போலவே, இத்திட்டத்துக்கும் வரையறுக்கப்பட்ட சில விதிமுறைகள் உண்டு.

கதர் மற்றும் கிராமத் தொழில் திட்டத்தின் கீழ் கதர் மற்றும் கிராமத் தொழில் ஆணைக்குழு தனிப்பட்ட நபருக்கு ரூ.10 இலட்சம் வரையிலும், பதிவு பெற்ற சங்கங்கள் / கூட்டுறவு சங்கங்களுக்கு ரூ.25 இலட்சம் வரையிலும் தேசீய மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் கடன் உதவி செய்து வருகின்றது.

கதர் மற்றும் கிராமத் தொழில் ஆணைக்குழு, கிராமங்களில் வேலை வாய்ப்பை உண்டாக்கிட விளிம்புத் தொகைத் திட்டத்தை 15.10.1996 முதல் செயல்படுத்தி வருகிறது. அதன் முக்கிய அம்சங்களாயின :

1) 20,000க்கு குறைவாக ஜனத்தொகை உள்ள கிராமங்களில் மட்டும்தான் இத்திட்டத்தை பயன்படுத்தி பலன் பெற முடியும்.

2) ஒரு நபருக்கு வேலை வாய்ப்பு அளித்திட ரூ.50,000க்கும் குறைவாக முதலீடு செய்யக்கூடிய திட்டமாக இருக்க வேண்டும். அதாவது ரூ.1 இலட்சம் உள்ள திட்டத்தின் கீழ் குறைந்தது இரண்டு நபருக்கு வேலை வாய்ப்பை அளித்திடக்கூடிய திட்டமாய் இருந்திடல் வேண்டும்.

3) KVIC–யின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட 116 வகையான கிராமத் தொழில்களுக்கு மட்டும்தான் கடன் உதவி வழங்கப்படும் (அங்கீகரிக்கப்படாத பட்டியலில் இல்லாத ஏனைய தொழில்கள்).

4) கதர் மற்றும் பாலிவஸ்திரா தொழில்கள் இத்திட்டத்தின் கீழ் அமையாது.

5) கூட்டுறவு சங்கங்கள் / சங்கங்கள் / டிரஸ்ட் அமைப்புகள் அந்த மாநிலத்தின் நடைமுறையில் உள்ள (1) சங்கப்பதிவு முறை விதி 1860ன் கீழோ (அ) கூட்டுறவு சங்கப் பதிவு விதிப்படியோ (அ) இந்தியன் டிரஸ்ட் விதிப்படியோ பதிவு பெற்றவையாக இருத்தல் வேண்டும்.

6) இத்திட்டத்தின் கீழ் 25 சதவீதம் விளிம்புத் தொகை ரூ.10 இலட்சம் உள்ளான திட்டங்களுக்கு வழங்கப்படும்.

7) ரூ.10 இலட்சத்திலிருந்து 25 இலட்சம் வரையில் உள்ள திட்டங்களுக்கு ரூ.10,00,000 வரையில் 25 சதவீதம் அதற்கு மேல் உள்ள திட்ட மதிப்பிற்கு 10 சதவீதம் விளிம்புத் தொகை வழங்கப்படும்.

8) பெண்கள், மலை ஜாதியினர், தாழ்த்தப்பட்டோர், இராணுவத்தில் இருந்து ஒய்வு பெற்றோர், சிறுபாண்மையோர் ஆகியோருக்கு 30 சதவீதம் விளிம்புத் தொகை வழங்கப்படும். இவர்கள் தங்களின் பங்காக 5 சதவீதம் திட்ட மதிப்பீட்டைத் செலுத்த வேண்டும்.

9) மேற்குறிப்பிட்ட பிரிவை சாராதவர்கள் தங்களது பங்காக திட்டத்தின் மொத்த தொகைக்கு 10 சதவீதம் செலுத்த வேண்டும்.

10) விளிம்புத் தொகை கிராமத் தொழில்களுக்கு மட்டும் தான் கிடைக்கும்.

11) விளிம்புத் தொகையை பெற்றவர்கள் தங்கள் பெற்ற மூலதனக் கடனை வட்டியுடன் திரும்பிச் செலுத்தியபின்பு விளிம்புத் தொகை மான்யமாக மாற்றப்படும். அது வரை இந்தத் தொகை கடனாகவே கருதப்படும். (அதாவது இந்த தொகையானது கடனின் முதல் பகுதி அளிக்கப்படும் நாளிலிருந்து 2 வருடம் ஆனபின் கடன் தொகையில் சரி செய்யப்படும்).

12) இத்திட்டத்தின் கீழ் பயன்பெற விரும்புவர்கள் தாங்கள் எந்த திட்டத்தின் கீழ் பயன்பெற்று செயல்படுத்த விரும்புகிறார்கள் என்று யோசனை செய்ய வேண்டும். அதாவது மூலதனப் பொருள், பயிற்சி செய்யப்பட்ட வேலையின் மேற்பார்வையாளர்கள், இடம், மின்சார இணைப்பு, உற்பத்தி செய்யக்கூடிய பொருள்கள், விற்பனை செய்வதற்குரிய முன் ஏற்பாடுகள் ஆகியவற்றை மனதில் கொண்டு திட்டத்தை தேர்வு செய்ய வேண்டும்.

தங்கள் கிராமம் / வட்டம் / மாவட்டத்தில் உள்ள தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் மூலம் பயன்பெற விரும்பினால் அவர்கள் நேரிடையாக வங்கிகளை அணுகி அந்த வங்கியில் உள்ள விண்ணப்பப் படிவத்தில் இத்திட்டத்தை உருவாக்கி இத்திட்டம் செயல்படுவதற்கு தேவையான முன்னேற்பாடுகளுக்குள்ள ஆவணங்களை தயாரித்து வங்கியிடம் திட்ட அறிக்கையின் இரண்டு நகல்களை மேற்கண்ட முகவரிக்கு நேரிடையாக அல்லது கடிதம் மூலமாக சமர்ப்பித்தல் வேண்டும்.

திட்ட அறிக்கை, நடைமுறைக்கடன் மற்றும் மூலத்தனக் கடன் இரண்டும் இணையப் பெற்றது ஆகும். எக்காரணம் கொண்டும் நிலம் வாங்குவதற்கான தொகை இதில் சேர்க்கப்படக்கூடாது.

திட்டத்தின் நகல்கள் கிடைத்தவுடன் அத்திட்டம் நல்லமுறையில் செயல்படுத்துவதற்கான வாய்ப்புகள் இருந்தால் உடனே கதர் மற்றும் கிராமத் தொழில் ஆணைக்குழு திட்டத்தை பரிந்துரை செய்து வங்கிக்கு அனுப்பி வைக்கும்.

வங்கி தன்னுடைய விதிமுறைகளை கடைப்பிடித்து மூலதனக் கடனில் முதல் தவணையை தனி நபருக்கோ அல்லது சங்கங்களுக்கோ (அ) கூட்டுறவு சங்கங்களுக்கோ கொடுத்த பின் அதற்கான சான்றிதழ் (Sanction and release order) நகலை மண்டல இயக்குநருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். இவ்வாறு கடன் அளிக்கப்பட்டவுடன் கதர் மற்றும் கிராமத் தொழில் ஆணைக்குழு தங்களுடைய பங்காக மேல் கூறியபடி 25ல் இருந்து 30சதவீதம் வரை விளிம்புத் தொகையை அந்த குறிப்பிட்ட வங்கிக்கு அனுப்பி வைக்கும். இந்த விளிம்புத் தொகை அந்த தனிப்பட்ட நபரின் பெயரிலோ அல்லது கூட்டுறவு சங்கங்கள் (அ) சங்கங்கள் (ஆ) டிரஸ்ட்டுகள் பெயரிலோ குறுகிய கால வைப்புத் தொகையில் (Shart Term Deposit) வங்கிகளால் வைக்கப்படும். இந்த விளிம்புத்

தொகை வங்கியில் கடன் பெற்றவர்கள் தங்களது மூலதன கடனை வட்டியுடன் திருப்பி செலுத்தியவுடன் (அதாவது விளிம்புத் தொகையானது கடனின் முதல் பகுதி அளிக்கப்படும் நாளிலிருந்து 2 வருடம் ஆன பின் கடன் தொகையில் சரி செய்யப்படும்). விளிம்புத் தொகை என்பது ஒருமுறை மட்டுமே அளிக்கப்படும். எந்தக் காரணம் கொண்டும் விரிவுப்படுத்தப்படும் நோக்கில் இரண்டாம் முறையாக பெறப்படும் கடன்களுக்கு விளிம்புத் தொகை அளிக்கப்பட மாட்டாது.

116 வகையான கடனுதவி அளிக்கப்படும் கிராமத் தொழில்கள்

1. மண்பாண்டம் தயாரித்தல், 2. கிளிஞ்சல் மற்றும் சுண்ணாம்பு, 3. கல்வெட்டுதல் அரைத்தல், செதுக்குதல் (கட்டிடம் மற்றும் கோயிலுக்கு), 4. கல்லில் செய்யப்படும் பயன்படு பொருட்கள், 5. சிலேட்டு மற்றும் சிலேட்டுப் பென்சில் செய்தல், 6. எரிபொருளாகப்பயன்படும் கரி, 9.தங்கம், வெள்ளி மற்றும் விலையுயர்ந்த செயற்கைக் கற்களால் செய்யப்படும் ஆபரணங்கள், 10. கோலப்பொடி, 11. வளையல், 12. பெயிண்ட், வார்னிஷ், டிஸ்டம்பர் மற்றும் சுவர் பொடிகள், 13. கண்ணாடி பொம்மைகள், 14. கண்ணாடி அலங்காரத் தொழில், 15. செயற்கை வைரம் கட்டிங், 16. கைக்காகிதம், 17. கத்தா, 18. பசை, பிசின் தயாரித்தல், 19. அரக்குத் தயாரித்தல், 20. தீப்பெட்டி, அகர்பத்தி, 21. மூங்கில் மற்றும் கூடை, 22. காகிதத்தினால் செய்யப்படும் தட்டு, கிண்ணம், பை மற்றும் பெட்டிகள், 23. புத்தக பைண்டிங், கவர், நோட்டுக் செய்தல், 24. விளக்குமாறு, வெட்டிவேர் தட்டி செய்தல், 25. வனவிளை பொருட்கள் பதனிடுதல், 26. போட்டோ பிரேம், 27. சணற்பொருட்கள், 28. அரிசி, பருப்பு மற்றும் தானியங்கள் பதனிடுதல், மசாலா பவுடர் / அப்பளம் / ரொட்டி / பேக்கரி, 29. இடியாப்பம், 30. மின்விசைத் திருகை (மாவரைக்கும் எந்திரம்), 31. கோதுமை, ரவை தயாரித்தல், 32. சிறிய ரைஸ்மில், 33. பனைபொருட்கள் / பனைவெல்லம், 34. கரும்பு வெல்லம் / கண்டசாரி சர்க்கரை செய்தல், 35. இந்திய மிட்டாய் செய்தல், 36. கரும்புச்சாறு செய்தல், 37. தேனீ வளர்ப்பு, 38. பழம் மற்றும் காய்கறி பதப்படுத்துதல்/ஊறுகாய், 39. செக்கு எண்ணெய், 40. மென்த்தால் எண்ணெய், 41. கயிறு தவிர மற்ற நார்ப்பொருட்கள், 42. வனத்திலிருந்து கிடைக்கும்

மருந்துச் செடிகள், மூலிகைகள் சேகரித்தல், 43. கேழ்வரகு, மக்காச்சோளம் பொருட்கள் தயாரித்தல், 44. நெட்டி வேலை, நெட்டி மாலைகள் செய்தல், 45. முந்திரிப்பருப்பு பதப்படுத்துதல், 46. இலையினால் செய்யப்படும் கிண்ணங்கள், 47. பால்பொருட்கள் தயாரித்தல், 48. மாட்டுத்தீவிணம் / கோழித்தீவணம் தயாரித்தல், 49. தோல்பதனிடுதல் மற்றும் தோல் பொருட்கள், 50. சோப்பு தயாரித்தல், 51. ரப்பர் பொருட்கள், 52. ரெக்சின், பிவிசி பொருட்கள், 53. கொம்பு, எலும்பு தந்தப் பொருட்கள், 54. மெழுகுவர்த்தி, குடம் மற்றும் அரக்கு, 55. பிளாஸ்டிக் பொருட்கள் (கட்டுச் சாமான்களுக்கு பயன்படுத்தப்படும் பொருட்கள்), 56. பொட்டு தயாரித்தல், 57. மருதாணி தயாரித்தல், 58. வாசனைத் தைலம் தயாரித்தல், 59. ஷாம்பு செய்தல், 60. ஹேர் ஆயில், 61. டிடர்ஜெண்ட், சலவை பவுடர், 62. தச்சுவேலை, 63. இரும்பு வேலை, 64. அலுமினிய பாத்திரங்கள், 65. சாண எரிவாயு கலன் அமைத்தல், 66. மண்புழு கழிவு உரம் தயாரித்தல், 67. பேப்பர் பின், ஸ்டவ் பின், ஊக்கு, களிப்புகள் தயாரித்தல், 68. அலங்கார பல்புகள், கண்ணாடிக்குடுவைகள் மற்றும் கண்ணாடி, 69. குடை தயாரித்தல், 70. சூரிய ஒளி மற்றும் காற்றினால் இயங்கும் கருவிகள், 71. பித்தளைப் பாத்திரங்கள், 72. செம்புப் பாத்திரங்கள், 73. வெண்கலப்பாத்திரங்கள், 74. பாத்திரம் இல்லாத பித்தளை, செம்பு வெண்கலப் பொருட்கள், 75. ரேடியோ, 76. கேஸட் ரெக்கார்டர் ரேடியோவுடன்/ரேடியோ இல்லாமல், 78. வோல்டேஜ் ஸ்டெபிலைசர், 79. எலக்ட்ரானிக் கடிகாரம் மற்றும் அலாரம் கடிகாரம், 80. மரத்தினால் செய்யப்படும் அழகுப்பொருட்கள், 81. தகரப்பொருட்கள், 82. மோட்டார் வைண்டிங், 83. வயர்நெட், 84. இரும்பு கிரில், 85. வண்டி, மாட்டு வண்டி, சிறிய படகு தயாரித்தல், சைக்கிள், சைக்கிள் ரிக்ஷா, மோட்டார் பொருத்தப்பட்ட வண்டிகள் அசெம்ப்ளிங், 86. இசைக்கருவிகள் தயாரித்தல், 87. பாலிவஸ்திரா, 88. லோக்வஸ்திரா, 89. பனியன், 90. ரெடிமேட் துணிகள் தயாரித்தல் / டெய்லரிங், 91. பத்திவேலை, 92. பொம்மை தயாரித்தல், 93. சாயம் / சாய அச்சுத் தொழில், 94. கம்பளி மற்றும் நூல்கண்டுகள், 95, எம்பிராய்டரி, 96. மருத்துவத்துறைக்கான பேண்டேஜ் துணி, 97. ஸ்டவ் திரிகள், 98. லாண்டரி/சலவையகம், 99.பார்பர்/முடித்திருத்தகம், 100. பிளம்பிங், 101. வீட்டில் பயன்படும் எலக்ட்ரானிக் பொருட்கள் பழுதுபார்த்தல், 102. பம்ப்செட்,

டீசல் எஞ்சின், பழுதுபார்த்தல், 103. டயர் வல்கனைசிங், 104. விவசாயப் பொருட்களுக்கான ஸ்பிரேயர், பூச்சி மருந்து, பம்பு செட்டுகள், பழுதுபார்த்தல், 105. ஒலி, ஒளி அமைப்புகளுக்கான ஒலி பெருக்கி, ஆம்பிளிபயர், மைக் போன்றவை வாடகைக்கு விடுதல், 106. பேட்டரி சார்ஜ் செய்தல், 107. பேனர் / கலைத்தட்டிகள் வரைதல், 108. சைக்கிள் ரிப்பேர் கடை, 109. கட்டிட வேலைகள், 110. பேண்ட் வாசிக்கும் குரூப்கள், 111. மோட்டர் பொருத்தப்பட்ட நாட்டுப் படகுகள் (பைபர் கிளாஸ்) கோவா மாநிலத்திற்கு மட்டும், 112. டாக்ஸிபோல் வாடகைக்கு விடப்படும் மோட்டார் சைக்கிள் – கோவா மாநிலத்திற்கு மட்டும், 113. இசைக் கருவிகள் – கோவா மாநிலத்திற்க மட்டும் 114. சாலையோர உணவு விடுதி (மதுபானம் தவிர), 115.டீ கடை, 116. அயோடைஸ்டு உப்பு.

Dr. T. P. M. LIBRARY
MADURAI-625 021.
MADURAI KAMARAJ UNIVERSITY

MADURAI-625 021. MADURAI KAMARAJ UNIVERSITY

மேற்கோள் நூல் பட்டியல்

BIBLIOGRAPHY

A. Books

Dech Howels. J.T – Financing and Problem of Development Banking.

I.D.B.I. – Report of Development Banking in India.

Martin – Industrial Finance in India.

Kucchal S.C – Corporation Finance

Munanjar, S.K – Modern Banking in India, Kamal Publishing House, Bombay.

Mutabic Desai, V.R – Banking Development in India. Menakteles, Bombay.

Panandikar, S.G – Banking in India, Orient Longmen Ltd, 1996.

Prabhu, N.Singh – Role of Development Bank in a Planned

Prerea. P – Development Finance – Institution, Problem a Prospects. F.A. Proaeger Publishers, New York.

Raman. A – Central Banking in India, Bookland (p) Ltd., Calcutta.

Reserve Bank of India – Annual Reports, Monthly Bulleting.

Saksena. A.M – Development Banking In India, Vora & Co., Publishers (p) Ltd., Bombay.

Sinha S.L.N – The Capital Market of India.

Srivastava – Fundamentals of Corporation Finance.

State Bureau of Public Enterprieses – A Reivew of Public Sector Enterprises in Tamilnadu, Finance Department, Government of Tamilnadu.

B. Journals / Annual Reports

Annual Report, TIIC, Chennai.

Bombay Stock Exchange News Letter

Brochure DAVP, Ministry of Information and Broadcasting.

Commerce.

Eastern Economist.

Economic Times.

Government of India, New Delhi.

The Journal of Indian Insitutue of Bankers, Bombay.

National Stock Exchange, Annual Report.

SBI Monthly Review.

SEBI, Guidelines.

Dr. T. P. M. LIBRARY
MADURAI-625 021.
MADURAI KAMARAJ UNIVERSITY

விஜய் ஆப்செட், மதுரை—16. © 603464